Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A CATECHISM

IN

# ASTROLOGY

BY

# சோதிட வினாவிடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# A CATECHISM IN ASTROLOGY

BY

**S. AKILESWARA SARMA**

(*Author of*

*"Thiruvenkattanthathy," "Murugan keerthanai," "Mathurai Meenakshi Perinpak keerthanai" "Thatkala nakarika vedikkai" & "Theivarathanai vilakkam,"*

# சோதிட வினாவிடை

மூன்றும் பதிப்பு

யாழ்ப்பாணம், மண்டைதீவு

சி. அகிலேஸ்வர சர்மா

இயற்றியது.

யாழ்ப்பாணம்

கொக்குவில், சோதிடபரிபாலனமடம்

இ. சி. இரகுநாதையரால்

சோதிடப்பிரகாச யந்திரசாலையில்

அச்சிற் பதிப்பிக்கப்பெற்றது.

(*All Rights Reserved.*)

**1956.** [விலை ரூபா *6-00*.

Collection of Suthumalai P.Sabaratnam
Ret.Cooperative Inspector
Donated by
Snr.Prof.N.Shanmugalingan Family

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந் நூலாசிரியர்:

மண்டைதீவு

பிரம்மஸ்ரீ சி. அகிலேஸ்வரசர்மா அவர்கள்

தோற்றம்: 21–3–1893.

மறைவு: 26–2–1953.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| Preface to the Second Edition ... ... | I |
| Preface ... ... ... ... | III |
| பதிப்புரையும், நூலாசிரியர் வரலாறும் ... ... | VIII |
| இரண்டாம் பதிப்பின் முகவுரை ... ... | X |
| முகவுரை ... ... ... ... | XII |
| Comments ... ... ... ... | XVIII |
| Testimonials ... ... ... ... | XIX |
| மதிப்புரை ... ... ... ... | XXI |
| அபிப்பிராயங்கள் ... ... ... ... | XXI |
| கடவுள் வணக்கம் ... ... ... ... | XXIII |
| ஆரம்ப கணிதம் ... ... ... ... | 4 |
| பன்னிரு பாவ பலன் | |
| முதலாம் பாவம் ... ... ... ... | 73 |
| இரண்டாம் பாவம் ... ... ... | 76 |
| மூன்றாம் பாவம் ... ... ... ... | 102 |
| நான்காம் பாவம் ... ... ... ... | 109 |
| ஐந்தாம் பாவம் ... ... ... ... | 122 |
| ஆறாம் பாவம் ... ... ... ... | 146 |
| ஏழாம் பாவம் ... ... ... ... | 159 |
| எட்டாம் பாவம் ... ... ... ... | 197 |
| ஒன்பதாம் பாவம் ... ... ... | 220 |
| பத்தாம் பாவம் ... ... ... ... | 232 |
| பதினோராம் பாவம் ... ... ... | 283 |
| பன்னிரண்டாம் பாவம் ... ... ... | 309 |
| பொதுப்பலன் ... ... ... ... | 334 |
| விஷய அட்டவணை ... ... ... ... | 339 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Preface to the Second Edition

By the benevolence of my preceptor, and after eight years' experience in the field of predictive astrology, and egged on by the encouragement got from the learned people who had seen my first edition, I have ventured to bring out this second edition with the hope that it will meet with success and further encouragement.

This edition is intended along with the first one to guide those who want elucidation of some intricate points in varied horoscopes, and others who desire to benefit by the experience of astrologers who had worked longer in the field. It is also hoped that learned men in the science as well as capitalists and young entrants in the field will be benefited. Numerous examples from horoscopes which had not found a place in the first edition have been put into this edition.

Methods of finding the solar, lunar and sidereal time along with the other methods in use for computing the exact time of birth, transit of planets etc, the lordships of the planets in the various signs of the zodiac and their exact positions where they conduce to bring about the maximum benefit and exert the greatest influence have been given. The elements, the soil or portions of the globe, the metals etc which each planet governs are also indicated. The mcst important aspect now uppermost in every mind—viz the combinations of planets which produce various occupations and vocations in life are given as an easy guidance for those who wish to predict for themselves



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

or others. The exact influence that the distant planets exert on human beings, the maladies and ills they produce are also dealt with. The periods of transits, the exact rising sign of one's nativity, Chandra Lagna, and how it becomes sometimes the place for prediction and things predicted with its help are given in extenso. The methods to give other charts like Nawamsa, Dwadasamsa, Thrimsamsa etc are given with the examples actually worked out. The various other items of interest included make this book a synopsis of all the standard works in astrology. Wherever it is found necessary other systems of astrology are also pressed into surmise.

As the volumes printed of the first edition have almost been sold out, and as further orders have been placed with me for the volume, I have come forward to present this second edition, with the hope that it will be greatly appreciated by the laity and the learned alike—this being my humble contribution laid at the altar of knowledge. I cannot but pay my heartfelt thanks to all who had contributed monetary help for this work.

*June 1942.*
*Pillaiyar Temple,* S. AKILESWARA SARMA.
MANDAITIVU,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PREFACE

Human beings experience pain or pleasure as a result of their evil or good actions in their previous births. And this is called the Law of Karma.

No man's skill can save him from falling a victim to the effects of his Karma. The great Tamil poet Thiruvalluvar says 'Nothing is stronger than Fate and Fate overrules every action". So we cannot overcome the Fate of man and we are bound to suffer or enjoy the effects of **Karma.**

How can we know the time when the fruits of Karma will reach us, the time when we ought to do good actions with the idea of having a prosperous life in the next birth or the period when we have to do the most wicked deeds as a result of the egoism in us. Will not the same Almighty who has given us all kinds of diseases as the result of Karma and medicines to cure us of the diseases, give us through astrology the time of our death which will ensue even if we are treated with the best of medicines? God Almighty Himself or through His Saints has given us the Vedas and supplementary Shastras to facilitate the study of the Vedas. Astrology is the eye of the Vedas.

To read our future we must know the mathematical side of astrology which deals with year, season, month, date, Thithi, Star, Yogam, Karanam and with the help of these we can read a man's character, duration of his life, property, power of speech temperament, kind of life and occupation. Astrology also teaches us how to find the most auspicious time for the performance of certain rites

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

which will make one great and rich. It teaches us many other things of which Jathakaskantham is one which deals with the Karma of our previous births and shows us the precise time when Karma would fructify.

When a man is born in this world he comes under the influence of the planets stationed in the twelve positions From the position of the planets at one's birth we can find out in what science he will be skilful and which will have the best part of his life. Just as the rain-gauge, the barometer and the mariner's compass indicate the rainfall, wind and sailing directions to the sailors, so astrology can exactly fortell the future.

From the above we infer that as Vinayagar is the formost of the Devas, the eye the most important of the organs, the mother's milk the best of child's foods, iron the most useful of metals so astrology stands on the top of all the sciences.

Sun, Brahma, Vyasar, Vasishtar, Aththiry, Parasarar, Kasypar, Narathar, Garkiar, Mareechi, Angeerasar, Manu, Romasar, Paurukuthsar, Yavanachariar, Piruku, Pailar and others where the chief writers of astrology, and the works of these great men are of very great use to medical science and Vedas. Even today we can find learned astrologers who read the future to the admirations of all Some of these astrolgers write explanatory notes on some book in astrology. Some authors summarise the works of other authors. Some astrologers though learned do not contribute anything useful to astrology. Some pretend to be ignorant of astrology but would supply any one who shows a desire for study with all informations. Some authors try by all means to keep this branch of study from the knowledge of others with a selfish motive.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

At a time when the world abounds in good books on astrology written by great scholars it is but impudence on my part to have made up my mind to write a book on astrology. It is but right that I should state below the reasons why I thought of writing a book of this kind. When I was a student of astrology, I could not find satisfactory answers either from books or from my teachers to certain difficulties that I came across, and I lost my belief in astrology and even persuaded others from believing it. Later I met the late Mr. V. M. Chinniah Mudaliyar, retired shroff of the Jaffna Treasury, when he was studying astronomy. He questioned me on astrology and I refused to answer them as I had no belief in it. But the Mudaliyar refused to grand any of my requests till he had convinced me of the truth of astrology. Then he handed me a book containing planetary positions of 60 children who had premature deaths. Then he showed me those of people who died after their 80th year. Then he asked me to explain the reasons for their deaths. He was satisfied with my explanations and encouraged me to continue my studies and showed me more examples from his experience to make me believe in astrology.

On another occasion, I went in connection with the publication of a lyrical work to Sir P. Ramanathan, the uncrowned king of Ceylon. After finishing my business he enquired whether I knew anything of astrology. He was good in astrology too. So I said to him in reply that from the positions of the planets I was destined to be poor in mathematics. But he said in reply that from his experience he had found out that one who was good in the mathematical side of astrology would be poor in the predictive side of astrology, and vice versa. So he encouraged me to pay more attention to astrology saying that I would be good in predictive astrology. These

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

encouraging words of Sir P. Ramanathan and Mudaliyar Chinniah turned a new leaf in my life and gave me great incentive to the study of astrology.

From that time onwards, for ten years, I devoted all my time and attention in collecting the horoscopes of all those that came to me for consultation and other great men of Jaffna, and I was observing whether their daily lives tallied with their horoscopes. From my experience I gained accurate knowledge on the following things:- a person's appearance, character, education, wealth, fortitude, family, possession of cattle house and carriages, brothers and sisters, friends, periods of prosperity and adversity, family life, the time of death, occupation reasons for losing wealth and property and the time of gaining fame. So when I found that I could read the future of a person correctly I began to have complete faith in astrology.

From the knowledge of astrology I have been publishing this book (Sothida Vinavidai) in parts in the "Sothidaparipalini" in the form of a catechism.

At the request of learned men and enthusiasts in education, living in the different parts of Ceylon and Malaya and with their pecuniary assistance I resolved to publish this in a book form. For rendering this assistance, the educational world and myself are greatly indebted to them.

*THE USES OF THIS BOOK ARE:—*

(1) It helps young men to choose suitable brides for themselves.

(2) It helps maids to choose suitable bridegrooms for themselves.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) It helps both the sexes in selecting suitable partners for acquiring wealth, and for taking advice from one another.

(4) It helps one to find out with whom one could live amicably, whether the father, mother, children, brothers, sisters, other relations, neighbours or others.

(5) It helps one to find out whether one could acquire lands, build houses, pass in conveyances or go on pilgrimages.

(6) It helps one to find out what occupation is most suitable to him.

(7) It helps masters to find suitable servants and servants to find suitable masters.

*26th May 1933.*
*Pillaiyar Temple,*
MANDAITIVU,
JAFFNA.

S. AKILESWARA SARMA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பதிப்புரை

சோதிடவினாவிடை எனப்பெயரிய இந்நூலை இயற்றியவர் யாழ்ப்பாணம் மண்டைதீவு பிரமஸ்ரீ சி. அகிலேஸ்வரசர்மா அவர்களாவர். சோதிடபரிபாலினிப் பத்திரிகையில் ஒன்றரைவருஷகாலமாக வெளிப்படுத்திவந்த இந்நூலை ஆசிரியரவர்கள் முதன்முதல் ஸ்ரீமுக௵ வைகாசிமாதத்தில் புத்தகரூபமாக அச்சிடுவித்துப் பிரசுரஞ்செய்தனர்.

முதற்பதிப்புப் பிரதிகள் செலவானமையால் இதன் இரண்டாம் பதிப்பை ஆசிரியரவர்கள் தமக்குக் கிடைத்துள்ள அனுபவசாட்சியங்களை ஆதாரமாகக் கொண்டு பல திருத்தங்களைச் செய்தும், மேலும் சில அரிய விஷயங்களைச் சேர்த்தும் சித்திரபானு௵ ஆனிமாதத்தில் பிரசுரஞ்செய்தனர்.

இரண்டாம்பதிப்புப் பிரதிகளும் செலவானமையாலும், ஆசிரியரவர்கள் சென்ற நந்தன௵ மாசி௴ சிவபதமடைந்ததினாலும், இம்மூன்றாம்பதிப்பை நல்ல கிளேஸ்கடிதத்தில் திருத்தமாக அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றேன்.

# நூலாசிரியர் வரலாறு

பிரமஸ்ரீ சி. அகிலேஸ்வரசர்மா அவர்கள் யாழ்ப்பாணம் கொக்குவிலில் வசித்த பிரமஸ்ரீ சிதம்பரநாதையர் அவர்களின் ஏகபுத்திரர். ஓராண்டுப் பராயத்தில் இவரது தந்தையார் சிவபதமடைந்துவிட, இவரும் தாயாரும் தமது சுற்றத்தாருடன் வசித்துவந்து, இளம்பராயத்திலேயே மண்டைதீவு சித்திவிநாயகர் கோவிலில் அருச்சகராய்க் கடமைபூண்டு அவ்வூரிலேயே வசித்துவரலாயினர். மண்டைதீவில் ஓர் சைவப்பள்ளிக்கூடமில்லாத குறையை நினைத்து இரங்கிய இவர் அவ்வூர்ப் பெரியாரையும் யாழ்ப்பாணத்திலுள்ள நியாயவாதிகள் உத்தியோகத்தர் ஆசிரியர்கள் முதலியோரையும் துணைக்கொண்டு ஓர் சைவப்பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கச்செய்தும் அதன் மாதாந்தச் செலவுக்காகப் பலரிடமும் சந்தாப்பணம் சேர்த்து உதவியும் வந்தார். காலாந்தரத்தில் இவரின் விடாமுயற்சியால் அப்பள்ளிக்கூடம் அரசினர் நன்கொடைப்பணம்பெறும் தகுதிபெற்று, தற்போது அரசினரின் முழுப்பொறுப்பில் சிறப்பாக நடைபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்து வசதிக்காக மண்டை தீவுக்கும் யாழ்ப்பாணம் பண்ணைக்குமிடையில் ஓர் தாம்போதியை அமைக்குமாறு இவர் செய்த அரிய முயற்சிகளை விவரிக்கவொண்ணாது. ஈற்றில் பண்ணைத்தாம்போதி அரசினரால் அமைக்கப்பெற்றதும் தமது அரும்பெரும் லட்சியத்தைப் பூர்த்திசெய்தவராயினர்.

இவர் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் வசித்த பிரமஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்களைத் தம் சமயகுருவாக அடைந்து, அவரிடம் பல சமயசாஸ்திரவுண்மைகளையும், ஆலயபூஜாவிதிகளையும் கற்றறிந்தனர். விக்கினேசுவரப்பெருமானைப் பக்தியுடன் உபாசித்து வழிபாடுசெய்து வந்தமையால் தானாகவே கவிபாடவும் வல்லவரானார். திருவெண்காட்டந்தாதி, மதுரைமீனாக்ஷி பேரின்பக்கீர்த்தனை, முருகன் கீர்த்தனைப் பதிகம், தற்கால நாகரீக வேடிக்கைப் பாக்கள், தெய்வாராதனை விளக்கம் முதலியன இவர் இயற்றிய பிற நூல்களாகும்.

இந்நூலின் வாசக நேயர்களுக்காக ஆசிரியரவர்களின் ஜனன காலக் கிரகநிலை முதலிய விபரங்களைக் கீழே குறித்திருக்கின்றேன்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் | சந்திர வியாழ ராகு | ல செவ்வா | 2 |
| சுக்கிரன் | கிரகநிலை | | 3 |
| 9 | | | 4 |
| 8 | 7 | கேது | சனி |

| | | | |
|---|---|---|---|
| | | வியாழ சுக்கிரன் சனி | ராகு |
| ல செவ்வா | நவாம்சநிலை | | |
| | | | |
| கேது | புதன் | | சூரியன் சந்திர |

ஜனனம்: நந்தன வருஷம் பங்குனி மீ 10௳ (21-3-1893) செவ்வாய்க்கிழமை உதயாதி நாடி 8, விநாடி 45. பரணி 2-ம் பாதம். ஜனன காலம் சுக்கிரமகாதெசையில் இருப்பு 13 வருஷம், 11 மீ, 01௳.

பிரிவு: நந்தன வருஷம் மாசி மீ 15௳ (26-2-53) வியாழக்கிழமை.

சோதிடபரிபாலனமடம்,
கோர்த்துவில்.
துர்முகி வருஷம் சித்திரை மீ

இங்ஙனம்
இ. சி. இரகுநாதையர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் பதிப்பின் முகவுரை

நம் பரமாத்ம குருஸ்வாமிகளின் அனுக்கிரகப் பிரபையினால் கண்விழித்தெழுந்த யான், எட்டு ஆண்டிற்குப் பின் எனக்குக் கிடைத்துள்ள அனுபவசாட்சியங்களை ஆதாரமாகக்கொண்டு முதற்பதிப்புடன் தொடர்ந்து இதனை வெளியிடலானேன்.

ஜோதிஷசாஸ்திரத்தின் நுட்பாதி நுட்பங்களைக் கற்க விரும்பும் நேயர்களுக்கும், கற்றுணர்ந்தும் சந்தேகந் தெளிதலின்றித் தயங்குகின்ற சகோதரர்களுக்கும், அதனின் ஆராய்ச்சித்துறையிற் புகுந்து அனுபவங் காணப் பிரியப்படும் அறிஞர்களுக்கும், முதலாளி பங்காளி தொழிலாளி வர்க்கத்தினர்க்கும், ஏனையோர்க்கும் அதிகம் பிரயோஜனமாகும்வண்ணம் முதற்பதிப்பில் இடம்பெறாத சிற்சில அரிய விஷயங்கள் இந்த இரண்டாம்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

சூரியச்சாயையில் அடி அளக்கும் சூட்சும விதி, நிலவுச் சாயையில் அடி அளப்பதன் நேரவித்தியாசங்கள், ஆகாயத்தில் நக்ஷத்திர உச்சம் காண்பதன் அவதானக்குறிப்புகள், சரியான மணியை உபயோகிக்கும் விதம், கிரகங்களின் ஆதிபத்தியம் (ஒவ்வொரு கிரகமும் எவ்வெப் பகுதிகளுக்கு அதிகாரி என்பது. உதாரணமாக: கடலுக்கு காட்டிற்கு வீட்டிற்கு நீருக்கு நெருப்பிற்கு மண்ணிற்கு பொன்னிற்கு இவைபோன்ற இயங்கியற் பொருள் நிலையியற் பொருட்களுக்கு யார் யார் தலைவர் என அறியும் மார்க்கம்); அதுகாரணமாக அக் கிரகங்களால் மனிதருக்குக் கிடைக்கும் உத்தியோக வேறுபாடுகள் (இவை 10-ம் பாவத்தில் அதிவிரிவாக விஸ்தரிக்கப்பட்டுள்ளன), கிரகங்களால் மனிதருக்கு உண்டாகும் பலவித ரோகங்கள், கிரகங்களின் குலம் குணம் நிறம் உணவு சுவை தானியம் சமித்து லோகம் இரத்தினம் இடம் திசை வாகனம் புத்திரர் ஆகிய விபரங்கள், கிரகங்கள் ஒவ்வொரு இராசிகளிலுஞ் சஞ்சரிக்கும் காலம், பலன்செய்யும் காலம், அங்கபாவாதிபக் கிரகங்கள், ஜனனநக்ஷத்திரம் காணும் வகை, உதய லக்கினம் காணும் வகை, கிரகநிலை கணிக்கும் வகை, சக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரலக்கினம் அறியும் வகை, நவாம்சலக்கினம் காணும் வகை நவாம்சகிலே கணிக்கும் வகை, மகாதெசை கணிக்கும் வகை, ஒவ்வோர் மகாதெசாபுத்திகளுக்கும் அந்தரம் பிரிக்கும் வகை, தற்கால மகாதெசைபுத்தி அந்தரம் பார்க்கும் வகை (இவைகளெல்லாம் உதாரண விளக்கக் குறிப்புடன் கூடியன), ஒவ்வொருவருக்கும் ஜீவனப்பகுதிகள் இவைஇவைதான் இயற்கைப்பொருத்தம் என அறியும் வகை, சூரியன் ஜீவனஸ்தானத்திற்கு அதிபதியாகிப் பன்னிருபாவங்களிலும் பலம்பொருந்தி இருந்தால், வேறு கிரகங்களுடன் கூடியிருந்தால், நோக்கம் பெற்றால் அரசாங்கத்தில் இன்ன இன்ன விதமான உத்தியோகம் கிடைக்கும் என்ற விபரங்கள், அவ்வாறே மற்றைய எட்டுக் கிரகங்களும் ஜீவனஸ்தான சம்பந்தமானால் ஏற்படும் உத்தியோக வித்தியாசங்கள், இவைகளும் இன்னும் இவை போன்ற பலவேறு விஷயாம்சங்களும் எனது எட்டு வருஷ அனுபவத்தின் பயனாக யுத்திக்கு அமைந்தனவாய் சாஸ்திர ரீதியாய் இவ்விரண்டாம் பதிப்பில் இடம்பெற்றுள்ளன.

இப் புஸ்தகம் முதற்பதிப்பில் 600 பிரதிகள்தான் அச்சிடுவித்தேன். அவற்றுள் 300 பிரதிகளையும் இதற்கு முற்பணம் உபகரித்துள்ள நேயர்களுக்குக் கொடுத்துவிட்டேன். சென்னை "ஹிந்து" முதலான புதினப்பத்திரங்களின் அபிப்பிராய வெளியீடுகளின் பயனாக மிகுதியாயிருந்த 300 பிரதிகளும் செலவாகி, மேற்கொண்டும் 50 பிரதிகளுக்கு மேல் ஆர்டர் கிடைத்துள்ளது.

முதற்பதிப்பிற்போல இந்த இரண்டாம்பதிப்பிற்கும் பிரியம் வைத்துப் பணவுதவி புரிந்து என்னை ஊக்கப்படுத்தியுள்ள இலங்கை இந்திய வித்தியாபிமானப் பிரபுக்களுக்கு என் மனம் வாக்குக் காயங்களாலாகிய வந்தனமும் என் மரணாந்தம் வரை மறவாத அன்பும் உரித்தாகுக.

சித்திரபானு௵ ஆனிமீ,
பிள்ளையார்கோவில்,
மண்டைதீவு.

இங்ஙனம்
சி. அகிலேஸ்வர சர்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

பூமியின்கண் மனிதப்பிறவி எடுத்த நாமெல்லோரும் முற்பிறப்புகளிற் செய்த நல்வினை தீவினைகளின் பெறுபேறுகள் இப்பிறப்பில் பிராரத்தமாக ஈசுவரனால் எமக்கு ஊட்டப்படுகின்றன. இதனையே ஊழ்வினையென உலகோர் நவில்வர்.

மனிதசக்தியினாற் கன்மபலத்தைத் தடுக்கமுடியாது. இதனாலன்றோ "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான் முந்துறும்" எனத் திருவள்ளுவநாயனாரும் செப்பியருளினார். ஆதலின் நாம் இதனை எவ்வாற்றானும் அனுபவித்தே தீரவேண்டும்.

கன்மப் பயன்களுள் ஒன்றாக எமக்கு ரோகங்களையும், அவைகளை நிவிர்த்தியாக்கும் பொருட்டு ஔஷதங்களையும் உற்பத்தியாக்கி வைத்தியசாஸ்திரமாகத் தந்தருளிய ஈஸ்வரன், ரோகம் (கன்மம்) ஆரம்பித்தல், உபத்திரவஞ் செய்தல், சிகிச்சை செய்யப்படுதல், (இவைகள் ஒன்றுக்கும் குணமாகாமல்) மரணமடைதல் ஆதியாம் கன்மானுபவ காலங்களை வரையறுத்துக் காட்டும் ஓர் (சோதிட) நூலைத் தோற்றுவிக்காமல் இருப்பாரா? அனந்த கல்யாண குணபூஷணரான பெருமான் ஒருபோதும் அவ்வாறிரார்.

ஸ்ரீ பரமசிவம் மக்களாகிய நாம் உய்ந்து ஈடேறும்பொருட்டு நான்கு வேதங்களையும், அவற்றைக் கற்றுணரத் துணையாக உபநூல்களையும் தாமாகவும் தமது அனுக்கிரக அம்சங்களான அவதார புருஷர் மூலமாகவும் தோற்றுவித்தருளினார். ஆதி நூலான வேதங்கட்கு அங்கங்களாய் அமைந்தனவான சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்னும் ஆறு சாஸ்திரங்களுள் கண் எனப்படும் சோதிடசாஸ்திரத்தைச் சிறிது உற்று நோக்குதல் ஈண்டு அவசியமாகின்றது.

இச்சோதிடம் எம்மனோரின் பிரபஞ்சவாழ்விற்கு ஆதாரமாக வருஷம், அயனம், இருது, மாசம், தேதி, வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம், கிரகநிலை முதலான காலநியதிகளைக் காட்டிக்கொடுக்கும் கணிதப்பகுதியாகவும்; அவ்வக் காலங்களில் தோன்றியுள்ள மனிதவகுப்பினரின் சற்குணம், துர்க்குணம், ஆயுள், ஆஸ்தி, வாக்கு, மனம், இன்பம், துன்பம், முயற்சி, லாபம் ஆதியாம் சீவியகாலநிலை இத்தன்மையதென்று அளந்துகாட்டும் தன்மையதான ஜாதகப்பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகவும்; இன்ன காலத்திற் பொருந்திய இன்ன சுபமுகூர்த்தத்தில் இன்ன விதமான கிரியை செய்யின் இன்ன சித்திகள் எய்தலாம் என விபரிக்கும் முகூர்த்தப் பகுதியாகவும்; இன்னும் பலவேறு பகுதிகளாகவும் விரியும். இவற்றுள் ஜாதகப் பகுதியே எமது பிராரத்த கன்மம் பலிதமாகும் காலத்தை வரையறுத்துக் காண்பிக்கின்றது.

ஒருவர் பூமியிற் பிறந்தபோது பன்னிரு இராசிகளில் நிற்கும் கிரகங்களின் நிலைகளே இவர் இன்ன சாஸ்திரத்திற் பாண்டித்தியம் எய்துவாரென்றும், இவருக்கு இன்னவிதமான தொழில்தான் கைகூடும் என்றும், இன்ன கிரகத்தின் மகாதெசாபுத்தியில் இவருக்கு இன்னவிதமான சப்பவம் நிகழும் என்றும் பிரத்தியக்ஷத்தில் காட்டுவதால், சோதிடசாஸ்திரமானது பின்னர் நிகழப்போகும் பிராரத்த கன்ம நிகழ்ச்சிகளை எமக்கு முன்னதாகவே அறியத்தருகின்றது.

நீராவிக் கப்பல்களில் அமையப்பெற்றிருக்கும் மழைமானி, வாயுமானி, திசையறிகருவி முதலிய இயந்திரக்கருவிகளானவை சமுத்திரத்தின்மேற் சப்பவிக்கப்போகும் பெருமழை, சண்டமாருதம் முதலிய உற்பாதங்களையும், கப்பல் செல்லும் திசையையும் மீகாமனுக்கு முன்னரே காட்டிக்கொடுத்தல் போலச் சோதிடம் என்னும் சாஸ்திரக் கல்வியானது எமது காலசக்கரத்துள் நிகழப்போகும் சுகதுக்க முதலான பிராரத்தகன்மானுபவமான சப்பவங்களை எமக்கு முன்னரே சுட்டிக்காண்பிக்கின்றது.

இதுகாறும் கூறிப்போந்தவற்றால் சோதிடசாஸ்திரமானது தெய்வங்களுள் விநாயகக்கடவுள் போலவும், மனித உறுப்புக்களுள் கண் போலவும், பெரியோர்களுள் மாதாவைப் போலவும், பிள்ளைகளின் உணவுகளுள் தாய்முலைப்பாலைப் போலவும், முயற்சிப்பொருட்களுள் இரும்பைப் போலவும் உயர்ச்சிவாய்ந்ததாகவும், எல்லாவற்றிற்கும் மூலாதாரமான முதனூலாகவும் தோற்றுகின்றது.

தெய்வத்திருவருளால் இச் சோதிடசாஸ்திரத்தை மனித உலகத்திற்கு வழங்கிய மகான்கள் சூரியன், பிரமன், வியாசர், வசிஷ்டர், அத்திரி, பராசரர், காசிபர், நாரதர், கார்க்கியர், மரீசி, ஆங்கிரசர், மநு, உரோமசர், பௌருகுத்சர், யவனாசாரியர், பிருகு, பைலர் முதலியோரும் பிறருமாம். தேவத்தலைவர்களும், முனிசிரேஷ்டர்களும் இயற்றியுள்ள மந்திரசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம் முதலியன உலகத்திற்கு அரியபெரிய பிரயோசனத்தை அளித்துவருதல் அனுபவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சியாதலின், அன்னவரால் ஆக்கப்பெற்ற சோதிடசாஸ்திரமானது எத்தன்மையது என்பதை விஸ்தரிக்கவும் வேண்டுமா?

நம் ஈழமண்டலத்திலும், இந்தியாவெங்கணும், ஐரோப்பா, அமெரிக்கா ஆதியாங் கண்டங்களிலும் சோதிடசாஸ்திரத்தின் நுட்பாதி நுட்பங்களை "வெள்ளிடை மலைபோல் தெள்ளிதில்" உணர்ந்த பண்டித சிரோரத்தினங்கள் பல்லோர் திகழ்கின்றனர். அன்னவரின் அறிவின் கூர்மையும் ஆராய்ச்சியின் திறமையும் உலகில் பொன்னினும் அதிகமாகப் போற்றப்படுகின்றன. இச்சாஸ்திர விற்பன்னருள் ஒருசிலர் முன்னோர் செய்த நூல்களுக்குத் தாம் விளக்கவுரை தீட்டி வெளியிடுகின்றனர். வேறு சிலர் முதனூல்களைத் துணையாகக் கொண்டு தம் யுக்தி அநுபவ வாயிலாகப் புதிய நூல்களியற்றிப் பொதுஜனோபகாரம் புரிகின்றனர். இன்னும் சிலர் "நீறுபூத்த நெருப்புப்" போல உலகத்திற்குத் தாம் ஒன்றும் அறியாதார்போன்று அபிநயித்து, அந்தரங்கத்தில் மகா சாஸ்திர சஞ்சீவிகளாய்த் தம்மை அடைந்தவர்க்கு மாத்திரம் உபதேசிப்பவராய் விளங்குகின்றனர். ஒழிந்த சிலர் தாம் கற்ற கல்வியை மற்றவர்களுக்குப் புகட்டும் வன்மை இருந்தும் மனமிலராய்த் தாம் கற்ற கல்வியை ஓர் காவுநூலாக்கிக் "குடத்துள் நிறவிய (மின்சார) தீபம்" போற் சோதிடத்தை உலகுக்கு மறைக்கின்றனர்.

இவ்வண்ணமாகச் சோதிடசாஸ்திரத்தைத் துகளறக் கற்றுணர்ந்த பலவேறு வகுப்பினராகிய பண்டிதகுழாங்கள் மலிந்து பொலிந்து விளங்கும் இக்காலப், கற்றவர் இகழ்ந்தொதுக்கும் சிற்றறிவுடையான் ஒருவன் இதுபோன்ற சோதிடப்பனுவல் ஒன்றை இபற்றப்புகுந்த துணிபே பெரும் வியப்பாம்.

இனி, இத்தன்மையதான ஒரு சோதிடப் பிரபந்தத்தை யான் செய்து வெளியிடுவதற்கான காரணத்தை இதனை வாசிக்கும் நண்பர்கட்கு விளங்கவைத்தல் மிகையாகாதென்றெண்ணிச் சிறிது விளம்புதும்.

ஆதியிற் சோதிடசாஸ்திரத்தின் ஜாதகப்பகுதியை யான் அப்பியசிக்கும்போது அதில் எண்ணிறந்த சந்தேகங்கள் என் மனத்தே உதித்தன. அவற்றைச் சில சோதிடஆசிரியர்பால் வினவினேன். அன்னவர் இறுத்த விடை ஒன்றேனும் எனது ஆட்சேபங்களை நிவிர்த்திசெய்திலது. அதனால் யான் அந்நாள் முதல் ஜாதகப்பகு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியில் நம்பிக்கையற்றவனாயினேன். அத்துடன் அமையாது, மற்றவர்களுடன் ஜாதகம் பொய்யென வாதிக்கவும் ஆரம்பித்துவிட்டேன்!

இவ்வாறு நிகழும் நாட்களில், ஒருதினம், யாழ்ப்பாணம் திறைசேரியில் உயர்தர உத்தியோகத்தில் இருந்து இளைப்பாறி அரசினரால் அதிகாரப்பட்டமும் பெற்று விளங்கியிருந்த ஆனைக்கோட்டை ஸ்ரீமான் V. M. சின்னையா முதலியார் அவர்களிடம் ஓர் வித்தியாசாலை விஷயமாகப் போனேன். அவர் அப்பொழுது வானசாஸ்திரம் வாசித்துக்கொண்டிருந்தார். எனது வரவைக் கண்டவுடன் முதலியார் அவர்கள் ஆசனம் உதவி உபசரித்துச் சோதிடத்துறையில் சில கேள்விகள் கேட்டார், "ஜாதகத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. தயவுசெய்து நான் வந்த கருமத்தைப் பாருங்கள்" என்று கூறினேன். முதலியார் அவர்கள் என் கூற்றைத் தடுத்து, "ஜாதகப்பகுதியில் உமக்கு நம்பிக்கை உண்டாக்கிய பின்புதான் நீர் வந்த கருமத்தை விசாரிப்பேன்" என்று கூறிவிட்டு, சுமார் 60-க்கு மேற்பட்ட கிரகநிலைச் சக்கரங்கள் அடங்கியுள்ள ஓர் பிரதியைக் கொணர்ந்து என் முன் காட்டி, "இது ஒரு பகுதி: 8 வயதுக்குள் மரித்த பாலகர்களின் கிரகநிலை; இது ஒரு பகுதி: 80 வயதுக்குப் பின் மரணித்த வயோதிகர்களுடைய கிரகநிலை. இவைகளில் ஒருபகுதியார் அற்பாயுளில் அழிதற்கும், மற்றைப் பகுதியார் பூரணாயுளில் மரணித்தற்கும் நியாயம் தெரிகிறதா?" என்றார். நான் அக்கிரகநிலைகளைச் சிறிதுநேரம் கூர்ந்து கவனித்ததும் அவற்றின் ஆயுட்பலனைப் பற்றிய நியாயம் சிறிதும் களங்கமின்றி விளங்கிற்று. அதனால் அக்காரணத்தை முதலியார் அவர்களுக்கு எடுத்துக்காட்டினேன். அதற்கு அவர் "இவ்வாறு விளக்கம் இருந்தும், ஜாதகத்தில் அவநம்பிக்கை கொள்ளலாமா?" என்று கூறி எனக்கும் சிற்சில அனுபவ விஷயங்களைக் கூறினார்.

அதற்குப் பின், இலங்கையின் முடிசூடா மன்னரும் தமது பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பை நிறுவிப்போனவருமான ஸேர் பொன். இராமநாதன் அவர்களை ஓர் சங்கீதப்புஸ்தகப் பிரசுர விஷயமாய்ச் சந்தித்தேன். அப்பொழுது அப் பெரியார் நான் சென்ற காரியத்தைச் சித்தியாக்கி, என்னை நோக்கிச் "சோதிடப்பகுதியும் போகுமா?" என வினவினர். அந்த அறிஞர்கோன் சோதிட ஞானத்திலும் சிறந்துள்ளவர். ஆதலின் அன்னவர்க்கு எனது நிலைமையை வெளியிட விரும்பி, "யான் பிறந்தபொழுது கல்விகாரக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞன புதன் நீசம் அடைந்தபடியினல் கணிதப்பகுதி எனக்கு மந்தகதியாக இருக்கிறது. அதனல் சோதிடத்தைக் கைசோர விடு கின்றேன்." என்று சொன்னேன். அவர் என் சொல்லிற்கு உத்த ரமாய்ச் "சோதிடசாஸ்திரத்தில் கணிதப்பகுதி ஒன்று; பலன் சொல்லும் பகுதி மற்ருென்று. இவற்றிற் கணிதத்தில் திறமை மிக்க சிலருக்குப் பலன் சொல்லும் பகுதி வாய்ப்பதில்லை. பலன் சொல்லுதலிற் பாண்டித்தியம் உடையவர் சிலர்க்குக் கணிதப்பகுதி வாய்ப்பதில்லை. இதனை எனது அனுபவத்திற் கண்டுள்ளேன். ஆதலால் உங்களுக்குச் சோதிடத்திற் பலன்சொல்லும் பகுதி வாய்ப்பாக இருக்கும்" எனப் புகன்ருர்.

சாஸ்திர ஞானத்துடன் அனுபவ ஞானமும் தங்கியுள்ள ஸ்ரீமான் சின்னையா முதலியார், ஸேர் பொன். இராமநாதன் ஆகிய இருமுதுகுரவரும் அடுத்தடுத்துக் கூறிய ஆப்தவாக்கியங்கள் எனக்கு முன்னில்லாத ஓர் புதிய சக்தியை வருவித்தன.

இதற்குப் பின் என்னிடம் ஜாதகம் காட்டிப் பலன் கேட்க வரும் ஒவ்வொருவருடைய ஜனனக் குறிப்புகளையும் எனது தின சரிக் குறிப்புப் புஸ்தகத்திற் சேகரித்தும், சாதாரண இயற்கைக்கு மாருன சில குணமுடையாரின் ஜாதகங்களை ஊரூராய்த் தேடித் திரிந்து நானகவே கண்டெடுத்தும், அவர்களின் ஜாதகங்கள் அனுபவ சாட்சிக்கு ஒத்துவருகின்றனவா? அல்லவா? என்பதை ஆராய்ச்சி செய்தும், இவ்வாறு சுமார் பத்து வருஷம் வரையில் ஜாதகப்பகுதி யிலேயே எனது புத்தியைச் செலுத்திப் பொழுதைப் போக்கி னேன். இங்ஙனமாக, எனது ஆராய்ச்சியின் பெறுபேருக, ஒருவ ருடைய சரீர அங்க அமைப்பு, குணுகுண லக்ஷணம், கல்வி செல்வ நிலைமை, வீரபராக்கிரமங்களின் விகிதம், மனைவி மக்கள் மாடு வீடு வாகனம் சகோதரர் சிநேகிதர் இவைகள் லபிக்கும் வகை, இன்ப துன்ப நிகழ்ச்சி, ஸ்திரீ புருஷ வாழ்க்கையின் மர்மம், மரணத் தின் பேதம், பாவ புண்ணியங்களின் பாகுபாடு, உத்தியோகங்களின் ஒழுங்கு, லாபங்களின் விபரம், பொருள் பூமி நஷ்டமடைதற்குப் போதிய காரணம், கீர்த்தி கிடைக்கும் மார்க்கம் இவை போன்ற சீவியகாலச் சம்பவங்களெல்லாம் அவரவர்களுடைய ஜாதகங்களிற் ருனே தெளிவாகக் காணப்படுகின்றன என்ற பூரண நம்பிக்கை என் உள்ளத்தில் உதயமாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமானால் எனக்குக் கிடைத்துள்ள அனுபவ சக்தியைக் கொண்டு, ஓர் மாணவன் கேட்கும் வினாவிற்கு ஆசிரியன் விடையிறுத்தவாறாய் "சோதிட வினாவிடை" என்னும் நாமஞ் சூட்டிய இப் பிரபந்தத்தைச் "சோதிடபரிபாலினி" என்னும் தமிழ்ப் பத்திரிகையில் வெளியிட்டுவந்தேன். இப் பிரபந்தத்தினால் அடையும் பிரயோசனங்களுள் சில பிரதான அம்சங்களாவன:—

புருஷர் தமக்குப் பொருத்தமான மனைவியரைத் தேடிக்கொள்வதற்கும், நாரியர் தமக்கு வாய்ப்பான நாயகரை மணம்புரிதற்கும், ஆடவர் மகளிர் இருதிறத்தினரும் தத்தமக்குப் பொருத்தம் உடையவராய்ப் பொருளீட்டுதற்கும் புத்திகேட்பதற்குமுரிய பங்காளரை அந்தரங்க நட்பாளரைத் தேடி எடுப்பதற்குப், பிதா மாதா புத்திரர் சகோதரர் சுற்றத்தார் அன்னியர் அரசர் இவர்களில் யார் யார் தமக்கு அதிக பொருத்தம் உடையார் என்பதை அறிந்துகொள்வதற்கும், பூமி வீடு வாகனம் கிராமம் தேசம் பிரயாணம் இவைகள் எவ்வாறு பொருத்தம் என்பதை எளிதில் உணருதற்கும், தற்காலம் அரசினர் பகுதியிலோ பிறபகுதியிலோ முயற்சி பொருந்தும் என்பதையும் இன்னாருக்கு இன்ன பகுதியில் உத்தியோகம் ஊதியந் தரும் என்பதையும் முதலாளிகள் தமக்குப் பொருத்தமுடைய தொழிலாளிகளையும் தொழிலாளிகள் தமக்குப் பொருத்தமான முதலாளிகளையும் தேர்ந்துகொள்ளுதற்கும் ஆதாரமான அரிய பெரிய விஷயங்களும் பிறவுமாம்.

இதனைப் பத்திரிகையிற் கண்ணுற்ற கல்விமான்களின் அபிப்பிராயப்படியும், இலங்கையின் பலபாகங்களினும் பலாய்நாடுகளினும் உத்தியோகப்பகுதிகளில் ஜீவிக்கும் வித்தியாபிமானப் பிரபுக்களின் திரவிய சகாயத்தைக் கொண்டும் புத்தகமாகப் பிரசுரிக்கலானேன். பணப்பஞ்சத்தினால் உலகம் பாதிக்கப்படும் இக்காலத்தில், இப் புண்ணிய புருஷர்கள் அன்புடன் திரவியதானஞ்செய்து ஆதரித்தமைக்கு "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" என்னும் உண்மைநாயனாரின் வாக்கின்படி யானும் கல்வியுலகமும் என்ஞான்றும் கடப்பாடுடையேம். சுபம்!

ஸ்ரீமுகஞு வைகாசிமீ. இங்ஙனம்
பிள்ளையார்கோவில், சி. அகிலேஸ்வர சர்மா.
மண்டைதீவு.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMMENTS

## THE HINDU, Monday, August 7, 1933.

### A Catechism in Astrology.

*(By Akileswara Sarma, Mandaitivu.)*

Recounting an autobiographical detail Mr. Sarma says that having originally lost faith in astrology, he subsequently regained it not merely but managed to cultivate the knowledge of it and obtained success in "reading the future of a person correctly." The astrological catechism under notice was first published in the "Sothidaparipalini", and it has now been issued in the form of a book at the request of the friends of the author in different parts of Ceylon and the F. M. S. Though the author has not cited authorities, then and there, it is obvious that he has made the freest and the fullest use of the standard classics on astrology in the preparation of the present catechism. The twelve Bhavas are dealt with seriatim, and in respect of each, the author has summed up the planetary positions which indicate prosperity and adversity respectively. Illustrative charts are given. The catechism is in simple popular Tamil, and lovers of astrology will find it extremely useful. Here and there, the charts happen to be inaccurate and this defect should be remedied in future editions of the book. For instance, on page 84 a planetary combination is mentioned, birth under which makes a woman permanently unhealthy and sickly. If, in a woman's horoscope, Saturn and the lord of the sixth house or bhava together occupy the seventh, she will always be sickly. The Illustrative chart is defective, as it shows only Saturn in the seventh house. Such inaccuracies will mislead beginners. On the whole the present astrological catechism written in simple, popular Tamil will be welcomed by the public.

**R. Nageswara Sarma.**

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TESTIMONIALS

As an interested student of astrology, I welcome the contribution made by Brahmasri S. Akileswara Sarma to the analytic study of the science. The classification of topics he has adopted and the simple method of treatment followed are new and commendable features of his work. To those who may look to astrology to save them from the pitfalls of life by timely admonitions, and to others who may find consolation in their troubles by reference to astral influence, the book will be a useful companion.

The author has often impressed me as possessing fair ability in astrology and Sanskrit scholarship. He is therefore eminently fitted to undertake a task of this nature.

**Karaveddi,** **S. K. Rajasingam, B. A.,** (*London*)
*3rd April, 1933.* *Inspector of Schools.*

I certify that the intended book will be found to be of immeasurable use and practical utility not only for beginners but also to real students and Pandits who have made a study of the science of astrology.

*Devakottai,* **T. G. Nagaratna Sastri,**
**30-5-41.** *Vakil.*

I have read some portions of Mr. Akileswara Sarma's book on Hindu Astrology and I find that it is written in a clear and interesting mannar.

**S. Natesan.**
*Principal,*
Jaffna, Parameshwara College.
*29th May, 1933.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Sri Ramanatha Astrological*
*Free Reading Library,*
Eastern Bank Palace, Ramnad.

We read with interest the book entitled "A Catechism in Astrology" by Sri S. Akileswara Sarma of Jaffna. The presentation of an intricate science like astrology in language understandable by even the layman is a welcome contribution in the spreading and propagation of the Indian astrological science. The author, with great efforts and after extensive analytical study of the science has brought this book for the benefit of the public. We recommend the book to all who desire to acquire knowledge in astrology. The book is also found to be a guide to the professionalists in the field.

Josyam RAMASAMY IYENGAR,
*Committee Member and*
*6th June, 1941.* *Ramnad Samasthanam Astrologer.*

---

The book is well-planned simple and clear. I am sure it will be greatly helpful to all who are interested in the subject

Kopay, A. Ponnaiya,
*25th May, 1933.* *Suptd, Jaffna Training College.*

---

இந்நூலைப் பார்வையிட்டு
இதன் இரண்டாம் பதிப்பு வெளியிடும்
முயற்சியை ஆதரித்துப்
பொருளுபகரித்து ஊக்கமளித்தருளிய
ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடாதிபதிகளாகிய
ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய ஸ்வாமிகளது
அன்பும் மஹெளதாரியமும்
என்றும் மறக்கற்பாலதன்று.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

கொக்குவிலை ஜனனஸ்தானமாகவும், மண்டைதீவை உத்தியோகத்தான மாகவும் உடைய பிரமஸ்ரீ சி. அகிலேஸ்வர சர்மா அவர்கள் ஏறக்குறைய ஒன்றரை வருஷங்களின் முன் தொடங்கிச் "சோதிடபரிபாலினி"ப் பத்திரிகையில் வெளிப்படுத்திவரும் "சோதிட வினாவிடை" என்னும் விஷயத்தைப் பார்த்தேன். அவை சுருதி யுக்தி அனுபவங்களுக்குப் பொருத்த முடையனவாகவும், அதனால் மெச்சப்படத்தக்கவுமாயிருக்கின்றன. அவை ஒவ்வொருவருடைய ஆயுள் செல்வம் முயற்சி முதலியவற்றைத் தெரிந்து கொள்ளுதற்கும், மனைவி சிநேகர் வேலைக்காரர் முதலியோரைப் பொருத்த முடையவர்களாக எடுத்துக்கொள்ளுதற்கும் கருவியாயு மிருக்கின்றன. சிறு வயதிலே அரிய இவ்விஷயங்களைத் தாமே அறிந்து வெளிப்படுத்தலால் இவருக்கு ஈசுவரகடாக்ஷம் இருக்கின்றதென்று நம்பவேண்டியிருக்கின்றது. இவர் ஒன்றரைவருஷ காலமாகத் தாம் எழுதிவந்த இவ் வினாவிடையை ஒரு புஸ்தகமாகத் திரட்டி அச்சிட்டிருப்பது உலகத்தவருக்கு அதிக பயனைக் கொடுப்பதாக இருக்கும்.

வடலியடைப்பு, அ. அருணாசல சாஸ்திரிகள்.
9–3–33.

# அபிப்பிராயங்கள்

இலங்கையில் தமிழ்த் தினவர்த்தமானியாகி
எங்கெங்கும் திக்குவிஜயஞ்செய்துகொண்டிருக்கும்
வீரகேசரியின் அபிப்பிராயம்

சோதிட வினாவிடை

யாழ்ப்பாணம், மண்டைதீவு, ஸ்ரீமான் சி. அகிலேஸ்வர சர்மா அவர்களால் இயற்றப்பெற்ற "சோதிட வினாவிடை" என்னும் நூல் ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். தனது நீண்ட அனுபவத்தைக்கொண்டும், பல ஜாதகர்களின் நடைமுறைப் பலன்களை நேரடியாகத் தெரிந்துகொண்டும், மூலாதாரமான கணிதசாஸ்திரத்தின் உதவியைக்கொண்டும் இந்நூல் எழுதப் பட்டதாக ஆசிரியர் தனது முகவுரையிற் குறிப்பிட்டிருக்கிறார். சோதிட சாஸ்திரிகளுக்கும், சோதிடப் பயிற்சிபெற விரும்பும் மாணவர்களுக்கும், சோதிடத்தில் ஆசைகொண்டுள்ள கனவான்களுக்கும் இந்நூல் மிக்க உதவி அளிக்கக்கூடுமென்பதே நமது அபிப்பிராயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமண்டலத்தில் தமிழை வளர்க்கும் வாரவர்த்தமானியாகிய

## ஈழகேசரியின் அபிப்பிராயம் (23–7–33.)

## சோதிட வினாவிடை

*ஆக்கியோன்: யாழ்ப்பாணம், மண்டைதீவு, பிரமஸ்ரீ சி. அகிலேஸ்வர சர்மா அவர்கள்.*

*சோதிட வினாவிடை எனப் பெயரிய இந்நூலில், மக்கள் ஒவ்வொருவரிடத்தும் அமைந்துள்ள குணங்கள், தொழில்கள், அறிவு, ஒழுக்கம் முதலியன சோதிடத்தின்படி அமைந்துள்ளனவா என்பதைப்பற்றிய வினாக்களுக்கு விடை கூறப்பட்டுள்ளது. 482 வினாக்களுக்கு விடைகூறுமுகத்தானே, ஒருவர் ஜனனகாலத்தில் குறிக்கப்பட்ட கிரகங்கள் எவ்வெத் தானங்களில் இருக்கின்றனவோ அதன்படியே அவர் குணம், தொழில், அறிவு முதலியன அமையப்பெற்றிருப்பார் என்பது விளக்கப்பட்டுள்ளது. இன்னும் சோதிடத்தைப்பற்றி அறியவேண்டிய பல குறிப்புக்களும், இந்நூலை உபயோகித்தற்குரிய விளக்கக்குறிப்பும் சேர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பலாபலன்களை அறிந்துகொள்ளக்கூடிய முறையில் விளக்கப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கது. நீண்டகாலமாகப் பிரயாசையுடன் இந்நூலை ஆக்கி அளித்த ஆசிரியருக்கு நன்றி கூறுகின்றேம்.*

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் வாரம் இருமுறை பிரசுரமாகும்

## இந்துசாதனத்தின் அபிப்பிராயம் (24–7–33.)

## சோதிட வினாவிடை

*இது சோதிடவிஷயமாக ஒரு மாணாக்கன் தனது ஆசிரியரை வினவ அவர் விடையிறுக்கும் முறையில், இலகுவான தமிழில், இயன்றவரை நுண்ணிய ஆராய்ச்சியுடன் ஆங்காங்கு பல்வேறு வகையான கிரகநிலைச் சக்கரங்களுடன் திருட்டாந்தபூர்வமாக எழுதி, கொக்குவில் சோதிடப்பிரகாச யந்திரசாலையில் தெளிவுற அச்சிடப்பெற்று வெளிவந்துள்ளது. டெமி $\frac{1}{8}$ பிரமாணங்கொண்ட 250 பக்கங்கள் வரையிற் கொண்டுள்ளது. இதனை இயற்றியவர் முன்னர் நவமாகச் சில பிரபந்தங்களை இயற்றியவரும், யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பிள்ளையார்கோவில் அர்ச்சகராயுள்ளவருமாகிய பிரமஸ்ரீ சி. அகிலேஸ்வர சர்மா அவர்கள். இந்நூல் வாயிலாக எவரும் தாம் தாம் தங்கள் ஜாதகபலன்களைத் தாமே பார்த்து அறிதல் முடியும். பிரதி அழகுறக் கட்டப்பெற்றுள்ளது.*

---



உ

## விநாயக வணக்கம்

ஸ்ரீ அகண்டாகார சச்சிதானந்த சொரூபராய், ஆன்மாக்களுக்குப் பரமான்மாவாய், அவைகளுள் முத்தான்மாக்களின் இருதயகமலத்தில் தயிரில்நெய்போல் தாண்டவமாடும் ஈஸ்வரனாய், உண்மை ஞானிகளாம் அன்னவர் தேடும் ஊதியப்பொருளாய், மற்றைய பெத்தான்மாக்களுக்கும் எள்ளுக்குள் நெய்போல் மறைந்து நின்று ஏமமார் மறக்கருணைபுரியும் அறக்கடவுளாய், ஐயமில் மெய்யன்பர்க்கு ஆனந்தமூர்த்தியாய், வேண்டுவோர் வேண்டியதை ஈந்தருளும் பொருட்டு உருவத்திருமேனிகொண்டு எழுந்தருளியிருக்கும் (தமக்குப் பிறிதொரு நாயகனில்லாத) ஸ்ரீ விநாயகப்பெருமானை ஒருமையுடன் தியானித்து ஓலமிட்டழைக்கின்றேன். ஔவியம் நீங்கா நெஞ்சினேனுக்குப் பெருமானின் பூரணகிருபை கிடைக்காதெனினும், இங்ஙனம் அழைத்தல் எற்றிற்கோவெனின், தம்மீது சிறியேன் அன்புடையனாயிருக்கும் வண்ணம் அருட்பிரசாதம் அளிக்கும் பொருட்டேயாம்.

## விநாயக வணக்கம்

ஓங்கார வடிவான உன்சொருப தரிசன மெனக்குதவ வேண்டுமீசர்
உமையாடன் மைந்தனே ஒருதந்தி முகவனே ஓவாத கடனபாலா
நீங்காத வங்குசம் பாசமப யம்வரதம் லட்டுகமு முடையவிமலா
நீள்சடைப் பின்னலுந் தொந்தியும் பாதத்தி னிகழ்வீர கெண்டையுமுடை
ஆங்காத றருமைய வரைமாலை யவிருச்சி யணிகுங்கு மங்கொள்ரேகை
அடையுதர பந்தனம் மார்பணி பதக்கமுடை யண்ணலே வருகவருக
யாக்காக வருகடன கணபதீ குருபார பவனிவா வென்கண்முன்னே
பக்தியொடு ஞானமருள் சித்திவிக் னேஸ்வரா பாதாம்புயங்க டுணையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமசிவ வணக்கம்

தேவதேவனைச் சின்மயேசனைப்
பாவநாசனைப் பரமேசனைப்
பூவைபாகனைப் புனிதர்மோகனை
யாவிநாதனை யடிவணங்குவாம்.

## பராசக்தி வணக்கம்

பெற்ற தாயென் சிவகாமி தேவியே பிள்ளை யானுன் பதப்புணை தாவியே
யுற்ற தான பவக்கடல் நீந்தியே யுன்றன் பொன்முலைப் பாலருண் மாந்தியே
பற்ற றூத பிரபஞ்சங் காய்ந்துமே பாவி மெய்ச்சிவ போதத்திற் றோய்ந்துமே
முற்ற றூத சுகம்பெற வேயின்னே மூட னேனைக் கடைக்கணிப் பாயன்னே.

## முருகன் துதி

முருகா முருகு நினைப்பிரி யாதென்று மூதுணர்ந்தோர்
இருகாதி லேற வியம்புகின் றூரெந்த வேல்வையினு
மொருகாதல் பொங்கிய நங்கையர் லீலைக் குகந்தருள்வோய்
பெருகாநி னம்புயம் பெட்பாக வென்னிற் பிணைத்தருளே.

## சரஸ்வதி துதி

பாவிற் குரிய பரிமள மேபசும் பானிறத்தாய்
பூவிற் பிரிவறு பொற்கொடி யென்னைப் பொருட்படுத்தி
நாவிற் பரிவுடன் வைகி வழங்கிடு நன்றியினு
லாவிற் பெரியநற் சோதிட நூலொன் றறைகுவனே.

## நவக்கிரக வணக்கம்

கண்கண்ட தெய்வமென் றிச்சகம் போற்றுங் கதிரவனை
விண்கொண்ட மீன்கள் விரும்பும ளுளனை வெங்குசனைப்
பண்கொண்ட புந்திபொன் பார்க்கவ னைச்சனி பாம்பிரண்டை
எண்கொண்ட வென்மனக் கோவிலி லேதின மேத்துவனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கடவுள் துணை

# சோதிட வினாவிடை

**மாணவன்:** குரவ! நமஸ்காரம்.

உலகத்தில் மனிதர் ஒவ்வொருவரிடத்தும் உள்ள குணங்கள் அவரவர் செய்யும் தொழில்கள் முதலியவைகளுக்கும் சோதிடத்திற்கும் நேரான தொடர்புண்டா? அங்ஙனமாயின், சோதிடத்தின்படி மனிதரின் கல்வி, அறிவு, குணம், ஒழுக்கம், தொழில், சுகம், துக்கம், வரவு, செலவு, லாபம், நஷ்டம் ஆதியாய இவைகளை எல்லாம் நிதானித்துக் காண இயலுமா?

**ஆசிரியன்:** ஆம். மனிதர் யாவரும் பூமியிற் பிறக்கும்போது அவரவர் உதயமான இராசி முதலாக 12 இராசிகளிலும் 9 கிரகங்களும் வீற்றிருக்கும் நிலைமைகளைக்கொண்டு அவரவர் குணம் முதலியவற்றையெல்லாம் நன்றாக நிதானித்துக் காண்பதோடு, பிரத்தியக்ஷத்தில் காண்பிக்கவும் முடியும்.

**மாணவன்:** இதுவிஷயமாய் என் மனதிலே தோன்றும் வினாக்களைத் தங்களிடம் வெளியிடுகிறேன். அவற்றிற்குத் தயை புரிந்து விடையளிக்குமாறு வேண்டுகின்றேன்.

**ஆசிரியன்:** சாஸ்திர ஆராய்ச்சியினாலும், அவ்வாராய்ச்சியின் பெறுபேறுகளாகக் காணப்படும் அனுபவ சாட்சிகளையே ஆதாரமாகக் கொண்டும் எம் புத்திக்கு எட்டியவரையில் விடை தரலாம்.

**வினா:** மனிதருடைய தாரதம்மியங்களை எல்லாம் வகுத்துக் காண்பிக்கும் சோதிடமார்க்கம் யாது?

**விடை:** மனிதர் யாவரும் பூமியில் அவதரிக்கும்போது அவரவர்க்கு அமைந்துள்ள உதயலக்கினம் முதலாகப் பன்னிரு பாவங்களையும், பாவாதிபர் இருந்த நிலைமைகளையும், அன்னவர் நோக்கத்தின் திட்பங்களையும் கொண்டு கணிக்கப்படும் ஜாதகமார்க்கந்தான் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினு: அங்ஙனமாயின் சிலருடைய ஜாதகங்களின்படி குறித்துள்ள பலன் நடவாமலிருப்பதற்கும், சிலருடைய ஜாதகங்களில் குறித்துள்ள காலங்களுக்கு முந்தியும் பிந்தியும் முரண்பட்டுப் பலன்கள் நிகழ்வதற்கும் காரணம் யாது?

விடை: பிள்ளை பிறந்த உடனே தந்தி (Telegraph) நிலையங்களின் கடிகார நேரத்தின்படி ஒழுங்குசெய்து வைத்திருக்கப்பெற்றதும், சீவிரகதி மந்தகதிகளின்றிச் சரியான நேரத்தைச் செவ்வனே காண்பிப்பதுமான கடிகார மணியின்படி உதயலக்கினம் கண்டுகொண்டால், அந்தச் சாதகருடைய பலன்கள் சூரிய சந்திர கிரகணங்கள் குறித்த காலங்களில் பற்றி விடுவது போலக் குறித்த காலங்களில் தவருது நிகழக் காணப்படும்.

பகலில் சூரியச்சாயையைக் காலடியால் அளந்து ஜாதகம் கணிப்பதில் சுமார் ஒரு நாழிகை வரை முரண்படும். சாயை (அடி) அளப்பவர் குனியாமலும் நிமிராமலும் தராசுக்கம்பிபோல் நேராக நின்றுகொண்டு, சாயை அளக்குமிடம் மேடுபள்ளமின்றிச் சமபூமியாகவும் கண்டு, அளப்பவரின் தலைச்சாயைவரை அடையாளம் இட்டு ஆனபின், மிதித்த அடியையும் சேர்த்து அடி அளந்து, அதனைக்கொண்டு நேரம் எடுப்பின் சுமார் 3 நிமிஷத்திற்கு மேற்படாத வித்தியாசத்துடன் ஜாதகம் அமையும்.

இரவில் சந்திரச்சாயையையும் முன் சூரியச்சாயையில் சுட்டியவாறு சுத்தமாக அடியளந்து கணக்கிட்டால் சுமார் 6 நிமிஷ வித்தியாசத்துடன் ஜாதகம் அமையும். ஆனல், இவைகளை நுட்பமான சாஸ்திரமுறைப்படி கணக்கிடாது பொதுவான முறைப்படி கணித்தால் சுமார் ½ மணித்தியாலம் வரையிலும் வித்தியாசம் ஏற்படும்.

இரவில் நக்ஷத்திர உச்சங்களைக் கொண்டு உதயலக்கினம் நிர்ணயிக்குமிடத்து, இன்ன நக்ஷத்திரம் இன்ன உருவம் உடையது என்று சோதிடங் கற்றவர் வாயிலாகக் கூறப்பட்ட விபரத்தைப் பிரத்தியக்ஷத்திலும் அனுபவமுடையவர்கள் மூலமாகத் தெரிந்துகொண்டவர்களே இதனை நிர்ணயப்படுத்தும் தகுதி உடையவராவர். அல்லாதவர், "பரணி மூன்று நக்ஷத்திரம், அடுப்புப்போல" என்ற குறிப்பைக் கொண்டு அடுப்புப்போல் மூன்று மூன்ருகக் காணப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ நக்ஷத்திரக் கூட்டங்களுள் ஏதேனும் ஒன்றைப் பரணியென மனம்போனவாறு நிர்ணயித்து, அதன் உச்சத்தையே பரணியின் உச்சமாகக் கொண்டனராயின் நேரம் சரிவருவதெப்படி? நக்ஷத்திரங்கள் இவையிவை என நன்ருகத் தெரிந்தவர்கள், பின்வரும் நக்ஷத்திர உச்ச அட்டவணைப்படி அவற்றின் உச்சமானங்களைக் கொண்டு உதயலக்கினமும், அதிற் சென்ற நாடி விநாடிகளும் கண்டு கொள்ளலாம்.

நக்ஷத்திர உச்ச அட்டவணை

| உச்சமாகும் நக்ஷத்திரம் | உருவம் | தொகை | உதய இலக்கினம் | சென்ற நா. வி. |
|---|---|---|---|---|
| அச்சுவினி ... | குதிரைத்தலைபோல ... | 6 | கர்க்கடகம் | 1—44 |
| பரணி ... ... | அடுப்புப்போல ... ... | 3 | ,, | 3—30 |
| கார்த்திகை ... | சவரக்கத்திபோல... ... | 6 | சிங்கம் | 0—34 |
| ரோகிணி ... | ஊற்ருல்(V)போல ... ... | 12 | ,, | 2—35 |
| மிருகசீரிடம்... | தேங்காய்க்கண்போல ... | 3 | கன்னி | 0—02 |
| திருவாதிரை... | பவளமணிபோல ... ... | 1 | ,, | 0—52 |
| புனர்பூசம் ... | ஓடம்போல ... ... ... | 5 | துலாம் | 0—29 |
| பூசம் ... ... | புடலம்பூப்போல ... ... | 3 | ,, | 2—58 |
| ஆயிலியம் ... | அம்மிபோல ... ... ... | 4 | ,, | 3—33 |
| மகம் ... ... | முடநகம்போல ... ... | 4 | விருச்சிகம் | 1—18 |
| பூரம் ... ... | கட்டிற்கால்போல ... | 2 | ,, | 4—03 |
| உத்தரம் ... | | 2 | தனு | 0—03 |
| அத்தம் ... | உள்ளங்கைபோல ... ... | 5 | ,, | 1—56 |
| சித்திரை ... | புலிக்கண்போல ... ... | 2 | ,, | 4—03 |
| சுவாதி ... ... | மாணிக்கரத்தினம்போல ... | 1 | மகரம் | 0—50 |
| விசாகம் ... ... | இடிந்தபாழுந்துரவுபோல ... | 6 | ,, | 2—16 |
| அனுஷம் ... | வளைந்தபனைபோல ... ... | 6 | கும்பம் | 0—31 |
| கேட்டை ... | ஈட்டிபோல... ... ... | 4 | ,, | 1—30 |
| மூலம் ... ... | எக்காளம்போல ... ... | 6 | ,, | 4—10 |
| பூராடம் ... ... | பூம்பந்தற்கால்போல ... | 2 | மீனம் | 1—46 |
| உத்தராடம் ... | | 2 | ,, | 3—12 |
| திருவோணம் | முழக்கோல்போல ... ... | 3 | மேடம் | 1—16 |
| அவிட்டம் ... | சக்கரம்போல ... ... ... | 6 | ,, | 3—19 |
| சதயம் ... ... | தவிடுபோல ... ... ... | 100 | இடபம் | 4—15 |
| பூரட்டாதி ... | கட்டிற்கால்போல ... | 2 | ,, | 4—46 |
| உத்தரட்டாதி | | 2 | மிதுனம் | 2—17 |
| ரேவதி ... ... | தோணிபோல ... ... | 3 | ,, | 5—00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, பிள்ளை பூமியில் பிறக்கும்போது தத்தந் தேச (ஸ்டாண்டர்ட்) கடிகாரத்தின்படி சரியான நேரம் கண்டு ஜாதகம் கணிப்பதே பலன்களைச் சரியான முறையில் காண்பிக்கும் மார்க்கம் என்பது தெள்ளிதில் புலப்படுகின்றது.

## ஆரம்ப கணிதம்

**வினா:** அவ்வாறு சரியான மணியின்படி தவறாது நேரம் பார்த்து ஜாதகம் கணிப்பதற்கு ஆரம்ப அப்பியாசப் பாடங்கள் எவை?

**விடை:** உதயலக்கினம், நக்ஷத்திரம், பரமநாழிகை, பாத நாழிகை, சென்ற நின்ற நாழிகை, நக்ஷத்திராசி, சந்திரலக்கினம், கிரகநிலை, நவாம்சலக்கினம், நவாம்சநிலை, கிரகங்களின் வரலாறு, இராசிகளின் வரலாறு, பன்னிருபாவம், பன்னிருபாவகாரகங்கள், கேந்திரஸ்தானங்கள், மறைவுத்தானங்கள், உபசயங்கள், திரிகோணங்கள், வர்க்கோத்தமம், பாபக்கிரகமத்தி, கிரககாரகங்கள், கிரக நட்பு ஆட்சி உச்ச பகை நீசங்கள், கிரகநோக்கு, இராசிகளும் இராசி அதிபர்களும், அதிஉச்சம், அதிநீசம், உச்சம், மூலத்திரிகோணம், ஆட்சி, கிரகங்களின் வக்கிரகதி தீவிரகதி, கிரக அஸ்தமனம் உதயம், கிரக ஷட்பலம், கிரக தற்கால சத்துரு மித்துரு அதிமித்திரர் அதிசத்துரு சமர், ஒவ்வொரு கிரகங்களும் செய்யும் பலன்கள், கிரகங்கள் பலன்செய்யும் காலங்கள், கிரகங்களால் வரும் ரோகங்கள், ஜனனகால மகாதெசாபுத்தி பிரிக்கும் வகை, தற்கால மகாதெசாபுத்தி பிரிக்கும் வகை, காலைச்சுரதெசை பிரிக்கும் வகை என்னும் இவைகளாம்.

### உதயலக்கினம்

**வினா:** உதயலக்கினமாவது யாது?

**விடை:** ஒருவர் பிறக்கும்போது கிழக்குத்திசையில் அடிவானத்தில் உதயமாகும் இராசியாம்.

**வினா:** இவ்விராசிகள் எத்தனை?

**விடை:** இவை 12. மேடம் இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனு, மகரம், கும்பம், மீனம் என்பனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா:** இவைகள் உதயலக்கினங்களாகப் பொருந்தும் வகை எவ்வாறு?

**விடை:** சூரியோதயகாலத்தில், சித்திரைமாதத்தில் மேடராசியும், வைகாசிமாதத்தில் இடபராசியும், இவ்வாறு நிரையே ஆனிமுதல் பங்குனியீறுன மாதங்களில் முறையே மிதுனம் முதல் மீனமீறுன இராசிகளும் முன்போல இலக்கினங்களாகும். (இவைகள் அப்போது சூரியனுடன் உதிக்கும் இராசிகள்.)

**வினா:** ஒவ்வொரு தினத்திலும் சூரியோதயத்தின் மேல் 60 நாழிகை வரையும் உதயமாகும் இராசிகளை வரையறுக்கும் வகை எவ்வாறு?

**விடை:** ஒவ்வொரு மாதத்திலும் அவ்வத் தினங்களில் பஞ்சாங்கத்தில் உதயாற்பரம் (மேடாந்தம், இடபாந்தம்) என்று குறிக்கப்பட்ட நாடிவிநாடிகள், சூரியோதயமுதல் நிகழும் முதலாவது இலக்கினத்தின் முடிபான காலம். இதன்பின் அவ்வம்மாத உதயாற்பர இராசிக்கு அடுத்த இராசிகள் ஒன்றன்பின் ஒன்றாய் அவ்வவற்றிற்குரிய இராசிப்பிரமாணம் வரை உதயலக்கினமாக நிகழும்.

**வினா:** இராசிப்பிரமாணங்கள் எவை?

**விடை:** மேடம் நாடி 4–35. இடபம் 5–07. மிதுனம் 5–27. கர்க்கடகம் 5–19. சிங்கம் 5–01. கன்னி 4–56. துலாம் 5-09. விருச்சிகம் 5–26. தனு 5-20. மகரம் 4–51. கும்பம் 4–23. மீனம் 4-16 ஆம். (இவைகள் யாழ்ப்பாணத்திற்கு உரியன.) ஒவ்வொரு தேசங்களுக்கும் இராசிப்பிரமாணங்கள் வேறுவேறாக ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைப் பஞ்சாங்கங்களில் "இராசிப பிரமாணங்கள்" என்ற விஷயத்தில் கண்டுகொள்க.

## உதயலக்கினம் காணும் வகை

**வினா:** பிள்ளை பிறக்கும்போது உதயலக்கினம் காணும் வகையை உதாரணமூலம் காண்பிக்க முடியுமா?

**விடை:** ஆம் உதாரணமாக, பிரமாதி௵ சித்திரைமீ 20௳ புதன்கிழமை முற்பகல் 12 மணி 12 நிமிஷத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு பிள்ளை பிறந்தது என வைத்துக்கொள்வோம். அந்நேரத்திற்கு உதயலக்கினம் காண்போம். அன்று யாழ்ப்பாணத்தில் சூரியோதயம் 5 மணி 56 நிமிஷம். அது முதல் பகல் 12 மணி 12 நிமிஷம் வரை சென்ற மணித்தியாலம் 6, நிமிஷம் 16. மணி ஒன்றுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$2\frac{1}{2}$ நாடி வீதம் 6 மணி 16 நிமிஷத்திற்கும் பெருக்கிக் கண்ட நாடி 15, விநாடி 40 ஆகும். செய்யும் முறை கீழே காண்க:—

| மணி | நிமிஷம் |
|---|---|
| 6 | 16 |
| | $2\frac{1}{2}$ |

15 நாடி 40 விநாடி

இதுவே உதயாதி ஜனனாந்தம் சென்ற நாழிகையாகும். அன்று மேடாந்தம் நின்ற (உதயாற்பர) நாடிவிநாடியுடன் மிதுனம் வரையுமுள்ள இராசிமான நாடிவிநாடிகளைக் கூட்டி, உதயாதி ஜனனாந்தம் சென்ற நாழிகையிற் கழிக்க, மிகுதி கர்க்கடகத்தில் சென்ற நாடி விநாடியாம்.

| | |
|---|---|
| 1 - 42 | மேடாந்தம் நின்ற நாடி விநாடி. |
| 10 - 34 | இடபமும் மிதுனமும் கூட்டியது. |
| 12 - 16 | மிதுனம் முடியும் நேரம். |

| | |
|---|---|
| 15 - 40 | உதயாதி ஜனனாந்தம் சென்ற நாழிகை. |
| 12 - 16 | மிதுனம் முடியும் வரையுமுள்ள நாழிகை. |
| 3 - 24 | கர்க்கடகத்தில் சென்ற நாடி விநாடி. |

ஆகவே, மேற்குறித்த ஜாதகர் ஜனித்துள்ள உதயலக்கினம் கர்க்கடக இராசி என்றும், அதில் சென்ற நாடி 3, விநாடி 24 என்றும் பெறப்பட்டது.

## நக்ஷத்திரம்

**வினா:** நக்ஷத்திரமாவது யாது? அதனைப் பார்க்கும் வகையை உதாரணமூலமாக விளக்க இயலுமா?

**விடை:** ஆம். நக்ஷத்திரம் அச்சுவினி முதல் ரேவதி ஈறாக 27 ஆகும். இவை பஞ்சாங்க உறுப்புக்களில் ஒன்று. பஞ்சாங்கத்தில் ஒவ்வொரு தேதிகளிலும் "நக்ஷத்திரம்" என்ற தலையங்கத்தின் கீழ் அவ்வப் பெயரோடு குறித்த நக்ஷத்திரங்களின் நேரிற் குறித்த நாடிவிநாடிகள் சூரியோதயம் முதல் அவ்வந் நக்ஷத்திரம் முடியும் வரையும் உள்ள நாடிவிநாடிகளாம். அதன்மேல் அடுத்த நக்ஷத்திரமாம். அவை பெரும்பான்மையாக அடுத்த தேதிகளிலும், சிறுபான்மையாக அதே தேதிகளில் இரண்டாவதாகக் குறிக்கப்பட்ட நாடிவிநாடிகள் வரையிலுமாம். உதாரணமாக: பிரமாதிஷு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரைமாதம் 15-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 நாழிகைக்கு என்ன நக்ஷத்திரம் என்று பார்ப்போம். அன்று நக்ஷத்திரம் மகம். இதற்கு நேரே 51–57 என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இது அன்று மகநக்ஷத்திரம் நின்று முடியப்போகும் காலமாகும். இதற்கு முதனாள் 14-ந் திகதி மகம் எவ்வளவு சென்றிருக்கிறதென்பதை அறிவதற்கு, அத்தேதியில் பூசம் 0-03 என்றும், அதன் மேல் ஆயிலியம் 55–56 வரை என்றும், அதற்குமேல் மகம் என்றும் கொள்ளவேண்டியிருக்கிறது. இத்தேதியில் 3 நக்ஷத்திரங்கள் தொடர்பாக வியாபித்திருக்கின்றன. ஆயின், இதில் எமக்குத் தேவையான மகத்தின் ஆதியந்த பரமநாழிகையை எடுப்போம். 14-ந் திகதி பகலிரவு 60 நாழிகையில் பூசம் 3 விநாடிகளைக் கழிக்க மிகுதி 59–57. இதில் ஆயிலியத்தின் பரமநாடி (அன்று ஆயிலியம் நிற்கும் நாழிகையில் பூசம் நிற்கும் நாழிகையைக் கழித்து வந்தது) 55-53-ஐக் கழித்த மிகுதி மகத்தில் சென்ற நாடிவிநாடியாம். இவற்றைக் கணிக்கும் விபரத்தைக் கீழே காண்க:—

| | |
|---|---|
| 60 - 00 | 14உ பகலிரவு 60 நாழிகை. |
| 00 - 03 | அன்று பூசத்தில் நின்ற நாடி. |
| 59 - 57 | |
| 55 - 53 | ஆயிலியத்தின் பரமநாழிகை. |
| 4 - 04 | அன்று மகத்தில் சென்ற நாடிவிநாடி. |

## பரமநாழிகை

மேற்கண்டபடி 14-ந் திகதி மகத்திற் சென்ற நாடிவிநாடிகளாகிய 4-04 ஐயும், 15-ந் திகதி மகத்தில் நின்ற நாடிவிநாடிகளாகிய 51 - 57 ஐயும் கூட்ட வருவது மகத்தின் பரமநாழிகையாம். இதனைக் கணிக்கும் விபரத்தைக் கீழே காண்க:—

| | |
|---|---|
| 4 - 04 | 14-ந் திகதி மகத்திற் சென்ற நாடிவிநாடி. |
| 51 - 57 | 15-ந் திகதி மகத்தில் நின்ற நாடிவிநாடி. |
| 56 - 01 | மகத்தின் பரமநாழிகை. |

## பாதநாழிகை

முற்கூறிய பரமநாழிகையை நான்கு பாதங்களாகப் பிரித்து வருவது பாதநாழிகையாம். பிரிக்கும் விபரம் கீழே காண்க:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 4 \| 56 - 01 | மகத்தின் பாமநாழிகை. |
| 14 - $00\frac{1}{4}$ | ,, பாதநாழிகை. |

மகம் பாதம் ஒன்றுக்குக் கண்ட நாழிகை 14, விநாடி $00\frac{1}{4}$.

## சென்ற, நின்ற நாழிகை

15-ம் திகதி பகல் 10 நாழிகையைக் குறிப்பிட்டோமல்லவா? அந்நேரம் மகம் எத்தனையாம் பாதம்? அப் பாதத்திற் சென்ற நாழிகை எவ்வளவு? செல்லாது நின்ற நாழிகை எவ்வளவு? என்று பார்ப்போம்.

| | |
|---|---|
| 4 - 04 | 14-ந் திகதி மகத்திற் சென்ற நாழிகை. |
| 10 - 00 | 15-ந் திகதி குறித்த நேரம்வரை சென்ற நாழிகை. |
| 14 - 04 | குறித்த நேரத்தில் மகத்திற் சென்ற நாடிவிநாடி. |

இதிலிருந்து மகத்தின் பாதநாழிகையை எத்தனை முறை கழிக்கப்படுமோ அத்தனை முறை கழித்து வருவது, கழிபடாத அடுத்த பாதத்திற் சென்ற நாடிவிநாடிகளாம். இவைகளைப் பாதநாடிவிநாடிகளில் கழிக்க வருவது அப் பாதத்தில் செல்லாது நின்ற நாடிவிநாடிகளாம். கணிக்கும் விபரம் கீழே காண்க:—

| | |
|---|---|
| 14 - 04 | மகத்திற் சென்ற நாழிகை. |
| 14 - $00\frac{1}{4}$ | மகம் 1-ம் பாதத்துக்குரிய பாதநாழிகை. |
| 0 - $03\frac{3}{4}$ | மகம் 2-ம் பாதத்திற் சென்றது. |

ஆகவே, நாம் குறிப்பிட்ட 15-ம் திகதி பகல் 10 நாழிகை நேரம் மகம் 2-ம் பாதமெனவும், அப் பாதத்தில் சென்ற விநாடி $3\frac{3}{4}$ எனவும் தெளிவாயிற்று. இனி மகம் 2-ம் பாதத்தில் நின்ற நாடிவிநாடியுடன் பின்னைய 3-ம் 4-ம் பாதங்களின் நாடிவிநாடிகளையும் கூட்ட வருவது மகத்தில் செல்லாது நின்ற நாழிகையாம்.

| | |
|---|---|
| 14 - $00\frac{1}{4}$ | மகம் 2-ம் பாதத்தின் பாதநாழிகை. |
| 0 - $03\frac{3}{4}$ | மகம் 2-ம் பாதத்தில் சென்றது. |
| 13 - $56\frac{1}{2}$ | மகம் 2-ம் பாதத்தில் நின்றது. |
| 14 - $00\frac{1}{4}$ | மகம் 3-ம் பாதத்தின் பாதநாழிகை. |
| 14 - $00\frac{1}{4}$ | மகம் 4-ம் பாதத்தின் பாதநாழிகை. |
| 41 - 57 | மகத்தில் செல்லாதுநின்ற நாழிகை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நக்ஷத்திர இராசி

| | |
|---|---|
| அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால் ... ... | மேடம் |
| கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசிரிடத்து முன்னரை | இடபம் |
| மிருகசிரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால் | மிதுனம் |
| புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம் ... ... | கர்க்கடகம் |
| மகம், பூரம், உத்தரத்து முதற்கால் ... ... | சிங்கம் |
| உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை | கன்னி |
| சித்திரையிற் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால் ... | துலாம் |
| விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை ... ... | விருச்சிகம் |
| மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால் ... ... | தனு |
| உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை | மகரம் |
| அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் ... | கும்பம் |
| பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி, ரேவதி ... ... | மீனம் |

## சந்திரலக்கினம்

**வினு:** சந்திரலக்கினம் காணும் வகையை உதாரண மூலமாக விளக்க முடியுமா?

விடை: ஆம். பிரமாதிஸூ சித்திரைமீ 10உ ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்குச் சந்திரலக்கினம் காண்போம். அன்று சூரியோதயம் 6 மணி 1 நிமிஷம். மணி ஒன்றுக்கு $2\frac{1}{2}$ நாழிகை வீதமும் நிமிஷம் ஒன்றுக்கு $2\frac{1}{2}$ விநாடி வீதமுமாக 7 மணிக்கு உதயாதி சென்ற நாழிகை 2 விநாடி $27\frac{1}{2}$ ஆகும். அப்பொழுது நக்ஷத்திரம் ரோகிணி. அன்று 13 நாழிகை 32 விநாடிவரையில் ரோகிணி உண்டு. முதனுளாகிய 9உ பகலிரவு 60 நாழிகையில் கார்த்திகை 15 நாழிகை 12 விநாடியைக் கழிக்க வருவது 44 நாழிகை 48 விநாடி. இந்த 44 - 48 உடன் 13 - 32 ஐக் கூட்ட வருவது ரோகிணியின் ஆதியந்த பரமநாழிகை (58 - 20). இதனை நாலு பாதங்களாக்கினல் (58 - 20 ஐ 4 ஆல் பிரித்தால்) 14 - 35 ஆகும். இது ரோகிணியின் பாதநாழிகை. மேற்குறித்த 2 நாழிகை $27\frac{1}{2}$ விநாடியை அன்று நின்ற ரோகிணி 13 நாழிகை 32 விநாடியிற் கழிக்க வருவது 11 நாழிகை $4\frac{1}{2}$ விநாடி. இது ரோகிணியின் 4-ம் பாதத்திற் செல்லாது நிற்பது.

குறித்த சித்திரைமீ 10உ ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்குச் சந்திரன் ரோகிணியின் 4 ஆம் பாதத்திலிருப்பதால் ரோகிணிக்கு உரிய இராசி இடபம். எனவே, அந்நேரம் சந்திரலக்கினம் இடபம் என்பது பெறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரம்

| | | |
|---|---|---|
| | 60 - 00 | 9உ பகலிரவுமான நாடிவிநாடி. |
| | 15 - 12 | 9உ கார்த்திகையில் நின்ற நாடிவிநாடி. |
| | 44 - 48 | 9உ ரோகிணியில் சென்ற நாடிவிநாடி. |
| | 13 - 32 | 10உ ரோகிணியில் நின்ற நாடிவிநாடி. |
| 4 | 58 - 20 | ரோகிணியின் ஆதியந்த பரமநாழிகை. |
| | 14 - 35 | ரோகிணியின் பாத நாடிவிநாடி. |
| | 13 - 32 | 10உ ரோகிணியில் நின்ற நாழிகை. |
| | 2 - $27\frac{1}{4}$ | அன்று குறிப்பிட்ட நேரம். |
| | 11 - $04\frac{1}{2}$ | ரோகிணி 4-ம் பாதத்தில் நின்ற நாழிகை. |

## கிரகநிலை

**வினா:** இவ்வாறு உதயலக்கினம் கண்டபின் கிரகநிலைகளை அமைப்பது எங்ஙனம்?

**விடை:** மேற்குறித்த கர்க்கடகலக்கின ஜாதகருடைய கிரக நிலையையே உதாரணமாக அமைத்துக் காண்போம்.

பஞ்சாங்கத்தில் 'கிரகபாதசாரங்கள்' என்ற தலையங்கத்துள் 9 கிரகங்களும், 12 இராசிகளில் 27 நக்ஷத்திரங்களின் 108 பாதங் களிலும் மாதந்தோறும் சஞ்சாரஞ்செய்யும் விதத்தையும், அவை களின் பெயர்ச்சி, வக்கிரகதி, தீவிரகதி, அஸ்தமனம், உதயம் என்ப வைகளையுங் கண்டு, குறித்த 20-ந் திகதிக்குள் எவ்வெக் கிரகங்கள் எந்தெந்த இராசிகளிற் பெயர்ந்திருக்கின்றன என்பதை அறிந்து, பன்னிரு கோடுகளையுடைய கிரகநிலைச் சக்கரம் ஒன்று அமைத்து, கர்க்கடகலக்கினம் முதல் மிதுனம் வரையும் உள்ள இராசிகளில் கிர கங்களை வகுத்துக் காண்போம். குறித்த சித்திரைமீ 20-ந் திகதிக்குள் 9 கிரகங்களின் பாதசாரங்களையும் ஒவ்வொன்றாகக் கவனிப்போம்.

முதலில், சூரியன் (ரவி) பாதசாரத்தில், சித்திரைமீ 17உ 43 நாடி 26 விநாடியில் பரணி 2-ம் பாதத்திற்குச் சூரியன் போவதா லும், 21உ 9 நாடி 30 விநாடி வரை அப் பாதத்திலேயே நிற்பதாலும் இடையில் உள்ள 20உ 15 நாடி 40 விநாடிக்குச் சூரியனை மேடம் என்ற கோட்டில் குறிக்க.

(கிரகபாதசாரத்தில்) சந்திரன் சாரம் குறிப்பிடாதவிடத்து, 20உ 40 நாடி 25 விநாடி வரையும் சுவாதி நக்ஷத்திரம் என்று குறிப்பிட்டிருப்பதால், அன்று 15 நாடி 40 விநாடி நேரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்ஷத்திரம் சுவாதி. சுவாதிக்குரிய இராசி துலாம். ஆதலால், சந்திரனைத் துலாம் என்ற கோட்டில் குறிக்க.

செவ்வாய் (குசன்) சித்திரைமீ 19உ 36 நாடி 32 விநாடி முதல் உத்தராடம் 2-ம் பாதத்தில் இருப்பதால் செவ்வாயை மகர இராசிக்குரிய கோட்டில் குறிக்க.

புதன் சித்திரைமீ 19உ 17 நாடி 44 விநாடி முதல் ரேவதி 4-ம் பாதத்தில் இருப்பதால் புதனை மீனராசிக்குரிய கோட்டில் குறிக்க.

வியாழன் (குரு) சித்திரைமீ 11உ 40 நாடி 18 விநாடி முதல் உத்தரட்டாதி 1-ம் பாதத்தில் இருப்பதால் வியாழனை மீனராசிக்குரிய கோட்டில் குறிக்க.

வெள்ளி (சுக்கிரன்) சித்திரைமீ 18உ 31 நாடி 59 விநாடி முதல் உத்தரட்டாதி 4-ம் பாதத்தில் இருப்பதால் வெள்ளியை மீனராசிக்குரிய கோட்டில் குறிக்க.

சனி சித்திரைமீ 14உ 27 நாடி 12 விநாடி முதல் ரேவதி 3-ம் பாதத்தில் இருப்பதால் சனியை மீனராசிக்குரிய கோட்டில் குறிக்க.

ராகு வெகுதானியஹு பங்குனிமீ 11உ 11 நாடி 9 விநாடி முதல் சுவாதி 3-ம் பாதத்தில் இருப்பதால் ராகுவை துலாராசிக்குரிய கோட்டில் குறிக்க.

கேது வெகுதானியஹு பங்குனிமீ 11உ 14 நாடி 9 விநாடி முதல் பரணி 1-ம் பாதத்தில் இருப்பதால் கேதுவை மேடராசிக்குரிய கோட்டில் குறிக்க.

ஆகவே, மேற்குறித்த கர்க்கடலக்கின ஜாதகருக்குக் கிரகநிலை அமைத்திருத்தலைக் கீழே காண்க

| | மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் | |
|---|---|---|---|---|---|
| | புத· குரு சுக்கிரன் சனி | ரவி கேது | 11 | 12 | |
| கும்பம் | 8 | உதயலக்கினமும் கிரகநிலையும் | | ல | கடகம் |
| மகரம் | குசன் | | | 2 | சிங்கம் |
| | 6 | 5 | சந்திரன் ராகு | 3 | |
| | தனு | விருச்சிகம் | துலாம் | கன்னி | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவாம்சலக்கினம்

**விஞ:** நவாம்சலக்கினம் என்பதும், அதைக் காணும் வகையும் எங்ஙனம்?

**விடை:** நவாம்சலக்கினமாவது உதயலக்கினத்தை 9 பங்கு செய்து, குறிப்பிட்ட நேரத்திற்கு (பிள்ளை பிறந்த நேரம்) உதயலக்கினத்தின் 9 அம்சத்தில் எத்தனையாவது அம்சம் உதிக்கிறது என்பதைக் கண்டு, பின்வரும் முறையாக அச்சலக்கினம் நிச்சயம் செய்வதாம்.

மேடம் சிங்கம் தனு உதயலக்கினங்களாயின் மேடம் முதலாகவும், இடபம் கன்னி மகரம் உதயலக்கினங்களாயின் மகரம் முதலாகவும், மிதுனம் துலாம் கும்பம் உதயலக்கினங்களாயின் துலாம் முதலாகவும், கர்க்கடகம் விருச்சிகம் மீனம் உதயலக்கினங்களாயின் கர்க்கடகம் முதலாகவும் தொடங்கி இலக்கினத்தின் அம்சத்தை எண்ண வேண்டியது.

**விஞ:** இதனை உதாரணமூலமாக விளக்குவதெங்ஙனம்?

**விடை:** ஆம்: மேற்சுட்டிய கர்க்கடகலக்கின ஜாதகருடைய நவாம்சலக்கினத்தையே இவ்விடம் எடுப்போம். பிரமாதி௵ சித்திரைமீ 20உ புதன்கிழமை பகல் 12 மணி 12 நிமிஷத்தில் பிறந்த ஜாதகருக்கு உதயாதி ஜனனாந்தம் சென்ற நாழிகை 15, விநாடி 40 என்றும், அந்நேரம் உதயலக்கினம் கர்க்கடகம் என்றும் கண்டுபிடித்தோமல்லவா? அக் கர்க்கடகலக்கினத்தின் இராசிப்பிரமாணமாகிய 5 நாடி 19 விநாடியை 9 பங்கு செய்தால் ஒரு பாகத்திற்கு $35\frac{4}{9}$ விநாடி வரும். கர்க்கடகலக்கினத்தில் எத்தனை பாகங்கள் கழிந்திருக்கின்றன என்பதைக் காணும்போது 5-வது பாகம் கழிந்துவிட்டது. அதனால் அவ்விலக்கினத்தின் 6-வது பாகத்துக்கு ஏற்படும் இராசியே நவாம்சலக்கினம் என்று கண்டு, அதனை (கர்க்கடகம் விருச்சிகம் மீனம் இவற்றுள் ஒன்று உதயலக்கினமானதால்) கர்க்கடகராசி முதலாகவே எண்ணிக்கொண்டுபோகும்போது 6-வது ஆகிய தனு இராசியே நவாம்சலக்கினமாக வருகிறது.

| | |
|---|---|
| 5 - 19 | கர்க்கடகத்தின் இராசியான நாடிவிநாடி. |
| 60 | |
| 300 | |
| 19 | |
| 9 \| 319 | விநாடி |
| $35\frac{4}{9}$ | 9-ல் ஒரு பாகம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1 - 42 | அன்று மேடாந்தம் நின்ற நாடிவிநாடி. |
| 10 - 34 | இடபமும் மிதுனமும் கூட்டிய நாடிவிநாடி. |
| 12 - 16 | கூட்டிய தொகை. |
| 15 - 40 | உதயாதி ஜனனாந்தம் சென்ற நாடிவிநாடி. |
| 12 - 16 | உதயாற்பரமும் சென்ற இராசிமானங்களும் கூட்டியது. |
| 3 - 24 | கர்க்கடகத்தில் சென்ற நாடிவிநாடி. |
| 60 | |
| 180 | |
| 24 | |
| $35\frac{4}{5}$ ) 204 ( 5 | சென்ற பாகம். |
| $177\frac{2}{5}$ | |
| $26\frac{3}{5}$ | |

கர்க்கடகத்தில் 5-ம் பாகம் சென்றுவிட்டது. 6-வது பாகம் நடக்கிறது. இதனைக் கர்க்கடக இராசியிலிருந்து தொடங்கி எண்ணும்போது 6-வது இராசி தனு ஆக வருகிறது. ஆகவே, மேற்கூட்டிய கர்க்கடகலக்கின ஜாதகருக்கு நவாம்சலக்கினம் தனு என்பது தெளிவாயிற்று.

## நவாம்ச நிலை

**வினா:** நவாம்சநிலை எவ்வாறு காண்பது?

**விடை:** இதனையும் உதாரணமூலம் விளக்குவாம். முன் குறிப்பிட்ட பிரமாதிஷு சித்திரைமீ 20உ பகல் 12 மணி 12 நிமிஷத்தில் பிறந்த ஜாதகனுக்கு நவாம்சலக்கினம் தனு என்று அறிந்தாய்விட்டது. இனி அவ்வருஷப் பஞ்சாங்கத்தில் கிரகபாதசாரம் என்ற தலையங்கத்தில் அம்சம் என்று குறிக்கப்பட்டிருப்பதன்கீழ் அவ்வக் கிரகங்களின் நவாம்சநிலைகள் காணத்தக்கதாக இருக்கின்றன. அன்று நக்ஷத்திரம் சுவாதியாகும். அது முதனாள் 18 நாடி 59 விநாடி நின்று கழிந்து, அன்று 40 நாடி 25 விநாடி வரையும் நின்றிருக்கிறது. ஆகவே, சுவாதியின் ஆகியந்த பரமநாழிகை 59 விநாடி 24. இதனை 4 பாதங்களாகப் பிரிக்க ஒரு பாதத்திற்கு வருவது 14 நாடி 51 விநாடியாகும். நாம் குறிப்பிட்ட நேரம் (பகல் 12 மணி 12 நிமிஷம்) உதயாதி ஜனனாந்தம் சென்ற நாழிகை 15, விநாடி 40 அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சுவாதி நின்று முடிந்த நாடி விநாடியாகிற 40 - 25-ல் உதயாதி ஜனனாந்தம் சென்ற நாடி விநாடியாகிய 15 - 40-ஐக் கழிக்க வருவது சுவாதியில் செல்லாது நின்ற நாடி விநாடியாகும். சுவாதியில் செல்லாது நின்ற நாழிகையில் 4-ம் பாதத்துக்குரிய நாடி விநாடியைக் கழிக்க வருவது சுவாதி 3-ம் பாதத்தில் நின்ற நாழிகை. முதலில் இதனைக் குறிப்பிட்டுக்கொள்க.

| | | |
|---|---|---|
| | 60 - 00 | 19௳ பகலிரவு. |
| | 41 - 01 | 19௳ சித்திரையில் நின்றது. |
| | 18 - 59 | 19௳ சுவாதியில் சென்றது. |
| | 40 - 25 | 20௳ சுவாதியில் நின்றது. |
| 4 | 59 - 24 | சுவாதியின் ஆதியந்த பரமநாழிகை. |
| | 14 - 51 | சுவாதியின் பாதநாழிகை. |
| | 40 - 25 | 20௳. சுவாதியில் நின்றது. |
| | 15 - 40 | 20௳ உதயாதி ஜனனாந்தம் சென்றது. |
| | 24 - 45 | சுவாதியில் செல்லாது நின்றது. |
| | 14 - 51 | சுவாதியின் பாதநாழிகை. |
| | 9 - 54 | சுவாதி 3-ம் பாதத்தில் நின்றது. |

சுவாதி 3-ம் பாதத்துக்குரிய இராசி துலாம். துலாத்தின் முதலாவது நக்ஷத்திரபாதம் சித்திரை 3-ம் கால். இதுமுதல் எண்ண, சுவாதி 3-ம் கால் ஐந்தாவது அம்சமாக வருகிறது. துலாம் மிதுன துலா கும்பத்தைச் சேர்ந்ததாகையால், துலாம் முதலாக ஐந்தாவதாக எண்ணி வரும் இராசி கும்பம். ஆகவே, சுவாதி 3-ம் பாதத்திற்குச் சந்திரனை நவாம்சத்தில் கும்பராசியிலும், (மற்றைய கிரகங்களை அவ்வருஷ பஞ்சாங்கத்தில் கிரகபாதசாரத்தில் அம்சம் என்று குறித்த கலத்திற் கண்டவிதமாக) சூரியனைக் கன்னியிலும், செவ்வாயை மகரத்திலும், புதனை மீனத்திலும், வியாழனைச் சிங்கத்திலும், சுக்கிரனை விருச்சிகத்திலும், சனியைக் கும்பத்திலும், இராகுவைக் கும்பத்திலும், கேதுவைச் சிங்கத்திலுமாகக் காண்கின்றோம். இவ்வாறே நவாம்சநிலையை அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| புதன் | 5 | 6 | 7 |
| சந்திர சனி ராகு | நவாம்ச லக்கினமும் | | 8 |
| செவ்வா | நவாம்ச நிலையும் | | வியாழ கேது |
| ல | சுக்கிரன் | 11 | ரவி |

## கிரகங்களின் வரலாறு

வினு: கிரகங்களின் வரலாறு என்றால் அது எவ்விதம்?

விடை: கிரகங்களாவன: சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது என்பவைகளாம். இவைகளின் வரலாறுவன:—புத்திரர், இலிங்கம், நிறம், வடிவம், சாதி, கல்வி, சுபாசுபம், சரம் திரம் உபயம், குணம், நோக்கு, உதயம், கதிர், நிலைமை, வலிது, பூதம், அங்கம், தாது, பிணி, திக்கு, லோகம், இரத்தினம், சமித்து, தானியம், புஷ்பம், சுவை, வாகனம், இருப்பிடம் என்பனவாம்.

| கிரகங்கள் | புத்திரர் | லிங்கம் | நிறம் | வடிவம் | சாதி |
|---|---|---|---|---|---|
| சூரியன் | காலன் | ஆண் | சிவப்பு | சமன் | க்ஷத்திரியர் |
| சந்திரன் | பரிவேடம் | பெண் | வெண்மை | குறுமை | வைசியர் |
| செவ்வாய் | தூமம் | ஆண் | சிவப்பு | குறுமை | க்ஷத்திரியர் |
| புதன் | அர்த்தப்பிரகரன் | அலி | பச்சை | நெடுமை | வைசியர் |
| வியாழன் | யமகண்டன் | ஆண் | மஞ்சள் | நெடுமை | பிராமணர் |
| வெள்ளி | இந்திரதனு | பெண் | வெண்மை | சமன் | பிராமணர் |
| சனி | குளிகன் (மாந்தி) | அலி | கறுப்பு | குறுமை | சூத்திரர் |
| ராகு | வியதிபாதம் | பெண் | கறுப்பு | நெடுமை | சங்கரசாதி |
| கேது | தூமகேது | அலி | விசித்திரம் | நெடுமை | சங்கரசாதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கிரகங்கள் | கல்வி | சுபாசுபம் | சர திர உபயம் | குணம் |
|---|---|---|---|---|
| சூரியன் | சம்ஸ்கிருதம் | குரூரர் | திரம் | தாமதம் |
| சந்திரன் | தமிழ் | சுபர் | சரம் | சத்துவம் |
| செவ்வாய் | தெலுங்கு, மந்திரம் | குரூரர் | சரம் | ராசதம் |
| புதன் | தமிழ், கணிதம், சிற்பம் | சுபர் | உபயம் | தாமதம் |
| வியாழன் | சம்ஸ்கிருதம் | சுபர் | உபயம் | சத்துவம் |
| வெள்ளி | சம்ஸ்கிருதம் | சுபர் | திரம் | ராசதம் |
| சனி | அன்னியபாஷை | குரூரர் | திரம் | தாமதம் |
| ராகு | அன்னியபாஷை | குரூரர் | சரம் | தாமதம் |
| கேது | அன்னியபாஷை | குரூரர் | சரம் | தாமதம் |

| கிரகங்கள் | நோக்கு | உதயம் | கதிர் | நிலைமை |
|---|---|---|---|---|
| சூரியன் | எதிர்நோக்கு | பிருஷ்டம் | 5 | நிற்பன |
| சந்திரன் | கீழ்நோக்கு | சிரபிருஷ்டம் | 21 | சுழல்வன |
| செவ்வாய் | மேல்நோக்கு | பிருஷ்டம் | 7 | சுழல்வன |
| புதன் | எதிர்நோக்கு | சிரம் | 9 | நின்றுசுழல்வன |
| வியாழன் | எதிர்நோக்கு | சிரம் | 10 | நின்றுசுழல்வன |
| வெள்ளி | மேல்நோக்கு | சிரம் | 16 | நிற்பன |
| சனி | கீழ்நோக்கு | பிருஷ்டம் | 4 | நின்றுசுழல்வன |
| ராகு | மேல்நோக்கு | சிரம் | 4 | சுழல்வன |
| கேது | மேல்நோக்கு | சிரம் | 4 | சுழல்வன |

| கிரகங்கள் | வலிது | பூதம் | அங்கம் |
|---|---|---|---|
| சூரியன் | 10-ல் | அக்கினி | மார்பு, இருதயம் |
| சந்திரன் | 4-ல் | ஜலம் | முகம் |
| செவ்வாய் | 10-ல் | நிலம் | தலை |
| புதன் | 1-ல் | வாயு | கழுத்து, முதுகு, தோள்கள் |
| வியாழன் | 1-ல் | அக்கினி | வயிறு |
| வெள்ளி | 4-ல் | ஜலம் | குய்யம், அரை |
| சனி | 7-ல் | ஆகாயம் | தொடை |
| ராகு | 7-ல் | ஆகாயம் | முழங்கால் |
| கேது | 7-ல் | ஆகாயம் | உள்ளங்கால் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கிரகங்கள் | தாது | மூப்பிணி | திக்கு |
|---|---|---|---|
| சூரியன் | எலும்பு | பித்தம் | நடு |
| சந்திரன் | இரத்தம் | சிலேற்பனம் | தென்கிழக்கு |
| செவ்வாய் | எலும்பினுள்மூளை | பித்தம் | தெற்கு |
| புதன் | தோல் | வாதம் | வடகிழக்கு |
| வியாழன் | தசை | வாதம் | வடக்கு |
| வெள்ளி | சுக்கிலசுரோணிதம் | சிலேற்பனம் | கிழக்கு |
| சனி | நரம்பு | வாதம் | மேற்கு |
| ராகு | குடல் | பித்தம் | தென்மேற்கு |
| கேது | குடல் | பித்தம் | வடமேற்கு |

| கிரகங்கள் | உலோகம் | இரத்தினம் | சமித்து | தானியம் |
|---|---|---|---|---|
| சூரியன் | பித்தளை, பஞ்சலோகம் | மாணிக்கம் | எருக்கு | கோதுமை |
| சந்திரன் | வெண்கலம் | முத்து | முருக்கு | நெல் |
| செவ்வாய் | செம்பு | பவளம் | கருங்காலி | துவரை |
| புதன் | தரா | பச்சை | நாயுருவி | பயறு |
| வியாழன் | பொன் | புஷ்பராகம் | அரசு | கடலை |
| வெள்ளி | வெள்ளி | வைரம் | அத்தி | மொச்சை |
| சனி | இரும்பு | நீலம் | வன்னி | எள் |
| ராகு | ஈயம், நாகம் | கோமேதகம் | அறுகு | உழுந்து |
| கேது | ஈயம், நாகம் | வைடூரியம் | தருப்பை | கொள் |

| கிரகங்கள் | புஷ்பம் | சுவை | வாகனம் | இருப்பிடம் |
|---|---|---|---|---|
| சூரியன் | செந்தாமரை | கார்ப்பு | தேர் | காடு |
| சந்திரன் | வெள்ளல்லி | தித்திப்பு | விமானம் | நீர்நிலை |
| செவ்வாய் | சண்பகம் | துவர்ப்பு | அன்னம் | காடு |
| புதன் | வெண்காந்தள் | உப்பு | குதிரை | ஊர் |
| வியாழன் | முல்லை | தித்திப்பு | யானை | ஊர் |
| வெள்ளி | வெண்தாமரை | தித்திப்பு | கருடன் | நீர்நிலை |
| சனி | கருங்குவளை | கைப்பு | காகம் | காடு |
| ராகு | மந்தாரை | புளிப்பு | ஆடு | மலை |
| கேது | செவ்வல்லி | புளிப்பு | சிங்கம் | மலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிகளின் வரலாறு

**வினு:** இராசிகளின் வரலாறு என்றால் என்ன?

விடை: இராசிகள் 12. அவையாவன: மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனு, மகரம், கும்பம், மீனம் என்பனவாம். கிரகங்களுக்குக் காட்டிய விதமாக இராசிகளுக்கும் இலிங்கம், நிறம், வடிவம், சாதி, சுபாசுபம், சர திர உபயம், கால், நோக்கு, உதயம், கதிர், நிலைமை, காலவலிது, ஜலக்கூறு, அங்கம், திக்கு, தாது மூல சீவன், இருப்பிடம், மாதம் என்பனவற்றைக் கீழே காண்க.

| இராசிகள் | இலிங்கம் | நிறம் | வடிவம் | சாதி | சுபாசுபம் |
|---|---|---|---|---|---|
| மேடம் | ஆண் | சிவப்பு | குறுமை | க்ஷத்திரியர் | குரூரம் |
| இடபம் | பெண் | வெண்மை | குறுமை | சூத்திரர் | சௌமியம் |
| மிதுனம் | ஆண் | கறுப்பு | சமம் | வைசியர் | குரூரம் |
| கர்க்கடகம் | பெண் | வெண்மை | சமம் | பிராமணர் | சௌமியம் |
| சிங்கம் | ஆண் | சிவப்பு | நெடுமை | க்ஷத்திரியர் | குரூரம் |
| கன்னி | பெண் | கறுப்பு | நெடுமை | சூத்திரர் | சௌமியம் |
| துலாம் | ஆண் | வெண்மை | நெடுமை | வைசியர் | குரூரம் |
| விருச்சிகம் | பெண் | பச்சை | நெடுமை | பிராமணர் | சௌமியம் |
| தனு | ஆண் | சிவப்பு | சமம் | க்ஷத்திரியர் | குரூரம் |
| மகரம் | பெண் | கறுப்பு | சமம் | சூத்திரர் | சௌமியம் |
| கும்பம் | ஆண் | பச்சை | குறுமை | வைசியர் | குரூரம் |
| மீனம் | பெண் | பச்சை | குறுமை | பிராமணர் | சௌமியம் |

| இராசிகள் | சர திர உபயம் | கால் | நோக்கு | உதயம் | கதிர் |
|---|---|---|---|---|---|
| மேடம் | சரம் | 4 | பக்கம் | பிருஷ்டம் | 7 |
| இடபம் | திரம் | 4 | பக்கம் | பிருஷ்டம் | 8 |
| மிதுனம் | உபயம் | 2 | எதிர் | சிரம் | 5 |
| கர்க்கடகம் | சரம் | பல | கீழ் | பிருஷ்டம் | 3 |
| சிங்கம் | திரம் | 4 | பக்கம் | சிரம் | 7 |
| கன்னி | உபயம் | 2 | எதிர் | சிரம் | 11 |
| துலாம் | சரம் | 2 | எதிர் | சிரம் | 2 |
| விருச்சிகம் | திரம் | பல | கீழ் | சிரம் | 4 |
| தனு | உபயம் | 4 | பக்கம் | பிருஷ்டம் | 6 |
| மகரம் | சரம் | சிறகு | மேல் | பிருஷ்டம் | 8 |
| கும்பம் | திரம் | 2 | எதிர் | சிரம் | 8 |
| மீனம் | உபயம். | சிறகு | மேல் | சிரபிருஷ்டம் | 27 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இராசிகள் | நிலைமை | கால வலிது | ஜலக்கூறு | அங்கம் |
|---|---|---|---|---|
| மேடம் | சுழல்வன | இரவில் | $\frac{1}{4}$ | தலை |
| இடபம் | நிற்பன | இரவில் | $\frac{1}{2}$ | முகம் |
| மிதுனம் | நின்று சுழல்வன | இரவில் | 0 | கழுத்து |
| கர்க்கடகம் | சுழல்வன | இரவில் | 1 | தோள் |
| சிங்கம் | நிற்பண | பகலில் | 0 | மார்பு |
| கன்னி | நின்று சுழல்வன | பகலில் | 0 | பக்கம் |
| துலாம் | சுழல்வன | பகலில் | $\frac{1}{4}$ | வயிறு, முதுகு |
| விருச்சிகம் | நிற்பன | பகலில் | $\frac{1}{4}$ | குறிகள் |
| தனு | நின்று சுழல்வன | இரவில் | $\frac{1}{2}$ | தொடை |
| மகரம் | சுழல்வன | இரவில் | 1 | முழங்கால் |
| கும்பம் | நிற்பன | பகலில் | $\frac{1}{2}$ | கணுக்கால் |
| மீனம் | நின்று சுழல்வன | இரவிலும் பகலிலும் | 1 | பாதம் |

| இராசிகள் | திக்கு | தாதுமூலசீவன் | இருப்பிடம் | மாதம் |
|---|---|---|---|---|
| மேடம் | கிழக்கு | தாது | காடு | சித்திரை |
| இடபம் | கிழக்கு | மூலம் | வயல் | வைகாசி |
| மிதுனம் | கிழக்கு | சீவன் | ஊர் | ஆனி |
| கர்க்கடகம் | தெற்கு | தாது | வாய்க்கால் | ஆடி |
| சிங்கம் | தெற்கு | மூலம் | மலை | ஆவணி |
| கன்னி | தெற்கு | சீவன் | ஊர் | புரட்டாதி |
| துலாம் | மேற்கு | தாது | ஆறு | ஐப்பசி |
| விருச்சிகம் | மேற்கு | மூலம் | கிணறு | கார்த்திகை |
| தனு | மேற்கு | சீவன் | தோட்டம் | மார்கழி |
| மகரம் | வடக்கு | தாது | உப்பளம் | தை |
| கும்பம் | வடக்கு | மூலம் | ஏரி | மாசி |
| மீனம் | வடக்கு | சீவன் | கடல் | பங்குனி |

## பன்னிரு பாவம்

**வினா:** பன்னிருபாவங்கள் என்றால் யாவை?

**விடை:** ஜன்மலக்கினம் முதலாகப் பன்னிரண்டாம் இடம் வரையும் உள்ள ஒவ்வொரு ஸ்தானங்களையும், அவ்வவற்றிற்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்க உறுப்புக்களையும், சுகம் துக்கம் பாவம் லாபம் நஷ்டம் மாடு வீடு சத்துரு மித்துரு தாய் தந்தையர் தாரம் புத்திரர் ஆதியனவற்றையும், வாழ்க்கையின் இலட்சியங்களையும் வகுத்து, அவ்வவற்றிற்குரிய ஆதார நியாயங்களுடன் பலன் காண்பதற்கேற்ற விதமான 12 பலாபலன் பிரிவுகளாம். அவற்றின் விபரத்தைக் கீழே காண்க.

## பன்னிருபாவ காரகங்கள்

**1-ம் பாவம்:—** (உதயலக்கினம்) இது ஜாதகரின் குணம், அறிவு, தேகம், நிறம், அழகு, ஞாபகம், கீர்த்தி, வயது, சந்தோஷம், கவலை, தீர்மானம், மூளையின் நிலைமை, அதிகாரம் இவைகளை அறிதற்குரிய ஸ்தானம்.

**2-ம் பாவம்:—** கல்வி, திரவியம் (பொருள் வரவு), குடும்பம், வாக்கு, போசனம், முகம் (கண் மூக்கு வாய் கபோலம்), பார்த்தல், பேசுதல் இவைகளை அறிதற்குரிய ஸ்தானம்.

**3-ம் பாவம்:—** கேள்வி, சகோதரர், வீரியம், வெற்றி, அன்பு, ஆபரணம், போகம், கடன், கழுத்து, காது, தோள், கைகள் இவைகளை அறிதற்குரிய ஸ்தானம்.

**4-ம் பாவம்:—** தாய், சிநேகிதர், பந்துக்கள், சுகம், பூமி, மாடு, வீடு, வாகனம், வியாபாரம், மார்பு, முதுகு இவைகளை அறிதற்குரிய ஸ்தானம்.

**5-ம் பாவம்:—** இருதயம், புத்தி, புத்திரர், ஆலோசனை, சுயகல்வி, பூர்வபுண்ணியம், மந்திரம், சங்கீதம், யோகாப்பியாசம், கர்ப்பம், பக்தி, திடசித்தம், ஆராய்ச்சி, நம்பிக்கை இவைகளை அறிதற்குரிய ஸ்தானம்.

**6-ம் பாவம்:—** வயிறு, சத்துரு, சிறை, யுத்தம், கவலை, ரோகம், கள்வர், கடன், ஆயுதங்களினால் ஏற்படும் காயம் இவைகளை அறிதற்குரிய ஸ்தானம்.

**7-ம் பாவம்:—** மர்மஸ்தானம் (குறிகள்), தாரம், இன்பம், இச்சை (காமம்), கல்யாணம், பிரியாநட்பு, சமசிநேகம் (ஒத்த உணர்ச்சி), பங்காளி, கூட்டுமுயற்சி இவைகளை அறிதற்குரிய ஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8-ம் பாவம்:—** சகனம் (குண்டிக்காய், மூலம்), ஆயுள், நோய், கிராவியாதி, மரணம், அபஜயம், துக்கம் (கிராத பணஸ்தாபம்), ஆபத்து, (ஸ்திரீ ஜாதகத்தில்) மங்கல்யம் இவைகளை அறிதற்குரிய ஸ்தானம்.

**9-ம் பாவம்:—** தபவு, சாந்தம், பொறுமை, பிதா, பாக்கியம், தருமம் (புண்ணியம், மடம், சத்திரம், பாடசாலை), குரு, உபதேசம், தெய்வாராதனை, தேவாலயத் திருப்பணி, தீர்த்தயாத்திரை, கொடை இவைகளை அறிதற்குரிய ஸ்தானம்.

**10-ம் பாவம்—** முழந்தாள், முயற்சி (உத்தியோகம்), கீர்த்தி, திக்குவிஜயம் இவைகளை அறிதற்குரிய ஸ்தானம்.

**11-ம் பாவம்:—** கணுக்கால், லாபம் (சேமநிதி), மூத்த சகோதரர் இவைகளை அறிதற்குரிய ஸ்தானம்.

**12-ம் பாவம்:—** பாதம் (கால்), வியயம் (செலவு), சயனம் (நித்திரை), பிரயாணம் (தூரதேச யாத்திரை), தேசசஞ்சாரம், இவைகளை அறிதற்குரிய ஸ்தானம்.

## கேந்திர ஸ்தானங்கள்

இலக்கினத்திலிருந்து 1-4-7-10-ம் இடங்கள் கேந்திரங்கள். இவற்றுள் 1-ம் இடம் உதயகேந்திரமெனவும், 10-ம் இடம் உச்ச கேந்திரமெனவும் சொல்லப்படுகின்றன.

## மறைவுத் தானங்கள்

3-6-8-12-ம் இடங்கள் மறைவுத் தானங்கள்.

## உபசயத் தானங்கள்

3-6-10-11-ம் இடங்கள் உபசயத் தானங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரிகோணத் தானங்கள்

5–9-ம் இடங்கள் திரிகோணத் தானங்கள்.

## வர்க்கோத்தமம்

சரராசியின் முதல் நவாம்சமும், திரராசியின் ஐந்தாவது நவாம்சமும், உபயராசியின் ஒன்பதாவது (கடைசி) நவாம்சமும் வர்க்கோத்தம அம்சங்களாம். அதாவது: இராசிச்சக்கரத்தில் கிரகங்களும் இலக்கினமும் இருக்கும் இராசி, நவாம்சத்திலும் அதே இராசியாக அமைதல் வர்க்கோத்தமமாம்.

## பாபக்கிரக மத்தி

குறித்த ஓர் கிரகத்துக்காவது பாவத்துக்காவது முன்னும் பின்னும் (அதாவது 12-ம் இடத்திலும் 2-ம் இடத்திலும்) பாபக் கிரகங்கள் இருத்தல்.

## கிரக காரகங்கள்

சூரியன்:—சீவன், பகலில் பிதா, இரவில் பிதாசகோதரர், வலக்கண்.

சந்திரன்:—சரீரம், இரவில் மாதா, பகலில் மாதாசகோதரி, இடக்கண்.

செவ்வாய்:—இளைய சகோதரம், பூமி.

புதன்:—கல்வி, மாதுலர், சுவீகாரபுத்திரர்.

வியாழன்:—புத்திரர், மூத்த சகோதரம்.

வெள்ளி:—களத்திரம், பகலில் மாதா, இரவில் மாதாசகோதரி.

சனி:—ஆயுள், இரவில் பிதா, பகலில் பிதாசகோதரர்.

ராகு:—தகப்பனின் பிதா.

கேது:—தாயின் பிதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரக நட்பு ஆட்சி உச்ச பகை நீசங்கள்

| | மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|---|
| ரவி | நட்பு | உச்சம் | பகை | பகை |
| சந்திரன் | நட்பு | பகை | உச்சம் | நட்பு |
| குசன் | பகை | ஆட்சி | நட்பு | நட்பு |
| புதன் | நீசம் | நட்பு | நட்பு | ஆட்சி |
| குரு | ஆட்சி | பகை | நட்பு | நட்பு |
| சுக்கிரன் | உச்சம் | நட்பு | ஆட்சி | நட்பு |
| சனி | நட்பு | நீசம் | நட்பு | நட்பு |
| ராகு | நட்பு | பகை | நீசம் | நட்பு |
| கேது | நட்பு | பகை | நீசம் | நட்பு |

| | கும்பம் | மகரம் | கர்க்கடகம் | சிங்கம் |
|---|---|---|---|---|
| ரவி | பகை | பகை | பகை | ஆட்சி |
| சந்திரன் | பகை | பகை | ஆட்சி | பகை |
| குசன் | பகை | உச்சம் | நீசம் | பகை |
| புதன் | நட்பு | நட்பு | நட்பு | பகை |
| குரு | நட்பு | நீசம் | உச்சம் | நட்பு |
| சுக்கிரன் | நட்பு | நட்பு | பகை | பகை |
| சனி | ஆட்சி | ஆட்சி | பகை | பகை |
| ராகு | பகை | நட்பு | பகை | பகை |
| கேது | பகை | நட்பு | பகை | பகை |

## கிரகநோக்கு

3-ம் இடமும், 10-ம் இடமும் கால்நோக்கு; இதில் சனி வலியன்.

5-ம் இடமும், 9-ம் இடமும் அரைநோக்கு; இதில் வியாழன் வலியன்.

4-ம் இடமும், 8-ம் இடமும் முக்கால்நோக்கு; இதில் செவ்வாய் வலியன்.

7-ம் இடம் முழுநோக்கு; இதில் சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், இராகு, கேது வலியர்.

| | தனு | விருச்சிகம் | துலாம் | கன்னி |
|---|---|---|---|---|
| ரவி | நட்பு | பகை | நீசம் | பகை |
| சந்திரன் | நட்பு | நீசம் | பகை | நட்பு |
| குசன் | பகை | ஆட்சி | நட்பு | நட்பு |
| புதன் | நட்பு | நட்பு | நட்பு | ஆட்சிஉச் |
| குரு | ஆட்சி | பகை | நட்பு | நட்பு |
| சுக்கிரன் | நட்பு | நட்பு | ஆட்சி | நீசம் |
| சனி | நட்பு | பகை | உச்சம் | நட்பு |
| ராகு | நட்பு | உச்சம் | நட்பு | நட்பு |
| கேது | நட்பு | உச்சம் | நட்பு | நட்பு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிகளும், இராசியதிபர்களும்

| | | | |
|---|---|---|---|
| மீனம் வியாழன் | மேடம் செவ்வாய் | இடபம் சுக்கிரன் | மிதுனம் புதன் |
| கும்பம் சனி | | | கர்க்கடகம் சந்திரன் |
| மகரம் சனி | | | சிங்கம் சூரியன் |
| தநு வியாழன் | விருச்சிகம் செவ்வாய் | துலாம் சுக்கிரன் | கன்னி புதன் |

### அதிஉச்சம்

சூரியன் மேடத்தில் 10-ம் பாகை. சந்திரன் இடபத்தில் 3-ம் பாகை. செவ்வாய் மகரத்தில் 28-ம் பாகை. புதன் கன்னியில் 15-ம் பாகை. வியாழன் கர்க்கடகத்தில் 5-ம் பாகை. சுக்கிரன் மீனத்தில் 27-ம் பாகை. சனி துலாத்தில் 20-ம் பாகை.

### அதிநீசம்

சூரியன் துலாத்தில் 10-ம் பாகை. சந்திரன் விருச்சிகத்தில் 3-ம் பாகை. செவ்வாய் கர்க்கடகத்தில் 28-ம் பாகை. புதன் மீனத்தில் 15-ம் பாகை. வியாழன் மகரத்தில் 5-ம் பாகை. சுக்கிரன் கன்னியில் 27-ம் பாகை. சனி மேடத்தில் 20-ம் பாகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உச்சம், மூலத்திரிகோணம், ஆட்சி

சூரியனுக்கு:—மேடம் முழுவதும் உச்சம்; சிங்கத்தில் முதல் 20 பாகை மூலத்திரிகோணம்; அடுத்த 10 பாகை ஆட்சி.

சந்திரனுக்கு:—இடபத்தில் முதல் 3 பாகை உச்சம்; அடுத்த 27 பாகை மூலத்திரிகோணம்; கர்க்கடகம் முழுவதும் ஆட்சி.

செவ்வாய்க்கு:—மகரம் முழுவதும் உச்சம்; மேடத்தில் முதல் 12 பாகை மூலத்திரிகோணம்; அடுத்த 18 பாகையும், விருச்சிகம் முழுவதும் ஆட்சி.

புதனுக்கு:—கன்னியில் முதல் 15 பாகை உச்சம்; அடுத்த 5 பாகை மூலத்திரிகோணம்; அடுத்த 10 பாகையும், மிதுனம் முழுவதும் ஆட்சி.

வியாழனுக்கு:—கர்க்கடகம் முழுவதும் உச்சம்; தனுவில் முதல் 10 பாகை மூலத்திரிகோணம்; அடுத்த 20 பாகையும், மீனம் முழுவதும் ஆட்சி.

சுக்கிரனுக்கு:—மீனம் முழுவதும் உச்சம்; துலாத்தில் முதல் 3 பாகை மூலத்திரிகோணம்; அடுத்த 27 பாகையும், இடபம் முழுவதும் ஆட்சி.

சனிக்கு:—துலாம் முழுவதும் உச்சம்; கும்பத்தில் முதல் 10 பாகை மூலத்திரிகோணம்; அடுத்த 10 பாகையும், மகரம் முழுவதும் ஆட்சி.

## வக்கிர கதி

செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இவர்கள் சில காலங்களில் முன்னோக்கிச் செல்வதை விட்டுப் பின்னோக்கிச் செல்லுதல். இங்ஙனம் பின்னோக்கித் திரும்பிச் செல்லத் தொடங்குதல் வக்கிர ஆரம்பம் என்றும், அவ்வாறு திரும்பிச் சென்று, மீண்டும் முன்னோக்கிச் செல்லத் தொடங்குதல் வக்கிரநிவிர்த்தி அல்லது வக்கிரத்தியாகம் என்றும் பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்டுவருகின்றன.

## தீவிர கதி

கிரகங்கள் ஒரு இராசியில் சஞ்சரிக்கவேண்டிய சராசரிக் கால அளவையிலும் பார்க்க விரைவாகச் செல்லுதல்.

## கிரக அஸ்தமனம் (மூடம்), உதயம்

கிரகங்கள் சூரியனைச் சமீபித்துச் செல்லுகையில் சூரியனின் பிரகாசத்தினால் கண்ணுக்குத் தெரியாதிருக்கும் காலம் அவ்வவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அஸ்தமன காலமாகும். இது மூடமென்றும் சொல்லப்படும். சந்திரன் அமாவாசைத் திதியிலும், அடுத்த பிரதமைத் திதியிலும் அஸ்தமனமாகவிருக்கும். செவ்வாய் வியாழன் சனி இவர்கள் சூரியாஸ்தமனத்தின் மேல் நாடோறும் முந்திமுந்தி மேற்கில் அஸ்தமித்து வந்து, பின் சில தினங்கள் தோற்றாதிருந்து, பின் சூரியோதயத்திற்குச் சற்று முன் கிழக்கில் தோற்றி, நாடோறும் சூரியனுக்கு முந்திமுந்தி உதித்துவருவனவாகும். புதன் சுக்கிரன் இவர்கள் சுபாவகதியில் கிழக்கில் அஸ்தமித்து மேற்கில் உதித்து, பின் வக்கிரகதியில் மேற்கில் அஸ்தமித்துக் கிழக்கில் உதித்து, மீட்டும் சுபாவகதியில் கிழக்கில் அஸ்தமித்து மேற்கில் உதித்து, இங்ஙனமே மாறி மாறி அஸ்தமித்தும் உதித்தும் வருவனவாகும்.

## கிரக ஷட்பலம்

கிரகங்களுக்குத் தானபலம், திக்குபலம், காலபலம், சேஷ்டா பலம், நிசர்க்கிகபலம், திருஷ்டிபலம் என ஆறு(ஷட்)வித பலங்கள் உண்டு.

### 1-வது தானபலம்

உச்ச வீடு, மூலத்திரிகோண வீடு, ஆட்சி வீடு, நட்பு வீடு, வர்க்கோத்தம நவாம்சம், அஷ்டகவர்க்கத்தில் அதிக பிந்து (பரல்) உள்ள வீடு, நீசவீட்டிலிருந்து உச்சவீட்டிற்குச் செல்லுதல், தசவர்க்கத்தில் அதிக பலம் பெறுதல், கேந்திரத்தில் (1-4-7-10-ல்) இருத்தல், சொந்தவர்க்கத்திலிருத்தல் இவற்றை அடைந்த கிரகங்கள் தானபலமுடையவர்கள்.

### 2-வது திக்குபலம்

புதன் குரு இவர்கள் கிழக்கில் (அதாவது இலக்கினத்திலும்), சூரியன் செவ்வாய் இவர்கள் தெற்கில் (அதாவது 10-ம் இடத்திலும்), சனி மேற்கில் (அதாவது 7-ம் இடத்திலும்), சந்திரன் சுக்கிரன் இவர்கள் வடக்கில் (அதாவது 4-ம் இடத்திலும்) திக்குபல முடையவர்கள்.

### 3-வது காலபலம்

சந்திரன் செவ்வாய் சனி இரவிலும், சூரியன் குரு சுக்கிரன் பகலிலும், புதன் பகலிலும் இரவிலும் பலமுடையவர்கள். சுபக் கிரகங்கள் சுக்கிலபக்ஷத்திலும் (சூரியனிலிருந்து 180 பாகைக்குள்ளும்), பாபக் கிரகங்கள் கிருஷ்ணபக்ஷத்திலும் (சூரியனிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

180 பாகைக்கு மேலும்) பலமுடையவர்கள். வருஷம், தினம், ஓரை, மாதம் இவற்றிற்கு அதிபதிகள் அவ்வக் காலங்களில் காலபலமுடையவர்கள்.

### 4-வது சேஷ்டாபலம்

சூரியன் சந்திரன் இவர்கள் உத்தராயணத்தில் (தெற்கிலிருந்து வடக்குநோக்கிச் சஞ்சரிக்கையில்) பலமுடையவர்கள். செவ்வாய் முதலிய கிரகங்கள் வக்கிரத்திலும், கிரகயுத்தத்தில் வடக்கிலிருக்கும்போதும், சந்திரசமாகமத்திலும், சுபமான கிரணமுள்ளபொழுதும் சேஷ்டாபலமுடையவர்கள்.

### 5-வது நிசர்க்கிகபலம்

கேது, இராகு, சனி, செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சந்திரன், சூரியன் இவர்கள் முறையே முந்தியவர்களை விடப்பிந்தியவர்கள் நிசர்க்கிக பலவான்கள்.

### 6-வது திருஷ்டிபலம்

சுபரின் நோக்கம் (பார்வை) பெற்று, பாபரின் நோக்கம் இல்லாதிருக்கும் கிரகங்கள் திருஷ்டிபலமுடையவர்கள்.

## கிரக தற்கால மித்துரு, சத்துரு

கிரகங்கள் தாம் தாம் இருக்கும் இராசியிலிருந்து ஒருவருக்கொருவர் 2-12, 3-11, 4-10 ஆகிய இராசிகளிலிருந்தால் தற்கால மித்துருக்களும், அல்லாத இராசிகளில் இருந்தால் தற்கால சத்துருக்களுமாவர்.

## அதிமித்திரர், அதிசத்துரு, சமன்

சுபாவ மித்திரரான கிரகங்கள் தற்கால மித்திருமாயின் அதிமித்திரர். சுபாவ சத்துருக்களான கிரகங்கள் தற்கால சத்துருக்களுமாயின் அதிசத்துருக்கள். சுபாவ மித்திரர் தற்கால சத்துருக்களாயினும், சுபாவ சத்துருக்கள் தற்கால மித்திராயினும் சமன்.

## கிரகங்களால் வரும் பலன்

**வினு:** ஒவ்வொரு கிரகங்களாலும் மனிதவர்க்கத்தாருக்கு நிகழும் பலன்கள் யாவை?

**விடை:** சூரியனல்:—நிதானபுத்தி, இராசாங்க உத்தியோகம், வைத்தியத்தொழில், சரீர உஷ்ணம் (கணச்சூடு), பித்தரோகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசதகுணம், அதிகாரம், சூரத்துவம், ஆத்மஞானம், விரதானுஷ்டானம், தெய்வாராதனை, சபைத்தலைமை, பிதாவின் பலன், காடுபடு திரவியம் சிவப்பு நிறமான பொருட்களின் சேர்க்கை இவைகளை அறியலாம்.

சந்திரனால்:—ரூபலட்சணம், முகவசீகரம், நிலையில்லாத புத்தி, தேசசஞ்சாரம், பாற்பசு, இரசவர்க்கம், பயிர்த்தொழில், பூஞ்சோலை, கடல்படு திரவியம், சலரோகம், க்ஷயரோகம், மாதாவின் பலன் வெண்மை நிறமான பொருட்களின் சேர்க்கை இவைகளை அறியலாம்.

செவ்வாயினால்:—பூமிப்பலன், சகோதரபலன், சத்துருபலன், திடசித்தம், தாரக்குழப்பம், (ஸ்திரீஜாதகத்தில்) மங்கல்யம், கலகம் தொடங்குதல் அடக்குதல், கழுத்து காது கைகளில் நோய், ஆயுத விரணம், மிருகசேதம், பூமிப்பகுதியில் உத்தியோகம், இரத்தாசய ரோகம், கடினசித்தம், கடூரவசனம், வெண்சிவப்பு நிறமான பொருட்களின் சேர்க்கை இவைகளை அறியலாம்.

புதனால்:—கணிதவல்லபம், பண்டிதத்தன்மை, சித்திரம், சிற்பம், வியாபாரம், வாக்குவல்லபம், வாயுரோகம், சுவாசாசயரோகம், ஆகாயகமனம், பச்சை நிறமான பொருட்களின் சேர்க்கை, அம்மான் பலன், பந்துபலன் இவைகளை அறியலாம்.

வியாழனால்:—நம்பிக்கை, அன்பு, அறிவு, திரவியம், புத்திரரின் பலாபலன், வீடு, பாற்பசு, பொன், புடைவை, அதிகாரம், மஞ்சள் நிறமான பொருட்களின் சேர்க்கை, பாக்கியம், ஆசனரோகம், குன்மரோகம், கீர்த்தி இவைகளை அறியலாம்.

சுக்கிரனால்:—போகசுகம், மங்களம், அலங்காரம், போசனசுகம், விவாகம், தாரத்தின் பலாபலன், ஸ்திரீவசீகரம் (ஸ்திரீஜாதகத்தில் புருஷவசீகரம்), ஸ்திரீசம்பந்தமான ரோகங்கள் (ஸ்திரீஜாதகத்தில் சேர்க்கையினால் வரும் ரோகங்கள்), குறிகள், நீலவெண்மை நிறமான பொருட்களின் சேர்க்கை இவைகளை அறியலாம்.

சனியினால்:—அபகீர்த்தி, ஆயுள், சுரஎலும்புகளுள் ரோகம், இரும்பு, ஒழுக்கந் தவறுதல், சோம்பல், தாமதகுணம், காரியதாமதம், மரணகாரணம், விபத்து, வைரித்த கோபம், எலும்பு சம்பந்தமான ரோகம், வாதரோகம், கால்களில் நோய், உபத்திரவம், வேலைக்காரர் பலன், கறுப்பு நிறமான பொருட்களின் சேர்க்கை இவைகளை அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகுவினால்:—தகப்பனின் பிதா, மிருத்துபயம், சர்ப்பமுதலிய விஷபயம், மலேபடு திரவியம், சொறி சிரங்கு குஷ்டம் கரப்பன் முதலிய தோல்சம்பந்தமான ரோகங்கள், விக்கல், பொய்பேசல், தொழிலில் ஊக்கமுடைமை, பராக்கிரமம், கபடம், பரதூஷணம், புகை கறுப்பு நிறமான பொருட்களின் சேர்க்கை, பாஷாண்டபுத்தி இவைகளை அறியலாம்.

கேதுவினால்.—தாயின் பிதா, ஞானசாதனை, சித்திரத்தொழில், வேஷந் தரித்தல், அபிநயம், பிடிவாதக்குணம், விரோதவாக்கு, எப்போதும் ஆயுதந் தரித்திருத்தல், பதிதத்தன்மை, புகை குடித்தல், புண்வடு, நவீன ரோகங்கள், கொடுமையான சுபாவம், பைசாசபீடை, மருத்திடு, ஏகாந்தவாசம் (தனித்திருத்தல்), விகட (ஹாஸ்ய) வசனம், அந்நியரால் வரும் பலன், சேவகத்தொழில், விசித்திர நிறமான பொருட்களின் சேர்க்கை இவைகளை அறியலாம்.

## கிரகங்கள் பலன்செய்யும் காலம்

(The pericds when each planet is most powerful.)

**வினா:** எல்லாக் கிரகங்களும் எப்போதும் தத்தம் பலன்களைத் தருவார்களா?

**விடை:** சூரியனும் செவ்வாயும் ஒரு இராசியில் (தெசாபுத்தி அந்தரங்களில்) பிரவேசிக்கும்போது அவைகளில் முதற்பகுதியிலும், வியாழனும் வெள்ளியும் நடுக்கூற்றிலும், சனியும் இராகுவும் கடைக்கூற்றிலும், புதன் சந்திரன் கேது எப்பொழுதும் தத்தம் பலனைக் கொடுப்பர்.

## மாரக ஸ்தானம்

2-ம் 7-ம் இடங்கள் மாரகத் தானங்களாகும்.

## மாரகர்

2-ம் 7-ம் இடங்களில் இருந்த கிரகங்களும், 2-ம் 7-ம் இடங்களின் அதிபர்களும் மாரகக் கிரகங்களாகும்.

## கிரகங்களால் வரும் ரோகங்கள்

**வினா:** ஒவ்வொரு கிரகங்களாலும் வரும் ரோகங்கள் எவை எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: சூரியனால்:—மூளை இருதயம் வயிறு முதலிய இடங்களில் ரோகம், பைத்தியம், அதிசாரம், கிராணி (Diarrhœa), அக்கினிச்சுரம் (Typhoid Fever), வைசூரி (Small Pox), பொக்களிப்பான் (Chicken Pox) முதலிய ரோகங்கள் சம்பவிக்கும்.

சந்திரனால்:—முகம் பல் வாய் நாசி முதலான இடங்களில் நோய், க்ஷயம், குன்மம், வாந்தி, வாதசுரம், சலாசயரோகம், பீனிசம், மகோதரபாண்டு முதலிய ரோகங்கள் சம்பவிக்கும்.

செவ்வாயினால்:—இரத்தாசயரோகம், இரத்தக்கொதிப்பு, இரத்தப்பெருக்கு, தோள் கை கழுத்து காது முதலிய அங்கங்களில் ரோகம், கன்னசூலை முதலிய ரோகங்கள் சம்பவிக்கும்.

புதனால்:—மார்பு, முதுகு ஆகிய அங்கங்களில் வாயுபீடை, சுவாசாசய ரோகங்கள், கிரந்திவாயு, பக்கவாதம், பாரிசவாதம், கண்டமாலை, பலவிதமான வாத வாயு உபத்திரவம் முதலிய ரோகங்கள் சம்பவிக்கும்.

வியாழனால்:—ஆசனம் குண்டிக்காய் மூலம் முதலான இடங்களில் ரோகம், குன்மம், இருதயவியாதி, ஆமாசயரோகம் (Stomach Diseases), அத்திசுரம் முதலிய ரோகங்கள் சம்பவிக்கும்.

சுக்கிரனால்:—கபவாதசுரம், நரம்புவிறைப்பு, ஸ்திரீபுருஷ சேர்க்கையினால் வரும் ரோகங்கள் (Venereal Diseases) க்ஷயம், பிரமேகம் முதலிய ரோகங்கள் சம்பவிக்கும்.

சனியினால்:—கால்களில் நோய், சுர எலும்புகளுள் ரோகம், வாதசுரம், பக்கவாதம், பாரிசவாதம், முடக்குவாதம், எலும்பு சம்பந்தமான புண், சூலைகள், வலிப்புகள், பிராண உபத்திரவம் முதலிய ரோகங்கள் சம்பவிக்கும்.

இராகுவினால்:—தோற்புரை சம்பந்தமான ரோகம், விஷநீர்ப்பீடை, நீர்த்தொந்தம், விரணம் (சொறி சிரங்கு கரப்பன்) முதலிய ரோகங்கள் சம்பவிக்கும்.

கேதுவினால்:—நவீனரோகம், விரணங்கள், சரீரபீடை, மந்திரப்பிரயோகம், விஷத்தினால் பிரக்ஞை கெடுதல் முதலிய ரோகங்கள் சம்பவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கார்த்திகை, உத்தரம், உத்தராடம்.**
**சூரியதேசை வரு 6.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| சூரியன் | 0 | 3 | 18 |
| சந்திரன் | 0 | 6 | 0 |
| செவ்வாய் | 0 | 4 | 6 |
| ராகு | 0 | 10 | 24 |
| வியாழன் | 0 | 9 | 18 |
| சனி | 0 | 11 | 12 |
| புதன் | 0 | 10 | 6 |
| கேது | 0 | 4 | 6 |
| சுக்கிரன் | 1 | 0 | 0 |

**ரோகிணி, அத்தம், திருவோணம்.**
**சந்திரதேசை வரு 10.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| சந்திரன் | 0 | 10 | 0 |
| செவ்வாய் | 0 | 7 | 0 |
| ராகு | 1 | 6 | 0 |
| வியாழன் | 1 | 4 | 0 |
| சனி | 1 | 7 | 0 |
| புதன் | 1 | 5 | 0 |
| கேது | 0 | 7 | 0 |
| சுக்கிரன் | 1 | 8 | 0 |
| சூரியன் | 0 | 6 | 0 |

**மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம்.**
**செவ்வாய்தேசை வரு 7**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| செவ்வாய் | 0 | 4 | 27 |
| ராகு | 1 | 0 | 18 |
| வியாழன் | 0 | 11 | 6 |
| சனி | 1 | 1 | 9 |
| புதன் | 0 | 11 | 27 |
| கேது | 0 | 4 | 27 |
| சுக்கிரன் | 1 | 2 | 0 |
| சூரியன் | 0 | 4 | 6 |
| சந்திரன் | 0 | 7 | 0 |

**திருவாதிரை, சுவாதி, சதயம்.**
**ராகுதேசை வரு 18.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| ராகு | 2 | 8 | 12 |
| வியாழன் | 2 | 4 | 24 |
| சனி | 2 | 10 | 6 |
| புதன் | 2 | 6 | 18 |
| கேது | 1 | 0 | 18 |
| சுக்கிரன் | 3 | 0 | 0 |
| சூரியன் | 0 | 10 | 24 |
| சந்திரன் | 1 | 6 | 0 |
| செவ்வாய் | 1 | 0 | 18 |

**புனர்பூசம், விசாகம், பூரட்டாதி.**
**வியாழதேசை வரு 16.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| வியாழன் | 2 | 1 | 18 |
| சனி | 2 | 6 | 12 |
| புதன் | 2 | 3 | 6 |
| கேது | 0 | 11 | 6 |
| சுக்கிரன் | 2 | 8 | 0 |
| சூரியன் | 0 | 9 | 18 |
| சந்திரன் | 1 | 4 | 0 |
| செவ்வாய் | 0 | 11 | 6 |
| ராகு | 2 | 4 | 24 |

**பூசம், அனுஷம், உத்தரட்டாதி.**
**சனிதேசை வரு 19.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| சனி | 3 | 0 | 3 |
| புதன் | 2 | 8 | 9 |
| கேது | 1 | 1 | 9 |
| சுக்கிரன் | 3 | 2 | 0 |
| சூரியன் | 0 | 11 | 12 |
| சந்திரன் | 1 | 7 | 0 |
| செவ்வாய் | 1 | 1 | 9 |
| ராகு | 2 | 10 | 6 |
| வியாழன் | 2 | 6 | 12 |

**ஆயில்யம், கேட்டை, ரேவதி.**
**புததேசை வரு 17.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| புதன் | 2 | 4 | 27 |
| கேது | 0 | 11 | 27 |
| சுக்கிரன் | 2 | 10 | 0 |
| சூரியன் | 0 | 10 | 6 |
| சந்திரன் | 1 | 5 | 0 |
| செவ்வாய் | 0 | 11 | 27 |
| ராகு | 2 | 6 | 18 |
| வியாழன் | 2 | 3 | 6 |
| சனி | 2 | 8 | 9 |

**அச்சுவினி, மகம், மூலம்.**
**கேதுதேசை வரு 7.**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| கேது | 0 | 4 | 27 |
| சுக்கிரன் | 1 | 2 | 0 |
| சூரியன் | 0 | 4 | 6 |
| சந்திரன் | 0 | 7 | 0 |
| செவ்வாய் | 0 | 4 | 27 |
| ராகு | 1 | 0 | 18 |
| வியாழன் | 0 | 11 | 6 |
| சனி | 1 | 1 | 9 |
| புதன் | 0 | 11 | 27 |

**பரணி, பூரம், பூராடம்.**
**சுக்கிரதேசை வரு 20**

| புத்திகள் | வருஷம் | மாதம் | நாள் |
|---|---|---|---|
| சுக்கிரன் | 3 | 4 | 0 |
| சூரியன் | 1 | 0 | 0 |
| சந்திரன் | 1 | 8 | 0 |
| செவ்வாய் | 1 | 2 | 0 |
| ராகு | 3 | 0 | 0 |
| வியாழன் | 2 | 8 | 0 |
| சனி | 3 | 2 | 0 |
| புதன் | 2 | 10 | 0 |
| கேது | 1 | 2 | 0 |

மகாதேசை பிரித்தும் வகை: ஜனனகாலம் ஜன்மநக்ஷத்திரத்திற் செல்லாது நின்ற நாழிகையை அந்த நக்ஷத்திர தெசாவருஷத்தாற் பெருக்கி அந்த நக்ஷத்திர பரமநாழிகையாற் பிரித்துவந்தபலம்வருஷம்; சேஷத்தை முறையே 12,30, 60ஆற்பெருக்கி அடி பரமநாழிகையாற் பிரித்துக்கண்டது மாதம், நாள், நாழிகை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாதெசாபுத்தி பிரிக்கும் வகை

**வின:** மகாதெசாபுத்தி பிரிக்கும் வகையை உதாரணமூலம் விளங்கச்செய்ய முடியுமா?

**விடை:** ஆம் உதாரணமாக,

பிரமாதிஸ்ல் வைகாசிமீ 1உ (15-5-39) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி 4 நிமிஷத்தில் ஓர் மகவு பிறந்தது.

அந்நேரம் உதயாதி (ஜாதகி) ஜனனாந்தம் சென்ற நாழிகை 25 விநாடி 25. அன்று உத்தரட்டாதி 29 நாழிகை 42 விநாடி வரையும் உண்டு. ஜாதகி ஜனித்த நேரம் உத்தரட்டாதி 4-ம் பாதம். 29 - 42-ல் குறித்த நேரமாகிய 25 - 25-ஐக் கழிக்க மிகுதி 4 - 17. இது உத்தரட்டாதி 4-ம் பாதத்தில் செல்லாது நின்ற நாழிகை. முதனாளாகிய சித்திரைமீ 31உ 60 நாழிகையில் (பூரட்டாதி) 25 - 19-ஐக் கழித்த மீதம் 34 - 41. இது உத்தரட்டாதியிற் சென்ற நாழிகை. இந்தச் சென்ற நாழிகையையும் 1உ நின்ற நாழிகையாகிய 29 - 42-ஐயும் கூட்ட வருவது 64 - 23. இது உத்தரட்டாதியின் ஆதியந்த பரமநாழிகையாம்.

இந்தப் பரமநாழிகையை 60-ஆல் பெருக்கி விநாடியாக்கி நின்ற விநாடியுடன் கூட்டிய தொகையைக் குறிப்பிட்டுக்கொள்க. பின்பு உத்தரட்டாதியில் செல்லாதுநின்ற நாழிகையை விநாடியாக்கி, நின்ற விநாடியுடன் கூட்டிக்கொண்டு, (பூசம், அனுஷம், உத்தரட்டாதிக்குச் சனிதெசை என்ற முறைப்படி) சனி மகா தெசைக்குரிய எண்ணிக்கையாகிய 19-ஆல் பெருக்கிப் பரமநாழிகை எண்ணிக்கையினல் பிரிக்க வருவது வருஷம். மிச்சத்தை 12-ஆல் பெருக்கி முன் பிரித்த தொகையால் பிரிக்க வருவது மாதம். மிச்சத்தை 30-ஆல் பெருக்கி முன்போல் பிரிக்க வருவது நாள். மிச்சத்தை 60-ஆல் பெருக்கி முன்போல் பிரிக்க வருவது நாழிகை. மிச்சத்தை 60-ஆல் பெருக்கி முன்போல் பிரிக்க வருவது விநாடியாம்.

**விபரம்:**

| | |
|---|---|
| 29 - 42 | 1உ உத்தரட்டாதியில் நின்றது. |
| 25 - 25 | அன்று உதயாதி ஜனனாந்தம் சென்றது. |
| 4 - 17 | உத்தரட்டாதியில் செல்லாதுநின்றது. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60 - 00 31௳ பகலிரவுமான நாடி.
25 - 19 அன்று பூரட்டாதியில் நின்ற நாடி.
34 - 41 31௳ உத்தரட்டாதியில் சென்ற நாடி.
29 - 42 1௳ உத்தரட்டாதியில் நின்ற நாடி.
64 - 23 உத்தரட்டாதியின் பரமநாழிகை.
60 ஆல் பெருக்க
3840
23 கூட்ட
3863

4 - 17 உத்தரட்டாதியில் செல்லாநின்ற நாடி விநாடி.
60 ஆல் பெருக்க
240
17 கூட்ட
257
19 (சனிதெசை௵) ஆல் பெருக்க
2313
257
4883

3863) 4883 (1 வருஷம்
3863
1020 மிச்சம்
12 ஆல் பெருக்க
3863) 12240 (3 மாதம்
11589
651 மிச்சம்
30 ஆல் பெருக்க
3863) 19530 (5 நாள்
19315
215 மிச்சம்

215
60 ஆல் பெருக்க
3863) 12900 (3 நாடி.
11589
1311 மிச்சம்
60 ஆல் பெருக்க
3863) 78660 (20 விநாடி.
7726
1400 மிச்சம்

ஆகவே, ஜனனகாலம் சனிமகாதெசையில் செல்லாநின்றது 1 ௵, 3 ௴, 5 நாள், 3 நாடி, 20 விநாடி என்றறிக.

இதில், ஜனனகாலம் என்ன புத்தி என்றும், அப்புத்தியில் எவ்வளவு செல்லாநின்றதென்றும் காண்போம்:—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனனகாலம் குறித்த மகாதெசையில் செல்லாநின்ற வருஷம் மாதம் தேதிகளிலிருந்து, முதலில் அந்த மகாதெசையின் கடைசிப் புத்தியையும், அது கழிபட்டால் அதற்கு முந்திய புத்தியையும், பின் அதற்கு முந்திய புத்தியையும், இப்படியே கடைசிப் புத்தியிலிருந்து முன்னுக்கு எத்தனை புத்திகள் கழிபடுமோ அவ்வளவையும் கழித்து, கழிபடாது மிச்சமாக இருப்பது கடைசியாகக் கழிபட்டதற்கு முந்திய புத்தியில் செல்லாநின்றதாகும்.

உதாரணமாக, மேற்குறித்த சனிமகாதெசையில் செல்லாநின்றதாகிய 1 வரு, 3 மீ, 5 நாள், 3 நாடி, 20 விநாடியிலிருந்து சனிதெசையின் கடைசிப் புத்தியாகிய வியாழபுத்திக்குரிய 2 வரு, 6 மீ, 12 நாளையே கழிக்கமுடியாது. ஆகவே, சனிமகாதெசையில் வியாழபுத்தியில் செல்லாநின்றது 1 வரு, 3 மீ, 5 நாள், 3 நாடி, 20 விநாடி என்றறிக.

## வருங்கால மகாதெசாபுத்தி பார்க்கும் வகை

**வினா:** தற்போது ஒரு ஜாதகருக்கு என்ன தெசை, என்ன புத்தி நிகழ்வதென்று நிச்சயித்துக் கணித்துக் கூறுவதை உதாரணமூலம் விளக்க இயலுமா?

**விடை:** ஆம். கீழ்க்காணும் ஒரு ஜாதகருக்குத் தற்போது (விக்கிரமவரு சித்திரைமீ 7உ) என்ன தெசாபுத்தி நிகழ்வதென்று பார்ப்போம்:-

இராக்ஷதவரு சித்திரைமீ 7உ திங்கட்கிழமை முற்பகல் 7 மணி 20 மினிற்றில் ஜாதகர் ஜனனம். உதயாதி ஜனனாந்தம் சென்ற நாழிகை 3, விநாடி 14. மிருகசீரிடம் பரமநாழிகை 65 - 48. பாத நாழிகை 16 - 27. மிருகசீரிடம் 2-ம் பாதத்தில் செல்லாநின்ற நாழிகை 16 - 18. ஜனனகாலம் செவ்வாய் மகாதெசையில் செல்லாநின்றது 5 வரு, 2 மீ, 24 நாள்.

இந்த ஜாதகருக்கு விக்கிரமவரு சித்திரைமீ 7உ வயது 25, மாதம் 00, நாள் 00. மகாதெசையில் வருஷம் 1-க்கு 360 நாளும், மாதம் 1-க்கு 30 நாளுமே கணக்கிடப்படுவதால், ஜாதகரின் தற்கால வயதையும் 360 நாள் = 1 வருஷமாகக் கொள்ளும் சாவனமானப்படியே கணக்கிட்டு வைத்துக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கு முன் சௌரமானப்படி கணித்துக் கண்ட 25 வயதுடன், வருஷம் ஒன்றுக்கு $5\frac{1}{4}$ நாள் விதம் கூட்டவேண்டும். ஆகவே, 25 வருஷத்துக்கும் $25 \times 5\frac{1}{4} = 131\frac{1}{4}$ நாள் கூட்ட, சாவனமானப்படி வயது 25, மாதம் 4, நாள் 11, நாழிகை 15 ஆகும்.

சாவனமான வயதிலிருந்து ஜனனகால மகாதெசையில் செல்லாதுநின்ற வருஷம் மாதம் நாட்களைக் கழித்து, மிச்சத்தில் கழிபடக் கூடிய தெசைகளின் வருஷங்களைக் கழித்து, மிச்சத்தில் கழிபடாத தெசையின் முதற் புத்தியிலிருந்து கழிபடக்கூடிய புத்திகளைக் கழிக்கவேண்டும். மிச்சம் அடுத்த புத்தியில் சென்றதாகும்.

| ௵ மீ நாள் நாடி. | |
|---|---|
| 25—4—11—15 | சாவனமான வயது. |
| 5—2—24—00 | ஜனனகாலம் செவ்வாய்தெசையில் நின்றது. |
| 20—1—17—15 | |
| 18—0—0—0 | இராகுதெசை. |
| 2—1—17—15 | வியாழதெசையில் சென்றது. |
| 2—1—18—00 | வியாழதெசையில் வியாழபுத்தி. |
| 2—1—17—15 | வியாழதெசையில் வியாழபுத்தியில் சென்றது. |
| 0—0—0—45 | வியாழதெசையில் வியாழபுத்தியில் நின்றது. |

ஆகவே, குறித்த தினத்துக்கு வியாழதெசையில் வியாழபுத்தியில்
சென்றது 2 ௵, 1 மீ, 17 நாள், 15 நாடி.
நின்றது 0 ௵, 0 மீ, 0 நாள், 45 நாடி என அறிக.

## மகாதேசைக் கிரமம்

மகாதெசைகள் சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, வியாழன், சனி, புதன், கேது, சுக்கிரன்; திரும்பவும் சூரியன், சந்திரன் ..........என்ற முறைப்படியே ஒன்றன்பின் ஒன்றாகத் தொடங்கி நடைபெறும்.

உதாரணமாக: அச்சுவினி நக்ஷத்திரத்தில் பிறந்தவருக்கு முதலில் நடப்பது கேதுதெசை. அதன்மேல் சுக்கிரதெசை. அதன்மேல் சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, வியாழன், சனி, புதன் இவர்களின் தெசைகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிரமமாய் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவினி, புனர்பூசம், அத்தம், மூலம், பூரட்டாதி

| 1-ம் பாதம் | | 2-ம் பாதம் | | 3-ம் பாதம் | | 4-ம் பாதம் | |
|---|---|---|---|---|---|---|---|
| மேட குசன் வருஷம் 100 | | இடப சுக்கிரன் வருஷம் 85 | | மிதுன புதன் வருஷம் 83 | | கர்க்கடகசந்திரன் வருஷம் 86 | |
| தெசை | | தெசை | | தெசை | | தெசை | |
| மேடகுசன் | 7 | மகரச்சனி | 4 | இடபசுக்கிரன் | 16 | கர்க்கடகசந்திர | 21 |
| இடபசுக்கிரன் | 16 | கும்பச்சனி | 4 | மேடகுசன் | 7 | சிங்கசூரியன் | 5 |
| மிதுனபுதன் | 9 | மீனவியாழன் | 10 | மீனவியாழன் | 10 | கன்னிபுதன் | 9 |
| கர்க்கடகசந்திர | 21 | *விருச்சிககுசன் | 7 | கும்பச்சனி | 4 | துலாசுக்கிரன் | 16 |
| சிங்கசூரியன் | 5 | துலாசுக்கிரன் | 16 | மகரச்சனி | 4 | விருச்சிககுசன் | 7 |
| கன்னிபுதன் | 9 | கன்னிபுதன் | 9 | தனுவியாழன் | 10 | தனுவியாழன் | 10 |
| துலாசுக்கிரன் | 16 | *கர்க்கடகசந்தி | 21 | *மேடகுசன் | 7 | மகரச்சனி | 4 |
| விருச்சிககுசன் | 7 | *சிங்கசூரியன் | 5 | இடபசுக்கிரன் | 16 | கும்பச்சனி | 4 |
| தனுவியாழன் | 10 | *மிதுனபுதன் | 9 | மிதுனபுதன் | 9 | மீனவியாழன் | 10 |

பரணி, பூசம், சித்திரை, பூராடம், உத்தரட்டாதி

| சிங்க சூரியன் வருஷம் 100 | | கன்னி புதன் வருஷம் 85 | | துலா சுக்கிரன் வருஷம் 83 | | விருச்சிக குசன் வருஷம் 86 | |
|---|---|---|---|---|---|---|---|
| *விருச்சிககுசன் | 7 | கும்பச்சனி | 4 | துலாசுக்கிரன் | 16 | *கர்க்கடகசந்தி | 21 |
| துலாசுக்கிரன் | 16 | மகரச்சனி | 4 | விருச்சிககுசன் | 7 | *சிங்கசூரியன் | 5 |
| கன்னிபுதன் | 9 | தனுவியழன் | 10 | தனுவியாழன் | 10 | *மிதுனபுதன் | 9 |
| *கர்க்கடகசந்தி | 21 | *மேடகுசன் | 7 | மகரச்சனி | 4 | இடபசுக்கிரன் | 16 |
| *சிங்கசூரியன் | 5 | இடபசுக்கிரன் | 16 | கும்பச்சனி | 4 | மேடகுசன் | 7 |
| *மிதுனபுதன் | 9 | மிதுனபுதன் | 9 | மீனவியாழன் | 10 | மீனவியாழன் | 10 |
| இடபசுக்கிரன் | 16 | கர்க்கடகசந்திர | 21 | *விருச்சிககுசன் | 7 | கும்பச்சனி | 4 |
| மேடகுசன் | 7 | சிங்கசூரியன் | 5 | துலாசுக்கிரன் | 16 | மகரச்சனி | 4 |
| மீனவியாழன் | 10 | கன்னிபுதன் | 9 | கன்னிபுதன் | 9 | தனுவியாழன் | 10 |

கார்த்திகை, ஆயிலியம், சுவாதி, உத்தராடம், ரேவதி

| தனு வியாழன் வருஷம் 100 | | மகரச் சனி வருஷம் 85 | | கும்பச் சனி வருஷம் 83 | | மீன வியாழன் வருஷம் 86 | |
|---|---|---|---|---|---|---|---|
| *மேடகுசன் | 7 | மகரச்சனி | 4 | இடபசுக்கிரன் | 16 | கர்க்கடகசந்திர | 21 |
| இடபசுக்கிரன் | 16 | கும்பச்சனி | 4 | மேடகுசன் | 7 | சிங்கசூரியன் | 5 |
| மிதுனபுதன் | 9 | மீனவியாழன் | 10 | மீனவியழன் | 10 | கன்னிபுதன் | 9 |
| கர்க்கடகசந்திர | 21 | *விருச்சிககுசன் | 7 | கும்பச்சனி | 4 | துலாசுக்கிரன் | 16 |
| சிங்கசூரியன் | 5 | துலாசுக்கிரன் | 16 | மகரச்சனி | 4 | விருச்சிககுசன் | 7 |
| கன்னிபுதன் | 9 | கன்னிபுதன் | 9 | தனுவியாழன் | 10 | தனுவியாழன் | 10 |
| துலாசுக்கிரன் | 16 | *கர்க்கடகசந்தி | 21 | *மேடகுசன் | 7 | மகரச்சனி | 4 |
| விருச்சிககுசன் | 7 | *சிங்கசூரியன் | 5 | இடபசுக்கிரன் | 16 | கும்பச்சனி | 4 |
| தனுவியாழன் | 10 | *மிதுனபுதன் | 9 | மிதுனபுதன் | 9 | மீனவியாழன் | 10 |

*இத் தெசைகளின் ஆரம்ப காலங்களில் தத்து வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோகிணி, மகம், விசாகம், திருவோணம்

| 1-ம் பாதம் | | 2-ம் பாதம் | | 3-ம் பாதம் | | 4-ம் பாதம் | |
|---|---|---|---|---|---|---|---|
| விருச்சிக குசன் வருஷம் 86 | | துலா சுக்கிரன் வருஷம் 83 | | கன்னி புதன் வருஷம் 85 | | சிங்க சூரியன் வருஷம் 100 | |
| தெசை | | தெசை | | தெசை | | தெசை | |
| *தனுவியாழன் | 10 | *கன்னிபுதன் | 9 | கன்னிபுதன் | 9 | மீனவியாழன் | 10 |
| மகரச்சனி | 4 | துலாசுக்கிரன் | 16 | சிங்கசூரியன் | 5 | மேடகுசன் | 7 |
| கும்பச்சனி | 4 | விருச்சிககுசன் | 7 | கர்க்கடகசந்திர | 21 | இடபசுக்கிரன் | 16 |
| மீனவியாழன் | 10 | *மீனவியாழன் | 10 | மிதுனபுதன் | 9 | மிதுனபுதன் | 9 |
| மேடகுசன் | 7 | கும்பச்சனி | 4 | இடபசுக்கிரன் | 16 | *சிங்கசூரியன் | 5 |
| இடபசுக்கிரன் | 16 | மகரச்சனி | 4 | மேடகுசன் | 7 | *கர்க்கடகசந்தி | 21 |
| மிதுனபுதன் | 9 | தனுவியாழன் | 10 | *தனுவியாழன் | 10 | *கன்னிபுதன் | 9 |
| பீஜி (சுவா) ... | 18-00தெற் | 3-54 | 98-26கிழ | 16-24கூ | 6-30கூ | 6கூட் |
| லண்டன் (கிறீன்விச்) | 51-29வட | 15-04 | 80-00மே | 13-20கழி | 5-30கழி | 0 |

மேற்காட்டிய அட்டவணையில் தமிழர் வசிக்கும் பிரதான இடங்களின் தேசாந்தர நியதிகள் காட்டப்பட்டிருக்கின்றன. இவ் வட்டவணையிற் காட்டப்படாத பிற இடங்களுக்கு, மேலே காட்டப்பட்ட இடங்களுள் மிகச் சமீபித்த இடங்கள் எவையெவையோ அவ்வவற்றிற்குரிய தேசாந்தர நியதிகளையே கொள்ளலாம். அல்லது, குறித்த இடத்துக்கு வடக்கிலும் தெற்கிலுமாகவும், கிழக்கிலும் மேற்கிலுமாகவும் மிகச் சமீபமாயுள்ள இவ்விரண்டு இடங்களின் தேசாந்தர நியதிகளிலிருந்து குறித்த இடத்துக்குரிய நியதிகளை விகிதாசாரப்படி கணித்துக்கொள்ளலாம். இதில், வடக்குத்தெற்கு வித்தியாசத்துக்கேற்பப் பலச்சாயையும், கிழக்குமேற்கு வித்தியாசத்துக்கேற்ப ரேகாந்தர நாடிவிநாடி, ஸ்டான்டர்ட் அந்தரமினிற் என்பவையும் மாறுபடுமென்பதைக் கவனிக்கவேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலாய் நாடுகளைப்பற்றிய முக்கிய கவனிப்பு

கி. பி 1933-ம் ஆ ஜனவரிமீ 1உ முதல் ஜப்பானியர் மலாயாவைக் கைப்பற்றிய காலம் வரையும் மலாய்நாடுகளின் ஸ்டான்டர்ட் மணி யாழ்ப்பாண மணியிலிருந்து 1 மணி 50 மினிற் கூடியதாகவும், ஸ்டான்டட் அந்தரமினிற் அதற்குமுந்திய வருடங்களில் இருந்ததைக் காட்டிலும் 20 மினிற்றுக் கூடியதாகவும் சட்டபூர்வமாகத் திருத்தப்பட்டது. ஆகவே, 1933-ம் ஆண்டுக்கு முன் மலாய்நாடுகளின் ஸ்டான்டர்ட்மணி யாழ்ப்பாணமணியுடன் 1 மணி 30 மினிற் கூடியதாகவும், ஸ்டான்டர்ட் அந்தரமினிற்றுகள் இவ்வட்டவணையிற் காட்டிய ஸ்டான்டர்ட் அந்தரமினிற்றுகளிலும் 30 மினிற் குறைந்தவைகளாகவும் கொள்ளப்படவேண்டியது. ஜப்பானியர் ஆட்சிக் காலத்தில் ஜப்பான் மணி வழங்கப்பட்டது. அதன்பின், தற்போதுள்ள அட்டவணைப்படி ஸ்டான்டர்ட் மணியும் ஸ்டாடர்ட் அந்தரமினிற்றுகளும் கொள்ளப்பட்டு வருகின்றன.

## மற்றைய நாடுகளில் ஸ்டான்டர்ட்மணிகள் வழங்கத் தொடங்கிய காலம்

நெட்டாலில் 1895-ம் ஆண்டு செப்டெம்பர்மீ 1உ முதலாகவும், டிரான்ஸ்வாலிலும் கேப்கலனியிலும் 1903-ம் ஆண்டு மார்ச்சுமீ 1உ முதலாகவும் தென்னாபிரிக்கா ஸ்டான்டர்ட்மணி வழங்கப்படுகின்றது. மோரிசில் 1907-ம் ஆண்டு ஜனவரிமீ 1உ முதலாக மோரிஸ் ஸ்டான்டர்ட் மணி வழங்கப்படுகின்றது. இந்தியாவிலும் இலங்கையிலும் 1906-ம் ஆண்டு ஜனவரிமீ 1உ யிலிருந்து இந்திய ஸ்டான்டர்ட் மணி வழங்கப்படுகின்றது. பர்மாவில் 1905-ம் ஆண்டு ஜூலைமீ முதலாகப் பர்மா ஸ்டான்டர்ட்மணி வழங்கப்படுகின்றது.

**வினா:** நாம் விரும்பிய ஊருக்கு (மேற்காட்டிய அட்டவணையிலிருந்து) பலச்சாயை, ரேகாந்தர நாடிவிநாடி, ஸ்டான்டர்ட் அந்தரமினிற் ஆகிய விபரங்களைத் தெரிந்துகொண்டபின், எவ்வாறு தேசாந்தரசம்ஸ்காரஞ் செய்தல்வேண்டும்?

**விடை:** மேற்குறித்த விபரங்களிலிருந்து குறித்த ஊருக்குக் குறித்த தினத்துக்குப் பகல்மான நாடிவிநாடி, ஸ்டான்டர்ட் கடிகாரப்படி சூரியஉச்ச சூரியஉதய மணிமினிற்றுகள், உதயாற்பரம், தேசாந்தரசம்ஸ்கார நாடிவிநாடிகள் என்பவைகளைக் கணித்துக் கொண்டு, இவைகள்மூலமாகத் தேசாந்தரசம்ஸ்காரஞ் செய்து கொள்ளுதல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஷ்டதேச பகல்மானம்

யாழ்ப்பாணப் பஞ்சாங்கப் பகல்மானத்துக்கும் 30 நாழிகைக்குமுள்ள வித்தியாசத்தை இஷ்டதேச பலச்சாயையினாற் பெருக்கி யாழ்ப்பாணப் பலச்சாயையினாற் பிரிக்க வருவது இஷ்டதேச சரவிநாடியாம். இதனை யாழ்ப்பாணப் பஞ்சாங்கப் பகல்மானம் 30 நாழிகைக்கு மேற்படின் 30 நாழிகையுடன் கூட்டியும், குறைந்தால் 30 நாழிகையிற் கழித்தும் வருவது இஷ்டதேச பகல்மானம். தக்ஷிண அக்ஷத்திலுள்ள தேசங்களில், இஷ்டதேச சாவிநாடியை யாழ்ப்பாணப் பஞ்சாங்கப் பகல்மானம் 30 நாழிகைக்கு மேற்படின் 30 நாழிகையிற் கழித்தும், குறைந்தால் 30 நாழிகையுடன் கூட்டியும் வருவது இஷ்டதேச பகல்மானம்.

**வினா:** குறித்த ஊருக்குக் குறித்த தினத்துக்குப் பகல்மானங் கணிக்கும் வகையை ஓர் உதாரணமூலம் விளக்கக்கூடுமா?

**விடை:** ஆம். உதாரணமாக,

விஷு வருஷ சித்திரை மீ 23உ முற்பகல் 8 மணி 1 நிமிஷத்தில் (அக்ஷாம்சம் 6 பாகை 56 கலை வடக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து மேற்கே 0 பாகை 10 கலை ரேகாம்சமும் அமைந்துள்ள) கொழும்பு நகரத்தில் ஓர் ஜாதகர் ஜனனம்.

அட்டவணைப் பிரகாரம் கொழும்புநகரத்தின் பலச்சாயை 1 அங்குலம், 28 வியங்குலம். ரேகாந்தரம் 2 விநாடி, கழித்தல். ஸ்டாண்டர்ட் அந்தரமினிற் 11, கூட்டல்.

குறித்த விஷு வருஷ சித்திரை மீ 23உ யாழ்ப்பாணப் பகல்மானம் 30 நாடி, 57 விநாடி. இதற்கும் 30 நாழிகைக்குமுள்ள வித்தியாசம் (அதாவது: பகல்மானம் 30 நாழிகைக்கு மேற்படின் பகல்மானத்திலிருந்து 30 நாழிகையைக் கழிக்க, அல்லது பகல்மானம் 30 நாழிகைக்குக் குறையின் 30 நாழிகையிலிருந்து பகல்மானத்தைக் கழிக்க வரும் நாடிவிநாடிகள்) 57 விநாடி. இது யாழ்ப்பாணத்துக்குக் குறித்த தினத்தின் சரவிநாடியாகும்.

நாடி விநாடி
30 - 57 யாழ்ப்பாணப் பகல்மானம் (விஷு வருஷ சித்திரை மீ 23உ)
30 - 00 கழிக்க
0 - 57 யாழ்ப்பாணத்தின் சரவிநாடி ,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57 யாழ்ப்பாணத்தின் சரவிநாடி
88 கொழும்பு நகரின் பலச்சாயையை வியங்குலமாக்கிய தொகையாற் பெருக்க.
456
456
5016 இதனை யாழ்ப்பாணப் பலச்சாயையை வியங்குலமாக்கிய தொகையாகிய 123-ஆற் பிரிக்க.

123) 5016 (40+1=41 கொழும்புநகரின் சரவிநாடி
492
96 மிச்சம். இது $61\frac{1}{2}$க்கு மேற்படலால் 40-உடன் 1 கூட்டுவது.

கொழும்பு நகரின் அக்ஷாம்சம் யாழ்ப்பாண அக்ஷாம்சத்தைப் போல வடக்காதலாலும், யாழ்ப்பாணப் பகல்மானம் 30 நாழிகைக்கு மேற்பட்டிருப்பதாலும் கொழும்புநகரின் சரவிநாடியை 30 நாழிகையுடன் கூட்ட:—

நாடி விநாடி
30 - 00
41 கொழும்புநகரின் சரவிநாடி கூட்ட.
30 - 41 கொழும்புநகரின் இஷ்டதினப் பகல்மானம்.

## இஷ்டதேச சூரிய உச்சம்

பஞ்சாங்கத்தில் குறித்ததினத்துக்குரிய பொதுச் சூரியஉச்ச மணிமினிற்றைக் கண்டுகொண்டு, இஷ்டதேச ஸ்டான்டர்ட் அந்தரமினிற் கூட்டலாயின் அதனைப் பொதுச் சூரியஉச்ச மணிமினிற்றுடன் கூட்டவும், ஸ்டான்டர்ட் அந்தரமினிற் கழித்தலாயின் பொதுச் சூரியஉச்ச மணிமினிற்றிலிருந்து ஸ்டான்டர்ட் அந்தரமினிற்றைக் கழிக்கவும் வருவது இஷ்டதேசத்துக்குக் குறித்த தினத்திற்கு ஸ்டான்டர்ட்மணிப்படி ஏற்பட்ட சூரியஉச்ச நேரமாகும்.

**வினா:** குறித்த ஊருக்குக் குறித்த தினத்துக்கு ஸ்டான்டர்ட் மணிப்படி சூரியஉச்சங் கணிக்கும் வகையை ஓர் உதாரணமூலம் விளக்க முடியுமா?

**விடை:** ஆம். உதாரணமாக,

மேற்குறித்த உதாரணத்திற் சொல்லிய கொழும்புநகரத்துக்குக் குறித்த விஷுவருஷ சித்திரைமீ 23உ (ஸ்டான்டர்ட் மணிப்படி) சூரியஉச்ச மணி கணிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாங்கத்தில் பொதுச் சூரியஉச்ச மணி சித்திரைமீ 17உ 11 - 57 எனவும், சித்திரைமீ 25உ 11 - 56 எனவும் குறிக்கப்பட்டிருத்தலின், சித்திரைமீ 23உ சூரியஉச்ச மணி விகிதாசாரப்படி $11\text{-}56\frac{1}{4}$; அதாவது அர்த்தாதிக விதிப்படி 11-56 ஆகும்.

ம. மி.
11-56 சித்திரைமீ 23உ பொதுச் சூரியஉச்சம். [யாழ் கூட்ட.
11 கொழும்புநகரின் ஸ்டான்டர்ட் அந்தரமினிற். கூட்டலாகை
12-07 கொழும்புநகருக்குச் சித்திரைமீ 23உ சூரியஉச்ச மணி.
(ஸ்டான்டர்ட் மணிப்படி.)

## இஷ்டதேச சூரிய உதயம்

இஷ்டதேசப் பகல்மானத்தை 2-ஆற் பிரித்து வந்த நாடி விநாடிகளை மணிமினிற்றுக்கி, இம் மணிமினிற்றுக்களை இஷ்டதேச சூரியஉச்ச மணிமினிற்றிலிருந்து கழிக்க இஷ்டதேச சூரியஉதய மணி வரும்.

**வினா:** குறித்த ஊருக்குக் குறித்த தினத்துக்குச் சூரியஉதயம் கணிக்கும் வகையை ஓர் உதாரணமூலம் விளக்க இயலுமா?

**விடை:** ஆம். உதாரணமாக,

மேற்காட்டிய உதாரணத்திற் சொல்லிய கொழும்புநகரத்துக்குக் குறித்த தினத்துக்குரிய பகல்மானம் நாடி 30, விநாடி 41 எனக் கண்டோம்.

நா. வி.
2 | 30 - 41 2-ஆற் பிரிக்க.
$2\frac{1}{2}$ | 15 - 20 இதனை $2\frac{1}{2}$-ஆற் பிரிக்க.
6 - 08 இது பகல்மானப் பாதிக்குரிய மணிமினிற்றுகும்.

ம. மி.
12 - 07 கொழும்புநகருக்கு சூரியஉச்ச மணி.
6 - 08 ,, பகல்மானப்பாதிக்குரிய மணியைக் கழிக்க.
5 - 59 ,, சூரியஉதய மணிமினிற்.

## இஷ்டதேச உதயாற்பரம்

யாழ்ப்பாண உதயாற்பர நாழிகையை விநாடியாக்கி, இஷ்டதேசத்தின் உதய இராசிக்குரிய இராசிப்பிரமாண விநாடியாற் பெருக்கி, யாழ்ப்பாணத்தின் மேற்படி இராசிக்குரிய இராசிப்பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண விநாடியாற் பிரிக்க வருவது இஷ்டதேச உதயாற்பர விநாடியாம். இதனை 60-ஆற் பிரிக்க வருவன இஷ்டதேச உதயாற்பர நாடி விநாடிகளாம்.

**வினா:** குறித்த தேசத்துக்குக் குறித்த தினத்துக்கு உதயாற்பரங் கணிக்கும் வகையை ஓர் உதாரணவாயிலாக விளக்க முடியுமா?

**விடை:** ஆம். உதாரணமாக,

நா. வி.
மேடம்: 1 - 20 யாழ்ப்பாணஉதயாற்பரம் (விஷு—ஏப்ரல் சித்திரைமீ 23உ)
60
80 விநாடி

கொழும்புநகருக்குச் சூரியஉதய இராசியாகிய மேடராசியின் இராசிப்பிரமாணம் (பஞ்சாங்கத்திற் குறித்தபடி) நாடி 4, விநாடி 40. இதை விநாடியாக்க: நா. வி.
4 - 40
60
280 விநாடி

(கவனிப்பு): குறித்த இடத்துக்கு இராசிப்பிரமாணம் பஞ்சாங்கத்திற் குறிக்கப்படாதிருந்தால், குறித்த ஊருக்குரிய அக்ஷாம்சத்திற்குச் சமீபித்த அக்ஷாம்சமுள்ள வேறு இடத்தின் இராசிப்பிரமாணத்தைக் கொள்ளவும். (அல்லது, சுத்தமாக அறியவேண்டின், குறித்த இடத்துக்கு வடக்கிலும் தெற்கிலுமுள்ள சமீபமான இரு இடங்களின் இராசிப்பிரமாணங்களிலிருந்து குறித்த இடத்தின் அக்ஷாம்சத்திற்கேற்ப விகிதாசாரப்படி கணித்துக் கொள்ளவேண்டியது.)

80 யாழ்ப்பாண உதயாற்பர விநாடி (மேடம்)
280 கொழும்பின் சூரியஉதயராசியான மேடராசிப்பிர
6400 [மாண விநாடியாற் பெருக்க.
160
275) 22400 (81 விநாடி. யாழ்ப்பாணத்தின் மேடராசிப்பிரமாண
2200 [விநாடியாற் பிரிக்க.
400
275
125

நா. வி.
4 - 35 யாழ்ப்பாண மேடராசிப்பிரமாணம்
60 ஆற் பெருக்கி விநாடியாக்க
275 விநாடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81 விநாடியை 60-ஆற் பிரித்து நாடிவிநாடியாக்க 1 நாடி 21 விநாடி வரும். இது கொழும்புநகருக்கு விஷுவஸு சித்திரைமீ 23உ க்குரிய உதயாற்பரமாம்.

## தேசாந்தர சம்ஸ்கார நாடிவிநாடிகள்

(1) இஷ்டதேச பகல்மானத்துக்கும் யாழ்ப்பாணப் பகல்மானத்துக்குமுள்ள வித்தியாசத்தின் பாதியை, யாழ்ப்பாணப் பகல்மானம் இஷ்டதேச பகல்மானத்திலும் சிறியதானால் கூட்டலென்றும், இஷ்டதேசப் பகல்மானத்திலும் யாழ்ப்பாணப் பகல்மானம் பெரியதானாற் கழித்தலென்றும் குறித்துக்கொள்க.

(2) இஷ்டதேச ரேகாந்தரம் கூட்டலோ கழித்தலோ என்பதையும் பஞ்சாங்கத்திற் கண்டுகொள்க.

(3) அ. இஷ்டதேச ரேகாந்தரம் கூட்டலாகவும் பெற்றுறித்த பகல்மான வித்தியாசப் பாதியும் கூட்டலாகவும் இருந்தால் இரு தொகைகளையுங் கூட்டி வந்த நாடிவிநாடிகளைக் கூட்டலென்று குறித்துக்கொள்க.

ஆ. இஷ்டதேச ரேகாந்தரம் கழித்தலாகவும் பகல்மான வித்தியாசப் பாதியும் கழித்தலாகவும் இருந்தால் இரு தொகைகளையும் கூட்ட வந்த நாடிவிநாடிகளைக் கழித்தலென்று குறித்துக்கொள்க.

இ. இஷ்டதேச ரேகாந்தரம் கூட்டலாகவும் பகல்மான வித்தியாசப் பாதி கழித்தலாகவும் இருந்தாலும், அல்லது இஷ்டதேச ரேகாந்தரம் கழித்தலாகவும் பகல்மான வித்தியாசப் பாதி கூட்டலாகவும் இருந்தாலும், பெரிய தொகையிற் சிறிய தொகையைக் கழித்துப் பெரிய தொகை கூட்டலானாற் கூட்டலென்றும் பெரிய தொகை கழித்தலானாற் கழித்தலென்றும் குறித்துக்கொள்க.

இப்படிக் குறிக்கப்பட்ட நாடிவிநாடிகள் தேசாந்தர சம்ஸ்கார நாடிவிநாடிகள் எனப்படும்.

**வினா:** குறித்த இடத்துக்குக் குறித்த திகதிக்குத் தேசாந்தர சம்ஸ்கார நாடிவிநாடிகள் கணிக்கும் முறையை ஓர் உதாரணவாயிலாக விளங்கச்செய்ய முடியுமா?

**விடை:** ஆம். உதாரணமாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1). மேற்சொல்லப்பட்ட உதாரணத்திற் கண்டபடி குறித்த விஷுவனுல் சித்திரைமீ 23உ கொழும்புப் பகல்மானம் நாடி 30, விநாடி 41. அன்று யாழ்ப்பாணப் பகல்மானம் நாடி 30, விநாடி 57.

நா. வி.
30 - 57 யாழ்ப்பாணப் பகல்மானம்.
30 - 41 கொழும்புப் பகல்மானம். (பெரியதிற் சிறியதைக் கழிக்க.)
0 - 16 யாழ்ப்பாணப் பகல்மானத்துக்கும் கொழும்புப் பகல்மானத்துக்குமுள்ள வித்தியாசம்.

16 விநாடியை 2-ஆற் பிரிக்க 8 விநாடி. இத் தினத்தில் இஷ்டதேசமாகிய கொழும்பின் பகல்மானத்திலும் பார்க்க யாழ்ப்பாணப் பகல்மானம் பெரியதாயிருத்தலினுல் மேற்கண்ட 8 விநாடியும் கழித்தலாகும்.

(2). கொழும்புக்கு ரேகாந்தரம் 2 விநாடி கழித்தல்.

(3) ஆ. ரேகாந்தரம் 2 கழித்தலாகவும் பகல்மான வித்தியாசப் பாதியும் கழித்தலாகவும் இருத்தலினுல் இரண்டு தொகைகளையும் கூட்ட வருவது கழிக்கவேண்டிய தேசாந்தர சம்ஸ்காரம்.

நா. வி.
0 - 2 ரேகாந்தரம்
0 - 8 பகல்மானங்களின் வித்தியாசப்பாதி (கூட்ட)
0 - 10 இது தேசாந்தர சம்ஸ்காரம் (கழித்தல்)

## தேசாந்தர சம்ஸ்காரம்

**வினு:** இவ் விபரங்களைக் கொண்டு தேசாந்தர சம்ஸ்காரஞ் செய்யும் வழியை உதாரணமூலம் விளக்க இயலுமா?

**விடை:** ஆம். உதாரணமாக,

மேற்குறித்த ஜாதகரின் ஜனனகால உதயாதிசென்ற நாடி விநாடி, உதயலக்கினம், சென்ற நாடி, கிரகநிலை, நவாம்சநிலை, திதி, நக்ஷத்திரம், சென்ற நின்ற நாடிகள், யோகம், கரணம் முதலியவைகளைக் கணிப்போம்:—

ம. மி.
காலை 8 - 01 ஜனனகால மணி.
5 - 59 கொழும்புக்குச் சூரியஉதய மணி (கழிக்க)
2 - 02 உதயாதி ஜன்னம் வரை சென்ற மணிமினிற்.
$2\frac{1}{2}$ ஆற் பெருக்க.
5 - 05 உதயாதி ஜனனுந்தம் சென்ற நாடிவிநாடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா. வி.
5 - 05 சூரியஉதயாதி ஜனனம்வரை சென்றது.
1 - 21 கொழும்புக்கு அன்று உதயாற்பரம் (மேடம்) கழிக்க
3 - 44 உதய இலக்கினமாகிய இடபத்தில் சென்றது.
60 ஆற் பெருக்கி விநாடியாக்க.
224 விநாடி.

கொழும்புக்கு இடபத்தின் இராசிப்பிரமாணம் 5 நாடி 10 விநாடி. இதை விநாடியாக்க 310 விநாடி. இதை 9-ஆற் பிரிக்க $34\frac{4}{9}$ விநாடி. 224 விநாடியை $34\frac{4}{9}$ விநாடியாற் பிரிக்க: $34\frac{4}{9}$) 224 (6

$206\frac{2}{3}$

$17\frac{1}{3}$

இடபத்தில் 6 அம்சம் சென்று, 7-வது அம்சத்தில் $17\frac{1}{3}$ விநாடி சென்றிருப்பதால், திரராசியாகிய இடபத்துக்கு 9-ம் இராசியாகிய மகரமுதல் 7-வது இராசி வரை எண்ண, நவாம்சலக்கினம் கர்க்கடகமாக வருகின்றது.

தேசாந்தரசம்ஸ்கார நாடிவிநாடிகளைப் பஞ்சாங்கத்தில் அத்தினத்துக்குரிய கிரகபாதசாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம் என்பவைகளுக்குக் குறித்த நாடிவிநாடிகளுடன் கூட்டலாயிற் கூட்டவேண்டும்; கழித்தலாயிற் கழிக்கவேண்டும். இவ்வுதாரணத்திற் கணித்துக்கண்ட தேசாந்தரசம்ஸ்கார விநாடி 10, கழித்தல். ஆகவே, அத்தினத்துக்கு மேற்சொல்லியவைகளிலிருந்து 10 விநாடியைக் கழித்து வரும் நாடிவிநாடிகள் கொழும்புநகரத்துக்குச் சூரிய உதயாதியாக அவ்வவற்றிற்குரிய நாடிவிநாடிகளாக அமையும்.

குறித்த விஷு வருடம் சித்திரைமீ 23உ சூரியன் செவ்வாய் குரு சுக்கிரன் சனி இராகு கேது பாதசாரங்களில் பெயர்ச்சிகள் இல்லை. புதபாதசாரத்தில் சித்திரைமீ 23உ நாடி 5, விநாடி 10-ல் கார்த்திகை 2-ல் இடபபுதன் என்றிருக்கிறது. ஆகவே, இந்த 5 நாடி 10 விநாடியிலிருந்து தேசாந்தரசம்ஸ்கார விநாடியாகிய 10 விநாடியைக் (கழித்தலாகையாற்) கழிக்க, 5 நாடி, 00 விநாடி வரும். இதுவே தேசாந்தரசம்ஸ்காரஞ் செய்யப்பட்ட புதபாதசாரப் பெயர்ச்சியாகும். அதாவது, சித்திரைமீ 23உ கொழும்பில் சூரியஉதயாதியாக 5 நாடி, 00 விநாடியில் புதன் கார்த்திகை 2-ம் பாதத்துக்கு (இடபத்துக்குப்) பெயரும். ஆகவே, ஜனனநேரமாகிய சூரியஉதயாதி நாடி 5, விநாடி 5-க்கு 5 விநாடி முந்தியே புதன் கார்த்திகை 2-ம் பாதத்துக்கும் இடபத்துக்கும் பெயர்ந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று திதி சுக்கிலபக்ஷ நவமி நாடி 45, விநாடி 5. இதில் 10 விநாடி தேசாந்தரசம்ஸ்காரம் கழிக்க நாடி 44, விநாடி 55.

அன்று நக்ஷத்திரம் ஆயிலியம் நாடி 1, விநாடி 20. மேல் மகம் நாடி 59, விநாடி 53. இவைகளிலிருந்து 10 விநாடி கழிக்க, ஆயிலியம் நாடி 1, விநாடி 10. மேல் மகம் நாடி 59, விநாடி 43.

அன்று யோகம் விருத்தி நாடி 23, விநாடி 30. இதிலிருந்து 10 விநாடி கழிக்க, நாடி 23, விநாடி 20.

அன்று கரணம் பாலவம் நாடி 16, விநாடி 37. இதிலிருந்து 10 விநாடி கழிக்க, நாடி 16, விநாடி 27.

இப்படி ஒவ்வொன்றிலும் 10 விநாடி கழித்துவந்த நாடிவிநாடிகளே கொழும்புக்கு அன்று சூரியஉதயாதியாக உள்ள திதி நக்ஷத்திர யோக கரணங்களின் நாடிவிநாடிகளாம்.

அன்று நக்ஷத்திரத்தில் சென்ற, நின்ற நாடிவிநாடிகளைக் காண்போம்:—

உதயாதி ஜனனம்வரை சென்ற நாடி 5, விநாடி 05. ஆகையால் அந்நேரத்துக்குரிய நக்ஷத்திரம் மகம்.

| நா. வி. | |
|---|---|
| 59 - 43 | அன்று மகம் நின்றது. |
| 1 - 10 | ,, ஆயிலியம் நின்றது கழிக்க. |
| 58 - 33 | மகத்தின் பரமநாடி. |

| | நா. வி. | |
|---|---|---|
| 4 | 58 - 33 | பரமநாடி. |
| | 14 - 38¼ | பாதநாடி. |

| நா. வி. | |
|---|---|
| 5 - 05 | உதயாதி ஜனனம்வரை சென்றது. |
| 1 - 10 | ஆயிலியம் நின்றது கழிக்க. |
| 3 - 55 | ஜனனகாலத்தில் மகத்தில் சென்றது. |
| 58 - 33 | மகத்தின் பரமநாடி. |
| 3 - 55 | ஜனனகாலம் மகத்தில் சென்றது கழிக்க. |
| 54 - 38 | ஜனனகாலம் மகத்தில் நின்றது. |
| 43 - 54¾ | மகம் 2, 3, 4-ம் பாதங்களின் பாதநாடிகள் கழிக்க. |
| 10 - 43¼ | மகம் 1-ம் பாதத்தில் செல்லாதுநின்றது. |

ஆகவே, யாழ்ப்பாணத்தில் விஷு வருடம் சித்திரை மீ 23உ காலை 8 மணி 1 மினிற் நேரத்தில் ஜனனமான ஜாதகருக்குக் கிரகநிலை நவாம்சநிலைகள் பின்வருமாறு ஏற்படுகின்றன:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கேது | ரவி<br>சுக்கிரன்<br>சனி | லக்<br>புதன்<br>குரு | |
|---|---|---|---|
| குசன் | கிரகநிலை | | |
| | | | சந்திர |
| | | | ராகு |

| | சந்திர | | |
|---|---|---|---|
| ராகு | நவாம்சநிலை | | லக் |
| புதன்<br>குரு | | | கேது |
| | சுக்கிரன் | ரவி<br>குசன் | சனி |

தேசாந்தர சம்ஸ்காரத்திற்கு வேறும் ஒரு உதாரணங் காட்டுகின்றோம். விஷு ௵ சித்திரை ௴ 14௳ இரவு 2 மணிக்கு மலாய்நாட்டைச் சேர்ந்த சிங்கப்பூரில் ஓர் ஜாதகர் ஜனனம். சிங்கப்பூரின் அக்ஷாம்சம் அட்டவணையிற் கண்டபடி பாகை 1, கலை 17 வடக்கு. பலச்சாயை 16 வியங்குலம். யாழ்ப்பாணமிருந்து ரேகாம்சம் பாகை 23, கலை 51 கிழக்கு. ரேகாந்தரம் நாடி 3, விநாடி 58 கூட்டல். ஸ்டான்டர்ட் மணி 1, மினிற் 50 கூட்டல். ஸ்டான்டர்ட் அந்தரமினிற் (1933-க்கு மேல், யுத்த காலத்துக்கு முன் ஆனதால்) 25 கூட்டல்.

நா. வி.
30 - 47 சித்திரை ௴ 14௳ யாழ்ப்பாணப் பகல்மானம்.
30 - 00 கழிக்க
0 - 47 யாழ்ப்பாணத்தின் சரவிநாடி.
16 சிங்கப்பூரின் பலச்சாயை வியங்குலத்தாற் பெருக்க.
282
47 இதனை யாழ்ப்பாணப் பலச்சாயையாகிய 123 வியங்குலத்தாற் பிரிக்க.
123) 752 (6 சித்திரை ௴ 14௳
738 சிங்கப்பூரின் சரவிநாடி.
14

நா. வி. (யாழ்ப்பாணப் பகல்மானம் 30 நாழிகைக்கு
30 - 00 மேற்பட்டபடியால்) சிங்கப்பூர்ச் சரவிநாடியை
6 30 நாழிகையுடன் கூட்ட.
30 - 06 சித்திரை ௴ 14௳ சிங்கப்பூர்ப் பகல்மானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம. மி.

11 - 58 சித்திரை௴ 14௳ பொதுச் சூரியஉச்சம். [யாற் கூட்ட.

25 சிங்கப்பூரின் ஸ்டான்டர்ட் அந்தரமினிற். கூட்டலாக்கை

12 - 23 சித்திரை௴ 14௳ சிங்கப்பூருக்குச் சூரியஉச்ச மணி.

2 | 30 - 06 சிங்கப்பூர்ப் பகல்மான நாடிவிநாடி. 2-ஆற் பிரிக்க.

$2\frac{1}{2}$ | 15 - 03 ஷை பகல்மானப் பாதி. $2\frac{1}{2}$-ஆற் பிரித்து மணியாக்க.

6 - 01 சிங்கப்பூர்ப் பகல்மானப்பாதிக்குரிய மணிமினிற்.

ம மி.

12 - 23 சித்திரை௴ 14௳ சிங்கப்பூரின் சூரியஉச்சம்

6 - 01 ,, ,, ,, பகல்மானப்பாதிமணி கழிக்க.

6 - 22 ,, ,, சூரியஉதய மணிமினிற்.

நா. வி.

மேடம்: 2 - 40 சித்திரை௴ 14௳ யாழ்ப்பாண உதயாற்பரம்.

60 ஆற் பெருக்கி விநாடியாக்க.

160 விநாடி

290 சிங்கப்பூரின் மேடராசிப்பிரமாண விநாடி பெருக்க.

14400

320 [யாழ்ப்பாண மேடராசிப்பிரமாண விநாடியாற் பிரிக்க]

275) 46400 (168+1=169 சிங்கப்பூரின் உதயாற்பர விநாடி.

275

1890 { இதை நாடிவிநாடியாக்க=நாடி 2, விநாடி 49.

1650 { இது சித்திரை௴ 14௳ சிங்கப்பூரின் உதயாற்பரம்.

2400

2200 [துடன் 1 கூட்டப்பட்டது.)

200 (சேடம் $137\frac{1}{2}$-க்கு அதிகமாயிருத்தலால் மேற்பலத்

நா. வி.

30 - 47 சித்திரை௴ 14௳ யாழ்ப்பாணப் பகல்மானம். [கழிக்க.

30 - 06 ,, சிங்கப்பூர்ப் பகல்மானம். பெரியதிற் சிறியதைக்

2 | 0 - 41 இரு இடங்களின் பகல்மானவித்தியாசம். 2-ஆற் பிரிக்க.

0 - $20\frac{1}{2}$ ஷை பகல்மான வித்தியாசப் பாதி. இது யாழ்ப்பாணப் பகல்மானம் இஷ்டதேசமாகிய சிங்கப்பூரின் பகல் மானத்திலும் பார்க்கப் பெரியதாகையாற் கழித்தல்.

நா. வி.

3 - 58 சிங்கப்பூரின் ரேகாந்தரம். (கூட்டல்.)

0 - $20\frac{1}{2}$ யாழ்ப்பாண-சிங்கப்பூர்ப் பகல்மானங்களின் வித்தியாசப்

3 - $37\frac{1}{2}$ பெரியதிற் சிறியதைக் கழிக்க [பாதி. கழித்தல்.

இது சிங்கப்பூருக்குச் சித்திரை௴ 14௳ க்குரிய தேசாந்தர சம்ஸ்கார நாடிவிநாடிகளாம். இவற்றுள் பெரியதொகை கூட்டலாகையால் இதுவும் கூட்டலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ம. மி. | |
|---|---|
| 2 - 00 | இரவு சிங்கப்பூரில் ஜனனகால மணி. |
| 6 - 22 | சிங்கப்பூரில் சூரியஉதய மணி. கழிக்க. |
| 19 - 38 | உதயாதி ஜனனம்வரை சென்ற மணிமினிற்று. |
| $2\frac{1}{2}$ | ஆற் பெருக்கி நாடிவிநாடிகளாக்க. |
| 49 - 05 | உதயாதி ஜனனாந்தம் சென்ற நாடிவிநாடி (சிங்கப்பூருக்கு) |
| 2 - 49 | சிங்கப்பூருக்கு அன்று உதயாற்பரம் (மேடம்) கழிக்க. |
| 46 - 16 | இதிலிருந்து இடபம் முதல் மகரம் முடிவுள்ள சிங்கப்பூர் |
| 45 - 47 | இராசிப்பிரமாணங்களின் மொத்தத்தைக் கழிக்க. |
| 0 - 29 | உதயலக்கினமாகிய கும்பத்தில் சென்றது |
| 9 \| 279 | சிங்கப்பூரின் கும்பராசிப்பிரமாண விநாடி. இதை 9-ஆற் பிரிக்க. |
| 31 | ஒரு பாதத்திற்குரிய விநாடி. |

இது கும்பத்தில் சென்ற 29 விநாடியிலும் பார்க்கக் கூடியதா யிருத்தலால் கும்பத்தில் முதலாவது நவாம்சம். அதாவது, திராசி யாகிய கும்பத்துக்கு 9-ம் இராசியாகிய துலாத்திலிருந்து எண்ண, 1-வது இராசி துலாம். இதுவே நவாம்சலக்கினமாகும்.

சித்திரைமீ 14உ நாடி 48, விநாடி 24-ல் சூரியன் பரணி 1-க்குப் பெயருகின்றது. ஆகவே, தேசாந்தர சம்ஸ்காரமாகிய நாடி 3, விநாடி $37\frac{1}{2}$ ஐக் கூட்டலாகையால் இத்துடன் கூட்ட, நாடி 52, விநாடி $01\frac{1}{2}$. இது சிங்கப்பூரில் உதயாதியாகச் சூரியன் பரணி 1-ம் பாதத்துக்குப் பெயரும் நேரமாம்.

சித்திரைமீ 14உ செவ்வாய்க்குப் பெயர்ச்சியில்லை.

சித்திரைமீ 14உ நாடி 0, விநாடி 48-ல் புதன் பரணி 1-க்குப் பெயருகின்றது. இத்துடன் தேசாந்தர சம்ஸ்காரமாகிய நாடி 3, விநாடி $37\frac{1}{2}$ கூட்ட, நாடி 4, விநாடி $25\frac{1}{2}$. இது சிங்கப்பூரில் உதயாதியாகப் புதன் பரணி 1-ம் பாதத்துக்குப் பெயரும் நேரமாம்.

சித்திரைமீ 14உ நாடி 48, விநாடி 14-ல் குரு கார்த்திகை 2-க்கு (இடபத்துக்கு) பெயருகின்றது. இத்துடன் தேசாந்தர சம்ஸ்காரமாகிய நாடி 3, விநாடி $37\frac{1}{2}$ கூட்ட, நாடி 51, விநாடி $51\frac{1}{2}$. இது சிங்கப்பூரில் உதயாதியாகக் குரு கார்த்திகை 2-ம் பாதத்துக்கு (இடபத்துக்கு) பெயரும் நேரமாகும்.

சித்திரைமீ 14உ நாடி 15, விநாடி 5-ல் சுக்கிரன் பரணி 1-க்குப் பெயருகின்றது இத்துடன் தேசாந்தர சம்ஸ்காரமாகிய நாடி 3, விநாடி $37\frac{1}{2}$ கூட்ட, நாடி 18, விநாடி $42\frac{1}{2}$. இது சிங்கப்பூரில் உதயாதியாகச் சுக்கிரன் பரணி 1-ம் பாதத்துக்குப் பெயரும் நேரமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரைமீ 14உ சனி இராகு கேதுக்களுக்குப் பெயர்ச்சி இல்லை. அன்று திதி அமாவாசை, நாடி 31, விநாடி 59. இத்துடன் தேசாந்தர சம்ஸ்காரமாகிய நாடி 3, விநாடி $37\frac{1}{2}$ கூட்ட, நாடி 35, விநாடி $36\frac{1}{2}$. இது சிங்கப்பூரில் உதயாதியாக அமாவாசை நிற்கும் நேரமாம்.

அன்று நக்ஷத்திரம் அச்சுவினி, நாடி 33, விநாடி 22. இத்துடன் தேசாந்தர சம்ஸ்காரமாகிய நாடி 3, விநாடி $37\frac{1}{2}$ கூட்ட, நாடி 36, விநாடி $59\frac{1}{2}$. இது சிங்கப்பூரில் உதயாதியாக அச்சுவினி நிற்கும் நேரமாம்.

நா. வி.
49 - 05 சிங்கப்பூரில் உதயாதி ஜனனம்வரை சென்றது.
$36 - 59\frac{1}{2}$ ,, அன்று அச்சுவினி நின்ற நேரம். கழிக்க
$12 - 05\frac{1}{2}$ ஜனனநேரம் பரணியில் சென்றது.

60 - 00 [கழிக்க
33 - 22 அன்று பஞ்சாங்கத்தின்படி அச்சுவினி நின்ற நேரம்.
26 - 38
39 - 45 மறுநாட் பஞ்சாங்கத்தின்படி பரணி நின்றது கூட்ட.
4 | 66 - 23 பரணியின் பரமநாடி. இதை 4-ஆற் பிரிக்க.
$16 - 35\frac{3}{4}$ பரணியின் பாதநாடி.

பரணியில் சென்றதாகிய நாடி 12, விநாடி $05\frac{1}{2}$ ஒரு பாதநாடியினும் குறைவாயிருத்தலால், பரணி 1-ல் சென்றது நாடி 12, [விநாடி $5\frac{1}{2}$.

$16 - 35\frac{3}{4}$ பரணியின் பாதநாடி.
$12 - 05\frac{1}{2}$ பரணி 1-ல் சென்றது.
$4 - 30\frac{1}{4}$ பரணி 1-ல் நின்றது. [கூட்ட.
$49 - 47\frac{1}{2}$ பரணியின் 2, 3, 4-ம் பாதங்களுக்குரிய நாடிவிநாடி.
$54 - 17\frac{1}{2}$ பரணியில் ஜனனகாலம் செல்லாதுநின்ற நாடிவிநாடி.

அன்று யோகம் பிரீதி, நாடி 34, விநாடி 32. இத்துடன் தேசாந்தர சம்ஸ்காரமாகிய நாடி 3, விநாடி $37\frac{1}{2}$ கூட்ட, நாடி 38, விநாடி $09\frac{1}{2}$. இது சிங்கப்பூரில் உதயாதியாகப் பிரீதியோகம் நிற்கும் நேரமாம்.

அன்று கரணம் நாகவம், நாடி 31, விநாடி 59. இத்துடன் தேசாந்தர சம்ஸ்காரமாகிய நாடி 3, விநாடி $37\frac{1}{2}$ கூட்ட, நாடி 35, விநாடி $36\frac{1}{2}$. இது சிங்கப்பூரில் உதயாதியாக நாகவகரணம் முடியும் நேரமாம்.

முதனாள் இரவு சதுர்ப்பாத கரணம் முடியும் நேரம் நாடி 59, விநாடி 31. இத்துடன் தேசாந்தர சம்ஸ்காரமாகிய நாடி 3, விநாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$37\frac{1}{2}$ கூட்ட, அன்று காலை நாடி 3, விநாடி $8\frac{1}{2}$ ஆகும். ஆகவே, அன்று சிங்கப்பூரில் உதயாதியாக நாடி 3, விநாடி $8\frac{1}{2}$ வரை சதுர்ப்பாத கரணம் நிற்கிறது. அதன்மேல் நாடி 35, விநாடி $36\frac{1}{2}$ வரை நாகவகரணம்.

கவனிப்பு

இதனால், தேசாந்தர சம்ஸ்காரம் கூட்டலாயிருக்கும்போது, முதனாள் இரவிலிருக்கும் திதி நக்ஷத்திரம் முதலியவைகளுடன் அற்றைத் தேசாந்தர சம்ஸ்காரத்தைக் கூட்டினால் 60 நாடிக்கு மேற்படக் கூடியவைகளைக் கவனித்து, அன்று காலையிலும் அந்தத் திதிநக்ஷத்திராதிகள் சேடமாய் நிற்பதைக் கணித்துக்கொள்ளவேண்டியது.

இவ்வாறே, தேசாந்தர சம்ஸ்காரம் கழித்தலாயிருக்கும்போது, மறுநாட் காலையிலிருக்கும் திதி நக்ஷத்திரம் முதலியவைகளிலிருந்து தேசாந்தர சம்ஸ்காரத்தைக் கழிக்கக்கூடாமலிருந்தால், அவற்றுடன் 60 நாழிகையைக் கூட்டி, பின்பு தேசாந்தர சம்ஸ்காரத்தைக் கழித்து, அன்று பின்னிரவிலே அந்தத் திதிநக்ஷத்திராதிகள் முடிவதைக் கணித்துக்கொள்ளவேண்டியது.

நக்ஷத்திரங்களுக்குப் பரமநாடி பாதநாடிகளைக் கணிக்கும்போது, பஞ்சாங்கத்திற் குறித்த தொடக்கம் முடிவுகளின்படியே கணித்துக்கொள்ளவேண்டும். அல்லது தொடக்கம், முடிவு ஆகிய இரண்டிற்கும் தேசாந்தர சம்ஸ்காரம் செய்த நேரங்களையே கைக்கொள்ளவேண்டும்.

ஆகவே, சிங்கப்பூரில் விஷு௵ சித்திரை௴ 14௳ இரவு 2 மணி நேரத்தில் ஜனனமான ஜாதகருக்குக் கிரகநிலை, நவாம்சநிலை வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| கேது | ரவி சந் புத குரு சுக் சனி | | |
| லக் | கிரகநிலை | | |
| குஜன் | | | |
| | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| ராகு | நவாம்சநிலை | | ரவி |
| | | | சந் குஜ புத சுக் கேது |
| குரு | | லக் | சனி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சூரியன்

1-ல் வியாதி
2-ல் கவலை
3-ல் நன்மை
4-ல் ரோகம், கலகம்
5-ல் ரோகம், சோகம்
6-ல் அனுகூலம்
7-ல் பயம், கஷ்டம்
8-ல் துக்கம், வியாதி
9-ல் நிலைமாறுதல்
10-ல் ஜயம், லாபம்
11-ல் நன்மைவிருத்தி
12-ல் காரியநஷ்டம்

### சந்திரன்

1-ல் தேகசுகம்
2-ல் விவாதம், நஷ்டம்
3-ல் திரவியலாபம், சுகம்
4-ல் நம்பிக்கையின்மை
5-ல் வியாதி, சோகம்
6-ல் சந்தோஷம்
7-ல் போசனசுகம், லாபம்
8-ல் பிராணபயம்
9-ல் உதரபீடை, பயம்
10-ல் நிலைபேறு, அதிகாரம்
11-ல் திரவியலாபம், சுகம்
12-ல் கேடு

### செவ்வாய், சனி, இராகு, கேது

1-ல் நிலைகேடு
2-ல் வியாதி, நஷ்டம்
3-ல் திரவியலாபம், ஜயம்
4-ல் விரோதம், சுரம்
5-ல் பலசேதம், கலகம்
6-ல் இலட்சுமீகரம், சுகம்
7-ல் ரோகம், கஷ்டம்
8-ல் மரணபயம், துக்கம்
9-ல் காரியநஷ்டம்
10-ல் அபகீர்த்தி, செலவு
11-ல் லாபம், சுகம்
12-ல் பிணி, துயரம், செலவு

### புதன்

1-ல் அவமானம்
2-ல் சோகம்
3-ல் பயம்
4-ல் சந்தோஷம்
5-ல் குடும்பகலகம்
6-ல் திரவியலாபம்
7-ல் சோகம், கலகம்
8-ல் புத்திவிருத்தி
9-ல் இடையூறு
10-ல் சுகபோகம்
11-ல் சந்தோஷம்
12-ல் அசௌக்கியம்

### வியாழன்

1-ல் விரோதம், பொருளழிவு
2-ல் பணவரவு, சுகம்
3-ல் காரியநஷ்டம்
4-ல் பந்துக்கிலேசம்
5-ல் திரவியலாபம், ஜயம்
6-ல் துயரம்
7-ல் போகம், சுகம்
8-ல் வியாகுலம், பங்கம்
9-ல் அதிகாரம், சம்பத்து
10-ல் நஷ்டம், துக்கம்
11-ல் தனலாபம், சுகம்
12-ல் பிரயாணம், சோகம்

### சுக்கிரன்

1-ல் போகம், லாபம்
2-ல் களத்திரசுகம்
3-ல் அதிகாரம், சந்தோஷம்
4-ல் பந்துக்கூட்டம்
5-ல் லாபம், கீர்த்தி
6-ல் ரோகம், கவலை
7-ல் ஸ்திரீபீடை
8-ல் பிரியம், போகம்
9-ல் திரவியம், தருமம்
10-ல் அவமானம், கலகம்
11-ல் போசனசுகம்
12-ல் சுகலாபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு பாவ பலன்

## முதலாம் பாவ பலன்

### உடலமைப்பு

1. தேக நிறம். (The colour of one's body.)

வினா: மாதாவும் பிதாவும் ஒரே நிறமாக இருக்க, மைந்தர் வேறு நிறமாக உதிக்கவேண்டிய நியாயமென்ன?

விடை: உதயராசியில் புதனும் சனியும் கூடியிருக்க, அல்லது வேறு கிரகம் நோக்காமல் சனி தானே நோக்கியிருக்க, நவாம்ச லக்கினம் புதன் சனி வீடாக, அதில் இராகு இருக்க, அல்லது நவாம்சத்தில் புதனும் சனியும் வீடுமாறியிருக்க உதித்தவர் கறுப்பு நிறமுடையவராயும், மற்றைய கிரகங்கள் கூடியிருக்க அல்லது நோக்க உதித்தவர் கலப்பு (பொது) நிறமுடையவராயும் காணப் பெறுவர்.

2. தலை பருத்தவர். (The bulky-headed.)

வினா: சிலர் பிறக்கும்பொழுதே பெரிய தலையுள்ளவர்களாக (உடம்பும் ஏனைய உறுப்புக்களும் சிறியனவாக இருக்கத் தலை மாத்திரம் பெரிதாக)ப் பிறத்தற்கு நியாயம் யாது?

விடை: இலக்கினத்தின் கடைசிப் பாகத்தில் (4 நாழிகை கழிந்தபின்) ஜனனமானவர் உடம்புக்கேற்ற அமைப்பில்லாத பெரிய தலையை உடையவராகக் காணப்படுவர்.

3. உடல் பருத்தவர். (The fat-bodied.)

வினா: சிலர் பருத்த தேகமுடையவராகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் என்ன?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:** உதயலக்கினம் சராசியாக இருக்க, அதிற் சந்திரன் சுக்கிரன் இராகு இவர்கள் இருக்க உதித்தவர் மிகப் பருத்த தேகமுடையவராக விளங்குவர்.

### சுபாவம்

#### 4. முற்கோபிகள். (The irritable.)

**வினா:** சிலர் முற்கோபிகளாக இருப்பதற்கு நியாயமென்ன?

**விடை:** உதயராசியில் சூரியன், செவ்வாய், கேது இவர்கள் இருக்கப் பிறந்தவர் என்றும் முற்கோபிகளாயிருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 |
| ராகு | முற்கோபி | | வியாழ |
| சந்திர | | | ல சூரிய செவ்வா கேது |
| 5 | 4 | சனி | புதன் சுக்கிரன் |

#### 5. தீராக்கோபிகள். (The avengers.)

**வினா:** சிலர் தீராக்கோபிகளாக இருத்தற்கு நியாயமென்ன?

**விடை:** உதயராசியில் சனி பகை நீசம் அடைந்திருக்க, இருதய ஸ்தானத்தில் (5-ம் இடத்தில்) சூரியன், செவ்வாய், இராகு, கேது இருக்க உதித்தவர் என்றும் தீராக்கோபிகளாயிருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 12 | ல சனி ராகு | 2 | 3 |
| 11 | தீராக்கோபி | | சுக்கிர |
| 10 | | | சூரியன் செவ்வா |
| 9 | 8 | கேது | சந்திர புதன் வியாழ |

#### 6. நயவஞ்சகர். (The hypocrites.)

**வினா:** சில மனிதர் மனத்துட் பகை வைத்துக்கொண்டு வெளியில் நட்புடையார் போல நடித்தற்கு ஏதுவென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:** நவாம்சலக்கினத்தில் சுபக்கிரகமாவது பாபக்கிரகமாவது நீசமாயிருக்கவும், இருதயத்தானத்தில் சனியிருக்க, வாக்குத்தானுதிபதி (2-ம் இடத்ததிபதி) பகைநீசமாகிச் சத்துருத்தானத்தில் இருக்கவும் உதித்தவர் நயவஞ்சகராயிருப்பர்.

## 7. தீயவர். (The wicked.)

**வினு:** சில மனிதர் அழுக்காறு, அவா, வெகுளி, கொடுஞ்சொல் இவைகளை உடையோராய், எஞ்ஞான்றும் மனதில் அனலைமூட்டி, நகைமுகங் காட்டற்குப் பதில் பகைமுகங் காட்டி வாழ்வதற்கு நியாயமென்ன?

**விடை:** உதயலக்கினம் சனியின் ஆட்சிவீடாக, அல்லது உச்ச பகை நீச வீடாக, அதிற் செவ்வாயும் சனியும் கூடியிருக்க, அல்லது இவர்தம் நோக்கம் செலுத்தியிருக்க, இருதயஸ்தானத்தில் சூரியன் இராகு கேதுக்களுடன் இருக்க, நவாம்சத்தில் இலக்கினுதிபதி சத்துருஸ்தானத்திலிருக்க, செவ்வாயும் சனியும் இடம் மாறியிருக்க, இந்நோரத்திற் பிறந்தவரெவரையும் நல்ல மனிதர் என்று நம்பலாகாது.

## 8. நன்றிமறப்பவர். (The ingrates.)

**வினு:** ஒருவர் செய்த நன்றியை மறந்து அதற்குப் பதில் தீமையே புரியும் இயல்புடையார் சிலருளரே. அவர் அவ்வாறு இருத்தற்கு ஏதுவென்ன?

**விடை:** சனி உதயலக்கினுதிபதியாகிச் சத்துருத்தானத்தில் (6-ம் இடத்தில்) அமர, சத்துருத்தானுதிபதி முயற்சித்தானத்தில் (10-ம் இடத்தில்) பாபக்கிரகங்களின் மத்தியிற் சிக்கி அவரால் நோக்கம் பெற, அப்பொழுது பிறந்தவர் எப்போதும் தமக்குந் தீயராய்த் தமக்கு நன்றிபுரிந்தார் மனத்தையும் குன்றச்செய்யும் கொடியராய்த் திரிவர்.

## 9. நித்திய துக்கிகள். (The cheerless.)

**வினு:** சிலர் எந்தவிதமான சந்தோஷகாலத்திலும் துக்கமுகத்தர்களாகத் தோற்றுவதேனே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: இலக்கினதிபதி வக்கிரகதியடைந்து நீசனுகி இரு தயஸ்தானத்திலிருக்க, பாபக்கிரகங்கள் இருபுறத்தும் இருப்ப அவ்வேளை உதித்தவர் மங்கள கல்யாண வைபவ காலங்களினும் மகிழ்ச்சியுறுது தம் கருகிய முகத்தையே காட்டித்திரிவர்.

10. அறிவாளிகளுட் சிலருக்கு இடையே குணபேதமுண்டாதல்.

(The temporary insanity of some wise men.)

வினு: அறிவால் உயர்ந்த அனேக பெரிய மனுஷர்கள் அடிக்கடி குணபேதமுடையவவர்களாக இருப்பதற்குக் காரணம் என்ன?

விடை: அறிவாலுயருதல், உதயலக்கினத்தையும் சந்திர இலக்கினத்தையும் ஆட்சி உச்சம் பெற்ற சுபக்கிரகங்கள் நோக்குவதாலும், உதயராசியில் சுபக்கிரகங்கள் ஆட்சி உச்சம் பெற்றிருப்பதாலும் வரும். குணபேதம், உதயராசியில் செவ்வாய் அல்லது சனி சுபக் கிரகங்களுடன் கலந்திருத்தலினுலும் நோக்குதலினுலும் உண்டாகும்.

---

## இரண்டாம் பாவ பலன்

---

### வாக்கு

11. இனிமையாகப் பேசுபவரும், கடுரமாகப் பேசுபவரும்.

(Those who talk sweetly and those who talk harshly.)

வினு: சிலர் செவிக்கின்பம் விளையும் வண்ணம் இனிமையாகப் பேசுவதற்கும், வேறு சிலர் கர்னகடூரமாகப் பேசுவதற்கும் காரணம் என்ன?

விடை: சந்திர சுக்கிரர் வாக்குத்தானத்தின் அதிபராக அந்தத் தானத்திலேயே இருந்தாலும், வாக்குத்தானதிபன் சுக இன்பத் தானங்களில் (4, 7-ம் இடங்களில்) பரமோச்ச பாகைகளில் இருக்க, வாக்குத்தானத்தில் 4, 7-ம் இடங்கட்கு அதிபர் உச்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதியுடன் இருந்தாலும், வாக்குத்தானாதிபன் 4, 7-ம் இடங்கட்கு அதிபருடன் சேர்ந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் கேட்போர்க்கு இன்பம் சொட்டும் விதம் வார்த்தையாடுவர்.

சூரியன் செவ்வாய் சனி வாக்குத்தானங்கட்கு அதிபராகித் தம்முடைய ஸ்தானத்திலேயே இருந்தாலும், மேற்கூறிய மூவரும் வாகீசர்களாகி 3, 6, 10-ம் இடங்களில் இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் அவசத்தமாகவும், உச்சத்தொனியுடனும், கேட்போர் மனம் புண்படும்வண்ணம் வசனிப்பவராகக் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| செவ்வா | ல | புதன் சுக்கிர | சூரியன் |
| ராகு | இனிமையாகப் பேசுபவர் | | சந்திர வியாழ |
| 10 | | | கேது |
| 9 | 8 | சனி | 6 |

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | 9 |
| சந்திர | கர்ணகடூரமாக வசனிப்பவர் | | கேது |
| ராகு | | | 11 |
| புதன் | சூரியன் செவ்வா சனி | ல சுக்கிரன் | வியாழ |

## 12. சபாசிங்கங்களும் சபைக்கோழைகளும்.

## (The eloquent and the mute.)

**வினு:** சில மனிதர் சபாசிங்கங்கள் (அதிகப்பிரசங்கிகள்) ஆகவும், வேறு சிலர் சபைக்கோழைகள் (பேசாமௌனிகள்) ஆகவும் இருக்கவேண்டியதென்ன?

**விடை:** வாக்குத்தானத்தில் புதன் சூரியன் வியாழன் இவர்கள் ஆட்சி உச்சம் பெற்றிருக்க, வாக்குத்தானாதிபதியும் பூரண பலவானாகி முயற்சித்தானத்திலிருக்கப் பிறந்தவர் சாதுரியவசனிகளாகவும் நாவல்லவர்களாகவும் தெரியப்படுவர். வாக்குத்தானத்தில் ஒரு கிரகமும் இருக்காமலும் நோக்காமலும் நீங்க, வாக்குத்தானாதிபதி வக்கிராஸ்தமன கதியுடன் பகைநீசம் பெற்றுப் பிணித்தானத்தில் (6-ம் இடத்தில்) இருக்கப் பிறந்தவர் வாய்பேசாப் பிராணிகளாக விளங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 13. வேடிக்கையாகப் பேசுபவர்.

(Those who talk humorously.)

**வினு:** சிலர் வேடிக்கை வினோதமாகப் பேசுபவராய் (தற்காலம் நாடகமேடைகளில் ஜனங்களை மகிழ்விக்கும் 'பபூன்'போல்) விகட கவிகளாக இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | 12 | ல |
| 9 | விகட வினோதமாகப் பேசுபவர் | | சந்திர சுக்கிர கேது |
| ராகு | | | சூரியன் வியாழ |
| 7 | 6 | சனி | செவ்வா புதன் |

**விடை:** இன்பத் தானுதிபனும் கேதுவும் கூடி வாக்குத்தானத்தில் இருக்க வாக்குத்தானுதிபன் திரிகோண கேந்திரங்களில் இருந்தாலும், வாக்குத்தானத்தில் சந்திரன் புதன் சுக்கிரன் இவர்களுடன் கூடியிருந்தாலும் இது போன்ற நிலைமையிற் பிறந்தவர் எந்நேரமும் வேடிக்கை வினோதமாகப் பேசுபவராய்க் கேட்போருக்கு விடாநகைப்பைக் கொடுப்பவராய் விளங்குவர்.

### 14. விரைவாகப் பேசுபவர். (Those who talk very swiftly.)

**வினு:** சிலர் வெகு துரிதமாகப் பேசுபவராயிருக்கின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 6 | சனி |
| கேது | துரிதமாகப் பேசுவர் | | சந்திர |
| செவ்வா சுக்கிர | | | ராகு |
| ல சூரியன் புதன் | 12 | வியாழ | 10 |

**விடை:** மேட கர்க்கடக துலாம் மகர இராசிகள் உதயலக்கினத்திற்கும் நவாம்சலக்கினத்திற்கும் வாக்குத்தானமாக அமைய, அதில் சந்திரன் செவ்வாய் சுக்கிரன் தீவிரகதியுடன் இருக்கப் பிறந்தவர் துரிதமாகவே வசனிப்பர்.

### 15 மந்தமாகப் பேசுபவர். (Those who talk very slowly.)

**வினு:** சிலர் தாமதமாக (மந்தகதியாக) வசனிப்பதற்கு நியாயம் யாதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:** சனி வாக்குத்தானாதிபனாக வக்கிரகதியடைந்து எங்கே இருந்தாலும், வக்கிரகதியடைந்த கிரகம் வாக்குத்தானத்தில் இருந்தாலும், அல்லது வாக்குத்தானாதிபனை நோக்கினாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் தாமதமாகவே வசனிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 4 | சனி ராகு | செவ்வா | 7 |
| சந்திர | | | 8 |
| 2 | மந்தகதியாக வசனிப்பவர் | | சூரியன் புதன் |
| ல | 12 | வியாழ கேது | சுக்கிர |

## 16. சமயோசிதமாகப் பேசுபவர்.

(Those who adapt their talk to the circumstances.)

**வினா:** சிலர் சமயோசித பேச்சாளராகக் காணப்படுகின்றனர். இது எதனால்?

**விடை:** வாக்குத்தானாதிபன் யோககாரகனாய் கேந்திரங்களில் உச்சம் பெற்றிருக்க, வாக்குத்தானத்தில் கேது இருக்க, புத்தித்தானாதிபன் நோக்கினாலும், புத்தித்தானாதிபனும் கேதுவும் பலவான்களாக இருந்தாலும் இந்நிலையில் உதித்தவர் சமயோசித பேச்சினாற் சித்தியடைவர்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | சூரியன் | புதன் | 12 |
| செவ்வா ராகு | | | ல வியாழ |
| 7 | சமயோசிதமாகப் பேசுபவர் | | கேது |
| 6 | 5 | சந்திர சனி | 3 |

## 17. இடாம்பிகர். (The ostentatious.)

**வினா:** தம்மைப்பற்றி அதிகம் புகழ்ந்து தாம் செய்யாத அரும் பெரும் செயல்களைச் செய்ததாக இடாம்பிகமாக வசனிப்பார் (ஆயிரப்புழுகர்) சிலர் உண்டு. அவர் அப்படி இருப்பதேன்?

**விடை:** வாக்குத்தானத்தில் சுக்கிரன் பகைநீசம் பெற்றுச் சனி இராகுக்களுடன் கூடியிருக்க, இலக்கினாதிபதியும் வாக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானாதிபதியும் செலவுத்தானத்தில் இருக்க, பாபர் பார்க்கப் பிறந்தவர் பல்லாயிரம் பொய் கூறித் தம்மை வியப்பிப்பர்.

### 18. தம்மைத் தாமே திட்டுபவர்.

### (Those who always blame themselves.)

**வினா:** சிலர் தம்மைத் தாமே திட்டுபவராகக் காணப்படுகின்றனர். இது எதனால்?

**விடை:** உதயலக்கினாதிபனேனும் வாக்குத்தானாதிபனேனும் வக்கிராஸ்தமன கதியுடனாயினும் நீசனாகவாயினும் இருந்தாலும், உதயலக்கினத்திலேனும் வாக்குத்தானத்திலேனும் நீசக் கிரகங்கள் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் எவ்விஷயத்திலும் தம்மைத் தாமே நொந்து திட்டி வைதுகொள்வர்.

| | | | |
|---|---|---|---|
| ல | சனி<br>ராகு | 3 | 4 |
| 12 | தம்மைத் தாமே<br>திட்டுபவர் | | 5 |
| 11 | | | சந்திர |
| 10 | 9 | கு - செ<br>புத - வி<br>சுக்-கே | 7 |

### 19. தமது துன்பத்தையே பிறருக்கு முறையிட்டுத் திரிபவர்.

### (Those who always talk about their own misfortunes.)

**வினா:** சிலர் (பிறருடைய விஷயங்களைச் செவிசாய்க்காது) தம்முடைய துன்பங்களையே பிறருக்குச் சொன்னவண்ணமாக இருக்கின்றனர். இதற்குக் காரணம் யாதோ?

**விடை:** உதயலக்கினம், வாக்குத்தானம் இவற்றின் அதிபர் நீசராகி 5, 8, 9, 10, 12-ம் இடங்களில் இருந்தாலும், 6, 8-ம் இடத்ததிபர் பகைநீசராகி வாக்குத்தானத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் தமது துன்பத்தையே பிறருக்குச் சொல்லித்திரிவர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன்<br>புதன் | 3 | செவ்வா | 5 |
| ல<br>சுக்கிரன்<br>சனி | பிறர் சொல்வதைக் கேளாமல்<br>தம் துன்பங்களை எடுத்துச்<br>சொல்லுபவர் | | கேது |
| வியாழ<br>ராகு | | | 7 |
| 11 | 10 | 9 | சந்திர |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. பிறர் குற்றத்தைத் தூற்றித்திரிபவர்.
## (The slanderers.)

**வினு:** சிலர் தினமும் பிறருடைய குற்றங்களையே எடுத்துத் தூற்றித்திரிகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** 2, 5-ம் இடங்களுக்கு அதிபர் இருவரேனும் இருவரில் ஒருவரேனும் நீசராகி, 1, 2, 5, 9-ம் இடங்களில் இருந்தாலும், சனி 1, 2, 5-ம் இடங்களுக்கு அதிபஞகி 2, 3, 5, 6, 11, 12-ம் இடங்களில் பகைநீசஞக இருந்தாலும், வாக்குத்தானத்தில் சனியும் புத்தித்தானத்தில் செவ்வாயும் பகைநீசராகி இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் எந்நாளும் பணம் அழன்று பிறர் குற்றம் தெரிந்து, அவைகளை எடுத்துத் தூற்றிக் குவித்தவண்ணமாகவே இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 4 | சனி | சூரியன் வியாழ கேது | புதன் சுக்கிரன் |
| 3 | பிறரது குற்றங்களையே எடுத்துத் தூற்றுபவர் | | செவ்வா |
| 2 | | | 9 |
| ல | சந்திர ராகு | 11 | 10 |

## 21. கபடமாகப் பேசுபவர். (Those who talk deceitfully.)

**வினு:** சிலர் கபடமாகப் பேசுபவராக (வஞ்சனைமொழிகளால் வசனிப்பவராக)க் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** புத்தித்தாஞதிபன் சனியாகி வாக்குத்தானத்தில் இருந்தாலும், வாக்குத்தாஞதிபன் நீசஞகி இருந்தாலும், புத்தித்தானத்தில் சனி இருக்க வாக்குத்தாஞதிபன் நீசஞக இருந்தாலும், 10-ம் இடத்ததிபன் அல்லது உதயலக்கினுதிபன் சனியாகி வாக்குத்தானத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் ஜனித்தவர் வஞ்சனை வார்த்தைகளால் உரையாடுவர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | புதன் சுக்கிரன் | சூரியன் | 9 |
| 5 | வஞ்சனை மொழிகளால் வசனிப்பவர் | | செவ்வா கேது |
| ராகு | | | வியாழ |
| 3 | சந்திர சனி. | ல | 12 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. பொய் பேசுபவர். (The liars.)

**வினா:** பல மனுஷர் தினமும் பொய்பேசிப் புறங்கூறிப் பொழுதுபோக்குகின்றார்களே. இதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் | 4 | 5 | சந்திர |
| சுக்கிரன் சனி ராகு | அதிகமாகப் பொய் பேசுபவர் | | 7 |
| ல | | | கேது |
| செவ்வா வியாழ | 11 | 10 | 9 |

**விடை:** வாக்குத்தானத்தில் (2-ம் இடத்தில்) சுக்கிரன், சனி இராகுக்களுடன் கூடியிருக்க, வாக்குத்தானுதிபதி நீசனுகிச் செலவுத்தானத்தில் (12-ம் இடத்தில்) இருக்கப் பிறந்தவர் பொய்பேசுதலையும் புறங்கூறுதலையுமே தமக்கு இலட்சியமாக உடையர்.

## 23. கலகப்பிரியர். (The quarrelsome)

**வினா:** ஆண் பெண் இருதிறத்தார்களுள்ளும் சிலர் தினமும் கலகஞ்செய்து காலங்கழிப்பதேதனுே?

**விடை:** வாக்குத்தானத்தில் செவ்வாய் பகைநீசனுகி அமர, வாக்குத்தானுதிபதியும் இலக்கினுதிபதியும் கூடிச் சத்துருத்தானத்தில் பாபர்நோக்கம் பெற்றிருக்கப் பிறந்தவர் எப் பாலாராயினும் அவர் சண்டையிடும் குணமுடையவரே.

## 24. ஓட்டைவாயர். (The betrayers of secrets.)

**வினா:** தமக்குப் பிறிதொருவர் சொல்லும் அந்தரங்கங்களை அப்படியே வெளியிற் கொட்டிவிடும் உளறுவாயராகச் சில மனிதர் வாழ்வதேதனுே?

**விடை:** வாக்குத்தானுதிபதி சுக்கிரனுகிப் புத்தித்தானுதிபதி (5-ம் இடத்ததிபதி)யுடன் கூடிச் செலவுத்தானத்தில் பலங்குன்றி இருக்கவும், வாக்குத்தானமும் புத்தித்தானமும் சரராசிகளாகி அவைகளில் செவ்வாய் இருக்கவும் பிறந்தவரிடத்தில் உள்ள எந்த இரகசியங்களும் செலவாகியேவிடும்.

## 25. யோசிக்காது பேசிவிட்டு வருந்துபவர்.

(Those who talk thoughtlessly and repent afterwards.)

**வினா:** சிலர் ஆலோசியாமற் பேசிவிட்டுப் பின் துன்பப்படுகின்றனர். இது எதனுல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | 12 | ல |
| 9 | ஆலோசியாமற் பேசுபவர் | | செவ்வா சனி ராகு |
| கேது | | | சூரியன் புதன் |
| 7 | சந்திர | வியாழ | சுக்கிரன் |

**விடை:** புத்திதானுதிபன் நீச வக்கிராஸ்தமன கதி அடைந்து 3, 6, 8, 11-ம் இடங்களில் இருக்க, 1, 6, 10, 12-ம் இடங்கட்கு அதிபர் வாக்குத்தானத்தில் இருந்தாலும், வாக்குத்தானத்தில் சனி, செவ்வாய், சூரியன் பகைநீசராகி இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் ஆராய்வின்றி வார்த்தையாடித் தகாத மொழி கூறிச் சொல்லிழுக்குப்பட்டுப் பின் வருந்துவர்.

## 26. பேச்சுத் தவறுதவரும், பேச்சுத் தவறுபவரும்.

(Those who keep their promises,

and those who break their promises.)

**வினு:** சிலர் உதாரமான வார்த்தை பேசுபவராய் (ஒருபோதும் பேசினபேச்சை மாற்றுதவராய்) இருப்பதற்கும், வேறு சிலர் பேசின பேச்சை நிறைவேற்றமாட்டாதவராய் வழுவழுப்பான பேச்சை உடையராயிருப்பதற்கும் காரணம் யாது?

**விடை:** சூரியன் புதன் வியாழன் வாக்குத்தானத்துக்கு அதிபராகித் திரிகோண கேந்திரங்களிலேனும் தங்கள் ஸ்தானத்திலேனும் உச்சம் ஆட்சி முதலியவற்ருல் உன்னதகதி அடைந்திருந்தாலும், வாக்குத்தானுதிபன் பலவானுக இருக்க வாக்குத்தானத்தில் உச்சக் கிரகம் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் ஒருபோதும் பேச்சுமாருத உதாரகுண புருஷராக விளங்குவர்

வாக்குத்தானுதிபன் நீச வக்கிராஸ்தமன கதியுடன் 3, 6, 8, 12-ம் இடங்களில் இருந்தாலும், வாக்குத்தானத்திற் சந்திரன் சுக்கிரன் சனி இவர்கள் பலங்குன்றி இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் பேசினபேச்சை நிறைவேற்றமாட்டாதவராய் வழுவழுப்பான பேச்சுடையராய் விளங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வியாழ சுக்கிரன் | ராகு | 4 | 5 |
| ல சூரியன் புதன் | பேசினபேச்சு மாறாதவர் | | 6 |
| 12 | | | 7 |
| சந்திர | செவ்வா | கேது | சனி |

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 5 | ராகு |
| சந்திர செவ்வா சுக்கிரன் | பேசின பேச்சை மாற்றுகிறவர் | | சனி |
| ல புதன் | | | 8 |
| சூரியன் வியாழ கேது | 11 | 10 | 9 |

## 27. சொல்லொன்றும் செயலொன்றும் உடையவர்.

(Those who do not practise what they preach.)

**வினா:** சிலர் போதனை ஒன்றும் சாதனை வேறொன்றுமாக (சொல்வதொன்று செய்வதொன்றாக) இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| ல சுக்கிரன் | சூரியன் செவ்வா கேது | புதன் | 4 |
| 12 | சொல் ஒன்று செயல் ஒன்றாக நடிப்பவர் | | 5 |
| சந்திர வியாழ | | | 6 |
| சனி | 9 | ராகு | 7 |

**விடை:** வாக்குத்தானாதிபன் தன்னுடைய ஸ்தானத்திலேனும் திரிகோணம் கேந்திரம் கீர்த்திஸ்தானம் இவைகளிலேனும் உச்சகதியுடன் பலவானாக இருக்க, உதயலக்கினாதிபனும் புத்தித்தானாதிபனும் பலவீனராகி 3, 6, 8, 12-ம் இடங்களில் இருக்கப் பிறந்தவர் சொல்வதொன்று செய்வதொன்றாக (வேஷம்பூண்டு) நடிப்பர்.

## 28. அற்பமாகப் பேசி அதிகஞ் செய்பவர்.

(Those who do more than what they promise to do.)

**வினா:** சிலர் அற்பமாகப் பேசிவிட்டு (ஒன்றும் செய்ய இயலாதவர்போல் அபிநயித்து) அரிய பெரிய கருமங்களை (நன்மைகளை) நிறைவேற்றிவிடுகின்றனர். இது எதனால்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரியன் செவ்வா | சந்திர சுக்கிரன் | சனி |
| கேது | பேசாதிருந்து பெரிய காரியம் செய்து முடித்தனர் | | 12 |
| 6 | | | ல ராகு |
| 5 | 4 | வியாழ | 2 |

**விடை:** வாக்குத்தானதிபதி நீச வக்கிராஸ்தமன கதியுடன் 3, 6, 8, 12-ம் இடங்களில் இருக்க, வாக்குத்தானம் வெறும் வீடாக, முயற்சித் தானதிபன் கேந்திர கோணம் கீர்த்தித்தானம் இவைகளில் உச்சமுதலியவற்றால் உன்னதகதியுடன் இருந்தாலும், வாக்குத்தானமும் வாகீசனும் நிஷ்பலமாக, உதயலக்கினாதிபனும் முயற்சித்தலைவனும் பூரணபலவான்களாக இருந்தாலும், முயற்சித் தானத்தில் சூரியன் வியாழன் சனி பூரணபலவான்களாக இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் அற்பமாகப் பேசி (அல்லது ஒன்றும் பேசாதிருந்து) அரும் பெருங் கருமங்களை (நன்மைகளை) ஆற்றி முடிப்பர்.

## 29. அதிகம் பேசி அற்பமுஞ் செய்யாதவர்.

(Those who promise to do many things but do nothing.)

**வினா:** சிலர் அதிகமாகப் பேசிவிட்டு எற்றில் ஒரு காரியமும் செய்துமுடிக்க இயலாதவராய் (வீண்பேச்சாளராய்) இருப்பதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| சனி | 11 | சந்திர | ல |
| 9 | அதிகம் பேசி ஒன்றும் செய்யாதவர் | | கேது சுக்கிர |
| வியாழ ராகு | | | சூரியன் செவ்வா புதன் |
| 7 | 6 | 5 | 4 |

**விடை:** வாக்குத்தானத்தில் சுக்கிரன் அல்லது கேது இருக்க, வாக்குத்தானதிபன் தன்னுடைய ஸ்தானத்திலேனும் செலவுத் தானத்திலேனும் உச்சகதியுடன் அமர, முயற்சித்தானதிபன் 3, 6, 8, 12-ம் இடங்களில் பகை நீச வக்கிராஸ்தமன கதியுடன் இருந்தாலும், வாக்குத்தானத்தில் செலவுத்தானதிபன் இருக்க முயற்சித் தானதிபன் முற்கூறியவாறு இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் தாம் எல்லையில்லாத கருமங்களை இயற்றி முடிப்பதாகச் சொல்லி, எற்றில் ஒரு கருமமுஞ் செய்ய இயலாதவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

### 30. கல்விமான்கள். (The learned)

**வினா:** சிலர் கல்விப்பகுதியில் (விசேஷமாகக் கணிதசாஸ்திரத்தில்) திறமைமிக்கோராய் இருத்தற்குக் காரணம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| வியாழ சனி | 11 | 12 | ல கேது |
| 9 | | | சூரியன் புதன் சுக்கிரன் |
| 8 | கல்விமான் | | செவ்வா |
| ராகு | 6 | சந்திர | 4 |

**விடை:** வாக்குத்தானதிபதி புத்தித் தானத்திலும் புத்தித் தானதிபதி வாக்குத் தானத்திலுமாக இடம்மாறிப் பலவான்களாக இருந்தாலும், வாக்குத்தானத்தில் புதன் ஆட்சி உச்சம் பெற்றிருக்க, புத்தித்தானதிபதி லாபத்தானத்தில் பலவானக இருந்தாலும் இந்நிலையிற் பிறந்தவர் கல்விப்பகுதியில் (கணிதத்தில், புத்தியில், வாக்குவல்லபத்தில்) தலைமைபெற்று விளங்குவர்.

### 31 பிறருக்குக் கற்பிக்க இயலாத கல்விமான்கள்

### (The ienxpressive learned.)

**வினா:** கல்வியிற் சிறந்தவர் என்று கருதப்படுவோருள்ளும் சிலர் தாம் கற்றதை மற்றவருக்குப் புகட்டும் வன்மையில்லாதவராய் "குடத்துள் தீபம்" போல் இருப்பதேனோ?

**விடை:** முயற்சித்தானதிபதி 3, 6, 8 இந்த ஸ்தானங்களில் இருந்தாலும், கல்வித்தானத்தில் (2-ம் இடத்தில்) இருந்த கிரகம் பலவீனப்பட்டாலும் இந்நிலையிற் பிறந்தவர் தாம் கற்றதை மற்றை யாருக்குக் கற்பிக்கும் ஆற்றலில்லாதவராகக் காணப்படுவர்.

### 32. கல்லாதவர். (The illiterate.)

**வினா:** சிலர் கல்வி இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: கல்வித் தானாதிபதி (2-ம் இடத்ததிபதி)யும் புதனும் கூடி நீசவக்கிராஸ்தமன கதியுடன் மறைவுத்தானங்களில் (6, 8-ம் இடங்களில்) இருக்கப் பிறந்தவர் கல்விப்பகுதியிற் சிறிதேனும் பயிற்சியில்லாதவராகவும், கல்விக்கு யோக்கியதை இல்லாதவராக (மூடராக)வும், வாக்குவல்லபம், புத்தி இல்லாதவராகவும் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் | செவ்வா சுக்கிரன் | வியாழ | சந்திர |
| சனி | கல்வி இல்லாதவர் | | ராகு |
| கேது | | | ல |
| 5 | 4 | 3 | 2 |

## 33. சங்கீதசாஸ்திர நிபுணர். (The musicians.)

**வினா:** சிலர் சங்கீதசாஸ்தரத்தில் நிபுணராகித் தேசங்கடோறும் சென்று பொருளும் புகழும் சம்பாதிப்பதன் நியாயம் என்ன?

**விடை:** வாக்குத்தானத்தில் புதனும் சுக்கிரனும் கூடிப் பலவான்களாக இருக்க, இலக்கினாதிபதியும் வாக்காதிபனும் சேர்ந்து முயற்சித்தானத்தில் பூரணபலமாக இருக்கப் பிறந்தவர் எப்போதும் சங்கீதகலா வல்லபர்களாகப் புகழ்பெற்று விளங்குவர்.

## 34. நியாயசாஸ்திர நிபுணர். (The logicians and the lawyers.)

**வினா** சிலர் நியாயசாஸ்திரத்தில் சமர்த்தராய் (நியாயதுரந்தரர், நியாயாதிபதிகளாய்) விளங்குவது எதனால்?

**விடை:** வாக்குத்தானாதிபதி புத்தித் தானத்திலும் புத்தித் தானாதிபதி வாக்குத்தானத்திலும் பரிவர்த்தனமாகிப் பலவான்களாக இருக்க, வாக்குத்தானத்தில் முயற்சித்தானாதிபதியும் புதனும் பூரண பலவான்களாக இருக்கப் பிறந்தவர் தர்க்கசாஸ்திர பண்டிதராகவும், நியாயதுரந்தரராகவும், நியாயாதிபதிகளாகவும், அதிதீவிர மதியூகிகளாகவும் விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| கேது | 11 | சனி | ல சூரியன் புதன் |
| 9 | நியாயதுரந்தரர் | | வியாழ சுக்கிரன் |
| 8 | | | செவ்வா |
| 7 | 6 | சந்திர | ராகு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. மந்திரசாஸ்திர நிபுணர். (The magicians.)

**வினா:** சிலர் மந்திரசாஸ்திரத்தில் சித்திபெற்று விளங்குதல் எதனால்?

**விடை:** புத்தித்தானத்தில் சூரியன் இலக்கினாதிபதியுடன் கூடி ஆட்சி உச்சம் பெற்று அமரவும் வாக்குத்தானாதிபதி லாபத்தானத்தில் இருக்கவும் பிறந்தவர் சிறந்த மந்திரவாதிகளாக விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| 4 | சூரியன் புதன் | சந்திர சுக்கிரன் | செவ்வா வியாழ |
| ராகு | மந்திரவாதி | | 8 |
| 2 | | | கேது |
| ல | 12 | சனி | 10 |

## 36. வைத்தியசாஸ்திர நிபுணர். (The physicians.)

**வினா:** சிலர் வைத்தியசாஸ்திரத்தில் மகிமையுற்று விளங்குகிறார்கள். அது எதனால்?

**விடை:** புத்தித்தானாதிபதி முயற்சித்தானத்திலும் முயற்சித்தானாதிபதி புத்தித்தானத்திலும் பரிவர்த்தனமாயிருக்கவும், புத்தித்தானத்தில் வாக்குத்தானாதிபதி அல்லது புதனுடன் சனி செவ்வாய் பலம்பொருந்தி இருக்கவும் பிறந்தவர் வைத்தியசாஸ்திரத்தில் வல்லுனராகவும், துணிகரமான நெஞ்சுடன் இரணசிகிச்சை புரிவதில் சமர்த்தராகவும் விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| 4 | புதன் | சூரியன் | வியாழ சுக்கிரன் ராகு |
| 3 | வைத்தியர் | | 8 |
| 2 | | | 9 |
| ல சனி கேது | 12 | சந்திர | செவ்வா |

### நேத்திரம்

## 37. விசாலமான கண்களை உடையவர்.

(Those who have large eyes.)

**வினா:** சிலர் விசாலமான கண்களை உடையவராக இருப்பதற்குக் காரணம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: நேத்திரத் தானத்தில் சுபக்கிரகம் இருக்க, அந்தத் தானாதிபதி வியாழனுடன் கூடித் தசம கேந்திரத்தில் (10-ம் இடத்தில்) இலக்கினாதிபனுடன் இருக்கப் பிறந்தவர் பெரிய விசாலமான கண்களையுடையவராக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | சுக்கிரன் | சூரியன் |
| 4 | விசாலமான கண்களை உடையவர் | | புதன் கேது |
| ராகு | | | செவ்வாய் வியாழ |
| சந்திர | ல | சனி | 11 |

## 38. செங்கண்ணர். (The red-eyed.)

வினா: சிலர் செங்கண்ணராக விளங்குகின்றனர். இது எதனால்?

விடை: நேத்திரத்தானம் செவ்வாயின் வீடாக, அதில் சூரியன் இருக்க, சூரியன் வீட்டில் செவ்வாயிருக்க, இவரை மற்றையோர் நோக்காதிருக்கப் பிறந்தவர் செங்கண்ணராக இருப்பர்.

## 39. சுழல்கண்ணர். (The whirling-eyed.)

வினா. சிலர் சுழல்கண்ணராக விளங்குதல் எதனால்?

விடை: நேத்திரத்தானம் சரராசியாயிருக்க, அதில் நேத்திராதிபனும் செவ்வாயும் இருக்கப் பிறந்தவர் எந்நேரமும் சுழன்று கொண்டிருக்கும் விழிகளை உடையராய் விளங்குவர்.

## 40. மிருகக்கண்ணர். (The animal-eyed.)

வினா: சிலர், மாடு, ஆடு, நாய், பூனை, கிளி, குரங்கு முதலாம் விலங்கினங்களின் கண்களை உடையராய் விளங்குதற்கு நியாயம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: இராசி நிலையிலும் நவாம்சநிலையிலும் நேத்திரத்தாளுதிபதி (2-ம் இராசிக்கதிபதி) நீசத்துவமடைந்து பகைவரான சனி செவ்வாய்களுடன் இருக்க, நேத்திரத் தானத்திலும் (2-ம் இடத்திலும்) நீசக்கிரகம் இருக்கப் பிறந்தவர் மிருகநேத்திரங்களை உடையவராயிருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| ல | சனி | சூரியன் வியாழ கேது | புதன் சுக்கிரன் |
| 12 | ஆட்டுக்கண்ணர் | | செவ்வா |
| 11 | | | சந்திர |
| 10 | ராகு | 8 | 7 |

## 41. நீர்வடியும் கண்களை உடையவர்.

(Those who have tear-stained eyes.)

வினு: சிலர் எந்நேரமும் நீர்வடியும் கண்களை உடையவராய் இருப்பதற்கு நியாயம் யாது?

விடை: நேத்திரத்தானத்தில் (2-ம் இடத்தில்) சந்திர சுக்கிரர் பகைநீசராய்ப் பாபக்கிரக நோக்குடன் இருந்தால் இவ்வெல்லையிற் பிறந்தவர் தினமும் கண்ணில் நீர்வடிபவராகக் காணப்படுபவர்.

| | | | |
|---|---|---|---|
| 9 | சனி ராகு | செவ்வா | 12 |
| 8 | நீர்வடியுங் கண்களை உடையவர் | | ல |
| 7 | | | சந்திர சுக்கிரன் |
| 6 | 5 | சூரி. புத வியாழ கேது | 3 |

## 42. இராக்குருடர். (The night-blind.)

வினு: சிலர் இராக்காலத்தில் கண்ணொளி இல்லாதவர்களாய், மாலைக்கண்ணராக இருத்தற்கு நியாயம் என்ன?

விடை: நேத்திரத்தாளுதிபதி (2-ம் இராசிக்குரியவன்) 3-ம் 6-ம் இடமான மறைவுத்தானங்களில் இருக்க, அபாபக்கச் சந்திரனும் பலங்குறைந்த சுக்கிரனும் நேத்திரத்தானத்தில் இருக்கப் பிறந்தவர் மாலைக்கண்ணராக விளங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. ஒரு கண் குருடானவர்.

(Those who have one of their eyes blind.)

**வினு:** சிலருக்கு ஒரு கண் பொட்டைக்கண்ணுக இருப்பதற்கு நியாயம் யாது?

**விடை:** நேத்திரத்தானத்தில் அதிகம் பாபக் கிரகங்கள் இருக்க, அவர்களைச் சனி நோக்கினுல் இந்நேரத்தில் ஜனனமானவர் பொட்டைக்கண்ணராக விளங்குவர்.

## 44. குருடர். (The blind.)

**வினு:** சில மனுஷர் குருடர்களாகப் பிறத்தற்கு நியாயம் யாது?

**விடை:** நேத்திரத்தானுதிபதி (2-ம் இடத்ததிபதி) நோய்த்தானத்தில் (6-ம் இடத்தில்) துர்ப்பலமாகி அமர, நேத்திரத்தானத்தில் சூரியன் சந்திரன் சுக்கிரன் கூடி நீசத்துவம் அடைந்து பாபர்நோக்கப் பிறந்தவர் குருடர்களாயிருப்பர்.

## 45. நித்திரைப்பிரியர். (The sleepy.)

**வினு:** சிலர் எந்நேரமும் நித்திரைமயமாய் (தூங்குமூஞ்சிகளாக) சோம்பித்திரிவது எதனுல்?

**விடை:** நேத்திரத்தானுதிபதியும் சனியும் வக்கிராஸ்தமன கதி அடைந்து முயற்சித்தானுதிபதியுடன் கூடிச் சயனத்தானத்தில் (12-ம் இடத்தில்) ஆட்சிப்பெற்றிருப்பின் அவர் எந்நேரமும் (கண்களில்) தூக்கக்குறி உடையவராயிருப்பர்.

## 46. கண்ணூறு, நாவூறு.(The blight of the eye and the tongue.)

**வினு:** திருஷ்டிதோஷம், வாக்குத்தோஷம் (கண்ணூறு, நாவூறு) செய்பவர் என்று சிலர் இருக்கும் விதம் என்ன?

**விடை:** நேத்திரத்தானுதிபதி பகை நீசம் பெற்றுச் சத்துருத்தானத்தில் இருக்க, சத்துருத்தானுதிபதி பாபக்கிரகமாய் நேத்திரத்தானத்தில் இருக்கப் பிறந்தவர் இவ்வித தோஷங்களை உடையவராயிருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 47. முகத்திற் கெட்டநாற்றம் உடையவர்.

(Those who have an offensive smell in their faces.)

**வினா:** சிலர் முகத்திற் கெட்டநாற்றம் உடையவராயிருக்கின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** செவ்வாய் உதயராசியிலும் சுக்கிரன் 6-ம் இடத்திலுமாக இருந்தாலும், சனியும் இராகுவும் நோக்கினாலும், 2-ம் இடத்திற்கு அதிபதி பாபக்கிரக நோக்குடன் கூடிச் சனிநவாம்சத்தில் பலவீனனாக இருந்தாலும் இவ்வாறான நேரத்தில் உதித்தவர் முகத்தில்(வாயில்) எந்நேரமும் அசுத்தநாற்றம் உடையவராயிருப்பர்.

### 48. வசீகர சக்தி உடையவர். (The magnetic.)

**வினா:** சிலர் வாக்குவசீகரம், நோக்குவசீகரம், மனோவசீகரம் இவைகளிற் சமர்த்தராய் விளங்குகின்றனர். இது எதனால்?

**விடை:** 2-ம் இராசிநாதனாகிய வாக்காதிபனும் 5-ம் இராசிநாதனாகிய புத்திமுதல்வனும் அவ்வத்தானங்களில் ஆட்சிசெய்ய, 7-ம் 10-ம் இராசிக்குரியவர் இவ்விருவருடனும் சம்யோகமாயிருக்கப் பிறந்தவர் தங்கள் வசிகாசக்தியினால் எத்தகையார் மனத்தையும் கவரும் ஆகர்ஷணசக்தி உடையோராய் (தற்காலம் ஹிப்னடிசம் மெஸ்மரிசம் இவைகளில் வல்லுனராய்) விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| வியாழ | ராகு | 4 | சூரியன் புதன் |
| ல செவ்வா | வசீகர சக்தி உடையவர் | | சந்திர சுக்கிரன் |
| 12 | | | 7 |
| 11 | 10 | கேது | சனி |

## தனம்

### 49. ஐசுவரியவான்கள். (The fortunate.)

**வினா:** பிறவிதொட்டு ஐசுவரியவான்களாகச் சில மனிதர் விளங்குவது எதனால்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:** இலக்கினாதிபதி பாக்கியத்தானத்தில் (9-ம் இடத்தில்) பலவானாக இருக்க, பாக்கியத்தானாதிபதி தனத்தானத்திலும் (2-ம் இடத்திலும்) தனத்தானாதிபதி பாக்கியத்தானத்திலும் ஆட்சி உச்ச முதலான பூரணபலம் பொருந்தியிருக்கப் பிறந்தவர் குபேரனை யொத்த செல்வப்பெருக்கை உடையவராவர்.

## 50. அதிர்ஷ்டசாலிகள். (The lucky.)

**வினா:** சிலருக்குப் பணப்புதையல், (பொன்னம்பர், அரக்கம்பர், வலம்புரிச்சங்கு, யானைத்தந்தம், இரத்தினக்கற்கள் முதலான) கடல்படுதிரவியம், காடுபடுதிரவியம், மலைபடுதிரவியம், நாடுபடுதிரவியம் இவை போன்ற அதிர்ஷ்டப் பொருட்கள் அகப்படுவதற்கு நியாயம் யாது?

**விடை:** இலாபத்தானாதிபதி (11-ம் இடத்திற்கு அதிபதி) உதயலக்கினத்திலும், உதயலக்கினாதிபதி தனத்தானத்திலும் (2-ம் இடத்திலும்) தனத்தானாதிபதி லாபத்தானத்திலுமாக இடம்மாறி இருக்கப் பிறந்தவர் நானாவழிகளாலும் அதிர்ஷ்ட லாபங்களை அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 10 | சந்திர | கேது | ல செவ்வாய் சுக்கிரன் |
| 9 | அதிர்ஷ்ட லாபம் அடைந்தவர் | | புதன் |
| 8 | | | சூரியன் |
| சனி | வியாழ ராகு | 5 | 4 |

## 51. இலக்ஷாதிபதிகளும், கோடீசுவரர்களும்.

## (The millionaires.)

**வினா:** சிலர் இலட்சாதிபதியாக இருப்பதற்கும் வேறு சிலர் கோடீசுவரராக இருப்பதற்கும் காரணம் யாதோ?

**விடை:** முயற்சித்தானாதிபதி இருந்த அம்சநாதன் தனத்தானத்தில் (2-ம் இடத்தில்) இருந்தால் இதில் பிறந்தவர் இலட்சாதிபதிகளாகவும், உதயலக்கினாதிபதியும் பாக்கியத்தானாதிபதியும் கூடி லாபத்தானத்தில் (11-ம் இடத்தில்) பலவான்களாக் இருக்கப் பிறந்தவர் கோடீசுவரராகவும் இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 52. தமது முயற்சியாற் செல்வரானவர். (The self-made rich.)

**வினா:** சிலர் தாமாகவே அரும்பெரும் பாடுபட்டுப் பொருள் தேடிச் செல்வராகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** எல்லாக் கிரகங்களிலும் பார்க்க இலக்கினாதிபதியே பூரணபெலவானாகித் திரிகோண கேந்திரங்களில் தனத்தானாதிபதியோடும் வியாழனோடும் கூடி இருக்கப் பிறந்தவர் பிறிதொருவருடைய சகாயமுமின்றித் தாமே தமது உடம்பை வருத்திப் பொருள் சம்பாதிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| ல | கேது | 3 | 4 |
| 12 | தமது பிரயாசத்தாற் செல்வரானவர் | | 5 |
| 11 | | | 6 |
| சந். செ. வி. சுக். சனி | 9 | சூரியன் புதன் ராகு | 7 |

## 53. உத்தியோகச் செல்வர். (The rich officers of Government.)

**வினா:** சிலர் இராஜாங்கத்தில் உயர்தர உத்தியோகம் பெற்று, அதனாற் செல்வர்களாகத் திகழ்வதற்கு நியாயம் என்ன?

**விடை:** இலக்கினாதிபதி பூரணபலத்துடன் பாக்கியத்தானாதிபதியுடன் கூடியிருக்க, தனத்தானாதிபதி சூரியனுடைய தொடர்புடன் கூடி முயற்சித்தானத்தில் இருக்க, லாபத்தானாதிபதி (11-ம் இடத்ததிபதி) பாக்கியத்தானத்தில் (9-ம் இடத்தில்) உச்சம் பெற்றிருக்கப் பிறந்தவர் உத்தியோகத்தில் உயர்ந்தும் செல்வத்திற் சிறந்தும் விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கிர | சூரியன் செவ்வா புதன் | ராகு | 12 |
| 8 | உத்தியோகச் செல்வர் | | ல சந்திர வியாழ |
| 7 | | | 2 |
| சனி | கேது | 4 | 3 |

## 54. தரகுச் செல்வர். (The rich brokers.)

**வினா:** சிலர் தரகுபேசுதலையே தொழிலாகக் கொண்டு (பேரம் பேசுதலினால்) அதிக செல்வர்களாக (இலட்சாதிபதிகளாக) விளங்குகின்றனர். இதற்குக் காரணம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: 2-ம் இராசிக்கதிபதியான வாக்குத் தலைவன் 11-ம் இடமான லாபத்தானத்தில் இருக்க, அவ் விலாபத்தானுதிபதி 5-ம் இடத்ததிபனுன புத்தித் தானுதிபதியுடன் கூடி வாக்குத் தானத்தில் இருக்கப் பிறந்தவர் சொற்பமான (தரகுப்) பேச்சினுல் அதிக லாபம் அடைந்து இலட்சாதிபதிகளாக விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | சந்திர | 7 |
| சூரியன் ராகு | தரதுச் செல்வர் | | வியாழ |
| செவ்வா புதன் சுக்கிரன் | | | கேது |
| ல | 12 | சனி | 10 |

## 55. பகைவராற் செல்வரானவர்.

(Those who acquire wealth through their enemies.)

வினு: சிலர் சத்துருக்கள்மூலம் பொருட்செல்வராகின்றனர். இதற்குக் காரணம் யாது?

விடை: சத்துருத் தானுதிபதி (6-ம் இடத்ததிபன்) உதய லக்கினத்தில் இருக்க, உதயலக்கினுதிபதி தனத்தானுதிபதியுடன் கூடி அல்லது அவனுல் நோக்கப் பெற்றுத் திரிகோண கேந்திரங்களில் பலவானுக இருக்கப் பிறந்தவர் சத்துருக்களை வென்று அவர் மூலம் அதிர்ஷ்டலாபம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ்வா | 4 | வியாழ |
| ல சந்திர | பகைவராற் | | 6 |
| 12 | செல்வரானவர் | | 7 |
| சூரியன் புதன் சுக்கிரன் | 10 | சனி | கேது |

## 56. பிறர் பொருளை ஏற்காதவர்.

(Those who do not enjoy others' property.)

வினு: சிலர் பிறர் பொருளை ஒருபோதும் ஏற்று அனுபவிக்காதவராய்த் தமது முயற்சியைக் கொண்டே பணம் தேடுபவராய் இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 11 | 12 | ல<br>புதன் | சூரியன்<br>சுக்கிரன் |
| செவ்வா<br>சனி<br>ராகு | பிறர் பொருளை<br>விரும்பாதவர் | | 3 |
| 9 | | | சந்திர<br>கேது |
| வியாழ | 7 | 6 | 5 |

விடை: உதயலக்கினாதிபதி தனத்தானத்தில் (2-ம் இடத்தில்) இருக்க, தனத்தானாதிபதி ஒருவருடைய தொடர்புமின்றி உதயலக்கினத்தில் பரிவர்த்தன யோககாரகனாக இருக்க, முயற்சித்தானாதிபதி தன்னுடைய தானத்தில் ஆட்சிபுரிந்தாலும், உதயலக்கினமும் முயற்சித்தானமும் ஸ்திரராசிகள் (இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம்) ஆக இருக்க, இவ்விரு இராசிநாதரும் தத்தம் தானங்களில் ஆட்சிபுரிய, தனத்தானாதிபன் இவ்விருவரில் எவருடனாவது இருந்தாலும் இந்நிலையில் உதித்தவர் பிறர் பொருளை ஒருகாலத்தும் ஏற்று அனுபவிக்காதவராய்த் தாமாகவே பாடுபட்டுப் பணம் தேடுபவராய் இருப்பர்.

## 57. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் பறிகொடுப்பவர்.

## (The misers who lose their savings.)

**வினா:** அதிகம் செல்வப்பெருக்குள்ள தனிகருள்ளும் சிலர் அச் செல்வத்தைப் "பொன்காத்த பூதம்" போலத் தாமும் அனுபவியாது, பிறருக்கும் ஈயாது வைத்திருந்து, தீயாருக்குப் பறிகொடுக்கும் நியாயம் என்ன?

**விடை:** லாபத்தானாதிபதி (11-ம் இடத்ததிபதியும் இலக்கினாதிபதியும் மறைவுத் தானங்களில் (3-6-8-12-ம் இடங்களில்) இருக்க, தனத் தானாதிபதியும் செலவுத் தானாதிபதியும் கூடிச் சத்துருத்தானத்தில் இருக்க, சத்துருத்தானாதிபதி பலவானாக இருக்கப் பிறந்தவர் பணத்தைத் தேடிப் பாதுகாத்துத் தமக்கும் உதவாமல் பிறருக்கும் ஈயாமல் கள்வர்கையில் ஒப்புவிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| சந்திர<br>செவ்வா<br>சனி | ல | ராகு | 3 |
| 11 | பணத்தைப்<br>பாதுகாத்துப்<br>பறிகொடுத்<br>தவர் | | 4 |
| 10 | | | சூரியன் |
| 9 | கேது | 7 | புதன்<br>வியாழ<br>சுக்கிரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. தம் முதுசொங்களையெல்லாம் அழிப்பவர்.

(Those who waste all they inherit.)

வினு: சிலர் தம் முன்னோர் தேடிய உரிமைப்பொருள் முழுவதையும் நாசமாக்கிவிட்டு, ஈற்றில் தாமும் அங்காடிகளாகத் திரிகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: அபர சந்திரன் 6-ம் இடத்திற்கேனும் 12-ம் இடத்திற்கேனும் அதிபதியாகி 2-ம் இடத்தில் இருந்தாலும், செலவுத்தானுதிபதி (12-ம் இடத்தவன்) செவ்வாயாகித் தனத்தானத்தில் அபர சந்திரனுடன் கூடி இருந்தாலும் இவ்வேளையிற் பிறந்தவர் தம் முன்னோர் தேடிய பொருட்களை எல்லாம் சூறையாடித் துர்விநியோகம் செய்துவிட்டுக் காலிகளாகத் திரிவர்.

| | | | |
|---|---|---|---|
| 4 | வியாழ | 6 | கேது |
| 3 | தமது முன்னோரது | | சனி |
| சூரியன் சந்திர செவ்வா | பொருளை அழித்தவர் | | 9 |
| ல புத சுக் ராகு | 12 | 11 | 10 |

59. கடன்படுஞ் செல்வர். (The extravagant.)

வினு: அதிகமான பணம் தினந்தோறும் வந்துகொண்டிருந்தும் நித்திய கடன்காரராகச் சிலர் காலங்கழிப்பது எதனால்?

விடை: வியாழனுக்கு 12-ம் இடத்தில் சந்திரன் (சகடயோகத்தில்) இருந்தாலும், பாக்கியத்தானுதிபதியும் இலாபத்தானுதிபதியும் சுக்கிரனுங் கூடிச் செலவுத்தானத்தில் இருந்தாலும் இவ்வாறான நிலைமையிற் பிறந்தவர் எவ்வளவு செல்வம் வந்தாலும் தீராத கடன்காரராகவே காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| 10 | கேது | சந்திர செவ்வா சுக் சனி | ல சூரி புத வியாழ |
| 9 | கடன்படுஞ் | | 2 |
| 8 | செல்வர் | | 3 |
| 7 | 6 | ராகு | 4 |

60. அடிமைகள், நித்திய தரித்திரர். (The slaves and the poor.)

வினு: அடிமைத்தொழில் செய்து நித்திய தரித்திரர்களாகச் சிலர் வாழ்வது ஏனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: இலக்கினாதிபதியும் இலாபத்தானாதிபதியும் சத்துருத்தானத்திலிருக்க, பாக்கியத்தானாதிபதியும் முயற்சிஸ்தானனும் கூடி 8-12-ம் இடங்களில் இருக்கப் பிறந்தவர் எப்போதும் தரித்திர நிலைமையும் சேவகத்தொழிலும் உடையவராவர்.

| | | | |
|---|---|---|---|
| வியாழ | 4 | 5 | செவ்வா சனி |
| சந்திர | | | கேது |
| ல ராகு | தரித்திரர் | | சூரியன் புதன் சுக்கிரன் |
| 12 | 11 | 10 | 9 |

## போசனம்

### 61. போசனசுகம் உடையவரும், போசனசுகம் அற்றவரும்.

(Those who have luxurious meals, and those who have poor meals.)

வினா: சிலர் போசனசுகம் அனுபவிக்க, வேறு சிலர் பசி நோயால் தினமும் வருந்தித்திரிதல் எதனால்?

விடை: இலக்கினாதிபதியும் போசனத்தானாதிபதியும் (2-ம் இடத்துக்குரியவனும்) வியாழனும் கேதுவும் கூடிச் சுகத்தானத்தில் (4-ம் இடத்தில்) இருக்கப் பிறந்தவர் தேவாமிர்தம் புசிப்பவர்போல் நானாவித போசனசுகம் அனுபவிப்பர். இலக்கினாதிபதியும் போசனத்தானாதிபதியும் வியாழனுங் கூடிச் சத்துருத்தானத்திலாயினும் மிருத்துத்தானத்திலாயினும் செலவுத்தானத்திலாயினும் (6-8-12-ல்) இருக்கப் பிறந்தவர் தம் வயிற்றுக்குப்போதிய உணவுதானுமின்றி எந்நாளும் பசிநோயால் வருந்தித்திரிவர்.

| | | | |
|---|---|---|---|
| 11 | 12 | ல செவ்வா | 2 |
| ராகு | போசனசுகம் உள்ளவர் | | 3 |
| 9 | | | சூரி புத வியா சுக் கேது |
| 8 | சந்திர | சனி | 5 |

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | கேது | ல |
| 9 | போசனசுகம் இல்லாதவர் | | 2 |
| 8 | | | 3 |
| சுக்கிரன் | சூரி சந் செ புத வி சனி ரா | 5 | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 62. போசன நுட்பம் அறிந்தவர்.

(Those who have delicate appetite.)

**வினு:** சிலர் அற்ப போசன காரராய், போசனருசி அறிவதில் நுட்பம் உடையவராக இருத்தற்கு நியாயம் யாது?

**விடை:** போசனத்தானுதிபதி சுபக்கிரகமாக இருந்து சுபரின் நோக்கம் பெற்று உச்சாம்சத்தில் இருக்கப் பிறந்தவர் மிதமாகவும் ருசிகரமாகவும் உண்பர்.

| | | | |
|---|---|---|---|
| சந்திர | ல கேது | சனி | செவ்வா |
| 11 | போசன நுட்பம் அறிந்தவர் | | வியாழ சுக்கிரன் |
| 10 | | | சூரியன் |
| 9 | 8 | ராகு | புதன் |

## 63. அதிகம் புசிப்பவர். (The gluttons.)

**வினு** சிலர் மிதமிஞ்சிய போசனஞ் செய்பவராக (பெருவயிறு படைத்தவராய்) இருத்தற்கு நியாயம் யாது?

**விடை:** போசனத்தானுதிபன் (2-ம் இடத்ததிபன்) பாபக்கிரகங்களுடன் சேர்ந்து அல்லது அவர்களின் நோக்கம் பெற்று நீசாம்சத்தில் இருக்கப் பிறந்தவர் அளவின்றி உண்பவராகக் காணப்படுவர்.

## 64. பிறர் உணவை என்றும் புசிப்பவர்.

(Those who always enjoy others' meals.)

**வினு:** சிலர் தம்மிடத்தில் அறுசுவை உண்டி இருந்தும் பிறரிடத்திலேயே புசிப்பதில் பிரியம் மிக்கவராய்த் திரிகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

**விடை:** 2-ம் இடத்திற்கதிபதி சனி ஆனாலும், 2-ம் இடத்திற்கதிபன் சனியுடன் கூடினாலும் அல்லது நீசனுன சனியினுற் பார்க்கப்பட்டாலும், 2-ம் அதிபன் நீசனுகவேனும் சத்துருத்தானத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலேனும் இருந்து நீசனென கிரகத்தின் நோக்கம் பெற்றாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் பிறர்வீட்டிற் புகுந்துக்கொண்டும் (நன்றி மறந்தவராய்) அவரைத் தூஷணஞ்செய்தும் திரிவர்.

## 65. அன்ன தாதாக்கள். (Those who feed many people.)

**வினு:** சிலர் எப்பொழுதும் அன்ன தாதாக்களாக இருப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** போசனத்தானத்தில் குருசுக்கிரர் பூரணபலம் பெற்றிருக்க, இலக்கினாதிபதி போசனத்தானத்தில் அல்லது கேந்திர திரிகோணங்களில் பலவானாக இருக்கப் பிறந்தவர் சதா அன்னதானஞ் செய்பவராய் அல்லது அநேக ஜனங்களை ஆதரிப்பவராய் இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| புதவியா சுக்கிரன் சனி | சூரியன் | சந்திர | செவ்வா கேது |
| ல | அன்ன தாதா | | 6 |
| 12 | | | 7 |
| ராகு | 10 | 9 | 8 |

## குடும்பம்

## 66. குடும்பசுகம் இல்லாதவர்.

(Those who cannot have a happy family.)

**வினு:** சிலர் குடும்பத்திற்குத் தகுதியில்லாதவராய் இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** குடும்பத் தானத்தில் (2-ம் இடத்தில்) செவ்வாய் இருந்தாலும் நோக்கினாலும், சனி இருந்தாலும் நோக்கினாலும் இதிற் பிறந்தவர் (ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி) குடும்பசுகமில்லாதவராகத் திரிவர்.

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | வியாழ | 6 |
| செவ்வா சனி | குடும்பசுகம் இல்லாதவர் | | ராகு |
| ல சூரியன் கேது | | | சந்திர |
| புதன் சுக்கிரன் | 10 | 11 | 9 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. நீரில் விழ்ந்திறக்கும் மனைவியரை உடையவர்.

(Those who get wives who die by drowning.)

**வினா:** சிலருடைய மனைவியர் கிணறு, குளம், ஏரி, ஆறு, கடல்களில் விழுந்து இறக்கின்றனர். இது எதனால்?

**விடை:** குடும்பஸ்தானம் சராராசியாக அதிற் சந்திரன் பகையாக இருந்தாலும், நவாம்சலக்கினத்திற்கு 2, 7-ம் இடத்ததிபனேனும் 2, 8-ம் இடத்ததிபனேனும் பகை நீசமாக இருந்தாலும் இதிற் பிறந்தவரின் மனைவியர் கிணறு, குளம் முதலான நீர்நிலையங்களில் விழ்ந்து இறப்பர்.

68. நெருப்பில் வீழ்ந்திறக்கும் மனைவியரை உடையவர்.

(Those who get wives who die by burning.)

**வினா:** சிலருடைய மனைவியர் நெருப்பினால் எரிந்து மரணமாகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** குடும்பத்தானத்தில் செவ்வாய் சூரியன் இருந்தாலும், நவாம்சலக்கினத்துக்கு 2-ம் இடத்திலிருக்கும் செவ்வாய் அல்லது சூரியனை 7-ம் இடத்திலிருக்கும் அதிபதி நோக்கினாலும் இதிற் பிறந்தவரின் மனைவியர் நெருப்பினால் வெந்து இறப்பர்.

69. நஞ்சுண்டும் தூங்கியும் இறக்கும் மனைவியரை உடையவர்.

(Those who get wives who commit suicide by taking poison or by hanging.)

**வினா:** சிலருடைய மனைவியர் நஞ்சுண்டும் சிலருடைய மனைவியர் கழுத்திற் சுருக்கிட்டுத் தூங்கியும் மரணமடைவதற்குக் காரணம் யாது?

**விடை:** 2-ம் இடத்தில் சனி பகைநீசமாக இருக்கப் பிறந்தவரின் மனைவியர் விஷபாஷாணம் உண்டும், இராகு பகைநீசமாக இருக்கப் பிறந்தவரது மனைவியர் கழுத்திற் சுருக்கிட்டுத் தூங்கியும் மரணமடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்ரும் பாவ பலன்

---

### சகோதரர்

### 70. அதிக சகோதரர் உடையவர்.

(Those who have many brothers and sisters.)

**விஞ:** சிலர் அதிக சகோதரர்களை உடையவராய் இருப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** சகோதரத்தாஞதிபதி (3-ம் இடத்ததிபதி) இலாபத்தானத்தில் பலவாஞக இருக்க, சகோதரகாரகஞன செவ்வாய் உச்சகேந்திரத்தில் (10-ம் இடத்தில்) இருக்க உதித்தவர் அதிக சகோதரரை உடையவராவர்.

### 71. ஆண்சகோதரரை மாத்திரம் உடையவர்.

(Those who have many brothers but no sisters.)

**விஞ:** சிலர் பெண்சகோதரர் பொருத்தமில்லாமல் ஆண் சகோதரரையே உடையவராக இருப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** சகோதரத்தாஞகிபதியும் செவ்வாயும், உதயலக்கினத்திற்கும் நவாம்சலக்கினத்திற்கும் ஒற்றித்த இராசிகளில் சூரியன் செவ்வாய் வியாழன் இவர்களுடன் கூடியேனும் இவர்களாற் பார்க்கப்பட்டேனும் இருந்தாலும், சகோதரத்தாஞதிபதியும் சகோதரகாரகனும் சூரியன் செவ்வாய் வியாழன் இவர்களின் தானத்தில் இருந்தாலும் இதிற் பிறந்தோர் பெண்சகோதரரின்றி ஆண் சகோதரரை மாத்திரம் உடையவராவர்.

### 72. பெண்சகோதரரை மாத்திரம் உடையவர்.

(Those who have many sisters but no brothers.)

**விஞ:** சிலருக்கு ஆண்சகோதரர் பொருத்தமில்லாமல் பெண் சகோதரர் மாத்திரம் பெருகியிருப்பதற்குக் காரணம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:** உதயலக்கினத்திற்கும் நவாம்சலக்கினத்திற்கும் ஒற்றித்த இராசிகளில் ஒருவருமின்றி, இவைகளுக்கு (இலக்கினத்திற்கும் நவாம்சலக்கினத்திற்கும்) இரட்டித்த இராசிகளில் சகோதரத்தானுதிபதியும் செவ்வாயும் சந்திரசுக்கிரரும் இருந்தாலும், சகோரத்தானுதிபதி சந்திரசுக்கிரருடைய தானங்களில் அமர்ந்தாலும், சகோதரத்தானுதிபதி மேற்சுட்டியவர்களுள் ஒருவராகித் தனது தானத்தில் ஆட்சிப்பெற்றிருந்தாலும் இதிற் பிறந்தவர் பெண் சகோதரப் பெருக்கையே உடையவராய் விளங்குவர்.

## 73. நபும்சக சகோதரரை மாத்திரம் உடையவர்.

(Those who have eunuchs only born with them.)

**வினு:** சிலர் நபும்ஸகரான சகோதரரையே உடையவராக இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** சகோதரத்தானுதிபதியும் செவ்வாயும் கூடி நபும்ஸகாம்சத்தில் இருக்கப் பிறந்தவர் நபும்ஸகரான சகோதரரையே உடையவராக இருப்பர்.

## 74. மூத்தசகோதர தோஷம் உடையவர்.

(Those who lose their elder brothers.)

**வினு:** சிலர் மூத்தசகோதரர்க்கு அரிஷ்டம்செய்பவராக இருப்பதற்கு நியாயம் யாது?

**விடை:** 11-ம் இடத்திற்கு இருபுறத்தும் பாபக்கிரகங்கள் இருந்தாலும், 11-ம் இடத்தையேனும் அதன் தலைவனையேனும் பாபக்கிரகங்கள் சேர்ந்தாலும் நோக்கினுலும் மூத்த சகோதரரை விரைவில் இழந்துவிடுவர்.

## 75. சகோதர தோஷம் உடையவர்.

(Those who lose all their brothers and sisters.)

**வினு.** சிலர் சகோதரப் பொருத்தமில்லாதவராக இருப்பதற்கு நியாயம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 8 | 9 | 10 | ராகு |
| 7 | சகோதர தோஷம் உடையவர் | | செவ்வா சுக்கிரன் |
| 6 | | | ல சூரியன் சனி |
| வியாழ கேது | 4 | சந்திர | புதன் |

விடை: 3-ம் இடத்துக்கு உரியவனான சகோதரத்தானாதிபனும், சகோதரகாரகனாகிய செவ்வாயுங் கூடி 12-ம் இடமான செலவுத் தானத்தில் இருந்தாலும், சகோதரத்தானத்தில் செவ்வாய் நீச வக்கிர அஸ்தமன கதி அடைந்திருக்க, சகோதரத் தானாதிபன் 8-ம் இடத்தில் இருக்க, இவ்விருவரையும் சனி நோக்கினாலும் இதிற் பிறந்தவர் யாவரும் சகோதரதோஷம் உடையவராவர்.

## 76. சகோதரர்மூலம் பொருட்பேறு உடையவர்.

(Those who become rich through their brothers.)

| | | | |
|---|---|---|---|
| 6 | சனி ராகு | 8 | 9 |
| 5 | சகோதரர் மூலம் பாக்கியப் பேறு உடையவர் | | சந்திர |
| 4 | | | 11 |
| 3 | 2 | ல சூ புத வி சுக் கே | செவ்வா |

வினா: சிலர் சகோதரர் மூலமாய்ச் செல்வப்பேறு பெற்றவண்ணமாய் இருப்பதற்கு ஏது என்ன?

விடை: உதயலக்கினத்தில் இலக்கினாதிபதியும் சகோதரத் தானாதிபதியும் பாக்கியத் தானாதிபதியும் இலாபத் தானாதிபதியும் கூடிப் பலவான்களாக இருக்க, இதிற் பிறந்தவருக்குச் சகோதரர் மூலமாய்ப் பொருள் வந்துசேரும்.

## 77. சகோதரரால் மரணமடைபவர்.

(Those who are murdered by their brothers.)

வினா: ஒரு சகோதரரால் மற்றொரு சகோதரர் மரணமடைவதற்குக் காரணம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: இலக்கினாதிபதியும் சகோதரத்தானாதிபதியும் ஆயுர்த்தானாதிபதியும் (அட்டமாதிபதியும்) சத்துருத்தானாதிபதியுடன் கூடிச் சத்துருத்தானத்திலேயே இருக்கப் பிறந்தவர் சகோதரரால் மடிவர்.

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | சந்திர தே | ல |
| 9 | சகோதரராற் கொல்லப் பட்டவர் | | 2 |
| 8 | | | 3 |
| 7 | சூரி செ பு வி சு சனி ரா | 5 | 4 |

## 78. சகோதர காதகர். (The fratricides.)

வினா: சிலர் சகோதர சத்துருக்களாக இருப்பதற்கு நியாயம் என்ன?

விடை: சகோதரத்தானாதிபதி சத்துருத்தானத்தில் இருக்க, சத்துருத்தானாதிபதி (6-ம் இடத்துக்கதிபதி) சகோதரத்தானத்தில் செவ்வாயுடன் இருக்கப் பிறந்தவர் தினமும் சகோதரருடன் சண்டையிட்டு, முடிவில் அவருக்குச் சிவமோசமும் புரிவர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | வியாழ சுக்கிரன் சனி | கேது | 8 |
| புதன் | சகோதரத் துரோகி | | 9 |
| செவ்வா | | | 10 |
| 2 | ல ராகு | சந்திர | 11 |

## வீ ரி ய ம்

## 79. வீர பராக்கிரமசாலிகள். (The warriors.)

வினா: சிலர் வீரபராக்கிரம தேகசக்தியிற் சிறந்தவராய் விளங்குகின்றனர். இது எதனால்?

விடை: வீரியஸ்தானாதிபதியும் (3-ம் இடத்துக்குரியவனும்) செவ்வாயும் கூடி உச்சகேந்திரத்தில் (10-ம் இடத்தில்) இருந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும், வீரியஸ்தானுதிபதி அந்த ஸ்தானத்திலேயே ஆட்சிப்பெற்றிருந்தாலும், வீரியஸ்தானத்தில் சந்திரசுக்கிரரை ஒழிந்த மற்றைக் கிரகங்கள் உச்சம்பெற்றிருந்தாலும் இதிற் பிறந்தவர் புயபலபராக்கிரமசாலிகளாய் யுத்தசன்னத்தராய் விளங்குவர்.

## 80. தேகசக்தி இல்லாதவர். (The feeble.)

வினு: சிலர் உருவத்தால் பெரியவராய் இருந்தாலும் தேகசக்தி சிறிதும் இல்லாதவராய்த் திரிகின்றனர். இது எதனுல்?

விடை: இலக்கினுதிபதியும் வீரியஸ்தானுதிபதியும் (3-ம் இடத்ததிபதியும்) கூடி மிருத்துத் தானத்தில் (8-ம் இடத்தில்) ஆயினும் செலவுத் தானத்தில் (12-ம் இடத்தில்) ஆயினும் துர்ப்பலமாக இருக்கப் பிறந்தவர் தேகசக்தி இல்லாதவராய்த் தேம்பித்திரிவர்.

## 81 போகசக்தியில் மேம்பட்டவர். (The virile.)

வினு: சிலர் போகசக்தியில் மிகமிஞ்சியவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் யாது?

விடை: வீரியத்தானுதிபதி 7-ம் இடமான களத்திரத்தானத்திலும் களத்திரத்தானுதிபதி. வீரியத்தானத்திலுமாக இடம்மாறி இருக்க, இலக்கினுதிபதி சுக்கிரனுடன் கூடிப் பலம்பொருந்தி இருக்கப் பிறந்தவர் போகசக்தியிற் சித்தியடைந்தவராய் இருப்பர்.

## 82. போகசக்தி அற்றவர். (The impotent.)

வினு: சிலர் தேகசக்தி மிக்கவராய் இருந்தும், போகத்தில் பிரியமில்லாதவராய், அதற்குரிய சக்தியுமின்றி நபுஞ்சகராய்த் திரிகின்றனர். இது எதனுல்?

விடை: இலக்கினுதிபதியும் வீரியத்தானுதிபதியும் சுக்கிரனும் கூடிச் சத்துருத்தானத்தில் (6-ம் இடத்தில்) இருக்க, சத்துருத்தானுதிபதி களத்திரத்தானத்தில் இருக்கப் பிறந்தவர் போகசக்தியை வெறுக்கும் நபுஞ்சகராகவே இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சந்திர | 4 | 5 | 6 |
| ராகு | போகசக்தி மிக்கவர் | | வியாழ |
| ல | | | கேது |
| சூரியன் புதன் | செவ்வா | சுக்கிரன் சனி | 9 |

| | | | |
|---|---|---|---|
| ல சனி | 2 | 3 | ராகு |
| 12 | போகசக்தி அற்றவர் | | 5 |
| 11 | | | செவ்வா வியாழ சுக்கிரன் |
| கேது | 9 | சந்திர புதன் | சூரியன் |

## ஜயம்

### 83. இஷ்டசித்தி உடையவர். (The prosperous.)

**வினு:** சிலர் பொதுவாகத் தாம் தொடங்கும் எல்லா முயற்சிகளிலும் வெற்றிபெற்று விளங்குவதற்கு நியாயம் யாது?

**விடை:** வெற்றித்தாஞதிபதி (3-ம் இடத்துக்குரியவன்) சுகத்தானத்திலும் (4-ம் இடத்திலும்) சுகத்தாஞதிபதி வெற்றித்தானத்திலும் பரிவர்த்தனமாக, முயற்சித்தாஞதிபதி (10-ம் இடத்திற்கு உரியவன்) வெற்றித்தானத்தில் இருக்கப் பிறந்தவர் எல்லா முயற்சிகளிலும் அனுபவசித்தி வாய்ந்த வெற்றிவீரராக விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | 2 | சந்திர சனி |
| கேது | கைத் தொழிலில் வெற்றி அடைந்தவர் | | புதன் சுக்கிரன் |
| 10 | | | சூரியன் ராகு |
| 9 | 8 | செவ்வா | வியாழ |

## அன்பு

### 84. அன்பும் அருளும் உடையவர். (The devout and tender.)

**வினு:** உலகத்தில் சிலரினும் சிலர் கடவுளிடத்துத் தீவிரபக்தியும் சீவர்களிடத்தில் தேங்கிய இரக்கமும் உடையவராய் வாழ்வதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | 7 | 8 | சனி |
| செவ்புத வியா சுக் ராகு | அன்பும் அருளும் உடையவர் | | 10 |
| 4 | | | சந்திர கேது |
| 3 | 2 | ல | 12 |

விடை: அன்புத் தானுதிபதியும் (3-ம் இடத்துக்குரியவனும்) இலக்கினுதிபதியும் கூடிப் புண்ணியத்தானத்தில் (5-ம் இடத்தில்) இருக்க, புண்ணியத்தானுதிபதி தருமத்தானத்திலும் (9-ம் இடத்திலும்) கருமத்தானுதிபதி புண்ணியத்தானத்திலுமாக இடம் மாறி அஸ்வகதியோகம் பெற்றிருக்கப் பிறந்தவர் பெருமானிடத்துப் பேரன்பும் பிராணிகளிடத்து நிரம்பிய இரக்கமும் உடையவராய் வாழ்வர்.

## ஆ ப ர ண ம்

### 85. ஆபரணங்களில் விருப்புடையவர்களும், அவற்றில் வெறுப்புடையவர்களும்.

(Those who are fond of ornaments, and those who detest ornaments.)

**வினா:** சிலர் பலவிதமான இரத்தினுபரணங்களை விரும்பி அணிய, வேறு சிலர் அவைகளை வெறுத்து ஒரு காலத்தும் அணிந்துகொள்ள விருப்பமில்லாதவராகக் காணப்படுகின்றனர். இது எதனுல்?

**விடை:** ஆபரணத்தானுதிபதி (3-ம் இடத்ததிபன்) சுபக்கிரகங்களுடன் கூடிக் கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும், 3-ம் இடத்தில் குருசுக்கிரர் பலவான்களாக இருந்தாலும் இதிற் பிறந்தவர் பொன் இரத்தினங்களால் ஆகிய ஆபரணங்களை அணிவதில் வெகு பிரியமுள்ளவர்களாகவும், 3-ம் இடத்தில் ஒருவருமின்றி ஒருவர் நோக்கும் இன்றி 3-ம் இடத்தவன் 6-ம் 8-ம் இடங்களில் பலவீனனுக இருக்கப் பிறந்தவர் ஒருவிதமான ஆபரணங்களிலும் அபேக்ஷை இல்லாதவராகவும் காணப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதா

### 86. தீர்க்காயுள் பெற்ற தாயை உடையவர்.

(Those who have long-lived mothers.)

**வினா:** சிலருடைய தாய்மார் அதிக வயதுடையவர்களாகச் சீவிப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** மாதிருத் தானாதிபதி (4-ம் இடத்தலைவன்) லாபத் தானத்தில் (11-ம் இடத்தில்) பலவானாக இருந்தாலும், அல்லது பூர்வபக்கச் சந்திரனுடன் கூடித் தன்னுடைய தானத்திலேனும் உச்சத்தானத்திலேனும் இருந்தாலும் இதிற் பிறந்தவருடைய அன்னையர் நீடித்த வயதுக்குச் சுக வாழ்வுடையவராகச் சீவிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| கேது | புதன் | சூரியன் சனி | 10 |
| 6 | மாதாவுக்குத் தீர்க்காயுள் கண்டவர் | | சந்திர வியாழ சுக்கிரன் |
| 5 | | | செவ்வா |
| 4 | 3 | 2 | ல ராகு |

### 87. பாலிய வயதில் தாயை இழப்பவர்.

(Those who lose their mothers while young.)

**வினா:** சிலர் சிறுபாராயத்திலேயே தம்மைப் பெற்ற தாயரைப் பறிகொடுத்தற்கு நியாயம் என்ன?

**விடை:** சந்திரலக்கினத்திற்கு 6-ம் இடத்தில் செவ்வாயும் 4-ம் இடத்திற் சனியும் இருந்தாலும், மாதிருத் தானாதிபதியும் சந்திரனும் உதயலக்கினத்துக்கு 6-ம் இடத்தில் பகைநீசமாக இருந்தாலும் இதிற் பிறந்தவர் தமது குழந்தைப் பாராயத்திலேயே அன்னையருக்கு அரிஷ்டம் (மரணத்தையோ மரணத்துக்குச் சமமான துன்பத்தையோ) செய்வர்.

| | | | |
|---|---|---|---|
| 5 | சனி | வியாழ கேது | செவ்வா |
| 4 | பாலியவயதில் மாதாவுக்கு அரிட்டம் செய்தவர் | | 9 |
| சந்திர | | | சுக்கிரன் |
| 2 | ல ராகு | புதன் | சூரியன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிருத்தானாதிபதியும் (4-ம் இடத்ததிபனும்) சந்திரனும் கூடி, பாபக்கிரக நோக்கம் பெற்றுச் செலவுத்தானத்தில் (12-ம் இடத்தில்) இருக்கப் பிறந்தவர் தம்மைப் பெற்ற தாயரைத் தம் அறியாப்பராயத்திலே இழப்பர்.

## 88. வியபிசாரியான தாயை உடையவரும், பதிவிரதையான தாயை உடையவரும்.

## (Those who have lewd mothers and those who have chaste mothers.)

**வினு:** சிலருடைய அன்னையர் விபசாரிகளாகவும், வேறு சிலருடைய அன்னையர் பதிவிரதைகளாகவும் இருப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** மாதிருத்தானாதிபதியும் சந்திரனும், செவ்வாய் சுக்கிரனுடன் கூடியேனும் அவரது நோக்கம் பெற்றேனும் (மாதிருத்தானத்துக்கு 7-ம் இடமான) 10-ம் இடத்தில் நீச வக்கிர அஸ்தமன கதியில் இருக்கப் பிறந்தவருடைய தாய்மார் தம் கணவர் அல்லாத பிறருடன் இன்பம் அனுபவிப்பதில் பிரியமுடையவராக இருப்பர்.

மாதிருத்தானாதிபதியும் சந்திரனும் கூடிப் பலவான்களாகிச் சூரியன் புதன் வியாழன் இவர்களுடன் சேர்ந்தவர்களாய் அல்லது இவர்களின் பார்வை பெற்றவர்களாய்த் திரிகோண கேந்திரங்களில் இருக்கப் பிறந்தவருடைய அன்னையர் அருந்ததிபோற் கற்புடையவராகக் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| சூரி சந் செ புத சுக்கிரன் | வியாழ | 12 | ல சனி கேது |
| 9 | வியபிசாரியான மாதாவை உடையவர் | | 2 |
| 8 | | | 3 |
| ராகு | 6 | 5 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | கேது | செவ்வா |
| 11 | பதிவிரதையான மாதாவை உடையவர் | | சூரி சந் புதன் வியாழ |
| 10 | | | சுக்கிரன் சனி |
| 9 | ராகு | 7 | 6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 89. மாதாவிடத்தில் மகாபக்தி உடையவர்.

## (Those who love their mothers intensely)

**வினா:** சிலர் தம் தாய்மாரிடத்தில் அளவுகடந்த அன்புடையவராக இருப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** இலக்கினாதிபதியும் மாதிருத்தானாதிபதியும் ஒருவருக்கொருவர் மித்திரர்களாய், ஒருவர் வீட்டில் ஒருவர் பரிவர்த்தனமாக இருக்கப் பிறந்தவர் மாதாவிடத்தில் மட்டற்ற அன்புடையவராக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | சந்திர | 8 | 9 |
| சூரியன் ராகு | மாதாவிடத்தில் மகா பக்தி உடையவர் | | வியாழ |
| புதன் சுக்கிரன் | | | கேது |
| செவ்வா | 2 | ல சனி | 12 |

## 90. மாதிருத் துரோகிகள். (Those who hate their mothers.)

**வினா:** சிலர் மாதாவுடன் வெறுப்புடையவராய் மாதிருத் துரோகிகளாக இருத்தல் எதனால்?

**விடை:** மாதுருத்தானாதிபதியும் சந்திரனும் கூடிச் சத்துருத் தானத்தில் (6-ம் இடத்தில்) இருக்கப் பிறந்தவர் மாதிருத் துரோகிகளாவர்.

## 91. மாதாவின் மரணகாலத்தில் உதவாதவர்.

## (Those who are absent at their mother's death-bed.)

**வினா:** சிலர் தம் அன்னையருடைய மரணகாலத்திற்கு உதவாதவர்களாக இருப்பதற்கு நியாயம் யாதோ?

**விடை:** இலக்கினாதிபனும் மாதிருத்தானாதிபனும் ஒருவருக்கொருவர் சத்துருக்களாக அல்லது சத்துருவீடு நீசவீடுகளில் இருப்பவராக அல்லது சராசரிகளில் இருப்பவராக இருந்தால் இவ்வெல்லையில் உதித்தவர் தம்மைப் பெற்ற தாயாரின் அந்திய காலத்தில் உதவாதவராக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 11 | 12 | ல | ராகு |
| 10 | தாயாரின் உயிராபத்தில் உதவாதவர் | | 3 |
| 9 | | | செவ்வா சனி |
| வியாழ கேது | சந்திர | சூரியன் | புதன் சுக்கிரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 92. மாதாவின் தேட்டம் இல்லாதவர்.

(Those who have no maternal inheritance.)

**வினா:** சிலர் மாதாவின் தேட்டமான செல்வம் சிறிதும் இல்லாதவராய் இருத்தல் எதனால்?

**விடை:** மாதிருத் தானாதிபதியும் சந்திரனும் கூடிச் செலவுத் தானத்தில் (12-ம் இடத்தில்) இருக்கப் பிறந்தவர் தம் தாயின் பொருள் சிறிதும் பெறாதவராய் இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | கேது | 7 |
| சுக்கிரன் | மாதாவின் தேட்டம் இல்லாதவர் | | 8 |
| சூரியன் செவ்வா புதன் | | | 9 |
| ல சனி | சந்திர வியாழ ராகு | 11 | 10 |

பந்து

## 93. சுற்றத்தவராற் போற்றப்படுபவர்.

(Those who are extolled by their relatives.)

**வினா:** சிலர் பந்துஜனங்களால் பூசிக்கப்படுபவராக இருப்பதற்குக் காரணம் யாது?

**விடை:** உதயலக்கினத்தில் புதன் இருக்க, பந்துத்தானாதிபதி (4-ம் இடத்ததிபன்) பலவானாகிச் சுபக்கிரகங்களுடன் கூடியேனும் அவர் தம் நோக்கம் பெற்றேனும் திரிகோணமாய கேந்திரங்களில் இருக்கப் பிறந்தவர் பந்துஜனங்களால் நிதமும் பூசிக்கப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| 7 | 8 | 9 | வியாழ |
| சனி | சுற்றத்தவராற் போற்றப் படுபவர் | | ராகு |
| கேது | | | செவ்வா |
| சந்திர | 3 | சுக்கிரன் | ல சூரியன் புதன் |

## 94. சுற்றத்தவராற் கைவிடப்பட்டவர்.

(The outcasts.)

**வினா:** சிலர் பந்துஜனங்களால் கைவிடப்பட்டவராக இருப்பதற்குக் காரணம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 5 | சனி ராகு | செவ்வா | சந்திர |
| 4 | பந்துக்களாற் கைவிடப் பட்டவர் | | 9 |
| 3 | | | 10 |
| 2 | ல புதன் வியாழ | சூரியன் கேது | சுக்கிரன் |

விடை: பந்தத்தானதிபதி (4-ம் இடத்ததிபன்) நீசவக்கிராஸ் தமன கதியுடன் பாபக்கிரகங்களுடன் கூடியேனும் அவரது நோக்கம் பெற்றேனும் 3, 6, 8-ல் இருக்கப் பிறந்தவர் இனசன பந்துக்களால் கைவிடப்படுவர்.

## சிநேகம்

### 95. பிரியாநட்பு உடையவர்.

### (The bosom-friends.)

வினு: ஒருவர் தமக்குப் பொருத்தமுடையவராக ஓர் சிநேகிதரைத் தெரிவுசெய்து எடுப்பதற்கு மார்க்கம் யாது?

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ்வா | 8 | வியாழ |
| 5 | சிநேகிதப் பொருத்தம் உடையவர் | | சந்திர |
| புதன் சுக்கிரன் | | | 11 |
| சூரியன் | 2 | ல சனி | கேது |

விடை: தம்முடைய உதயலக்கினதிபனும் 4,5-ம் இடங்கட்கு அதிபரும், தம்மால் நேசிக்கப்படுபவருடைய 1, 4, 5-ம் இடங்கட்கு அதிபரும் ஒருவரோடொருவர் மித்திரர்களாக இருந்தாலும்; இருவருடைய சிநேகத்தானதிபரும் (4-ம் இடத்ததிபரும்) 1,4,7,10-ம் இடங்களில் இருந்தாலும்; இருவருடைய ஜன்மநக்ஷத்திரம், நக்ஷத்திர பாதம், ஜன்மராசி இவைகள் ஒன்றாக இருந்தாலும்; இருவருடைய ஜன்மராசிக்கு அதிபரும் (சந்திரலக்கினதிபரும்) பரஸ்பரம் மித்திராக இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் ஒருவரோடொருவர் உயிரும் உடலும் போலச் சிநேகபாசம் உடையவராய் வாழ்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. பொருந்தாநட்பு உடையவர். (The incompatible-friends.)

வினா: சிலர் சினேகிதப்பொருத்த மில்லாதவராய் சினேகிதரே சத்துருக்களாய் வருவதற்கு நியாயம் எதுவோ?

விடை: தம்முடைய 1, 4, 5-ம் இடத்ததிபரும தமக்குச் சினேகமானவரின் 1, 4, 5-ம் இடத்ததிபரும் ஒருவரோடொருவர் பகைவர்களாக இருந்தாலும், இருவருடைய சினேகத்தானதிபரும் (4-ம் இடத்ததிபரும்) 6, 8, 12-ம் இடங்களில் அமர்ந்தாலும், ஒருவருடைய ஜன்மராசிக்கு 6, 8-ம் இராசிகள் மற்றவருடைய ஜன்மராசியாக அமைந்தாலும் இவ்வித நிலைமையில் உதித்த இருவரும் பொருந்தாநட்புடையவராக விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| 11 | 12 | ல | சனி |
| கேது | சினேகிதப் பொருத்தம் இல்லாதவர் | | 3 |
| 9 | | | செவ்வாய் ராகு |
| சுக்கிரன் | சந்திர புதன் | சூரியன் | வியாழ |

## பூமி

97. பூமிப்பெருக்கம் உடையவர். (The landed proprietors.)

வினா: சிலர் அதிகம் பூமிப்பெருக்கமுடையவராய், பூமிவிற்றல் வாங்கல் முதலியவைகளால் இருநிதிக் குபேரனை ஒத்துப் பெரும் லாபமடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: இலக்கினாதிபதி முயற்சித்தானத்தில் (10-ம் இடத்தில்) அமர, திரவியத்தானாதிபதி (2-ம் இடத்ததிபதி) பூமித்தானத்திலும் (4-ம் இடத்திலும்) பூமித்தானாதிபதி திரவியத்தானத்திலும் பரிவர்த்தனமாக இருந்தாலும், பாக்கியத்தானாதிபதியும் (9-ம் இடத்துக்குரியவனும்) இலாபத்தானாதிபதியும் (11-ம் இடத்தவனும்) செவ்வாயும் கூடிப் பூமித்தானத்திற் பலவான்களாக இருந்தாலும் இதிற் பிறந்தவர் இப்பூமண்டலத்திற் பெரும் பகுதியை ஆள்வர்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | செவ்வா | சூரியன் புதன் வியாழ | ராகு |
| ல | அதிக பூமி உடையவர் | | 6 |
| சந்திர | | | 7 |
| கேது | சனி | 9 | 8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 98. பூமி இல்லாதவர். (The landless)

**வினா:** சிலர் பூமிப்பொருத்தமில்லாதவர்களாய்த் தேசசஞ்சாரிகளாகத் திரிகின்றனர். இது யாது காரணம் பற்றியோ?

**விடை:** பூமித்தானாதிபதியும் செவ்வாயும் கூடிச் செலவுத்தானத்திலிருக்க, செலவுத்தானாதிபதி பூமித்தானத்தில் இருக்கப் பிறந்தவர் பூமிப்பாக்கியம் இல்லாதவராயிருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 |
| 7 | பூமிப் பொருந்தம் இல்லாதவர் | | செவ்வா சனி ராகு |
| கேது | | | ல சூரியன் புதன் |
| 5 | சந்திர | வியாழ | சுக்கிரன் |

## 99. அதிக நேற்கழனிகள் உடையவர். (Those who have extensive paddy fields.)

**வினா:** சிலர் அதிகமாக நெல்விளையும் பூமியினை (நெல்வயல்) உடையவராக இருத்தற்கு நியாயம் என்ன?

**விடை:** பூமித்தானாதிபதியும் முயற்சித்தானாதிபதியும் (4-ம் இடத்தவனும் 10-ம் இடத்தவனும்) ஒருவருக்கொருவர் மித்திரராக இருந்தாலும், ஒருவர் வீட்டில் ஒருவர் வீடுமாறி இருந்தாலும் இவ்வாறான எல்லையிற் பிறந்தவர் அதிகமான நெல்வயலினை உடையவராக இருப்பர்.

## 100. பயிர்த்தொழிற் செல்வர். (The rich farmers.)

**வினா:** சிலர் பயிர்த்தொழிற் பகுதியில் விசேஷ லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** பூமித்தானாதிபதி சந்திரனுடைய இராசியில் (கர்க்கடகத்தில்) இருக்க, பூர்வபக்கச் சந்திரனும் செவ்வாயும் கூடிப் பூமித்தானத்தில் சசிமங்கள யோகம் பெற்றிருக்கப் பிறந்தவர் பண்ணிய பயிரெல்லாம் அவர்க்கு எண்ணிய பலனைத் தரும்.

| | | | |
|---|---|---|---|
| ல | 2 | ராகு | சூரி சந் செவ்வா சுக்கிரன் |
| 12 | பயிர்த்தொழிற் பாக்கியம் உடையவர் | | புதன் வியாழ |
| 11 | | | 6 |
| சனி | கேது | 8 | 7 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு

**101. அனேக வீடுடையவர். (Those who have many houses.)**

**வினா:** சிலர் பல விசித்திராலங்கார வீடுகளைக் கட்டி வாடகைக்குக் கொடுத்து, அதனால் அதிக இலாபம் பெறுகின்றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | 12 | ல சுக்கிரன் சனி |
| கேது | அனேகம் | வீடுகள் | சூரியன் புதன் |
| 8 | உடையவர் | | ராகு |
| 7 | 6 | 5 | சந்திரன் செவ்வா வியாழ |

**விடை:** வீட்டுத்தானாதிபதி (4-ம் இடத்ததிபதி) குடும்பத்தானத்தில் (2-ம் இடத்தில்) இருக்க, குடும்பத்தானாதிபதி வீட்டுத்தானத்திலிருந்தாலும்; குடும்பத்தானாதிபதி வியாழனுடன் வீட்டுத்தானத்திலிருக்க, இலாபத்தானாதிபதி (11-ம் இடத்திற்குரியவன்) இவர்களுடன் கூடிப் பூரண பலவானாக இருந்தாலும் இதிற் பிறந்தவர் அநேக மாடமாளிகை கூடகோபுரம் உடையவராயிருப்பர்.

**102. வீடு இல்லாதவர். (The homeless.)**

**வினா:** சிலர் வீடில்லாதவராய்க் கோடி தூங்கித் திரிவதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| சனி | 9 | 10 | சுக்கிரன் ராகு |
| 7 | வீடில்லாதவர் | | சூரி செ புதன் வியாழ |
| 6 | | | ல |
| கேது | 4 | 3 | சந்திர |

**விடை:** வீட்டுத்தானாதிபதியும் பாக்கியத்தானாதிபதி (9-ம் இடத்ததிபதி)யும் வியாழனும் கூடிப் பலவீனர்களாகச் செலவுத்தானத்தில் (12-ம் இடத்தில்) இருக்கப் பிறந்தவர் தனக்கென வீடில்லாதவராய் அந்நியர் வீட்டில் ஒதுக்கிடந்தேடி அலைவர்.

**103. பலவிடங்களில் வீடுகள் உடையவர். (Those who have houses at many places.)**

**வினா:** சிலருக்குப் பல தேசங்களிலும் பல ஊர்களிலும் வீடுகள் இலாபமாகக் கிடைப்பதற்கு நியாயம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:** வீட்டுத்தானம் (4-ம் இடம்) சரராசியாக, அவ்விராசி அதிபனும் வியாழனும் கூடிச் சரராசிகளில் பலவான்களாக இருக்கப் பிறந்தவர் அனேகம் தேசங்களில் அல்லது அனேகம் ஊர்களில் வீடுகள் அமைத்து அதனால் பெரும் லாபம் அடைவர்.

## 104. ஒரே வீட்டில் வசிப்பவர்.

(Those who always live in the same house.)

**வினா:** சிலர் எந்தக் காலமும் ஒரே வீட்டில் ஸ்திரமாக வசிப்பவராக இருப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** வீட்டுத்தானாதிபனும் (4-ம் இடத்தலைவனும்) வியாழனும் திரராசிகளில் இருந்தாலும், வீட்டுத்தானம் திரராசியாக அதில் வியாழன் சனி இலக்கினாதிபன் இவர்கள் இருந்தாலும் இவ்வாறான எல்லையிற் பிறப்பவர் எப்பொழுதும் ஒரே வீட்டில் வசிப்பர்.

## 105. அக்கினியால் வீட்டை இழப்பவர்.

(Those who lose their houses by fire.)

**வினா:** சிலருடைய வீடுகள் அடிக்கடி அக்கினிபற்றி எரிவதற்கு நியாயம் என்ன?

**விடை:** வீட்டுத்தானாதிபதியும் (4-ம் இடத்தலைவனும்) வியாழனும் சூரியன் செவ்வாய் இருவரில் ஒருவருடனாவது கூடிப் பலவீனமாக இருந்தாலும், அல்லது மேற்சுட்டிய இருவரும் நவாம்ச லக்கினத்திற்குப் 12-ம் இடத்தில் செவ்வாய் சூரியனுடன் இருந்தாலும், வீட்டுத்தானத்தில் செவ்வாயும் சூரியனும் பகைநீசமாக இருக்க, வீட்டுத்தானாதிபனும் வியாழனும் கூடிச் செலவுத்தானத்தில் (12-ம் இடத்தில்) இருந்தாலும் இதிற் பிறந்தவரின் வீட்டை அடிக்கடி அக்கினி பற்றி எரிக்கும்.

| | | | |
|---|---|---|---|
| கேது | 8 | சனி | 10 |
| 6 | அக்கினியால் வீட்டை இழந்தவர் | | 11 |
| 5 | | | வியாழ |
| சூரியன் செவ்வா புதன் | சந்திர | சுக்கிரன் | ல ராகு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 106. வாடகை மனையில் வாழ்பவர்.

(Those who live in rented houses.)

**வினு:** சிலர் தமக்கென வீடுகளிருந்தும் அன்னியரால் கட்டப்பட்ட வீடுகளில் வாடகை கொடுத்து வாழ்கின்றனர். இது எதனுல்?

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | 2 | 3 |
| 11 | வாடகை வீட்டில் வாழ்பவர் | | செவ்வா சனி ராகு |
| கேது | | | 5 |
| 9 | சந்திர | வியாழ | சூரியன் புதன் சுக்கிரன் |

**விடை:** வீட்டுத்தானம் சரராசியாக, வீட்டுத்தானுதிபனும் நீசனுகி இருக்க, வீட்டுத்தானத்தில் சனி செவ்வாய் இராகு இருக்கப் பிறந்தவர் வாடகைமனையில் தினமும் வாழ்வர்.

## வாகனம்

## 107. வாகனசுகம் உடையவரும்; வாகனசுகம் அற்றவரும்.

(Those who have vehicular comfort and those who have no vehicles.)

**வினு:** சிலர் வாகன வைபவங்களுடன் பவனிவருவதற்கும், வேறு சிலர் பாதசாரிகளாய்த் திரிவதற்கும் நியாயம் என்ன?

**விடை:** வாகனத்தானுதிபதி (4-ம் இடத்திற்குரியவன்) பாக்கியத்தானத்திலும் (9-ம் இடத்திலும்) பாக்கியத்தானுதிபதி வாகனத்தானத்திலுமாக இருக்கப் பிறந்தவர் பலிதமான வாகன யோகம் உடையவராயும்; இலக்கினுதிபதியும் வாகனத்தானுதிபதியும் பாக்கியத்தானுதிபதியும் கூடி 6-ம் இடத்திலேனும் 12-ம் இடத்திலேனும் இருக்க, பாபர் நோக்கப் பிறந்தவர் வாகனப்பொருத்தம் இல்லாதவராயும் இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 8 | சந்திர | 10 | புதன் வியாழ |
| ராகு | வாகனம் பொருந்தாதவர் | | சூரியன் செவ்வா |
| 6 | | | ல சுக்கிரன் கேது |
| 5 | 4 | சனி | 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 108. மிருகவாகனம் உடையவர்.

(Those who have animal-drawing vehicles.)

**வினு:** சிலர் பலவேறுவகைத்தான வாகனங்களை உடையவராய் இருக்கின்றனர். இது எதனுல்?

**விடை:** வாகனத்தானத்தில் (4-ம் இடத்தில்) சந்திரன் புதன் சுக்கிரன் இவர்கள் பலவான்களாய் இருக்கப் பிறந்தவர் யானை, குதிரை, ஒட்டகம், எருமை, எருது முதலான மிருகவசியம் உடையவராய், இம் மிருகங்களால் ஈர்க்கப்படும் வண்டிகளையுடையவராய், அவைகளால் அதிக லாபம் அடைபவராய் இருப்பர். வாகனத்தானத்தில் சூரியன் பலவானுக இருக்கப் பிறந்தவர் அரசரால் உதவப்பெறும் வாகனங்களை ஆட்சிபுரிவர்.

| | | | |
|---|---|---|---|
| கேது | சூரியன் | சந்தர புதன் சுக்கிரன் | 5 |
| ல வியாழ | வாகன யோகம் உடையவர் | | 6 |
| சனி | | | 7 |
| 11 | 10 | 9 | செவ்வா ராகு |

### 109. நரவாகனம் உடையவர்.

(Those who have man-drawing vehicles.)

வாகனத்தானத்தில் வியாழன் பலவானுக இருக்கப் பிறந்தவர் மற்றைய மிருக வாகனங்களுடன், மனிதர்களால் ஈர்க்கப்படும் வாகனங்களையும் (முற்காலம் பல்லக்கு, சிவிகை; தற்காலம் றிக்ஷோவண்டி முதலியன) உடையவராவர்.

### 110. யந்திரவாகனமுடையவர். (Those who have autcmcbiles.)

வாகனத்தானத்தில் சனி இராகுக்கள் பலவான்களாக இருக்கும்போது பிறந்தவர்க்கு இயந்திர வாகனங்களே (தற்காலம் மோட்டார் வண்டி, துவிசக்கர வண்டி முதலியண) விசேஷ பொருத்தமாகும். அன்னவர்க்கு மற்றைய வாகனங்கள் கிஞ்சித்தேனும் பொருந்தா.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | சந்திர | 8 |
| சனி ராகு | யந்திர வாகனச் செல்வர் | | 9 |
| 3 | | | சுக்கிரன் கேது |
| 2 | ல வியாழ | 12 | சூரியன் செவ்வா புதன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 111. ஆகாயவிமானம் உடையவர்.

(Those who have aeroplanes.)

சனி 10-ம் இடத்திற் பலமேறி இருக்க, வாகனத்தானம் சர ராசி ஆக, அதில் புதசுக்கிரர் பூரண பலவான்களாக இருக்கப் பிறந்தவர் அந்தர பவனியாகச் செல்லும் ஆகாயவிமானம் முதலான விசேஷ வாகனம் உடையவராவர்.

### 112. கூலிவாகனம் உடையவர்.

(Those who ride in hired vehicles.)

வாகனத்தானத்தில் செவ்வாய் இருக்கப் பிறந்தவர்க்கு மிருக வாகனங்கள் பொருந்தா. இவர் அந்நியரால் கூலிக்கு விடப்படும் வாகனங்களில் ஆரோகணிப்பர்.

## சுகம்

### 113. அழகும் ஆரோக்கியமும் உடையவர்.

(Those who have a handsome and healthy physique.)

**வினு:** சிலர் நல்ல அழகு, உல்லாசமான தேகம் இவைகளை உடையவராக இருத்தற்கு நியாயம் என்ன?

**விடை:** கர்க்கடகம், துலாம் இவைகள் சுகத்தானமாக (4-ம் இடமாக) அமைய, இவைகளில் இலக்கினுதிபதி குருசுக்கிரருடன் இருக்கப் பிறந்தவர் மன்மதன்போல் அழகும் மகாவிஷ்ணுபோல் சரீர அமைப்பும் உடையவராகக் காணப்படுவர்.

### 114. ஆரோக்கியம் அற்றவர். (The invalids.)

**வினு:** சிலர் எல்லாவிதச் சுகமிருந்தும் சரீரசுகமில்லாதவராய் இருத்தற்குக் காரணம் யாது?

**விடை:** இலக்கினுதிபதி ஆயுர்த்தானத்திலும் (8-ம் இடத்திலும்) ஆயுர்த்தானுதிபதி வியத்தானத்திலும் (12-ம் இடத்திலும்) சுகத்தானுதிபதி (4-ம் இடத்ததிபதி) ரோகத்தானத்திலும் (6-ம் இடத்திலும்) இருக்கப் பிறந்தவர் எப்போதும் சரீரசுகம் இல்லாதவராய் இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 115. போசனசுகம் உடையவர்.

(Those who enjoy their meals.)

**வினா:** சுகங்களுள் பல பேதங்களுளவே. சரீரசுகம், போசன சுகம், சிநேகசுகம், புத்திரசுகம், ஸ்திரீசுகம், சயனசுகம் என்றின்னோ ரன்ன பலவகைத்தான சுகங்களுள், சிலர் போசனசுகம் அனுபவிப்பதில் அதிர்ஷ்டசாலிகளாக இருக்கின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** போசனத்தானாதிபனும் (2-ம் இடத்தவனும்) வியாழனும் சுகத்தானத்தில் (4-ம் இடத்தில்) பலமேறியிருக்கப் பிறந்தவர் போசனசுகத்தில் அமிழ்ந்தினவராகக் காணப்படுவர்.

## 116. சிநேகிதர்மூலம் சுகம் உடையவர்.

(Those who derive happiness from their friends.)

**வினா:** சிலர் சிநேகிதர்மூலமாக அளவற்ற சுகம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** மித்திரத் தானாதிபன் (4-ம் இடத்ததிபன்) உதயலக்கினாதிபதியுடன் கூடி இலக்கினத்தில் இருக்கப் பிறந்தவர் (ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி) சிநேகிதர்மூலம் வேண்டிய சுகங்களைப் பெறுவர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | 9 |
| ராகு | சிநேகிதரால் அதிக சுகம் அடைந்தவர் | | வியாழ |
| சந்திர | | | கேது |
| சூரியன் புதன் | செவ்வா | ல சுக்கிரன் சனி | 12 |

## 117. புத்திரர்மூலம் சுகம் உடையவர்.

(Those who derive happiness from their children.)

**வினா:** சிலர் புத்திரர்மூலம் சுகம் உடையவராக இருப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** புத்திரத்தானாதிபதி (5-ம் இடத்ததிபதி) சுகத்தானத்தில் (4-ம் இடத்தில்) வியாழனுடன் இருக்கப் பிறந்தவர் புத்திரர்மூலம் அளவிறந்த சுகம் பெறுவர்.

| | | | |
|---|---|---|---|
| கேது | ல | சனி | சுக்கிரன் |
| 11 | புத்திரசுகம் மிகுந்தவர் | | சூரியன் வியாழ |
| சந்திர | | | புதன் |
| 9 | 8 | 7 | செவ்வா ராகு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 118. ஸ்திரீசுகம் உடையவர். (The sensualists.)

**வினு:** சிலர் பெண்கள்மூலம் அளவிறந்த சுகம் அடைகின்றனர். இதற்கு நியாயம் என்னேயோ?

| | | | |
|---|---|---|---|
| 9 | சந்திர | 11 | 12 |
| சூரியன் ராகு | ஸ்திரீசுகம் அதிகம் அனுபவித்தவர் | | ல வியாழ |
| புதன் சுக்கிரன் | | | கேது |
| செவ்வா | 5 | சனி | 3 |

**விடை:** சுகத்தாஞதிபதி (4-ம் இடத்ததிபன்) இன்பத்தானத்தில் (7-ம் இடத்தில்) பலவாஞக இருந்தாலும், சுகத்தாஞதிபன் சுக்கிரஞகி 7-ம் இடத்திற் பூரணபலமேறியிருந்தாலும் இவ்வாருன வேளைகளில் உதித்தவர் பெண்களிடத்தில் அளவிறந்த சுகம் அனுபவிப்பர்.

### 119. சயனசுகம் உடைவர். (Those who enjoy their sleep.)

**வினு:** சிலர் சென்ற இடங்களில் எல்லாம் (மற்றைய சுகங்களிலும் பார்க்க) சயனசுகம் சுகிப்பதில் விசேஷ அனுபவம் உடையவராக இருப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** சயனத்தாஞதிபதி (12-ம் இடத்ததிபன்) சுகத்தானத்தில் (பரமோச்சபாகையில்) இருக்கப் பிறந்தவர் புஷ்பசயனத்திலும் சப்பிரகூடயஞ்சத்திலும் நித்திரைபுரிவர்.

---

## ஐந்தாம் பாவ பலன்

---

### புத்திரர்

### 120. அதிக புத்திரர் உடையவர்.

(Those who have many sons.)

**வினு:** சிலர் அனேக புத்திரரைப் பெறுவதற்குக் காரணம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: இலக்கினதிபதியும் இலாபத்தானதிபதியும் கூடிப் புத்திரத்தானத்தில் (5-ம் இடத்தில்) இருக்க, புத்திரத்தானதிபதியும் வியாழனும் கூடிப் பாக்கியத்தானத்தில் பலவான்களாக இருக்கப் பிறந்தவர் பத்துக்கு மேற்பட்ட தொகையினையுடைய புத்திரரைப் பெறுவர்.

| | | | |
|---|---|---|---|
| செவ்வா வியாழ | ராகு | 11 | 12 |
| 8 | பதினைந்து | புத்திரரைப் | ல |
| 7 | பெற்றவர் | | 2 |
| சூரியன் | சந்திர புதன் சுக்கிரன் | கேது | சனி |

## 121. அதிக புத்திரிகள் உடையவர்.

## (Those who have many daughters.)

வினா: சிலர் அதிகமாகப் பெண்பிள்ளைப் பேறுடையவராய் இருத்தற்கு நியாயம் என்ன?

விடை: புத்திரத்தானத்தில் சந்திரனுயினும் சுக்கிரனுயினும் ஆட்சிபுரிய, இலக்கினதிபதியும் வியாழனும் இலாபத்தானத்தில் இருக்கப் பிறந்தவர் ஆண்பிள்ளைக் கலப்பின்றிப் பெண்பிள்ளைகளையே பெறுவர்.

| | | | |
|---|---|---|---|
| ல | 2 | புதன் | சூரியன் ராகு |
| 12 | பெண் | பிள்ளைகளையே | சந்திர சுக்கிரன் |
| வியாழ | பெற்றவர் | | சனி |
| கேது | செவ்வா | 8 | 7 |

## 122. புத்திரப் பொருத்தம் இல்லாதவர்.

## (Those who have no children.)

வினா: சிலர் புத்திரப்பொருத்தம் இல்லாதவராயிருத்தற்கு நியாயம் யாது?

விடை: புத்திரப்பொருத்தமானது ஸ்திரீ புருஷர் இருவரிடத்தும் சமமாக இருந்தாலன்றி, ஒருவருக்கு மாத்திரம் இருப்பின் அதனுல் ஒரு பயனும் இல்லை. உதாரணமாக: புருஷன் புத்திரப் பொருத்தமுடையவனுக இருக்க, மனைவி அஃதில்லாதவளாய் இருப்பினும், புருஷன் புத்திரப்பொருத்தமில்லாதவனுக இருக்க, மனைவி புத்திரப்பொருத்தமுடையவளாயினும் இருவருக்கும் புத்திரர் தோன்றித் துரிதமாய் மடிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரத் தானத்தில் (5-ம் இடத்தில்) புதன் பலவீனனாக இருக்க, புத்திரத்தானாதிபதியும் பாக்கியத்தானாதிபதி (9-ம் இடத்ததிபதி)யும் வியாழனும் கூடிச் செலவுத்தானத்தில் (12-ம் இடத்தில்) இருக்கப் பிறந்தவர்க்குப் புத்திரர் ஒருபோதும் பொருந்தார்; பிறப்பினும் பிள்ளைப்பராயத்துள் செலவாகிவிடுவர்.

| | | | |
|---|---|---|---|
| புதன் | 6 | 7 | செவ்வா கேது |
| சூரியன் | புத்திரப் | | 9 |
| சுக்கிரன் | பொருத்தம் இல்லாதவர் | | 10 |
| ராகு | ல சனி | சந்திர வியாழ | 11 |

## 123. கருப்பசேதம் உண்டாதற்குக் காரணம்.

## (The cause for miscarriages.)

**வினா:** சில பெண்களுக்கு வருஷந்தோறும் கருப்பச் சிதைவு காணப்படுவதற்கும், கருப்பம் முற்றி வயிற்றினுட் பிள்ளையாகி இறந்து பிறத்தற்கும் புருஷர்தான் காரணகர்த்தர் எனக் கொள்ளலாமா?

**விடை:** மனைவிக்குக் கருப்பசேதம் வருவதற்கும் வயிற்றுட் குழந்தை மரித்துப் பிறத்தற்கும் புருஷன் காரணபூதனன்று; இதற்கு மனைவிதான் பொறுப்பாளியாவள். புத்திரன் பூமியிற் பிறந்தபின் இறப்பின், புருஷன் மனைவி இருவரும் பொறுப்பாளிகளாவர்.

## 124. கருப்பசேதம் அடையும் ஸ்திரீகள்.

## (The women who are subject to miscarriages.)

**வினா:** அவ்வாறு பெண்ணுக்குக் கருப்பம் சிதைவதற்கும் வயிற்றினுள் பிள்ளை மரித்துப் பிறத்தற்கும் காரணம் என்ன?

**விடை:** இலக்கினாதிபதியும் பாக்கியத்தானாதிபதியும் புத்திரத்தானாதிபதியும் வியாழனும் நோய்த்தானத்தில் (6-ம் இடத்தில்) அமர, செலவுத்தானாதிபதி (12-ம் இடத்ததிபன்) புத்திரத்தானத்

| | | | |
|---|---|---|---|
| 9 | கேது | 11 | 12 |
| 8 | கருப்பசேதம் | | ல |
| சுக்கிரன் | அடைந்த ஸ்தீரீ | | 2 |
| சந் செ வியாழ சனி | சூரியன் புதன் | ராகு | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் இருக்கப் பிறந்தவள் கருப்பசேதம் அல்லது வயிற்றுட் பிள்ளை மரித்தல் இவைகளை உடையவளாயிருப்பள்.

## 125. புத்திரராற் செல்வப்பேறு உடையவர்.

## (Those who prosper through their children.)

| | | | |
|---|---|---|---|
| கேது | 4 | சனி | 6 |
| 2 | புத்திரராற் பெருஞ் செல்வர் ஆனவர் | | 7 |
| ல சூரி செ புத சுக் | | | வியாழ |
| 12 | 11 | சந்திர | ராகு |

வினா: சிலர் புத்திரர்களால் பெருஞ் செல்வப்பேறுடையவராய் வாழ்கின்றனர். இது எதனால்?

விடை: இலக்கினாதிபதி புத்திரத்தானத்தில் அமர, புத்திரத்தானாதிபதியும் பாக்கிய லாபத்தானாதிபர் (9-11-க்கு அதிபர்) களும் கூடி இலக்கினத்திற் பூரண பலம் பொருந்தியிருக்கப் பிறந்தவர் புத்திரர்மூலம் பிரபல பொருட்செல்வராக வாழ்வர்.

## 126. புத்திரப் பகை உடையவர்.

## (Those who have hostile children.)

| | | | |
|---|---|---|---|
| சூரியன் சுக்கிரன் | புதன் | 11 | 12 |
| சனி ராகு | புத்திரர் சத்துரு ஆனவர் | | ல |
| 7 | | | கேது |
| சந்திர செவ்வா வியாழ | 5 | 4 | 3 |

வினா: சிலருக்குத் தாம் பெற்ற பிள்ளையே தமக்குச் சத்துருவாகவும், தாம் அவருக்குச் சத்துருவாகவும் இருத்தற்கு நியாயம் என்ன?

விடை: இலக்கினாதிபதியும் புத்திரத்தானாதிபதியும் பாக்கியத்தானாதிபதியும் வியாழனும் கூடிச் சத்துருத்தானத்தில் இருக்கப் பிறந்தவர்க்குப் புத்திரர் சத்துருவாகவும், புத்திரர்க்கு இவரே சத்துருவாகவும் இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருதயம்

### 127. பரிசுத்த மனம் உடையவர். (The clean-hearted.)

**விஞ:** சிலர் பரிசுத்தமான மனமுடையவராக இருப்பதற்கு நியாயம் யாது?

**விடை:** உதயலக்கிஞதிபதியும் இருதயத்தாஞதிபதியும் (5-ம் இடத்தவனும்) தத்தம் இடங்களில் ஆட்சியாக இருக்க, 3-ம் இடத்தவன் இவ்விருவரில் ஒருவருடனுவது இருக்க இவ்வமையம் பிறந்தவர் மிகப் பரிசுத்தமான இருதயமுடையவராக இருப்பர்.

### 128. எல்லா உயிர்களிலும் இரக்கம் உடையவர்.

(Those who are kind towards all living beings.)

**விஞ:** சிலர் எல்லா உயிர்களிலும் இரக்கமுடையவராக (கொல்லா விரதிகளாக) இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| சந்திர | கேது | சனி | செவ்வா |
| 4 | எல்லா உயிர்களிலும் இரக்கம் உடையவர் | | வியாழ சுக்கிரன் |
| 3 | | | சூரியன் |
| 2 | ல | ராகு | புதன் |

**விடை:** சனி செவ்வாய் இருதயத்தானத்திற்கேனும் நவாம்சத்தின் 5-ம் இடத்திற்கேனும் அதிபதியாகாமலும் அவைகளில் இருக்காமலும் நோக்காமலும் வேறு எங்கேயாகிலும் இருக்க, அவைகளில் இராகு கேதுக்களும் இல்லாதொழிய, இருதயத்தாஞதிபன் திரிகோண கேந்திரங்களில் உன்னத ஸ்திதியில் இருந்தாலும்; சனி செவ்வாய் நீங்கிய 5-ம் இடத்திற்கும் 9-ம் இடத்திற்கும் அதிபதி ஒருவர்க்கொருவர் மித்திரராய் ஒருவர் வீட்டில் ஒருவர் வீடு மாறியிருந்தாலும்; (சனி செவ்வாய் ஒழிந்த) 5-9-ம் இடங்கட்கு அதிபர் தத்தம் ஸ்தானங்களில் அமர, இவ்விருவரில் எவருடனேனும் உதயலக்கிஞதிபன் சேர்ந்தாலும் இவ்வித நிலைமையிற் பிறந்தவர் தம்முயிர்போல் எவ்வுயிர்களேயும் நேசிக்கும் உத்தம புருஷரத்தினங்களாக (வனிதா ரத்தினங்களாக)த் திகழ்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 129. சீவகாருண்ணியம் சிறிதும் இல்லாதவர்.

## (The cruel-hearted.)

**வினா:** சிலர் சீவகாருண்ணியம் என்பது சிறிதேனும் இல்லாதவராய் (கருங்கற்பாறைபோன்ற கடினசித்தம் உடையவராய்) இருப்பதற்குக் காரணம் யாது?

**விடை:** சனி செவ்வாய் 5-ம் இடத்திற்கு அதிபதியாகி ஆட்சியாக இருந்தாலும், 3-6-10-11-ம் இடங்களில் இருந்தாலும், 5-ம் இடத்திலும் நவாம்சத்தின் 5-ம் இராசியில் இருந்தாலும், 5-ம் இடத்தில் இலக்கினாதிபன் பகைநீசனாக இருந்தாலும் இவ்வித நிலைமையில் உதித்தவர் ஜீவஹிம்சை செய்வதிற் சிறந்தவராக (கல்மனத்தராக) இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 9 | வியாழ | 11 | 12 |
| 8 | சிவகாருண்யம் சிறிதும் இல்லாதவர் | | ல ராகு |
| கேது | | | 2 |
| 6 | சந்திர செவ்வா சுக் சனி | 4 | சூரியன் புதன் |

## 130. பொறாமை மனம் உடையவர்.

## (Those who always feel envy towards others.)

**வினா:** சிலர் பொறாமை பொங்கிய மனமுடையவராகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

**விடை:** சத்துருத்தானாதிபன், சனி, செவ்வாய் இவர்கள் 1, 5, 9-ம் இடங்கட்கு அதிபராகி அவ்விராசிகளிலேயே இருந்தாலும், 1, 5, 9-ம் இடங்களிலே நீசக்கிரகமிருந்தாலும், இவ்விடங்கட்கு அதிபர் பகை நீசமாக இருந்தாலும், நவாம்சத்தில் 1, 5-க்கு அதிபர் குரூரக் கிரகங்களாக இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் பிறர் உயர்ச்சி காணுந்தோறும் பொறாமையடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 11 | 12 | ல ராகு | 2 |
| 10 | பொறாமை பொங்கிய மனம் உடையவர் | | 3 |
| வியாழ | | | சூரியன் சந்திர புத சனி |
| 8 | செவ்வா கேது | 6 | சுக்கிரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 131. தெய்வநம்பிக்கை அற்றவர். (The sceptics.)

| | | | |
|---|---|---|---|
| 12 | ல கேது | 2 | சந்திர |
| சுக்கிரன் | தெய்வ நம்பிக்கை இல்லாதவர் | | 4 |
| சூரியன் செ புத வியாழ | | | 5 |
| சனி | 8 | ராகு | 6 |

வினு: சிலர் தெய்வத்தில் நம்பிக்கையில்லாதவராக இருப்பதற்கு நியாயம் என்ன?

விடை: இருதயத்தாஞதிபதியும் தருமத்தாஞதிபதியும் (9-ம் இடத்தவனும்) வாக்குத்தானத்தில், அல்லது பகை நீசமாக ருயற்சித்தானத்தில் இருக்கப் பிறந்தவர் தெய்வநம்பிக்கை சிறிதும் இல்லாதவராய்க் "கடவுளில்லை" என்றே வாதித்துத்திரிவர்.

## 132. வைரமனம் உடையவர். (The iron-hearted.)

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | புதன் | செவ்வா | 9 |
| சுக்கிரன் சனி | வைரமனம் உடையவர் | | சந்திர கேது |
| வியாழ ராகு | | | 11 |
| 3 | 2 | ல | 12 |

வினு: சிலர் யாதொன்றிற்கும் அஞ்சாத திடசித்த (வைரமான) மனம் உடையவராயிருத்தற்குக் காரணம் என்ன?

விடை: இருதயத் தானம் திரராசியாயிருக்க, அதில் இலக்கிஞதிபதியும் இருதயத்தாஞதிபதியும் சனியும் கூடிப் பூரணபலத்துடன் இருக்கப் பிறந்தவர் எதற்கும் கலங்காத மனவைரம் உடையவராயிருப்பர்.

## 133. கொடிய மனம் உடையவர். (The cruel-hearted.)

வினு: சிலர் கொடியமனமுடையவராய் இருத்தற்கு நியாயம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: இலக்கினாதிபதியும் இருதயத் தானாதிபதியும் (5-ம் இடத்தலைவனும்) நீசர்களாக இருந்தாலும், உதயலக்கினத்திலும் புத்தித்தானத்திலும் நீசக்கிரகங்கள் இருப்பினும், நவாம்சத்தில் இவ்வாறு இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர்கள் கொடுமையான மனம் உடையவராயிருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| வியாழ சனி | 10 | 11 | சூரியன் புதன் சுக் கேது |
| 8 | கோடியமனம் உடையவர் | | ல செவ்வா |
| 7 | | | 2 |
| ராகு | சந்திர | 4 | 3 |

## புத்தி

### 134. ஞாபகசக்தி மிக்கவர்.

(Those who have a strong memory.)

வினு: சிலர் ஞாபகசக்தியில் மேம்பட்டவராகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: உதயலக்கினாதிபன் திரிகோணகேந்திரங்களில் பலவானாக இருந்தாலும், புத்தித்தானாதிபன் (5-ம் இடத்ததிபன்) 1, 10-ம் இடங்களில் பூரண பலவானாக இருந்தாலும், புத்தித்தானாதிபனும் உதயலக்கினாதிபனும் தத்தம் ஸ்தானங்களில் பலமுடையவராக இருந்தாலும், மேற்சுட்டிய இருவரும் விடுமாறியிருந்தாலும், ஒருவரை ஒருவர் நோக்கினாலும் இந்நிலைமையில் உதித்தவர் ஞாபகசக்தியில் மேம்பட்டவராகக் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | 9 |
| 5 | ஞாபகசக்தியில் மேம்பட்டவர் | | சனி ராகு |
| சந்திர செ சுக் கேது | | | 11 |
| 3 | சூரியன் புதன் வியாழ | ல | 12 |

### 135. ஞாபகசக்தி இல்லாதவர்.

(Those who have a weak memory.)

வினு: சிலர் ஞாபகசக்தி இல்லாதவராய்க் காணப்படுகின்றனர். இது எதனால்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: புத்தித்தானத்தில் வக்கிரகதியடைந்த கிரகங்கள் இருந்தாலும், புத்தித்தானதிபன் வக்கிராஸ்தமன கதியுடன் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் ஞாபகசக்தி அற்றவராக விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் | 6 | 7 | கேது |
| சுக்கிரன் 3 | ஞாபகசக்தி இல்லாதவர் | | செவ்வா 10 |
| சந்திர ராகு | ல சனி | வியாழ | 11 |

136. விரும்பியவற்றை உடனே முடிப்பவர்.

(Those who accomplish at once whatever they wish to do.)

வினு: சிலர் தாம் நினைத்ததை உடனே செய்து முடிப்பவராக இருந்தற்கு நியாயம் யாது?

விடை: புத்தித்தானதிபன் முயற்சித்தானத்தில் பூரண பலவானுக இருக்க, முயற்சித்தானதிபன் இலாபத் தானத்திலேனும் உதயலக்கினத்திலேனும் இருந்தாலும்; புத்தித்தானதிபன் முயற்சித்தானத்திலும் முயற்சித்தானதிபன் புத்தித்தானத்திலுமாகப் பரிவர்த்தனமாக இருந்தாலும்; உதயலக்கினதிபன் புத்தித்தானத்திலும், புத்தித்தானபன் முயற்சித்தானத்திலும், முயற்சித்தானதிபனும் இலாபத்தானதிபனும் கூடி உதயகேந்திரத்திலும் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் தாம் நினைத்ததை உடனே முடிக்கும் வீரபுருஷராய் (வீரச்செல்விகளாய்) விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| செவ்வா சுக்கிரன் | சூரி புத சனி கேது | 12 | ல வியாழ |
| 9 | நினைத்தகாரியம் முடிப்பவர் | | 2 |
| 8 | | | 3 |
| 7 | 6 | சந்திர ராகு | 4 |

137. சமயோசித புத்தியாற் காரியசித்தியுடையவர்.

(Those who succeed in business by seizing opportunities.)

வினு: சிலர் சமயோசித புத்தி உடையவராய் அதனுல் அனேக காரியங்கள் கைகூடப்பெறுபவராய் இருந்தற்குக் காரணம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: புத்தித்தானாதிபன் கேதுவுடன் கூடித் தன்னுடைய ஸ்தானத்தில் பலவானாக இருக்க, 1, 10-ம் இடங்கட்கு அதிபர் நோக்கினாலும்; 1, 5, 10-ம் இடங்கட்கு அதிபர் உதய வாக்குத்தானங்களிற் கேதுவுடன் கூடி இருந்தாலும் இவ்வாறான நிலைமையிற் பிறந்தவர் சமயோசித புத்தி சாதுரியம் வாய்ந்தவராகக் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | 8 | வியாழ | 10 |
| 6 | சமயோசித புத்தி உடையவர் | | 11 |
| 5 | | | செவ்வா |
| சந்திர | 3 | சுக்கிரன் | ல சூரி புத சனி கே |

138. முன்னெச்சரிக்கையுடையவர். (The cautious.)

வினா: சிலர் எல்லா விஷயங்களிலும் முன்னெச்சரிக்கையாக (வருமுன் காப்பவராக) இருத்தற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| ல | 2 | 3 | ராகு |
| சனி | முன்னெச்சரிக்கை உடையவர் | | சந்திர வியாழ |
| செவ்வா | | | 6 |
| கேது | 9 | சூரியன் புதன் சுக்கிரன் | 7 |

விடை: உதயலக்கினாதிபன், புத்தித்தானாதிபன் முயற்சித்தானாதிபன் இருவருடனும் கூடிச் சனியின் சம்பந்தமில்லாமல் இருக்கப் பிறந்தவர் எல்லா விஷயங்களிலும் வருமுன் காப்பவராகக் காணப்படுவர்.

139. போனவற்றை நினைத்து மனம் புண்படுபவர்.

(Those who weep over past events.)

வினா: சிலர் கடந்துபோன விஷயங்களை நினைந்து மனம் புண்படுபவராய் (பின்புத்தியுடையவராய்) தெரியப்படுகின்றனர். இதற்கு நியாயம் எதுவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் வியாழ | சுக்கிர ராகு | ல | 2 |
| 10 | போனவற்றை நினைத்துப் புலம்புபவர் | | 3 |
| 9 | | | 4 |
| செவ்வா | 7 | சந்திர கேது | சனி |

விடை: புத்தித்தானாதிபன் நீசனாக, புத்தித்தானத்தில் மூயற்சித்தானாதிபன் வக்கிரகதி அடைந்திருக்கப் பிறந்தவர் போனவற்றை நினைத்து மனம் புண்படும் பின்புத்தியாளராய் விளங்குவர்.

## 140. நிலையற்றபுத்தி உடையவர். (The fickle.)

வினா: சிலர் தங்கள் புத்தியையும் புத்தியின் பெறுபேறான தீர்மானங்களையும் தாம் பேசிய பேச்சையும் உடனுக்குடனே மாற்றிக்கொள்ளும் சுபாவம் உடையவராய் இருத்தற்குக் காரணம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| ல சுக்கிரன் | சூரியன் சந்திரன் புதன் | 3 | கேது |
| 12 | அடிக்கடி புத்தியைச் சுழற்றுபவர் | | செவ்வா |
| 11 | | | 6 |
| ராகு | சனி | வியாழ | 7 |

விடை: புத்தித்தானாதிபதி வாக்குத்தானத்திலும் (2-ம் இடத்திலும்), வாக்குத்தானாதிபதி புத்தித்தானத்திலும் பகைநீசம் அடைந்தவராய், இருவரும் சரக்கிரகங்களாய், சரராசிக்கு அதிபர்களாய்ச் சரராசிகளில் இருக்கப் பிறந்தவர் தம் புத்தியையும் பேச்சையும் அடிக்கடி சுழற்றிக்கொள்ளும் சுபாவம் உடையவராய் இருப்பர்.

## 141. முடிவிலா யோசனையுடையவர்.

(These who think without making any decision.)

வினா: சிலர் முடிவுபெறாத ஆலோசனையுடையவராய், ஒரு கருமத்தையும் செய்யமாட்டாதவராய் வீணே யோசித்தவண்ணமாகவே இருக்கின்றனர். இதக்குக் காரணம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: முயற்சித்தானாதிபன் பலவீனனாகி 3, 6, 8, 11-ம் இடங்களில் அமர, புத்தித்தானாதிபன் 12-ம் இடத்தில் இருந்தாலும், அல்லது வக்கிராஸ்தமனகதியுடன் வேறு எங்கேயிருந்தாலும் இது போன்ற நிலைமையிற் பிறந்தவர் வீணாக யோசித்தவண்ணம் இருந்து (மனக்கோட்டை கட்டுவதேயன்றி) ஒரு கருமமும் முடிக்கமாட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கிர | கேது | சனி | 5 |
| ல சூரியன் சந்திர | மனக்கோட்டை கட்டுபவர் | | செவ்வா வியாழ |
| புதன் | | | 7 |
| 11 | 10 | ராகு | 8 |

## 142. சுயபுத்தி இல்லாதவர். (The indecisive.)

வினா: சிலர் தமக்கென நிலையான புத்தி இல்லாதவராய், முடிவுபெறாத ஆலோசனை உடையவராய், பிறர்புத்தியையே கேட்டு ஒழுகுபவராய் இருத்தற்குப் பிரமாணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | 12 | ல ராகு |
| 9 | சுயபுத்தி அற்றவர் | | 2 |
| சூரி புத வியாழ சுக்கிரன் | | | சனி |
| கேது | 6 | சந்திர செவ்வா | 4 |

விடை: புத்தித்தானம் சரராசியாக, அதிற் சந்திரன் செவ்வாய் பலவீனர்களாக இருக்க, இலக்கினாதிபதியும் புத்தித்தானாதிபதியும் கூடி நீசத்துவ வக்கிராஸ்தமன கதியில் எங்கேயாயினும் இருக்க; இலக்கினம் புத்தித்தானம் இவைகளையும் இவைகளுக்கு அதிபர்களையும் எவரும் நோக்காதிருக்கப் பூமியிற் பிறந்தவர் சுயபுத்தி இல்லாதவராகவும், அதிகமாய் ஆலோசனைசெய்தும் ஓர் தீர்மானஞ்செய்ய இயலாதவராகவும், அதனால் பிறர்புத்தியையே கேட்டு நடப்பவராகவும் திரிவர்.

## 143. பிறரால் ஏமாற்றப்படுபவர்.

## (Those who are duped by others.)

வினா: சிலர் பிறரால் எளிதில் ஏமாற்றப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: உதயலக்கினாதிபனும் புத்திக்தானாதிபனும் வக்கிரகதி அடைந்திருந்தாலும், உதயலக்கினாதிபனேனும் புத்திக்தானாதிபனேனும் பலங்குன்றிப் பலவானான சத்துருத்தானாதிபனுடன் இருந்தாலும், 1, 5-ம் இடங்கட்கு அதிபர் பலவீனராக, மேற்படி தானங்களில் 6, 8-ம் இடங்கட்கு அதிபர் இருந்தாலும் இது போன்ற நிலைமையிற் பிறந்தவர் பிறரால் எளிதில் ஏமாற்றப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | சூரியன் புதன் | சந்திர சுக்கிர ராகு |
| 2 | பிறரால் ஏமாற்றப் பட்டவர் | | 7 |
| ல வியாழ | | | சனி |
| கேது | செவ்வா | 10 | 9 |

## 144. பைத்தியம் பிடித்தவர். (The insane.)

வினா: சிலர் புத்திமாறுதல் உடையவர் (பைத்தியம் பிடித்தவர்) ஆக இருப்பதற்கு நியாயம் என்ன?

விடை: இலக்கினாதிபதியும் புத்திக்தானாதிபதியும் நீசவக்கிராஸ்தமனகதியுடன் மறைவுத்தானங்களில் (3-6-8-ம் இடங்களில்) இருக்கப் பிறந்தவர் புத்திமாறுதல் உடையவராகக் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| 8 | கேது | 10 | 11 |
| 7 | பைத்தியம் பிடித்தவர் | | 12 |
| வியாழ | | | ல செவ்வா |
| சனி | 4 | சூரி புத சுக்கிரன் ராகு | 2 |

## 145. பலவேறு விஷயங்களிற் புத்திசெலுத்துபவர்.

(Those who concentrate on different affairs)

வினா: சிலர் பலவேறுவகைத்தான விஷயங்களில் யோசனை செலுத்துபவராய் இருத்தற்கு நியாயம் என்ன?

விடை: புத்திக்தானாதிபதியும் இலக்கினாதிபதியும் உதயலக்கினத்தில் இருந்தால் தனது தேகத்தை அலங்காரம் செய்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலும், 2-ம் இடத்திலிருந்தால் பேச்சு கல்வி திரவியந் தேடுதல் இவைகளிலும், 3-ம் இடத்தில் இருந்தால் சகோதரப் பகுதியிலும் தனது சரீரவல்லபத்தை வளர்க்கும் விஷயத்திலும், 4-ம் இடத்திலிருந்தால் வாகனம் வீடு பூமி இவைகளை விருத்திசெய்வதிலும், புத்திஸ்தானத்திலேயே இருந்தால் திடசித்தம் ஆத்ம ஞானம் மந்திரசித்தி சாஸ்திர ஆராய்ச்சி முதலானவைகளிலும், 6-ம் இடத்தில் இருந்தால் சத்துருக்களுடன் வியாச்சியம் பேசுவதிலும், 7-ம் இடத்தில் இருந்தால் ஸ்திரீகளுடன் போககம் அனுபவிப்பதிலும், 8-ம் இடத்தில் இருந்தால் அடிக்கடி நோய் வாய்ப்பட்டு ஔஷதம் புசித்தல் முதலியவற்றிலும், 9-ம் இடத்தில் இருந்தால் தீர்த்தயாத்திரை புண்ணியகாரியங்கள் புத்திரர் விஷயங்களிலும், 10-ம் இடத்தில் இருந்தால் விடாப்பிடியாய் முயற்சிபார்க்கும் விஷயத்திலும், 11-ம் இடத்தில் இருந்தால் சகலகாரியங்களிலும் இலாபந்தேடும் விஷயத்திலும், 12-ம் இடத்தில் இருந்தால் கீர்த்தி சம்பாதிக்கும் விஷயத்திலுமாகத் தங்கள் புத்தியை விசேஷமாக உபயோகிப்பர்.

## சீவிய இலட்சியங்கள்

146. சீவிய இலட்சியங்கள். (The aims in life.)

விறு: உலகத்தில் மனிதர் ஒவ்வொருவரும் பலவேறு துறைகளில் இலட்சியம் (கண்ணோட்டம்) உடையவராகக் காணப்படுகின்றனர். அவரை வேறுபிரித்தறிவதற்குரிய உபாயமும் உளதா?

விடை: ஆம். 1, 5, 10-ம் இடங்கட்கு அதிபரைக்கொண்டு அறியலாம்.

147. தேகத்தை அலங்கரிப்பதில் இலட்சியமுடையவர்.

(Those who aim at perfecting their dress.)

விறு: சிலர் தங்கள் தேகத்தை ஆடையாபரணங்களால் அலங்கரிப்பதிலேயே இலட்சியம் (கண்ணும் கருத்தும்) உடையவராய், அதில் தங்கள் பூரணசக்தியையும் உபயோகிப்பவராக இருக்கின்றனர். இது எதனால்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: உதயலக்கினாதிபன் தன்னுடைய ஸ்தானத்திலேனும் சுகத்தானத்திலேனும் (4-ம் இடத்திலேனும்) பலவானாக இருக்க, புத்தித்தானாதிபனும் முயற்சித்தானாதிபனும் (10-ம் இடத்ததிபனும்) கூடி உதயராசியில் இருக்கப் பிறந்தவர் தமது தேகத்தை அலங்காரஞ் செய்வதிலேயே இலட்சியம் உடையவராக விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| கேது | சூரியன் சந்திர | ல புத சுக் சனி | 2 |
| 10 | தம் சரீரத்தை அலங்காரஞ் செய்நலில் இலட்சியம் உடையவர் | | செவ்வா வியாழ |
| 9 | | | 4 |
| 8 | 7 | 6 | ராகு |

## 148. தம்மை மறைத்தொழுகுவதில் இல்ட்சியமுடையவர்.

(Those who aim at acting behind the screen.)

வினா: சிலர் எல்லா விஷயங்களிலும் தம்மை மறைத்து ஒழுகுபவராய், சிறு சபைசந்திகளிலும் சமுகம் அளிக்கச் சம்மதம் இல்லாதவராய், (தற்காலம் தம் பெயரை மறைத்துப் பத்திரிகைகளில் புனைபெயருடன் வியாசம் முதலியன வரைபவராய்) தம்மைப் பிறரறியாமல் மறைந்துநின்று தாம் பிறருடைய இரகசியங்களை அறியுஞ் சக்தியுடையவராய், அவ்விஷயங்களில் இலட்சியமுடையவராய் இருப்பதற்குக் காரணம் யாது?

விடை: உதயலக்கினாதிபனும் 3-ம் இடத்ததிபனும் கூடி 3, 5, 6, 8, 11-ம் இடங்களில் இருக்க, 5, 10-ம் இடங்கட்கு அதிபர் திரிகோணகேந்திரங்களில் உச்சம் முதலியவற்றால் பூரண பலவான்களாக இருக்கப் பிறந்தவர், மேல் வினாவியவாறு தம்மைப் பிறர் அறியாமல் மறைந்துநின்று, தாம் பிறருடைய விஷயங்களை அறிவதில் இலட்சியமுடையவராக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் சந்திர சுக்கிரன் | செவ்வா ராகு | ல | 2 |
| புதன் | தம்மை மறைத்துப் பிறருடைய விஷயங்களை அறிவதில் இலட்சியம் உடையவர் | | 3 |
| சனி | | | 4 |
| 9 | 7 | கேது | வியாழ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

149. சாதுரியமாகப் பேசுவதில் இலட்சியமுடையவர்.

(Those who aim at perfecting their talents of speech.)

வினு: சிலர் வாக்குச்சாதுரியமாக வசனிப்பதிலேயே இலட்சியமுடையவராய், அவ்விஷயத்தில் தமது பூரண சக்தியையும் உபயோகிப்பவராய் இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: வாக்குத்தானுதிபன் (2-ம் இடத்ததிபன்) தன்னுடைய ஸ்தானத்திலேனும் 1, 10-ம் இடத்திலேனும் இருக்க, வாக்குத்தானத்தில் 1, 3, 5, 10-ம் இடங்கட்கு அதிபர் பலவான்களாக இருக்கப் பிறந்தவர் சாதுரியமாகச் சம்பாஷிப்பதிலேயே தமது இலட்சியத்தைச் செலுத்துவர்.

| | | | |
|---|---|---|---|
| சந்திர | செவ்வா | 12 | ல |
| ராகு | சாதுரியமாக வார்த்தை பேசுவதில் இலட்சியம் உடையவர் | | சூரி புத வியாழ சுக்கிரன் |
| 8 | | | கேது |
| 7 | 6 | சனி | 4 |

150. வேடிக்கை பார்ப்பதில் இலட்சியமுடையவர்.

(Those who aim at sight-seeing.)

வினு: சிலர் நூதன காட்சிகளிலேயே (வேடிக்கை பார்ப்பதிலேயே) இலட்சியமுடையவராக இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

விடை: நேத்திரத் தானுதிபன் (2-ம் இடத்ததிபன்) சுகத்தானத்தில் (4-ம் இடத்தில்) 1, 5, 10-ம் இடங்கட்கு அதிபருடன் இருந்தாலும், அவர்களது நோக்கம் பெற்றிருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் மற்றைய புலன்களால் நுகரும் இன்பத்திலும் பார்க்க நேத்திரானந்தத்திலேயே (கண்ணினுல் அனுபவிக்கும் இன்பத்திலேயே) இலட்சியமுடையவராக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | 10 | வியாழ | 12 |
| 8 | வேடிக்கை பார்ப்பதில் இலட்சியம் உடையவர் | | ல |
| 7 | | | 2 |
| சுக்கிரன் | புதன் | சூரியன் சந்திர செவ்வா | சனி கேது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 151. சங்கீதங் கேட்டலில் இலட்சியமுடையவர்.

(Those who aim at listening to music.)

**வினா:** சிலர் சங்கீதங் கேட்டலிலேயே கண்ணோட்டமுடையவராக இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| கேது | ல சந்திர | செவ்வா | சூரியன் சனி |
| 11 | சங்கீதத்தில் இலட்சியம் உடையவர் | | புதன் சுக்கிரன் |
| 10 | | | வியாழ |
| 9 | 8 | 7 | ராகு |

**விடை:** கேள்வித் தானாதிபன் (3-ம் இடத்ததிபன்) 4-ம் இடத்திலும், 4-ம் இடத்ததிபன் உதயலக்கினத்திலும் இருந்தாலும், 3-ம் இடத்திலேனும் அதிபனுடனேனும் 1, 5, 10-ம் இடங்கட்கு அதிபர் இருந்தாலும் இது போன்ற நிலைமையிற் செனித்தவர் நாதத்தைக் கேட்டு அனுபவிக்கும் இன்பத்திலேயே இலட்சியம் உடையவராகத் தெரியப்படுவர்.

## 52. இரகசிய கருமங்களில் இலட்சியமுடையவர்.

(Those who aim at accomplishing secret deeds.)

**வினா:** சிலர் அந்தரங்கமான கருமங்களைச் செய்துமுடித்தலிலேயே தமது முழுக்கவனத்தையுஞ் செலுத்துபவராய் இருத்தற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| 7 | 8 | 9 | சந்திர |
| 6 | இரகசிய கருமங்களில் இலட்சியம் உடையவர் | | கேது |
| ராகு | | | 12 |
| 4 | செவ்வா புதன் சனி | சூரியன் சுக்கிரன் | ல வியாழ |

**விடை:** வீரியத்தானாதிபன் (3-ம் இடத்ததிபன்) தன்னுடைய ஸ்தானத்தில் இருக்க, அதில் 1, 5, 10-ம் இடங்கட்கு அதிபர் பலவான்களாக இருக்கப் பிறந்தவர் இரகசியமான விஷயங்களை இயற்றி முடிப்பதிலேயே கண்ணுங் கருத்தும் உடையவராக விளங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 153. ருசியான உணவுகோள்வதில் இலட்சியமுடையவர்.
(Those who aim at taking delicious meals.)

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | 9 |
| சூரியன் புதன் ராகு | ருசிகரமாகப் புசிப்பதில் இலட்சியம் உடையவர் | | வியாழ |
| சந்திர செவ்வா சுக்கிரன் | | | கேது |
| 3 | 2 | ல சனி | 12 |

**வினா:** சிலர் ருசிகரமாக உண்பதிலேயே கண்ணோட்டம் உடையவராக இருக்கின்றனர். இது எதனால்?

**விடை:** சுகத்தானாதிபன் (4-ம் இடத்ததிபன்) உதயராசியில் இருக்க, 1, 2, 10-ம் இடங்கட்கு அதிபர் சுகத்தானத்தில் இருக்கப் பிறந்தவர் ருசிகரமாக உண்பதே இப்பிறவி எடுத்ததின் பிரயோசனம் என்று நினைத்து, அதில் இலட்சியமுடையவராக இருப்பர்.

## 154. மதுமயக்கத்தில் இலட்சியமுடையவர்.
(Those who aim at getting drunk.)

**வினா:** சிலர் தினமும் மதுபானம் (கஞ்சா, அபின், கள், சாராயம்) உண்டு, வெறியாட்டுக் களியாட்டுக் கொண்டு வேடிக்கையாய் இருப்பதிலேயே இலட்சியமுடையவராய் இருக்கின்றனர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | 2 | புதன் |
| 11 | மதுபானம் அருந்துவதில் இலட்சியம் உடையவர் | | சூரியன் சுக்கிரன் சனி ரா |
| கேது | | | 5 |
| 9 | சந்திர வியாழ | செவ்வா | 6 |

**விடை:** 1, 5, 7, 10-ம் இடங்கட்கு அதிபர் 4-ம் இடத்தில் இருக்க, 4-ம் 7-ம் இடங்கட்கு அதிபர் 4, 7, 12-ம் இடங்களில் இருந்தாலும்; 4-ம் இடத்ததிபன் 6, 8-ம் இடங்களில் இருந்தாலும்; 4-ம் இடத்தில் சனி இராகு இருந்தாலும் இது போன்ற நிலைமையிற் பிறந்தவர் மதுபானம் அருந்தி வெறியினால் மயங்கியிருப்பதே உலகில் மனிதராய்ப் பிறந்ததன் பிரயோசனம் என மயங்கி, எந்நேரமும் போதைகொண்டு திரிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 155. வண்டிச்சவாரியில் இலட்சியமுடையவர்.

(Those who aim at driving in vehicles.)

**வினு:** சிலர் வண்டி வாகனங்களில் இவர்ந்து பவனி வருதலில் இலட்சியமுடையவராக இருக்கின்றனர். இதற்கு நியாயம் எதுவோ?

**விடை:** வாகனத்தானுதிபனும் (4-ம் இடத்ததிபனும்) உதயலக்கினுதிபனும் கூடி முயற்சித்தானத்தில் பலவான்களாக இருக்க, முயற்சித்தானுதிபன் வாகனத்தானத்தில் பூரண பலவானுக இருக்கப் பிறந்தவர் நூதனமான வண்டி வாகனங்களில் சஞ்சாரஞ் செய்வதில் இலட்சியமுடையவராக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | வியாழ | 8 | 9 |
| 5 | வண்டி வாகனங்களில் பவனிவருதலில் இலட்சியம் உடையவர் | | சுக்கிரன் சனி கேது |
| சந்திரா ராகு | | | சூரியன் |
| 3 | 2 | ல செவ்வா | புதன் |

## 156. நீர்விளையாட்டில் இலட்சியமுடையவர்.

(Those who aim at enjoying baths.)

**வினு:** சிலர் தினமும் நீராடுவதிலேயே (ஜலக்கிரீடை புரிதல், ஜலத்துள் இருந்து தொழில் செய்தல் இவைகளில்) இலட்சியம் உடையவராக இருப்பதற்கு நியாயம் யாது?

**விடை:** கர்க்கடக ராசியில் புதன் சனி இராகு இருந்தாலும்; கர்க்கடகம் மகரம் கும்பம் மீனம் இவைகள் உதயமாக இவைகளில் சந்திரன் சுக்கிரன் சனி இருந்தாலும், மேற்சுட்டிய ராசிகள் 4, 9-ம் இடங்களாக அமைய அவ்விராசி அதிபர்களும் அவைகளில் இருந்தாலும், பல கிரகங்கள் நீராடும் (ஜலக்கிரீடை புரியும்) சமயத்தில்

| | | | |
|---|---|---|---|
| 9 | 10 | கேது | வியாழ |
| 8 | நீராடுதலில் இலட்சியம் உடையவர் | | ல சந் சுக் சனி |
| 7 | | | சூரியன் புதன் |
| 6 | ராகு | செவ்வா | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் இந் நிலைமையிற் பிறந்தவர் நீராடுதல், நீந்துதல், நீருளிருந்து மீன் சங்கு சிப்பி முதலியன சேகரித்தல் இவைகளில் இலட்சியமுடையவராய், இவ்விஷயத்தில் முழுக்கவனத்தையும் செலுத்துபவராய் விளங்குவர்.

## 157. புத்திரப்பேற்றில் இலட்சியமுடையவர்.

## (Those who aim at begetting children.)

வினா சிலர் புத்திரரைப் பெறுவதிலும் அவரை வளர்ப்பதிலுமே கண்ணோட்டமுடையவராக இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

விடை: புத்திரத்தானாதிபன் (5-ம் இடத்ததிபன்) தன்னுடைய ஸ்தானத்திலேனும் உதயலக்கினத்திலேனும் இருக்க, புத்திரத்தானத்தில் 1, 10-ம் இடங்கட்கு அதிபர் பலவான்களாக இருக்கப் பிறந்தவர் புத்திரரைப் பெறுவதிலும் அவரை வளர்ப்பதிலுமே இலட்சியமுடையவராக வாழ்வர்.

| | | | |
|---|---|---|---|
| 11 | 12 | ல ராகு | 2 |
| வியாழ | புத்திரரைப் பெறுவதில் | இலட்சியம் உடையவர் | 3 |
| 9 | | | செவ்வா |
| 8 | சந்திர கேது | 6 | சூரி புத சுக்கிரன் சனி |

## 158. புத்திமான்களாக இருப்பதில் இலட்சியமுடையவர்.

## (Those who aim at being wise.)

வினா: சிலர் தாம் புத்திமான்களாக இருப்பதிலேயே இலட்சியம் உடையவராய் இருக்கின்றனர். இது எதனால்?

விடை. புத்தித்தானாதிபன் (5-ம் இடத்ததிபன்) தன்னுடைய ஸ்தானத்தில் ஆட்சியாக இருக்க, புத்தித்தானத்தில் 1, 10-ம் இடங்கட்கு அதிபர் பலவான்களாக

| | | | |
|---|---|---|---|
| ல | 2 | 3 | ராகு |
| செவ்வா சனி | நுண்ணியபுத்தி உடையவராய் | இருப்பதில் இலட்சியம் உடையவர் | சந்திர வியாழ |
| சுக்கிரன் | | | 6 |
| சூரியன் புதன் கேது | 9 | 8 | 7 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கப் பிறந்தவர் தாம் எல்லார்க்கும் உபாயபுத்தி போதிக்கும் புத்திமான்களாக இருப்பதிலேயே இலட்சியமுடையவராக விளங்குவர்.

## 159. புதிய விஷயங்களைக் கண்டுபிடிப்பதில் இலட்சியமுடையவர்.

(Those who aim at inventing new things.)

**வினு:** சிலர் புதிய விஷயங்களை (கருவிகளை)க் கண்டுபிடிப்பதிலேயே கண்ணுங் கருத்தும் உடையவராக இருப்பதற்கு நியாயம் யாதோ?

**விடை:** புத்திஸ்தானதிபன் முயற்சிஸ்தானத்தில் இருக்க, முயற்சிஸ்தானதிபன் உதயலக்கினதிபனுடன் புத்திஸ்தானத்தில் ஆட்சியாக இருக்கும் அதிபனுடனுங் கூடி வக்கிரகதியடையாமல் இருந்தாலும், 1, 3, 5, 10-ம் இடங்கட்கு அதிபர் 10-ம் இடத்திலேயே பலவான்களாக இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் புதிய விஷயங்களை (கருவிகளை)க் கண்டுபிடித்தலிலேயே இலட்சியமுடையவராக இருப்பர்.

## 160. வேட்டைத்தொழில் கொலைத்தொழில்களில் இலட்சியமுடையவர்.

(Those who aim at hunting and fighting.)

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ்வா | ல | வியாழ |
| 10 | போர்புரிதலில் இலட்சியம் உடையவர் | | 3 |
| 9 | | | 4 |
| 8 | 7 | சூரி சந் புத சுக் சனி | கேது |

**வினு:** சிலர் வேட்டைத் தொழில், சண்டையிடுதல், வழக்காடுதல் இவைகளில் இலட்சியம் உடையவராய் விளங்குகின்றனர். இது எதனுல்?

**விடை:** 1, 3, 5, 10-ம் இடங்கட்கு அதிபர் 6-ம் இடத்தில் அந்தத் தானதிபனேடு சேர்ந்திருக்கும் அமையத்தில் உதித்தவர் வேட்டைத்தொழில், கொலைத்தொழில், யுத்தம்புரிதல் இவைகளிலேயே இலட்சியமுடையவராக விளங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 161. காமசுகத்தில் இலட்சியமுடையவர்.

(Those who aim at enjoying sexual bliss.)

**வினா:** சிலர் புணர்ச்சியின்பம் சுகிப்பதிலேயே இலட்சியம் உடையவராய் அவ்விஷயத்தில் தமது பூரணசக்தியை உபயோகிப்பவராய் இருக்கின்றனர். இதற்குக் காரணம் யாது?

**விடை:** 1, 3, 5, 10-ம் இடங்கட்கு அதிபர் இன்பத்தானத்தில் (7-ம் இடத்தில்) ஆட்சி புரியும் ஸ்தானாதிபனுடன் கூடிப் பலவான்களாக இருக்கப் பிறந்தவர் எப்பொழுதும் காம இன்பஞ் சுகிப்பதிலேயே கண்ணோட்டம் உடையவராக இருப்பார்.

| | | | |
|---|---|---|---|
| 6 | சந் செ வியாழ சுக் சனி | கேது | சூரியன் புதன் |
| 5 | புணர்ச்சி இன்பத்தில் இலட்சியம் உடையவர் | | 10 |
| 4 | | | 11 |
| 3 | ராகு | ல | 12 |

## 162. சூதாடுவதில் இலட்சியமுடையவர்.

(Those who aim at gambling and stealing.)

**வினா:** சிலர் சூதாடுவதிலும், பிறர்சொத்தைத் திருட்டுத்தனமாக அபகரிப்பதிலும் இலட்சியம் உடையவராயிருக்கின்றனர். இது எதனால்?

**விடை:** 1, 5, 10-ம் இடங்கட்கு அதிபர் எட்டாமிடத்தில் இருக்க, எட்டாமிடத்ததிபன் 8, 12-ல் இருக்கப் பிறந்தவர் எந்நேரமும் பொய்பேசுதல், சூதாடுதல், ஏமாற்றுதல்; திருடுதல், கலகஞ்செய்தல், பிறர் தாரத்தைச் சேருதல் முதலிய துட்ட தூர்த்த காரியங்களிலேயே இலட்சியம் உடையவராய் இருப்பார்.

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | 2 | 3 |
| 11 | சூதாடுவதில் இலட்சியம் உடையவர் | | கேது |
| சந்திர ராகு | | | 5 |
| புதன் | சூரியன் செவ்வா சனி | சுக்கிரன் | வியாழ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 163. புண்ணிய காரியங்களில் இலட்சியமுடையவர்.

(Those who aim at performing sacred deeds.)

வினா: சிலர் விரதம், ஜபம், தபம், தெய்வாராதனை முதலிய புண்ணிய காரியங்களிலேயே இலட்சியமுடையவராக இருப்பதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| சந்திர செவ்வா | 10 | சூரியன் புதன் சுக்கிரன் | 12 |
| ராகு | தெய்வ ஆராதனையில் | | ல வியாழ |
| 7 | இலட்சியம் உடையவர் | | கேது |
| 6 | 5 | சனி | 3 |

விடை: 1, 5, 10-ம் இடங்கட்கு அதிபர் புண்ணியத்தானத்தில் (9-ம் இடத்தில்) இருந்தாலும், 9-ம் இடத்திற்கு அதிபன் பூரண பலவானாகி 1-4-5-7-9-10-ம் இடங்களில் இருந்தாலும் இது போன்ற நிலைமையிற் பிறந்தவர் இடைவிடாது தீர்த்தயாத்திரை செய்தல், விரதங்கள் அனுஷ்டித்தல், அன்போடு ஆலயந் தொழுதல், தானதருமம் புரிதல் முதலிய புண்ணிய காரியங்களிலேயே இலட்சியம் உடையவராக விளங்குவர்.

### 164. முயற்சியுடன் இருப்பதில் இலட்சியமுடையவர்.

(Those who aim at being actively occupied.)

வினா: சிலர் (தாம் செய்யும் தொழிலினால் அற்பமான ஊதியம் பெறுபவராயினும் அதனைப் பொருட்படுத்தாது) எந்நேரமும் முயற்சி செய்துகொண்டிருப்பதிலேயே இலட்சியம் உடையவராய் இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | சந்திர | 5 |
| ல | முயற்சி செய்தலில் | | கேது |
| ராகு | இலட்சியம் உடையவர் | | 7 |
| 11 | செவ்வா புதன் சனி | சூரியன் சுக்கிரன் | வியாழ |

விடை: முயற்சித்தானாதிபன் (10-ம் இடத்ததிபன்) தன்னுடைய ஸ்தானத்தில் ஆட்சியாக இருக்க, முயற்சித்தானத்தில் 1, 3, 5-ம் இடங்கட்கு அதிபர் இருக்கப் பிறந்தவர் முயற்சிபார்க்கும் தொழிலிலேயே இலட்சியம் உடையவராய், கடமை செய்வதையே பெரிதாகக் கருதி இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 165. இலாபம் பெறுவதிலேயே இலட்சியமுடையவர்.

(Those who aim at making profit.)

| | | | |
|---|---|---|---|
| புதன் வியாழ சுக் சனி | சூரியன் | ல சந்திர | செவ்வா கேது |
| 10 | இலாபம் பெறுவதில் இலட்சியம் உடையவர் | | 3 |
| 9 | | | 4 |
| ராகு | 7 | 6 | 5 |

வினா: சிலர் எவ்வழியாகவேனும் இலாபம் பெறுவதிலேயே கண்ணோட்டமுடையவராக இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: இலாபத்தானுதிபன் தன்னுடைய ஸ்தானத்திலேயே அமர, இலாபத்தானத்தில் 1, 5, 10-ம் இடங்கட்கு அதிபர் இருக்க இவ்வமையம் உதித்தவர் எவ்விதமாயேனும் இலாபம் பெறுவதிலேயே கண்ணுங் கருத்தும் உடையவராகச் சீவிப்பர்.

## 166. கீர்த்திபெறுவதில் இலட்சியமுடையவர்.

(Those who aim at getting good fame.)

| | | | |
|---|---|---|---|
| சந்திர | 4 | கேது | 6 |
| 2 | கீர்த்தியில் இலட்சியம் உடையவர் | | 7 |
| ல சூரியன் புதன் | | | செவ்வா |
| வியாழ சுக்கிரன் சனி | ராகு | 10 | 9 |

வினா: சிலர் எல்லாச் சுகத்திலும் பார்க்கக் கீர்த்திச் சுகத்திலேயே இலட்சியம் உடையவராக இருக்கின்றனர். இது எதனுல்?

விடை: கீர்த்தித் தானுதிபன் (12-ம் இடத்தவன்) தன்னுடைய ஸ்தானத்திலேனும் 4-ம் இடத்திலேனும் இருக்க, 1, 5, 10-ம் இடங்கட்கு அதிபர் கீர்த்தித்தானத்தில் இருக்கப் பிறந்தவர் கீர்த்தி ஒன்றிலேயே இலட்சியம் உடையவராக இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

167. நித்திரைச் சுகத்தில் இலட்சியமுடையவர்.

(Those who aim at enjoying sleep.)

வினா: சிலர் நித்திரைசெய்வதிலேயே இலட்சியமுடையவராக இருப்பதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 4 | சந்திர | 6 | 7 |
| ராகு | நித்திரை செய்தலில் இலட்சியம் உடையவர் | | வியாழ |
| 2 | | | கேது |
| ல | சூரியன் புதன் | செவ்வா சனி | சுக்கிரன் |

விடை: 2, 12-ம் இடங்கட்கு அதிபர் 3, 4, 6, 8, 11-ம் இடங்களில் இருக்கப் பிறந்தவர் நித்திரைசெய்தலே தாம் பிறந்ததன் பிரயோசனமென்று கருதி அதிலேயே இலட்சியம் உடையவராக இருப்பர்.

---

## ஆறும் பாவ பலன்

---

### சத்துரு

168. சத்துருக்களால் இலாபம் அடைபவர்.

(Those who extort wealth from their enemies.)

வினா: சிலர் சத்துருக்கள்மூலமாய் வியாச்சியந் தொடுத்தல் முதலியவைகளால் அதிக இலாபம் அடைபவராய், சத்துருவசியம் உடையவராய் இருத்தற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| 8 | 9 | சந்திர ராகு | 11 |
| வியாழ | சத்துருக்களால் பொருள் லாபம் அடைந்தவர் | | 12 |
| 6 | | | ல குசெபுத சுக் சனி |
| 5 | கேது | 3 | 2 |

விடை: உதயலக்கினத்தில் ஆட்சிபெற்றுள்ள அதிபனுடன் சத்துருத் தானாதிபதியும் (6-ம் இடத்தலைவனும்) இலாபத்தானாதிபதியும் கூடிப் பலவான்களாக இருக்கப் பிறந்தவர் சத்துருக்கள்மூலம் பொருள் இலாபம் அடைபவராய்ச் சத்துருக்களை வசீகரஞ்செய்து வாழ்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 169. சத்துருக்களால் நஷ்டம் அடைபவர்.

(Those who suffer loss by their enemies.)

**வினா:** சிலர் சத்துருக்களால் அடிக்கடி பொருட்சேதம் அடைபவராய் இருத்தற்கு நியாயம் என்ன?

| 10 | 11 | 12 | ல<br>கேது |
|---|---|---|---|
| 9 | சத்துருக்களால் | | செவ்வா |
| 8 | பொருட்சேதம் அடைந்தவர் | | 3 |
| ராகு | சந்திர<br>புதன்<br>சுக் சனி | சூரியன்<br>வியாழ | 4 |

**விடை:** இலக்கினாதிபதி சத்துருத்தானத்திலும் சத்துருத்தானாதிபதி திரவியத்தானத்திலும் (2-ம் இடத்திலும்) இருந்தாலும், செவ்வாய் சனி இருவருளொருவர் திரவியத் தானத்திற்கோ சத்துருத் தானத்திற்கோ அதிபராகிச் செலவுத்தானத்தில் (12-ம் இடத்தில்) இருந்தாலும் இவ்வாறான நிலைமையிற் பிறந்தவர் சத்துருக்கள் மூலம் திரவியச்சேதம் அடைபவராய் இருப்பர்.

## 170. சத்துருக்களால் வீடு பூமிகளை இழப்பவர்.

(Those who lose their houses and lands through their enemies.)

**வினா:** சிலர் சத்துருக்கள் மூலம் வீடு, பூமி இவைகளை இழந்துவிடுகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** சத்துருத்தானாதிபதி (6-ம் இடத்தலைவன்) பகை நீசனாகிப் பூமித்தானத்தில் (4-ம் இடத்தில்) அந்தத் தானாதிபதியுடன் இருக்கப் பிறந்தவர் வீடு, பூமி முதலிய பொருட்களைச் சத்துருக்கள் மூலம் இழப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுதவிரணம்

### 171. ஆயுதங்களால் தாக்கப்படுபவர்.

(Those who are wounded by weapons)

வினு: சிலர் அடிக்கடி ஆயுதங்களினுல் ஆபத்தை அடைகின்றனர். இது எதனுல்?

விடை: சத்துருத்தாளுதிபதியும் செவ்வாயும் கேதுவும் கூடி 8-ம் இடத்தில் இருக்கப் பிறந்தவர் (சத்துருக்கள் மூலம்) ஆயுதங்களால் காயப்படுத்தப் படுவர்.

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 5 | சுக்கிரன் |
| சனி ராகு | ஆயுதங்களால் காயமுற்றவர் | | சந்திர |
| ல | | | சூரி செ புதன் கேது |
| 12 | வியாழ | 10 | 9 |

## சிறை

### 172. சிறைச்சாலைகளில் வாழ்பவர்.

(Those who spend their lifetime in the prisons.)

வினு: சிலர் அடிக்கடி சிறைச் சாலைகளில் வாசஞ்செய்கின்றனர். இதற்கு நியாயம் என்ன?

விடை: இலக்கினதிபதியும் வீட்டுத்தாளுதிபதியும் (4-ம் இடத் தலைவனும்) வியாழனும் கூடிச் சத்துருத்தானத்தில் பலவீனர்களாக இருக்க, சத்துருத்தாளுதிபதி வீட்டுத்தானத்தில் பூரண பலவானுக இருக்கப் பிறந்தவர் அதிகமாகச் சிறைச்சாலைகளிலேயே தம் வாழ்நாளைக் கழிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் ராகு | 5 | சூரியன் புதன் வியாழ | 7 |
| செவ்வா | சிறைச்சாலைகளில் வாழ்பவர் | | 8 |
| சந்திர | | | 9 |
| ல | 12 | 11 | சனி கேது |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துக்கம்

### 173. அடிக்கடி துக்கம் அடைபவர்.

(Those who are often afflicted by sorrow.)

வினு: சிலர் எப்பொழுதும் அடிக்கடி துக்கத்தை அடைந்து அதனுல் வாதைப்படுகின்றனர். இது எதனுல்?

விடை: உதய இலக்கினம் திரராசியாக இருக்க (இடப, சிங்க, விருச்சிக, கும்பங்களாக அமைய) இலக்கினதிபன் சத்துருத்தானதிபனுடன் கூடினுலும், மேற்படி தானதிபனுக இருந்தாலும், மேற்படி தானதிபன் உதயலக்கினத்தில் இருந்தாலும் இவ்வாருன நேரத்திற் பிறந்தவர் அடிக்கடி கவலைகளாற் பீடிக்கப் பட்டவர்களாகக் காணப்படுவர்.

## ரோகம்

### 174. பித்தரோகத்தினுல் வருந்துபவர்.

(Those who suffer from bilious affections.)

**வினு:** சிலர் மூளைக்கொதிப்பு, இரத்தபித்தம், பைத்தியம் முதலான பித்தரோகத்தினுல் தம் வாழ்நாள் வரையும் வாதையடைகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

விடை: உதயலக்கினதிபதி ரோகத்தானத்தில் (6-ம் இடத்தில்) இருக்க ரோகத்தானதிபதி புத்தித்தானத்தில் (5-ம் இடத்தில்) சூரியனுடன் இருந்தாலும், உதயராசியில் செவ்வாயும் புத்தித் தானத்தில் ஆட்சியான சூரியனும் புதனும் அமர்ந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் பித்தரோகத்தினுல் பீடிக்கப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| ல செவ்வா சனி | 2 | ராகு | 4 |
| 12 | பித்த ரோகத்தினுல் வருந்துபவர் | | சூரியன் புதன் |
| 11 | | | குரு சுக்கிரன் |
| 10 | கேது | சந்திர | 7 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 175. தலையில் இரணசிகிச்சை செய்யப்படுபவர்.

(Those who undergo operations in their head.)

**வினா:** சிலர் தலையிலே ரோகமுள்ளவர்களாக அல்லது வெட்டுப்படுபவர்களாக (ஆப்பரேஷன் செய்விப்பவராய்) இருப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** உதயலக்கினாதிபதி பலவீனனாக இருக்க, உதயலக்கினத்தில் சத்துருத்தானாதிபனும் (6-ம் இடத்தவனும்) செவ்வாயும் இருக்கப் பிறந்தவர்கள் தலையிலே (மூளை, பண்டை முதலான இடங்களில்) ரோகமுடையவர்களாக அல்லது தலையில் வெட்டுப்படுபவர்களாக (அல்லது ஆப்பரேஷன் செய்விப்பவர்களாகக்) காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரியன் வியாழ சனி | சுக்கிரன் கேது | 5 |
| ல சந்திர செவ்வா | தலையில் இரணசிகிச்சை | செய்யப்பட்டவர் | 6 |
| 12 | | | 7 |
| 11 | ராகு | 9 | 8 |

## 176. முகத்தில் ரோகம் உடையவர்.

(Those who suffer from diseases of the eyes, nose and mouth.)

**வினா:** சிலர் முகத்தில் ரோகமுடையவராக அல்லது முகம் வெட்டுப்படுபவராக (கண், கபோலம், மூக்கு, வாய் முதலான இடங்களில் ஆப்பரேஷன் செய்விப்பவர்களாக) இருப்பதற்கு நியாயம் யாது?

**விடை:** 2-ம் இடத்ததிபன் 6, 8, 12-ல் துர்ப்பலமாக இருக்க, சத்துருத்தானாதிபனும் செவ்வாயும் சுக்கிரனும் கூடி 2-ம் இடத்தில் இருந்தாலும், முகத்தானாதிபன் (2-ம் இடத்தவன்) சனி செவ்வாயின் அம்சத்தில் அமர்ந்தாலும், சனியும் 2-ம் இடத்ததிபனும் கூடி 6-ம் இடத்தில் இருந்தாலும் இவ்வாறான நோத்

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | 12 | ல கேது |
| 9 | முகத்தில் | ரோகமுடையவர் | செவ்வா |
| 8 | | | 3 |
| ராகு | சந்திர சுக்கிரன் சனி | சூரியன் புதன் வியாழ | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் உதித்தவர் முகத்தில் (கண், கபோலம், நாசி, வாய் முதலான இடங்களில்) ரோகமுடையவராக அல்லது மேற்சுட்டிய அங்கங்கள் வெட்டுப்படுபவராக (ஆப்பிறேஷன் செய்விப்பவராக)க் காணப்படுவர்.

### 177. முகத்திற் கெட்டநாற்றம் உடையவர்.

(Those who have an offensive smell in their face.)

**வினா:** சிலர் முகத்திற் கெட்டநாற்றம் உடையவராய் இருக்கின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** செவ்வாய் உதயராகியினும் சுக்கிரன் 6-ம் இடத்தினுமாக இருந்தாலும், சனியும் இராகுவும் இலக்கினத்தை நோக்கினுலும், 2-ம் இடத்திற்கு அதிபதி பாபக்கிரக நோக்குடன் கூடிச் சனிநவாம்சத்தில் பலவீனனாக இருந்தாலும் இவ்வாறான நேரத்தில் உதித்தவர் முகத்தில் எந்நேரமும் அசுத்தநாற்றம் உடையவராய் இருப்பர்.

### 178. கண்களில் ரோகம் உடையவர்.

(Those who suffer from eye diseases.)

**வினா:** சிலர் கண்களில் ரோகமுடையவராய் இருப்பதற்குக் காரணம் என்ன?

**விடை:** ஆயுட்டானதிபதியும் (8-ம் இடத்ததிபனும்) சத்துருத்தானதிபதியும் சுக்கிரனும் சூரியனும் கூடி நேத்திரத்தானத்தில் (2-ம் இடத்தில்) இருக்கப் பிறந்தவர் எந்நாளும் கண்களில் ரோகமுடையவராகக் காணப்படுவர்.

### 179. மூக்கில் வியாதி உடையவர்.

(Those who always suffer from diseases of the nose.)

**வினா:** சிலர் மூக்கில் தினமும் வியாதி உடையவராய் இருப்பதற்கு நியாயம் யாது?

**விடை:** செவ்வாய் உதயலக்கினத்திலும் சுக்கிரன் 6-ம் இடத்திலும் பலவீனராக, நவாம்சத்திலும் இப்படியே இருக்கப் பிறந்தவர் மூக்கில் சீழ் இரத்தம் வடிபவராய், மூக்குநோயால் (பீனச வியாதியால்) வருந்துபவராய் இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 180. நாக்கில் வியாதி உடையவர்.

(Those who always suffer from diseases of the tongue.)

**வினா:** சிலர் நாக்கில் துன்பம் உடையவராய்த் தினமும் வருந்துகின்றனர். இதற்குக் காரணம் யாது?

**விடை:** நவாம்சலக்கினத்தில் கேதுவும், சனியும் பலவீனர்களாக இருக்கப் பிறந்தவர் நாக்கில் வியாதியுடையவராய் விளங்குவர்.

### 181. இளமையில் பற்களை இழப்பவர்.

(Those who lose their teeth prematurely.)

**வினா:** சிலர் தம் இளமைப் பராயத்தில் பற்களை இழந்து பொக்கைவாயராகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| 9 | 10 | 11 | கேது |
| 8 | இளமையில் பற்களை இழந்தவர் | | ல செவ்வா |
| 7 | | | 2 |
| சூரியன் புதன் ராகு | சந்திரன் சுக்கிரன் சனி | வியாழ | 3 |

**விடை:** 2-ம் இடத்திற்கதிபதி 6-ம் இடத்தில் இராகுவுடன் கூடியிருந்தாலும், 2-ம் இராசிக்கு அதிபனுடன் 6-ம் இராசிக்கு அதிபன் கூடினாலும் நோக்கினாலும், மேற்சுட்டிய 6-ம் அதிபனுடன் புதன், இராகு அல்லது கேது மூவரும் கூடி 2-ம் அதிபனை நோக்கினாலும் இவ்வாறான நிலைமையிற் பிறந்தவர் தம் இளம் வயதிலேயே பற்களை இழந்துவிடுவர்.

### 182. கழுத்து, புயம், கைகளில் ரோகம் உடையவர்.

(Those who suffer from diseases
of the neck, shoulders and hands.)

**வினா:** சிலர் கழுத்து, புயம், கைகள் இவைகளில் ரோகம் உடையவராக அல்லது இவைகள் வெட்டுப்படுபவராக இருப்பதற்கு நியாயம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: 3-ம் இடத்ததிபன் 6, 8, 12-ல் பலங்குன்றி இருக்க, 3-ம் இடத்தில் சத்துருத்தானாதிபனுடன் (6-ம் இடத்ததிபனுடன்) செவ்வாய் அல்லது சனி கூடி இருந்தாலும், 3-ம் இடத்ததிபன் 6-ம் இடத்ததிபனுடைய அம்சத்திலேனும் செவ்வாயின் அம்சத்திலேனும் அமர, 3-ம் இடத்ததிபதி இலக்கினாதிபனுடன் கூடிச் சத்துருத்தானத்தில் இருந்தாலும் இவ்வித நேரத்தில் உதித்தவர் கழுத்து, புயம், கைகளில் ரோகமுடையவராக, அல்லது இவ்வங்கங்கள் வெட்டுப்படுபவராக விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| 5 | சந்திர<br>சனி<br>கேது | 7 | வியாழ |
| சூரியன் | கை வெட்டுப் பட்டவர் | | 9 |
| செவ்வா<br>புதன் | | | 10 |
| சுக்கிரன் | ல | ராகு | 11 |

## 183 செவிகளில் ரோகமுடையவர்.

## (Those who suffer from diseases of the ear.)

வினா: சிலர் செவிகளில் ரோகமுடையவர்களாகப் பிறத்தற்கு நியாயம் யாது?

விடை: கேள்வித்தானாதிபதி (3-ம் இடத்ததிபதி) பிணித்தானத்தில் (6-ம் இடத்தில்) இருக்க, கேள்வித்தானத்தில் பிணித்தானாதிபதியும் புதனும் பகைநீசாம்சத்தில் இருந்து பாபர் பார்க்கப் பிறந்தவர் செவிநோயினால் துன்புறுபவராகவோ செவிடராகவோ இருப்பர்.

## 184. தொண்டைநோயினால் துன்புறுபவர்.

## (Those who suffer from throat diseases.)

வினா: சிலர் கண்டமாலை முதலிய தொண்டைநோயினால் பீடிக்கப்படுவதற்கு நியாயம் என்ன?

விடை: ஆயுட்டானத்தில் (8-ம் இடத்தில்) இருந்த சந்திரனை ரோகத்தானாதிபதியும் சனியும் செவ்வாயும் நோக்கப் பிறந்தவர் தொண்டைநோயினால் துன்புறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 185. மார்பு, முதுகுகளில் ரோகமுடையவர்.

(Those who suffer from diseases of the chest and back.)

**வினா:** சிலர் மார்பு, முதுகு முதலான இடங்களில் ரோகம் உடையவராக அல்லது இவைகள் வெட்டுப்படுபவராக இருப்பதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 12 | ல ராகு | வியாழ | 3 |
| 11 | முதுகில் இரண சிகிச்சை செய்யப்பட்டவர் | | சூரியன் செவ்வா புத சுக் |
| 10 | | | 5 |
| 9 | சந்திர | கேது | சனி |

**விடை:** 4-ம் இடத்ததிபன் 6, 8, 12-ல் பலவீனமாக அமர்ந்தாலும், அல்லது 6-ம் இடத்ததிபன் செவ்வாய் இவர்களது அம்சத்தில் இருந்தாலும், 6-ம் இடத்ததிபனும் சுக்கிரனும் செவ்வாயும் 4-ம் இடத்தில் இருந்தாலும் இவ்வித நிலையையிற் பிறந்தவர் மார்பு, முதுகு இவைகளில் வியாதியுடையவராய் அல்லது இவ்வங்கங்கள் வெட்டுப்படுபவராய் விளங்குவர்.

## 186. இருதயரோகமுடையவர்.

(Those who suffer from diseases of the heart.)

**வினா:** சிலர் இருதய ரோகத்தினால் தினமும் பாதிக்கப்படுபவராய், இருதயம் பிளக்கப்படுபவராய் இருப்பதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 9 | 10 | கேது | சந்திர |
| 8 | இருதயவியாதி உடையவர் | | ல |
| 7 | | | 2 |
| சூரியன் செவ்வா சுக்கிரன் | புதன் வியாழ சனி ரா | 4 | 3 |

**விடை:** இருதயத் தானாதிபதி (5-ம் இடத்ததிபன்) 6, 8, 12-ம் இடங்களில் பலவீனனாக அமர, இருதயத்தானத்தில் ரோகத்தானாதிபன் சனி செவ்வாய் ராகு கூடியிருந்தாலும், இருதயத்தானாதிபன் மேற்சுட்டிய மூவரில் எவருடைய அம்சத்திலேனும் இருந்தாலும் இதிற் பிறந்தவர் நிச்சயமாக இருதயரோகத்தினால் பீடிக்கப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 187. வயிற்றில் ரோகமுடையவர்.

(Those who suffer from diseases of the stomach, liver, spleen and intestines.)

**வினு:** சிலர் வயிற்றில் (தீனிப்பை, பித்தப்பை, ஈரற்பை, குடல் முதலிய உறுப்புக்களில்) ரோகமுடையவராய் இருத்தற்கு நியாயம் என்ன?

**விடை:** உதரத் தானத்தின் (6-ம் இடத்தின்) அதிபன் 8-ம் இடத்தில் இருந்தாலும், 8-ம் இடத்ததிபன் சூரியன் சனி செவ்வாயுடன் கூடி 6-ம் இடத்தில் அமர்ந்தாலும், 6-ம் இடத்ததிபன் மேற்சுட்டிய நால்வரில் ஒவரது அம்சத்திலேனும் இருந்தாலும் இதில் உதித்தவர் வயிற்றில் எந்நாளும் ரோகமுடையவராய் அல்லது வயிற்றுள் ஆயுதப்பிரயோகம் செய்யப்படுபவராய்க் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| ல | 2 | 3 | ராகு |
| 12 | வயிற்று நோயினால் வாதை அடைந்தவர் | | 5 |
| 11 | | | சந்திர செவ்வா சனி |
| வியாழ கேது | 9 | சூரியன் | புதன் சுக்கிரன் |

## 188. குண்டிக்காய், மூத்திராசயம், பீஜம், கருப்பை முதலிய உறுப்புக்களில் ரோகமுடையவர்.

(Those who suffer from diseases of the kidney, bladder, testicles, and womb.)

**வினு:** சிலர் குண்டிக்காய், மூத்திராசயம், பீஜம், கருப்பை முதலிய அவயவங்களில் ரோகமுடையவராய், இவைகளில் சத்திரப் பிரயோகம் செய்யப்படுபவராய் விளங்குதற்கு நியாயம் யாது?

**விடை:** 7-ம் இடத்ததிபன் 6, 8, 12-ல் இருக்க, 7-ம் இடத்தில் 6-ம் இடத்ததிபன், 8-ம் இடத்ததிபன், சனி செவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 5 | 6 |
| 2 | அண்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்ட வர் | | செ புத சனி ராகு |
| ல கேது | | | சூரியன் சந்திர |
| 12 | 11 | வியாழ | சுக்கிரன் |

வாய் ராகுகேதுக்கள் இருந்தாலும், 7-ம் இடத்ததிபனுடைய அம்சத்தில் , மேற்கூறியவர்களில் எவர் இருந்தாலும் நோக்கினாலும் இதிற் பிறந்தவர் மேற்கூறிய அங்கங்களில் ரோகம் உடையவராய் அல்லது அவ்வங்கங்கள் வெட்டிப் படுபவராய் (ஆப்பரேஷன் செய்யப்படுபவராய்) விளங்குவர்.

## 189. பெண்வியாதியினாற் பீடிக்கப்படுபவர்.

(Those who suffer from venereal diseases.)

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | ராகு | ல |
| 9 | பெண் வியாதியினாற் பீடிக்கப்பட்ட வர் | | 2 |
| செவ்வா வியாழ | | | சனி |
| சந்திர | சுக்கிரன் கேது | சூரியன் | புதன் |

வினா: சிலர் (மர்மத்தானத்தில்) ஸ்திரீசம்பந்தமான ரோகங்களால் அடிக்கடி பீடிக்கப்படுகின்றனர். இதற்குக் காரணம் என்ன?

விடை: ரோகத் தானத்தில் சுக்கிரன் இருக்க, ரோகத்தானாதிபதியும் களத்திரத்தானாதிபதியும் (7-ம் இடத்தலைவனும்) கூடி மிருத்துத்தானத்தில் (8-ம் இடத்தில்) இருக்கப் பிறந்தவர் ஸ்திரீசம்பந்தமான பல ரோகங்களால் எந்நாளும் பாதிக்கப்படுவர்.

## 190. மூல, பகந்தர ரோகங்களினால் பீடிக்கப்படுபவர்.

(Those who suffer from piles and fistula.)

வினா: சிலர் மூலம், சகனம் முதலான அங்கங்களில் ரோகமுடையவராய் அல்லது வெட்டுப்படுபவராய் இருத்தற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 11 | கேது | ல | சந்திர |
| 10 | மூலரோகம் உடையவர் | | 3 |
| 9 | | | 4 |
| செவ்வா வியாழ சுக் சனி | சூரியன் | புதன் ராகு | 5 |

விடை: 8-ம் இடத்ததிபனும் இலக்கினாதிபனும் கூடி 6-ம் இடத்தில் நின்றாலும், 6-ம் இடத்ததிபனும் வியாழனும் சனியும் செவ்வாயும் கூடி 8-ம் இடத்தில் இருந்தாலும், 8-ம் இடத்ததிபனுடைய அம்சத்தில் ரோகத்தானாதிபன் சனி செவ்வாய் வியாழன் சேர்ந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் மூலம், சகனம் முதலிய அவயவங்களில் ரோகமுடையவராய் அல்லது இவ் வங்கங்கள் வெட்டுப்படுபவராய் (ஆப்பரேஷன் செய்யப்படுபவராய்)க் காணப்படுவர்.

## 191. தோடையில் ரோகமுடையவர்.

## (Those who suffer from diseases of the thigh.)

வினா: சிலர் தொடையில் ரோகமுடையவராய், அல்லது தொடை முறிதல், வெட்டுப்படுதல் உடையவராய் இருத்தற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 4 | புதன் |
| ல | தொடையில் இரணசிகிச்சை செய்யப்பட்டவர் | | சூரி சுக் சனி ராகு |
| கேது | | | 7 |
| 11 | வியாழ | சந்திர செவ்வா | 8 |

விடை: 9-ம் இடத்தவனும் இலக்கினாதிபனும் கூடி ரோகத்தானத்தில் இருக்க, ரோகத்தானாதிபன் 9-ம் இடத்தில் செவ்வாயுடன் கூடியிருந்தாலும்; 9-ம் இடத்ததிபனுடைய அம்சத்தில் சனி செவ்வாய் ரோகத்தானாதிபன் அமர்ந்தாலும் இவ்வித நிலைமையில் உதித்தவர் தொடையில் ரோகமுடையவராய் அல்லது ஆபுதப்பிரயோகம் செய்யப்படுபவராய்க் காணப்படுவர்.

## 192. முழங்காலில் ரோகமுடையவர்.

## (Those who suffer from diseases of the knee.)

வினா: சிலர் முழங்காலில் ரோகமுடையவராய், அல்லது முழங்கால் என்புகள் முறிபடுபவராய், வெட்டுப்படுபவராய் இருத்தற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: 10-ம் இடத்ததிபனும் இலக்கினாதிபனும் 6, 8, 12-ல் இருக்குமிடத்தில் சனி செவ்வாய் சத்துருத்தானாதிபன் கூடினாலும், 10-ம் இடத்ததிபனுடைய அம்சத்தில் மேற்சுட்டிய மூவரில் எவரேனும் இருந்தாலும் இவ்வேளையிற் பிறந்தவர் முழங்கால் முடக்கமுடியாத ரோகமுடையவராய், அல்லது முழங்காலில் வெட்டுப்படுபவராய் விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | ராகு | 6 |
| வியாழ | முழங்காலில் | ரோகமுடையவர் | 7 |
| ல | | | சூரி செ புத சுக் சனி |
| சந்திரன் | கேது | 10 | 9 |

## 193. கணைக்காலில் ரோகமுடையவர்.

(Those who suffer from diseases of the ankle.)

வினா: சிலர் கணைக்காலில் ரோகம், வெட்டுப்படுதல் உடையவராய்க் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: 11-ம் இடத்ததிபன் 6, 8, 12-ல் அமர, 11-ம் இடத்தில் சனி செவ்வாய் சத்துருத்தானாதிபன் இருந்தாலும், 11-ம் இடத்தவனுடைய அம்சத்தில் இம் மூவரில் எவர் இருந்தாலும் இதிற் பிறந்தவர் கணைக்காலில் ரோகமுடையவராய் அல்லது கணைக்கால் தறிக்கப்படுபவராய்க் காணப்படுவர்.

## 194. பாதத்தில் ரோகமுடையவர்.

(Those who suffer from diseases of the foot )

வினா: சிலர் பாதங்களில் ரோகம் உடையவராய், பாதங்கள் வெட்டுப்படுபவராய் இருத்தற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 6 | கேது |
| 3 | பாதரோகம் | உடையவர் | செவ்வா |
| 2 | | | 9 |
| ல ராகு | சூரி சந் புத சுக் சனி | வியாழ | 10 |

விடை: 12-ம் இடத்ததிபன் 6, 8-ம் இடங்களில் பலங்குன்றியிருக்க, 12-ம் இடத்தில் ரோகத்தானாதிபன் சனி செவ்வாயுடன் கூடியிருந்தாலும், 12-ம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்ததிபனுடைய அம்சத்தில் மேற்கூறிய மூவரில் எவரேனும் இருந்தாலும் இவ்வமையம் உதித்தவர் பாதங்களில் ரோகமுடையவராய், அல்லது பாதங்கள் துண்டிக்கப்படுபவராய் விளங்குவர்.

## 195. குஷ்டரோகத்தினுல் வருந்துபவர்.

(Those who suffer from leprosy.)

வினு: சிலர் குஷ்டரோகம், அங்கக்குறைவு முதலிய நிலைமையை உடையவராய் இருப்பதற்குக் காரணம் யாது?

விடை: ஆயுட்டானுதிபதியும் ரோகத்தானுதிபதியும், அபரபக்கச் சந்திரனுங் கூடி உதயலக்கினத்தில் இருக்க, இலக்கினுதிபதி ரோகத்தானத்தில் இருக்கப் பிறந்தவர் மேனி எங்கும் குஷ்டம் அல்லது அங்கவீனம் இவைகளை உடையவராய் விளங்குவர்.

---

# ஏழாம் பாவ பலன்

## விவாக காலம்

## 196. இளமையில் மணஞ்செய்பவரும், முதுமையில் மணஞ்செய்பவரும்.

(Those who marry early, and those who marry late.)

வினு: சிலர் இளமைப்பராயத்தில் மணவாழ்க்கை அடைந்து இன்பசுகம் அனுபவித்தற்கும், வேறுசிலர் பக்குவகாலம் அடைந்து பல்லாண்டுகளாகி முதுமைப்பராயத்தில் மணமுடித்தற்குங் காரணம் யாது?

விடை: பாபக் கிரகங்கள் 3, 6, 10, 11 என்னும் உபசயத்தானங்களில் அடைபட்டிருக்க, களத்திரத்தானுதிபதியும் (7-ம் இடத் தலைவனும்) குடும்பத்தானுதிபதியும் (2-ம் இடத் தலைவனும்) 1-4-5-7-9-10-ம் இடங்களில் பலம்பொருந்தி இருக்கப் பிறந்தவர் இளமைப் பராயத்தில் மணஞ்செய்து இன்பசுகம் அனுபவிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | புதன் சுக்கிரன் | சந்திர | செவ்வா |
| 2 | 17 வயதில் மணம்புரிந்தவர் | | கேது |
| ல ராகு | | | வியாழ |
| 12 | சனி | 10 | 9 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனி குடும்பத்தானத்திற்கோ களத்திரத் தானத்திற்கோ அதிபதியாக இருந்தாலும், அந்தத் தானங்களில் சனி அமர்ந்தாலும் நோக்கினாலும், அந்தத் தானங்கள் சனியின் வீடுகளாகி (மகரகும்பங்களாகி) அவைகளிற் செவ்வாயேனும் சுக்கிரனேனும் இருந்தாலும், 8-ம் இடத்திற் சுக்கிரன் நிஷ்பலமாக (பலவீனனாக) இருந்தாலும் இதிற் பிறந்தவர்க்குத தாரம் தூரமாகும். இவர் தம் இளமைப் பருவத்தை வீணே கழித்து, பல்லாண்டுகளுக்குப் பின்பு முதுமைப் பாயத்திலேயே மணமுடிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 9 | சனி கேது | 11 | வியாழ |
| சூரியன் | 45 வயதில் மணம்புரிந்தவர் | | ல |
| செவ்வா புதன் சுக்கிரன் | | | 2 |
| 6 | சந்திர | ராகு | 3 |

## விவாக தேசம்

### 197. சொந்த ஊரிலேயே மணம்புரிபவர்.

### (Those who marry in their own country.)

**வினு:** சிலர் சொந்த ஊரிலேயே மணம்புரிகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** களத்திரத் தானுதிபதி (இடபம், சிங்கம், விருச்சிகம். கும்பம் ஆகிய) ஸ்திரராசிகளில் இருந்தாலும், இந்த இராசிகள் களத்திரத்தானமாகி இவைகளிற் பலவான்களான ஸ்திரக்கிரகங்கள் (சூரியன் குரு சுக்கிரன்) இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் தமது சொந்த ஊரிலேயே மணமுடித்திருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | 12 | ல கேது | 2 |
| புதன் சுக்கிரன் | பிறந்த கிராமத்தில் மணமுடித்தவர் | | 3 |
| 9 | | | செவ்வா |
| வியாழ சனி | சந்திர ராகு | 6 | 5 |

### 198. தூரதேசத்தில் மணஞ்செய்பவர்.

### (Those who marry in a distant country.)

**வினு:** சில புருஷருக்குப் பெண்களும் சில பெண்களுக்குப் புருஷரும் தம்மூரில் வாய்ப்பாக இருக்கவும் அவரை மணம்புரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டாதவராய்ப் பிறதேசத்தில் தமக்கு இனமல்லாத இடத்தில் விவாகஞ்செய்வதற்கும், அவ்வாறு விவாகஞ்செய்தும் புருஷன் ஒருதேசத்திலும் மனைவி ஒருதேசத்திலுமாகத் தத்தம் யௌவன காலத்தை வீணாகக் கழிப்பதற்கும் காரணம் யாது?

**விடை:** ஸ்திரீபுருஷர் இருவர்க்கும் களத்திரத்தானம் (7-ம் இடம்) சராராசிகளாக (மேடம் கர்க்கடகம் துலாம் மகரங்களாக) அமைய, அவைகளில் சரக்கிரகங்களாகிய சந்திரன் செவ்வாய் ராகுகேது முதலியோர் பூரண பலவான்களாக இருந்தால் தூரதேசங்களில் அல்லது தூர ஊர்களில் விவாகஞ்செய்து, யௌவன காலத்தில் வேறுவேறாக இருந்து பொருள்தேடிச் சிலநாள் மாத்திரம் ஒன்றாக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | சந்திர செவ்வா | 8 | 9 |
| ராகு | தூரதேசத்தில் மணமுடித்தவர் | | சூரி புத வியாழ சுக்கிரன் |
| 4 | | | கேது |
| 3 | 2 | ல சனி | 12 |

## விவாக மின்மை

### 199. மணமுடிக்க மாட்டாதவர்.

(Those who cannot marry.)

**வினா:** சிலருக்குத் தாரம் பொருத்தமே இல்லாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

**விடை:** களத்திரத் தானாதிபதியும் குடும்பத்தானாதிபதியும் சுக்கிரனும் கூடிப் பலவீனமாகி மறைவுத்தானங்களில் இருக்கப் பிறந்தவர் எவ்வாறு முயன்றாலும் ஒருபோதும் மணம்புரியமாட்டார்.

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | 12 | ல ராகு |
| 9 | தாரப் பொருத்தம் இல்லாதவர் | | 2 |
| சூரி சந் புத வியா சுக்கிரன் | | | சனி |
| கேது | 6 | செவ்வா | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 200. விவாகம் வேண்டாதவர். (The celibate.)

**வினா:** சிலர் கல்யாணத்தை விரும்பாதவர்களாய்த் துறவற ஞானிகளாகக் காலங்கழிப்பதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | ராகு | 5 |
| ல வியாழ | விவாகஞ் செய்யாது துறவியானவர் | | 6 |
| 12 | | | செவ்வா |
| 11 | கேது | சந்திர | சூரியன் புத சுக் சனி |

**விடை:** களத்திரத்தானாதிபதியும் சுக்கிரனும் பகைநீசர்களாக மறைவுத்தானங்களில் இருக்க, அல்லது களத்திரத்தானாதிபதி பலவீனனாகிப் பூரண பலத்துடன் ஆட்சிபுரியும் புத்திரத்தானாதிபதியுடன் கூடி இருக்கப் பிறந்தவர் விவாகத்தையே ஒருபோதும் விரும்பாதவராய் ஞானம் நிறைந்துள்ள துறவியாக இருப்பர்.

## தாரத் தொகை

### 201. இரு மனைவியரை உடையவர்.

### (Those who have two wives.)

**வினா:** சிலர் இரண்டு தாரம் மணம் முடிக்கின்றனர். இதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| சூரியன் செவ்வா | வியாழ | 9 | 10 |
| புதன் சுக்கிரன் | இருதாரம் மணஞ்செய்தவர் | | ராகு |
| கேது | | | சந்திர |
| சனி | 3 | 2 | ல |

**விடை:** 1, 2, 4, 7, 8, 12 இவைகளில் செவ்வாய் இருந்தாலும், சனி செவ்வாய் சுக்கிரன் கூடியிருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் இருதாரம் மணமுடிப்பவராகக் காணப்படுவர்.

### 202. மூன்று மனைவியரை உடையவர்.

### (Those who have three wives.)

**வினா:** சிலர் மூன்று தாரம் மணம்புரிபவராகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: 7, 8, 11 இவைகளிற் சனி, செவ்வாய் பலவான்களாக இருந்தாலும், உதயலக்கினத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் இருக்க களத்திரத்தானாதிபன் இலாபத்தானத்தில் (11-ல்) இருந்தாலும் இக்கிலேமையிற் பிறந்தவர் மூன்று தாரம் மணம்புரிவர்.

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 5 | சனி |
| கேது | மூன்றுதாரம் | | 7 |
| ல சூரி செ புத சுக் | மணம் புரிந்தவர் | | ராகு |
| 12 | சந்திர | வியாழ | 9 |

## 203. பல மனைவியரை உடையவர்.

## (Those who have several wives.)

வினா: சிலர் பல தாரங்களை மணமுடிக்கின்றனர். இது எதனால்?

விடை: களத்திரத் தானாதிபதி இலாபத்தானத்திற் பலவானாக இருக்க இலாபத்தானாதிபதி களத்திரத்தானத்தில் பலமாகப் பொருந்தியிருந்தாலும், மேற்குறித்த இலாபத்தானாதிபன் சந்திரன், செவ்வாய் சுக்கிரனுடன் கூடிக் களத்திரத்தானத்தில் இருந்தாலும் இக்கிலேமையில் உதித்தவர் கணக்கில்லாத மாதர்க்குக் கணவராக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| சந்திர சுக்கிரன் | சூரியன் புதன் | 9 | 10 |
| செவ்வா ராகு | பலதாரம் | | வியாழ |
| 5 | மணந்தவர் | | கேது |
| 4 | 3 | சனி | ல |

## தார வகுப்பு

## 204. தாரத்தின் உறவுமுறை.

## (The relationship of one's spouse.)

**வினா:** சிலர் பிதாவின் பகுதியிலும், வேறு சிலர் மாதாவின் பகுதியிலும், ஒழிந்த சிலர் தமக்கு அன்னியமான இடத்திலுமாக மணம்புரிவதற்குக் காரணம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: களத்திரத்தாணுதிபதி பிதிர்த் தானத்திலேனும் (9-ம் இடத்தில்) சூரியனுடனேயும் இருந்தால் பிதாவின் பகுதியிலும், மாதிருத்தானத்திலேனும் (4-ம் இடத்தில்) சந்திரனுடனேயும் இருந்தால் மாதாவின் பக்கத்திலும், இவைகளின் தொடர்பில்லாத வேறு தானங்களில் இருந்தால் வேறு பகுதிகளிலும் விவாகஞ்செய்வர்.

## 205. தாரத்தின் சாதி. (The caste of one's spouse.)

வினு: புருஷராயினும் பெண்களாயினும் சரி, சிலர் தம்மிலும் உயர்ந்த சாதியிலும், வேறுசிலர் தமக்குச் சமத்துவமான சாதியிலும், ஒழிந்த சிலர் தம்மிலும் தாழ்ந்த வகுப்பிலும் கல்யாணம் புரிவதற்குக் காரணம் என்ன?

விடை: களத்திரத்தாணுதிபதி சூரியன் வியாழன் சுக்கிரன் இவர்களாய், இவர்கள் பூரண பலவான்களாக இலக்கினுதிபதியுடன் கூடியிருந்தால் தம்மிலும் உயர்ந்த வருணத்திலும், புதசந்திரர்களாய் இவ்வகை இருந்தால் தமக்குச் சமமான குலத்திலும், செவ்வாய்சனிகளாக இருந்தால் தம்மிலும் தாழ்ந்த சாதியிலும் மணம்புரிவர்.

## 206. தம்மிலும் உயர்ந்த சாதிப் பெண்ணை மணம்புரிபவர். (Those who marry women of a higher caste or race.)

வினு: சிலர் தம்மிலும் உயர்ந்த சாதியிற் பிறந்த பெண்ணை மணம்புரிகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: களத்திரத் தானத்தில் சூரியனும் வியாழனும் பலவான்களாக இருந்து களத்திர குடும்பத் தாணுதிபனை நோக்கினுலும், நவாம்சத்தில் 7-ம் இடத்தில் வியாழசூரியர் பலமேறியிருக்க களத்திர குடும்பத்தாணுதிபர் மேற்கூட்டிய இருவரது வீட்டில் இருந்தாலும் இதிற் பிறந்தவர் தம்மிலும் உயர்ந்த வருணத்துப் பெண்ணையே மணம்புரிவர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | சூரி புத வியாழ சுக்கிரன் | 8 | 9 |
| சனி கேது | தம்மிலும் உயர்ந்த சாதிப் பெண்ணை மணமுடித்தவர் | | சந்திர |
| 4 | | | ராகு |
| 3 | 2 | ல செவ்வா | 12 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 207. தம்மிலும் தாழ்ந்த சாதிப் பெண்ணை மணம்புரிவர்.

(Those who marry women of a lower caste or race.)

| | | | |
|---|---|---|---|
| சந்திர | 6 | ராகு | 8 |
| வியாழ | இழிகுலப் பெண்ணை மணந்தவர் | | செவ்வா சுக்கிரன் |
| 3 | | | சூரியன் புதன் சனி |
| 2 | ல கேது | 12 | 11 |

**வினா:** சிலர் தம்மிலும் தாழ்ந்த சாதியிற் பிறந்த பெண்ணை மணம்புரிகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** உதயலக்கினாதிபதியும் களத்திரத்தானாதிபதியும் கூடி நீசாஸ்தமன கதியுடன் இருந்தாலும், களத்திரத்தானத்தில் நீசக்கிரகங்கள் இருந்தாலும் இவ்வேளையிற் பிறந்தவர் தம்மிலும் தாழ்ந்த சாதி மாதரையே மணம்புரிவர்.

## 208. தாசியை மணஞ்செய்பவர்.

(Those who marry servant maids.)

| | | | |
|---|---|---|---|
| 6 | சனி | புதன் சுக்கிரன் ராகு | சூரியன் |
| 5 | தாசியை மணந்தவர் | | செவ்வா |
| 4 | | | 11 |
| சந்திர | கேது | ல | வியாழ |

**வினா:** சிலர் தாசியை மணம்புரிகின்றனர். இது எதனால்?

**விடை:** களத்திரத் தானத்தில் செவ்வாய் சுக்கிரன் சனி இவர்களில் எவரேனும் நீசமாக இருக்க, களத்திரத்தானாதிபனும் நீசனாகி அல்லது பாபர் மத்தியில் இருந்தால் இதிற் பிறந்தவர் அடிமைக்காரியையே மணம் புரிந்துகொள்வர்.

## 209. ஒருவர் விலக்கிய பெண்ணை மணமுடிப்பவர்.

(Those who marry women divorced by others.)

**வினா:** சிலர் ஒருவர் மணமுடித்துக் கைவிட்ட பெண்ணையே தமக்கு மனைவியாக்குகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய் ராகு | 12 | ல | புதன் வியாழ சுக்கிரன் |
| சந்திர | ஒருவர் விலக்கிய மனைவியை மணந்தவர் | | சூரியன் |
| 9 | | | 4 |
| 8 | 7 | 6 | சனி கேது |

**விடை:** களத்திரத் தானுதிபனும் குடும்பத்தாளுபனும் சுக்கிரனும் கூடிப் பகை நீச வக்கிராஸ்தமன கதியுடன் இருக்க, களத்திரத்தானம் குடும்பத்தானம் இவைகளில் செவ்வாய் சனி இருந்தாலும், களத்திர குடும்பத் தானங்களில் (2, 7-ம் இடங்களில்) சுக்கிரன் இருக்க, அச் சுக்கிரனைச் சனி செவ்வாய் நோக்கினாலும் இந் நிலைமையில் உதித்தவர் முன் ஒருவருக்கு வாழ்க்கையுற்ற பெண்ணையே தமக்கு மனைவியாகக் கொள்வர்.

## தாரத்தின் தேக அமைப்பு

### 210. தாரத்தின் தேகப்பாகுபாடு.

### (The physical features of one's wife.)

**விஞ:** சில புருஷருக்கு வரட்சியான பித்ததேகமும் உஷ்ண ரோகங்களும் உடைய மனைவியர் கிடைக்க, வேறு சிலருக்கு ஸ்தூல சரீரமும் வாதரோகங்களும் மந்தபுத்தியும் அமைந்த மாதர்கள் கிடைக்க, ஒழிந்த சிலருக்கு வாதபித்தம் சமமான சிலேஷ்ம சரீரமும் ஆத்மஞானம் சங்கீதஞானம் தீவிரபுத்தி இவை யாவும் அமைந்த மனைவியர் கிடைப்பதற்குக் காரணம் என்ன?

**விடை:** புருஷருடைய களத்திரத்தானத்தில் சூரியன் செவ்வாய் இருந்தாலும் நோக்கினாலும் பித்ததேகமும் உஷ்ணரோகமும் அமைந்துள்ள மனைவியரும், புதன் வியாழன் இருந்தாலும் பார்த்தாலும் வாதசரீரமும் பருத்த அங்க உறுப்புக்களும் வாய்ந்த மனைவியரும், சந்திர சுக்கிரர்கள் இருந்தாலும் கண்டாலும் சிலேஷ்ம சரீரமும் காந்தர்வதத்துவமும் சுரலய இசைஞானமும் நிரம்பியுள்ள மனைவியரும் கிடைக்கப்பெறுவர்.

### 211. ஒருவருடைய மனைவியின் நிறம்.

### (The colour of one's wife.)

**விஞ:** சிலர் நிறபேதமான மனைவியரை உடையவராயிருக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:** களத்திரத்தாஞதிபன் சனி அல்லது புதனுகிச் சந்திரனுடன் சேர்ந்திருந்தாலும், ஒருவர் வீட்டில் ஒருவராக விடு மாறியிருந்தாலும், இவருடன் இராகு கூடியிருந்தாலும், இவ்வாறு நவாம்சத்தில் இருந்தாலும் இதிற் பிறந்தவர் தம்மினும் பார்க்க நிறங்குறைந்த (கறுப்பு நிறமுள்ள) பெண்களையும்; களத்திரத்தாஞதிபன அத்தானத்திலிருப்பவன் அதனை நோக்குபவன் இவர்கள் மற்றையோருடைய கலப்பின்றி சூரியன் செவ்வாய் வியாழன் என்னும். இம்மூவராக இருந்தாலும், நவாம்சத்திலும் இவ்வகையிருந்தாலும் இதிற் பிறந்தவர் தம்மிலும் பார்க்க நிறங்கூடிய (சுத்தச் சிவப்பு) நிறம் உடைய மனைவியையும்; களத்திரத் தாஞதிபர் அதில் இருப்பவர் அதனைப் பார்ப்பவர் இவர்கள் சந்திரன் சுக்கிரன் முதலான மற்றைய கிரகங்களாக இருந்தாலும், நவாம்சத்தில் இவ்வாறிருந்தாலும் இதிற் பிறந்தவர் கலப்பு நிறமுள்ள மனைவியரையும் மணமுடிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| கேது | 3 | சனி | 5 |
| ல சூரியன் செவ்வா | செம்மைநிறம் கூடிய மனைவியை உடையவர் | | 6 |
| புதன் சுக்கிரன் | | | வியாழ |
| சந்திர | 10 | 9 | ராகு |

| | | | |
|---|---|---|---|
| 5 | கேது | சுக்கிரன் | செவ்வா புதன் |
| 4 | பொதுநிற மனைவியை உடையவர் | | சூரியன் |
| வியாழ | | | 10 |
| சனி | ல சந்திர | ராகு | 11 |

| | | | |
|---|---|---|---|
| புதன் சுக்கிரன் | சூரியன் | 11 | 12 |
| 8 | கருமைநிறம் கூடிய மனைவியை உடையவர் | | ல சந் சனி ராகு |
| கேது | | | 2 |
| 6 | வியாழ | 4 | செவ்வா |

## 212. அவலட்சண தாரமுடையவர்

(Thos who have ugly wives.)

**வினு:** சில புருஷருக்கு அழகில்லாத மனைவியர் வாய்ப்பதற்குக் காரணம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: சனி களத்திரத்தானத்தில் நீசாஸ்தமன வக்கிர கதியுடன் இருக்க, களத்திரத்தானாதிபன் சூரியனால் மறைக்கப் பட்டிருந்தால் அழகில்லாத விகார உறுப்புக்கள் அமைந்துள்ள மனைவியரே கிடைப்பர்.

### 213. வயோதிக தாரத்தை மணப்பவர்.
(Those who marry old spouses.)

வினா: சில புருஷர் வயது சென்ற பெண்களையும், சில பெண்கள் வயது சென்ற புருஷரையும் மணமுடித்தற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 6 | சந்திர கேது |
| 3 | வயோதிக மாதை மணந்தவர் | | செவ்வா |
| 2 | | | 9 |
| ல சூரியன் ராகு | புதன் சுக்கிரன் சனி | வியாழ | 10 |

விடை: சனியுடனே களத்திரத்தானாதிபதியும் குடும்பத்தானாதிபதியும் சுக்கிரனும் கூடியிருக்கப் பிறந்தவர் புருஷராயின் வயது சென்ற மங்கையரையும், பெண்களாயின் வயதுசென்ற புருஷரையும் மணமுடிப்பர்.

## தாரத்தின் குணகுணம்

### 214. உத்தம மனைவியரை உடையவர்.
(Those who have ideal wives.)

வினா: சில புருஷருக்கு அழகு, ஆசாரம், கற்புநெறி, காதற் பெருக்கம் முதலிய உத்தமகுணங்கள் வாய்ந்த பத்தினிமார் கிடைப்பதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| ராகு | ல | 2 | சந்திர |
| சூரியன் புதன் | உத்தமகுண மனைவியை உடையவர் | | 4 |
| சனி | | | 5 |
| சுக்கிரன் | செவ்வா | வியாழ | கேது |

விடை: களத்திரத் தானாதிபதியும் பாக்கியத்தானாதிபதியும் (9-க்குரியவன்) சுபக்கிரகங்களாய் இருவரும் ஒருவர் வீட்டில் ஒருவராக வீடுமாறிப் பரிவர்த்தன யோககாரகரானாலும், களத்திரத் தானாதிபதி உதயலக்கினத்தில் பலமேறியிருக்க, களத்திரத்தானத்தில் புதனாயினும் வியாழனாயினும் இவ்விருவரில் ஒருவருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய சுக்கிரனையினும் உச்சகதி அடைந்திருந்தாலும், இதிற் பிறந்த புருஷருக்கு அழகு செல்வம் இலட்சுமீகரம் அடக்கம் பொறுமை ஆத்மஞானம் முதலிய கற்பிலக்கணங்கள் வாய்ந்த கன்னியரே மனைவியாகக் கிடைக்கப்பெறுவர்.

## 215. கீர்த்தியுண்டாக்கும் மனைவியரை உடையவர்.

(Those who have wives who enable their husbands to obtain good fame.)

**வினு:** சிலர் கீர்த்தியை உண்டாக்கும் மனைவியரை உடையவராக விளங்குகின்றனர். இது எதனுல்?

| | | | |
|---|---|---|---|
| 3 | கேது | சனி | செவ்வா |
| 2 | கீர்த்தியை வருவிக்கும் மனைவியை உடையவர் | | சந்திர வியாழ |
| ல | | | சூரியன் சுக்கிரன் |
| 12 | 11 | ராகு | புதன் |

**விடை:** கீர்த்தித் தானுதிபன் (12-ம் இடத்ததிபன்) களத்திரத் தானத்தின் அதிபனுடன் கூடி 1-4-5-7-9-10-ம் இடங்களில் பலவானுக இருந்தாலும், கீர்த்தித் தானுதிபன் களத்திரத் தானத்திலும், களத்திரத் தானுதிபன் கீர்த்தித் தானத்திலுமாக வீடு மாறி இருந்தாலும் இதிற் பிறந்தவரின் மனைவியர் தவருது எவ்வழியிலேனும் நாயகருக்குக் கீர்த்தியையே விளைவிப்பர்.

## 216. துஷ்டகுண மனைவியரை உடையவர்.

(Those who have wicked wives.)

**வினு** சில புருஷருக்குத் தினமும் கலகங்கள் விளைத்தல் கோபமூட்டல் பழிகூறுதல் திட்டுதல் கொட்டுதல் முதலிய பொல்லாக்குணம் படைத்த மனைவியர் கிடைப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** செவ்வாய்சனி களத்திரத்தான அதிபர்களாகி குடும்பத்தானத்தில் (2-ம் இடத்தில்) பகையாக இருந்தாலும், 7-ம் இடத்தில் சனிஇராகு கூடியிருந்தாலும் நோக்கினுலும், 7-ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்ததிபன் சனிசெவ்வாயின் அம்சங்களில் இருந்தாலும் இந்நிலைமையில் உதித்த புருஷர்களுக்கு இவ்வாறான நீசக்குணம் வாய்த்த மனைவியரே அகப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| 9 | 10 | ராகு | 12 |
| வியாழ | துஷ்ட குண மனைவியை உடையவர் (1) | | ல |
| 7 | | | செவ்வா சனி |
| 6 | கேது | 4 | சூரியன் சந்திர புத சுக் |

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 5 | சந்திர |
| சூரியன் புதன் | துஷ்டகுண மனைவியை உடையவர் (2) | | சனி ராகு |
| ல சுக்கிரன் கேது | | | 8 |
| 12 | வியாழ | செவ்வா | 9 |

## தாரத்தின் ரோகம்

### 217. வியாதியான மனைவியரை உடையவர்.

### (Those who have diseased wives.)

வினா: சிலர் அடிக்கடி வியாதியாற் பீடிக்கப்பெற்ற மனைவியரை உடையவராய், அதனால் தாம் விரும்பிய காலத்தில் தம் மனைவியரிடத்தில் இன்பசுகம் அனுபவிக்க இயலாதவராய், இவ்வாறு தாரசுகம் இல்லாதவராய் இருத்தற்குக் காரணம் யாது?

விடை: களத்திரத் தானாதிபதி பலவானான சனியுடன் கூடியிருந்துத் தானத்தில் (8-ம் இடத்தில்) பலவீனமாக இருக்க, அல்லது களத்திரத் தானத்தில் சனி இருக்கக் களத்திரத் தானாதிபதி மிருத்துத் தானத்தில் பலங்குன்றி இருக்கப் பிறந்தவர் அடிக்கடி வியாதியினாற் பாதிக்கப்பெற்ற மனைவியரை உடையவராய்த் தாரசுகமின்றி இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 10 | கேது | 12 | ல |
| செவ்வா புதன் சுக்கிரன் | தாரசுகம் இல்லாதவர் | | 2 |
| சூரியன் வியாழ | | | 3 |
| சனி | சந்திர | ராகு | 4 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

218. தீராவியாதியுள்ள மனைவியரை உடையவர்.

(Those who have wives suffering from incurable diseases.)

வினா: சிலர் தினமும் ரோகமுள்ள மனைவியரை உடையவராக இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: களத்திர குடும்பத் தானங்களில் சனி இருந்தாலும், சனி களத்திரத் தானத்திற்கேனும் குடும்பத் தானத்திற்கேனும் அதிபனாகிப் பலவீனனாய் எங்கே இருந்தாலும், களத்திரத் தானாதிபனேனும் குடும்பத் தானாதிபனேனும் 6, 8 ம் இடங்களில் இருந்தாலும், 6, 8-ம் இடத்ததிபர் களத்திரத் தானத்திலேனும் குடும்பத் தானத்திலேனும் இருந்தாலும் இந்நிலைமையில் உதித்தவரது மனைவியர் தீராவியாதி உடையவராகவே காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | 2 | 3 |
| ராகு | தீராவியாதி உள்ள மனைவியை உடையவர் | | வியாழ |
| சந்திர | | | கேது |
| 9 | சூரியன் | செவ்வா புதன் சனி | சுக்கிரன் |

219. மர்மத்தான ரோகமுடைய மனைவியரை உடையவர்.

(Those who have wives with diseased sexual organs.)

வினா: சிலர் மர்மத்தானத்தில் ரோகமுடைய மனைவியரை உடையவராயிருக்கின்றனர். இதற்குக் காரணம் யாது?

விடை: சனிசெவ்வாயின் நவாம்சம் 7-ம் இடமாகி, இவ்விருவராலும் நோக்கப்பெற்றால் இந்நிலைமையில் உதித்தவரது மனைவியர் மர்மத்தானங்களில் பலவித ரோகங்களால் வருந்துவர்.

220. பிசாசபீடை அல்லது பைத்தியக்குணமுள்ள மனைவியரை உடையவர்.

(Those who have wives afflicted by evil spirits or insanity.)

வினா: சிலரது மனைவியர் பிசாசபீடையினால் அல்லது பைத்திய ரோகத்தினால் வருந்துகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: களத்திரத் தானத்தில் சனி செவ்வாய் இராகு கேது இந்நால்வரில் எவரேனும் இருந்தாலும், களத்திரத்தானுதிபன் சனி செவ்வாயின் அம்சத்தில் இருந்தாலும் இவ்வேளையில் உதித்தவரது மனைவியர் அடிக்கடி பிசாச பீடை அல்லது பைத்திய நோயினால் வருந்துவர்.

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 5 | 6 |
| 2 | பைத்தியக் குணமுள்ள மனைவியை உடையவர் | | செவ்வா சனி ராகு |
| ல கேது | | | சூரியன் புதன் |
| 12 | சந்திர | வியாழ | சுக்கிரன் |

## 221. மலட்டு மனைவியரை உடையவர்.

## (Those who have barren wives.)

வினு: சில புருஷருக்கு மலடிகளான மனைவியர் கிடைப்பதற்கு நியாயம் யாது?

விடை: களத்திரத் தானத்திற் சூரியன் இராகுகேதுக்களுடன் பலங்குன்றியிருந்தால மலடிகளான மனைவியரே கிடைப்பர்.

## 222. பிரசவத்தில் மரணமடையும் மனைவியரை உடையவர்.

## (Those who have wives who die at child-birth.)

வினு: சில புருஷருக்குப் பிரசவசம்பந்தமான ரோகங்களால் மரணமடையும் மனைவியர் கிடைப்பதற்குப் பிரமாணம் யாது?

விடை: உதயலக்கினத்திலேனும் குடும்பத் தானத்திலேனும் களத்திரத் தானத்திலேனும் இருந்த இராகுகேதுக்களுடன் செவ்வாய் கூடியிருந்தாலும், அல்லது தனது பார்வையைச் செலுத்தினுலும், செவ்வாய் 2-7-ன் அதிபருடனும் இராகுகேதுக்களுடனும் கூடி 6, 8, 12-ல் இருந்தாலும், செவ்வாய் 6, 8,

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | சூரியன் புதன் | செவ்வா ராகு | 9 |
| வியாழ | பிரசவரோகங் காரணமாக மனைவியை இழந்தவர் | | 10 |
| 4 | | | சனி |
| சந்திர | கேது | ல | 12 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12-ன் அதிபருடனும் இராகுகேதுக்களுடனும் கூடி 2, 7-ல் இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவருக்குப் பிரசவசம்பந்தமான வியாதியினால் மரணமாகும் மனைவியரே கிடைப்பர்.

## தார தோஷம்

### 223. தாரநாசம் அடைபவர்.

(Those who lose their spouses very soon.)

**வினா:** சிலர் புருஷராயினும் பெண்களாயினும் எத்தனை தாரங்கள் மணம் முடித்தாலும் அத்தனை தாரங்களும் சிலநாள் வாழுமுன் சேதமடைகின்றனவே. இதற்கு நியாயம் யாது?

**விடை:** ஒருவர் ஜனிக்கும்போது செவ்வாயிருக்கும் நிலைமையினாலேயே இவ்வாறான சம்பவம் அவருக்கு நேரிடுகின்றது. இவ்விஷயம் அனுபவசாட்சியாலும் பின்வரும் சுருதிப்பிரமாணத்தாலும் நன்கு விளங்குகின்றது. அப் பிரமாணம் வருமாறு:—

2-ம் 4-ம் 7-ம் 8-ம் 12-ம் இடங்களில் செவ்வாய் இருந்தால் பெண்களாயின் புருஷரும், புருஷராயின் மனைவியரும் மரணம் அடைவர். (ஜாதகசந்திரிகை)

இதுவன்றியும், இடபதுலா ராசிகளிற் ஜனனமானவர்க்கும், உதயராசியிற் செவ்வாய் இருக்கப் பிறந்தவர்க்கும் தாரம் சேதம் அடைதல் பிரத்தியக்ஷத்தில் நிகழ்கின்றது.

### 224. தாரதோஷத்தை நீக்கும் வழி.

(The method to prevent the untimely death of one's spouse.)

**வினா:** அவ்வாறு தாரதோஷம் உடையவர் விவாகம் செய்ய வேண்டுமானால் அவரை அத்தோஷத்தினின்றும் தப்புவித்தற்காகிய மார்க்கம் யாதேனும் சோதிடசாஸ்திரத்தின்கண் உளதா?

**விடை:** ஆம். விவாகம் செய்யவேண்டிய ஸ்திரீபுருஷர் இருவருக்கும் விவாகப்பொருத்தம் பார்த்த பின்னரே விவாகநிச்சயம் செய்தல்வேண்டும் என்று சோதிடசாஸ்திரத்தில் ஓர் பிரமாணம் நியதிசெய்யப்பட்டுள்ளது. அப் பொருத்த விஷயத்தில் தாரதோஷம் உடையவர் தாரதோஷம் இல்லாதவரை மணஞ்செய்தல் தகாதென்றும், தாரதோஷமுடைய பெண்ணுக்குத் தாரதோஷமுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருஷரையே மணஞ்செய்துவைத்தல் வேண்டுமென்றும், அவ்வாறு செய்யின் தம்பதிகள் இருவரும் நெடுங்காலம் மங்களகரமாக வாழ்வர் என்றும் கூறப்பட்டுளது. உதாரணமாக: 7-ம் இடத்திற் செவ்வாய் இருக்கப் பிறந்த பெண்ணுக்கு 7-ம் இடத்திலாவது 8-ம் இடத்திலாவது செவ்வாய் இருக்கப் பிறந்த புருஷனை மணஞ்செய்து வைத்தாற்றான் தோஷமில்லை. இவ்வாறே 2, 4, 12-ல் செவ்வாய் இருக்கப் பிறந்த புருஷனுக்கு 2, 4, 12-ல் செவ்வாய் இருக்கப் பிறந்த பெண்ணை மணஞ்செய்துவைப்பதே முறையாகும்.

## தார ஒற்றுமை

### 225. தார ஒற்றுமையின் தாரதம்மியம்.

### (The various degrees of conjugal love.)

விஞ: சில புருஷன்மனைவியர் தமக்குள் சமத்துவமான தலைமை அன்பினால் ஒருவரைப் பிரிந்து ஒருவர் உயிர்வாழ மனம் உடன்படாதவராய், ஒருவருக்கொருவர் வசீகரசக்தியுடையவராய் இருப்பதற்கும்; வேறு சில மாதர்கள் தம் புருஷரைத் தமக்கு வசீகரப்படுத்தும் வல்லமையில்லாதவராய், அதனால் தம் புருஷரை அயல் மாதர்பால் இன்பமனுபவிக்க விட்டிருப்பவராய், புருஷரின் அளவு கடந்த ஆக்கினைக்குள்ளாகி எஞ்ஞான்றும் கண்ணீரும் கம்பலையுமாகக் காலங்கழிப்பதற்கும்; ஒழிந்த சில புருஷர்கள் தம் மனைவியருக்குத் தாம் வசீகரமில்லாதவராய், தாம் அவருடைய வசீகரத்தில் அகப்பட்டவராய், எவ்விஷயங்களிலும் தம் மனைவியருக்கே தம்மை ஒப்புவித்தவராய், அவரது கட்டளைக்குள் அடங்கி ஒடுங்கி உயிர்வாழ்வதற்கும் காரணம் யாது?

விடை: உதயலக்கினதிபதி களத்திரத்தானத்திலும் களத்திரத் தானதிபதி உதயலக்கினத்திலும் பரிவர்த்தனமாகி இருக்க, வீரியத் தானதிபதியும் சுகத் தானதிபதியும் கூடிக் களத்திரத் தானத்தில் இருக்கப் பிறந்தவர் சமத்துவமான இன்பநுகர்ச்சி உடையவராய் மதனும் இரதியும் போல வாழ்ந்திருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ்வா | 12 | ல வியாழ |
| சந்திர | ஒருவருக்கு ஒருவர் வசீகரமுடையவர் | | 2 |
| 8 | | | 3 |
| சூரியன் புதன் சுக்கிரன் | 6 | சனி | கேது |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயலக்கினாதிபதியும் குடும்பத் தானாதிபதியும் சுக்கிரனும் கூடிக் களத்திரத் தானத்திலிருக்கப் பிறந்த பெண்கள் புருஷரை வசீகரிக்க மாட்டாதவராய், தாம் அவருக்கே வசியமுடையவராய், அவர் விரும்பியவாறெல்லாம் செய்யும் இயல்பினராய், அவரது இன்பத்துக்குத் தாம் உறைவிடமாக இருப்பர்

| | | | |
|---|---|---|---|
| புதன் சுக்கிரன் | சூரியன் | 9 | கேது |
| 6 | புருஷனால் வசீகரிக்கப்பட்ட மனைவி | | செவ்வா |
| 5 | | | 12 |
| ராகு | சனி | வியாழ | ல சந்திர |

உதயலக்கினாதிபதியும் குடும்பத் தானாதிபதியும் சுக்கிரனும் கூடிக் களத்திரத் தானத்தில் இருக்கப் பிறந்த புருஷர் தம் மனைவியரை வசீகரிக்கும் ஆற்றல் இல்லாதவராய், தாமே தம் மனைவியர்க்கு வசியமுடையவராய், அவருடைய ஆஞ்ஞாசக்கரத்துள் அடங்கி அவருக்கு அடிமைக்காரர்போல் வாழ்வர்.

| | | | |
|---|---|---|---|
| 2 | கேது | 4 | 5 |
| ல | மனைவியால் வசீகரிக்கப்பட்ட புருஷன் | | புதன் |
| 12 | | | சூரியன் வியாழ சுக் சனி |
| 11 | செவ்வா | சந்திர ராகு | 8 |

## 226. அடிக்கடி தாரப்பிரிவினையுடையவர்.

## (Those who separate from their spouses very often.)

**வினா** சில புருஷன்மனைவியர் விவாகக்குழப்பம் உடையவராய், அடிக்கடி வேறுவேறாகப் பிரிந்துகொண்டிருப்பதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| 9 | சனி ராகு | 11 | 12 |
| 8 | தாரக்குழப்பம் உடையவர் | | ல |
| சந்திர | | | 2 |
| 6 | 5 | சூரி செ புதவியா சுக்ர கே | 3 |

**விடை:** களத்திரத்தானம் சரராசியாக, அதிற் சந்திரன் பலங்குன்றிச் செவ்வாயின் தீவிரநோக்கினுள் அகப்பட்டிருக்க, களத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத் தானாதிபதியும் செவ்வாயின் வீட்டிலிருக்கப் பிறந்தவர் அடிக்கடி தாரக்குழப்பமும் அதனாற் குடும்பப்பிரிவும் உடையவராய் இருப்பர்.

### 227. தாரத்தைப் பிறருக்குப் பறிகொடுப்பவர்.

(Those who have their spouses alienated by other people.)

**வினா:** சில புருஷர் தம் மனைவியரையும்; சில மனைவியர் தம் புருஷரையும் பிறருக்குப் பறிகொடுக்கின்றனர். இது எக்காரணத் தினாலேயோ?

**விடை:** களத்திரத்தானத்திற் செவ்வாய் இருந்தாலும், களத்திரத் தானாதிபதியும் குடும்பத் தானாதிபதியும் செவ்வாயும் கூடிச் சத்துருத் தானத்தில் இருந்தாலும் இவ்வாறான நிலைமையிற் பிறந்தவர் தம்முடைய தாரத்தைப் பிறர் அபகரிக்க விடுவர்.

| | | | |
|---|---|---|---|
| சந்திர | ல | 2 | 3 |
| ராகு | மனைவியைப் பறிகொடுத்த மணாளன் | | வியாழ |
| 10 | | | கேது |
| 9 | சூரியன் புதன் | செவ்வா சனி | சுக்கிரன் |

| | | | |
|---|---|---|---|
| 11 | சந்திர கேது | ல | 2 |
| 10 | மணாளனைப் பறிகொடுத்த மனைவி | | 3 |
| 9 | | | 4 |
| வியாழ சனி | 7 | செவ்வா புத சுக் ராகு | சூரியன் |

## தாரத்தினால் ஏற்படும் பலாபலன்

### 228. மனைவியினால் லாபம் அடைபவர்.

(Those who prosper through their wives.)

**வினா:** சில புருஷர் விவாகஞ்செய்ய முன் தரித்திரதசையில் இருந்து, விவாகத்துக்குப் பின் (அப்பெண் ஸ்ரீதனம் உடையவளா யினும் சரி, இல்லாதவளாயினும் சரி) தம் மனைவியின் பொருளினாலேயாவது அல்லது மனைவிமூலமாவது அதிக செல்வாக்கும் பல பொருளாதாயமும் உடைய தனவந்தராகக் காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: களத்திரத் தானாதிபதி இலாபத் தானத்திலேனும் பாக்கியத் தானத்திலேனும் களத்திரத் தானத்திலேனும் இலாபத் தானாதிபதியுடன் கூடிப் பலவானாக இருக்கப் பிறந்தவர் மனைவி மூலமான அதிர்ஷ்டலாபத்தை அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 7 | கேது | சனி | செவ்வா |
| 6 | மனைவியினால் லாபம் அடைந்தவர் | | சந்திர வியாழ |
| 5 | | | 12 |
| 4 | 3 | ராகு | ல சூரியன் புத சுக் |

## 229. மனைவியினால் நஷ்டம் அடைபவர்.

(Those who suffer loss through their wives.)

வினா: சில புருஷர் விவாகஞ்செய்ய முன் பல வளங்களும் நிரம்பியுள்ள பொருட்செல்வராக இருந்து, விவாகத்திற்குப் பின் இடாம்பிகமான செலவும் பலவிதத்தில் பொருட்சேதமும் உடையவராய் அதனால் நித்திய தரித்திரராய் விடுகின்றனர். இது எதனால்?

விடை: களத்திரத் தானாதிபதியும் குடும்பத் தானாதிபதியும் கூடிச் செலவுத் தானத்திலிருந்தாலும், செலவுத் தானாதிபதி களத்திரத் தானத்திற் பலமேறியிருந்தாலும் இதிற் பிறந்தவர் தம் திரவியங்களை எல்லாம் தம் மனைவியர்பொருட்டே செலவுசெய்வர்

| | | | |
|---|---|---|---|
| 8 | 9 | 10 | செவ்வா |
| சந்திர | மனைவியினால் பொருட்சேதம் அடைந்தவர் | | சூரி புத சனி ராகு |
| கேது | | | ல |
| 5 | 4 | வியாழ | சுக்கிரன் |

## 230. தாரத்தின் கையால் மரணமடைபவர்.

(Those who suffer death at the hands of their spouses.)

வினா: சில புருஷர் மனைவியரின் கையாலும், சில மனைவியர் புருஷரின் கையாலும் மரணம் அடைகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: களத்திரத் தானாதிபதியும் குடும்பத் தானாதிபதியும் உதயலக்கினாதிபதியும் கூடிச் சத்துருத் தானத்தில் பகைநீசமாக இருக்கப் பிறந்தவர் புருஷராயின் மனைவியையாலும், பெண்களாயின் புருஷனையாலும் உபிராபத்தை அடைவர்.

## 231. மனைவியருக்கு முன் மரணமடையும் புருஷரும், புருஷருக்கு முன் மரணமடையும் மனைவியரும்.

(Husbands who die before their wives and wives who die before their husbands.)

வினா: சில புருஷர்கள் தம் மனைவியருக்கு முன் மரணமடைவதற்கும், சில மனைவியர் தம் புருஷருக்கு முன் மரணமடைவதற்கும் நியாயம் எதுவோ?

விடை: மனைவியருடைய உதயலக்கினாதிபனும் 2, 7, 8-ம் இடங்களுக்கு அதிபரும் சனியும் 1, 4, 5, 7, 9, 10, 11-ம் இடங்களில் இருக்க, புருஷருடைய 1, 2, 7, 8-க்கு அதிபரும் சனியும் 2, 3, 6, 8, 12-ல் இருந்தால் அவ்வாறுள்ள புருஷர் தம் மனைவியருக்கு முன் மரணமடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 7 | 8 | சூரியன் சனி | புதன் சுக்கிரன் |
| ராகு | புருஷனை இழந்த மனைவி | | செவ்வா |
| வியாழ | | | கேது |
| 4 | 3 | 2 | ல சந்திர |

புருஷருடைய 1, 2, 7, 8-ம் இடங்களுக்கு அதிபரும் சனியும் 1, 4, 5, 7, 9, 10, 11-ம் இடங்களில் ஆட்சிஉச்ச வீடுகளில் இருக்க, தம்முடைய 1, 2, 7, 8-க்கு அதிபரும் சனியும் 2, 3, 6, 8, 12-ல் இருந்தால் அவ்வாறுள்ள மனைவியர் தம் புருஷருக்கு முன் மரணமடைவர்.

| | | | |
|---|---|---|---|
| வியாழ கேது | சூரியன் செவ்வா புத சுக் | 8 | 9 |
| 5 | மனைவியை இழந்த புருஷன் | | 10 |
| சனி | | | 11 |
| சந்திர | 2 | ல | ராகு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காமம்

### 232. வீரியப் பெருக்கம் உடையவர்.

### (Men with abundant secretion of semen.)

**வினா:** சிலர் வீரியப் பெருக்கம் உடையவராய் இருத்தற்கு நியாயம் யாதோ?

**விடை:** வீரியத் தானாதிபன் ஆட்சிபெற்ற களத்திரத் தானாதிபனுடன் கூடியிருந்தாலும், களத்திரத் தானாதிபன் ஆட்சி பெற்ற வீரியத் தானாதிபனுடன் கூடியிருந்தாலும், வீரியத்தானாதிபன் களத்திரத் தானத்திலும் களத்திரத் தானாதிபன் வீரியத் தானத்திலுமாக விடுமாறி இருந்தாலும் இதிற் பிறந்தவர் வற்றாத வீரியப் பெருக்கம் உடையவராகவே விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ்வா | 10 | வியாழ |
| சூரியன் புதன் சுக்கிரன் | வீரியப் பெருக்கம் உடையவர் | | 12 |
| 6 | | | ல சந்திர |
| 5 | 4 | சனி | கேது |

### 233. வீரியத் தம்பனஞ் செய்பவர்.

### (Men who have retaining power.)

**வினா:** சிலர் வீரியத் தம்பனம் செய்பவராய் அல்லது வீரிய நிக்கிரகம் செய்பவராய் விளங்குகின்றனர். இது எதனால்?

**விடை:** வீரியத் தானாதிபனும் களத்திரத் தானாதிபனும் ஆட்சி உச்ச முதலான பூரணபலத்துடன் இருக்கும் புத்தித் தானாதிபனுடனே (5-ம் இடத்ததிபனுடனே) கூடியிருந்தாலும், வீரியத் தானாதிபனும் புத்தித் தானாதிபனும் ஆட்சிபெற்றிருக்கும் முயற்சித் தானாதிபனுடன் இருந்தாலும் இதிற் பிறந்தவர் வீரிய ஸ்தம்பனம் செய்பவராய் அல்லது வீரிய நிக்கிரகம் செய்யும் திடசித்த புருஷராய் விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் வியாழ சுக் கே | புதன் செவ்வா | 12 | ல |
| சந்திர | வீரியத் தம்பனம் செய்பவர் | | 2 |
| சனி | | | 3 |
| 7 | 6 | 5 | ராகு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 234. போகசுகத்தில் ஆழ்ந்த உணர்ச்சியுடையவர்.

(Those who indulge in lust.)

வினு: சிலர் ஸ்திரீபோகத்தில் அளவுகடந்த இன்பம் அனுபவிப்பவராய், போகசுகத்தில் ஆழ்ந்த உணர்ச்சி உடையவராய் இருப்பதற்கு நியாயம் யாது?

விடை: உதயலக்கினத்திற் பூரணசந்திரனும் களத்திரத் தானத்தில் (7-ம் இடத்தில்) சுக்கிரனும் பலவான்களாக இருக்க, களத்திரத் தானதிபதி சுகத் தானத்தில் (4-ம் இடத்தில்) உச்சகதி அடைந்திருக்கப் பிறந்தவர் ஸ்திரீ போகத்தில் ஆழ்ந்த உணர்ச்சி உடையவராய், அளவில்லாத ஆனந்தம் அடைபவராய்க் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ்வா | 11 | வியாழ |
| 8 | ஸ்திரீ போகத்தில் பூரண சுகம் காண்பவர் | | ல சந்திர |
| புதன் சுக்கிரன் | | | 2 |
| சூரியன் | 5 | சனி | கேது |

## 235. தாரத்தை வஞ்சித்து வியபிசரிப்பவர்.

(The adulterous.)

வினு: சில புருஷர் தம் மனைவியர் சுந்தரவதிகளாக இருக்கவும், சில பெண்கள் தம் புருஷர் மதனசொரூபர்களாக இருக்கவும், அவருடன் அமையாது, சோரத்தனமாக அந்நியரிடம் இன்பசுகம் அனுபவிக்கின்றனர். இதற்குக் காரணம் யாது?

விடை: களத்திரத்தானத்தில் சுக்கிரனும் உதயலக்கினத்திற் செவ்வாயும் இருந்தாலும், களத்திரத்தானத்திலேயே இவ்விருவரும் அமர்ந்தாலும், களத்திரத் தானத்திற் பலவானுன சந்திரனுடன் இவ்விருவரில் ஒருவர் தொடர்ந்தாலும், இவ்வாறுன நிலைமையிற் பிறந்தவர் புருஷராயின் தம் மனைவியுடன் அமையாது வேறு பெண்களிடத்தும், பெண்களாயின் தம் புருஷருடன் அமையாது வேறு புருஷரிடத்தும் இன்பம் அனுபவிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 236. வீரிய உற்பத்தி குறைந்தவர்.

## (Men with poor secretion of semen.)

**வினு:** சிலர் வீரிய உற்பத்தி குறைந்தவர்களாக இருத்தற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | கேது | ல |
| 9 | வீரிய | | 2 |
| 8 | உற்பத்தி குறைந்தவர் | | செவ்வா |
| சனி | சூரியன் வியாழ ராகு | புதன் | சந்திர சுக்கிரன் |

**விடை:** வீரியத் தானதிபர் (3-ம் இடத்திற்குரியவர்) சூரியன் அபரபக்கச் சந்திரன் இவர்களாகி, களத்திரத் தானதிபனுடன் கூடி 6, 8, 12-ல் இருந்தாலும்; வீரியத் தானதிபனும் களத்திரத் தானதிபனும் வக்கிர அஸ்தபன கதி அடைந்து, சூரியசந்திரருடன் கூடி மறைவுத் தானங்களில் இருந்தாலும் இந் நிலைமையில் உதித்தவர் வீரிய உற்பத்தி குறைந்தவர்களாகக் காணப்படுவர்.

## 237. வீரிய சக்தியை இழப்பவர்.

## (Men who lose their virility.)

**வினு:** சிலர் வீரிய சக்தி இழந்தவராகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் சுக்கிரன் | சனி ராகு | 4 | 5 |
| ல | வீரிய | | 6 |
| செவ்வா | சக்தியை இழந்தவர் | | 7 |
| 11 | 10 | வியாழ கேது | சந்திர |

**விடை:** வீரியத் தானதிபன் களத்திரத் தானதிபனுடன் கூடிச் செலவுத்தானத்தில் (12-ம் இடத்தில்) இருந்தாலும், வீரியத் தானதிபன் பலவீனனாகி மறைவுத் தானங்களில் (6, 8, 12-ல்) இருக்க, செலவுத் தானதிபனும் பலங்குன்றினவனாகி வீரியத் தானத்தில் இருந்தாலும் இதிற் பிறந்தவர் (சொப்பன ஸ்கலிதம், துராகிருதப் புணர்ச்சி முதலியவைகளால்) வீரியசக்தியை இழந்துவிடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 238. பெண் தன்மையுடன் விளங்கும் ஆடவர்.

### (Men who have feminine qualities.)

வினா: சில ஆண்கள் உருவம், குணம், தொழில் முதலியவைகளில் பெண்களைப்போல் (பெண் தன்மையுடையவர்களாக) விளங்குகின்றனர். இதற்குக் காரணம் யாது?

விடை: இடபம், கர்க்கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய ஸ்திரீ ராசிகள் உதயமாக, அவைகளில் சந்திரன் சுக்கிரன் இராகு ஆகிய ஸ்திரீக் கிரகங்கள் உதிக்கப் பூமியில் ஜனித்த புருஷர் பெண்சுபாவமுள்ளவர்களாய் (பெண் தன்மை பொருந்தியவர்களாய்) விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| கேது | 8 | 9 | 10 |
| வியாழ | பெண்டன்மை | | 11 |
| சனி | பொருந்திய புருஷன் | | 12 |
| செவ்வா | சூரியன் புதன் | 2 | ல சந் சுக் ராகு |

### ஸ்திரீ ஜாதக பலன்

### சுபாவம்

### 239. ஆண் தன்மையுடன் விளங்கும் பெண்கள்.

### (Women who have masculine qualities.)

வினா: சிலர் பெண்கள் உருவம், குணம், தொழில் முதலியவைகளில் ஆண்களைப்போல் (ஆண் தன்மையுடையவராகக்) காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: உதய லக்கினம் மேடம், மிதுனம், சிங்கம், துலாம், தனு, கும்பம் முதலான புருஷ ராசிகளாக, அதில் சூரியன் செவ்வாய் வியாழன் முதலான புருஷக் கிரகங்கள் இருக்க, நவாம்ச நிலையிலும் இதுபோல் இருக்கப் பிறந்த பெண்கள் புருஷசுபாவம் உள்ளவர்களாகவே விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| சனி | 9 | 10 | ராகு |
| 7 | ஆண்டன்மை | | சுக்கிரன் |
| 6 | உள்ள பெண் | | ல சூரி செ வியாழ |
| சந்திர கேது | 4 | 3 | புதன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 240. கன்னிப் பராயத்திற் கிழத்தன்மை அடைபவர்.

(Women who become prematurely old.)

**வினா:** சில பெண்கள் கன்னிகைகளாக இருக்கும்போதே கிழத்தன்மை (கிழவியின் இலட்சணங்கள்) உடையவர்களாக இருக்கின்றனர். இதற்குக் காரணம் யாது?

**விடை:** களத்திரத் தானத்தில் சனி இருந்தாலும், சனி களத்திரத் தானத்திற்கு அதிபதியாக இருந்து களத்திரத் தானத்தை நோக்கினாலும், 7-வது நவாம்சத்தில் சனி இருந்து சூரியனால் நோக்கப்பெற்றாலும் இந்நிலைமையில் உதித்த பெண்கள் தங்கள் கன்னிப் பராயத்திலேயே கிழவியின்சுபாவ முடையவராகக் காணப்படுவர்.

### பொருள்

## 241. தரித்திரவதிகள்.

(Women who bring misfortune to their family.)

**வினா:** சில பெண்கள் தரித்திரவதிகளாக இருத்தற்கு நியாயம் யாது?

**விடை:** இதற்கு 2-ம் பாவத்தில் "தரித்திரர்" என்ற பிரிவில் (ஸ்திரீபுருஷர் இருவருக்கும் ஒத்தவாறே) விடையிறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஞாயிறு செவ்வாய் சனி வாரங்களில், பரணி கார்த்திகை திருவாதிரை ஆயிலியம், கிருஷ்ணசதுர்த்தசியுடன் கூடிய சித்திரை, மூலம், பூராடம் முதலான நக்ஷத்திரங்கள் பொருந்தியுள்ள வேளைகளிற் பிறந்த பெண்கள் குறைவில்லாத செல்வவதிகளாக இருந்தாலும் தமது சீவியத்தில் ஓர் காலத்திலாவது தரித்திரவதிகளாகக் காணப்படுவர்.

### புத்திரர்

## 242. வெகுபுத்திரவதிகள்.

(Women who bear many children.)

**வினா:** சில பெண்கள் வெகுபுத்திரவதிகளாக விளங்குகின்றனர். இதற்குக் காரணம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| செவ்வா சனி | சந்திர | ராகு | 6 |
| 2 | வெகு புத்திரவதி | | 7 |
| ல | | | சூரியன் |
| 12 | கேது | 10 | புதன் வியாழ சுக்கிரன் |

விடை: புத்திரத் தானாதிபனும் (5-ம் இடத்தவனும்) வியாழனும் கூடிப் பாக்கியத் தானத்திலேனும் (9-ம் இடத்திலேனும்) இலாபத் தானத்திலேனும (11-ம் இடத்திலேனும்) பலவான்களாக இருந்தாலும், புத்திரத் தானத்தில் வியாழனும் சுக்கிரனும விசேஷ யோகம் பெற்றிருந்தாலும், உதய லக்கினாதிபன் 1, 5, 9-ல் இருக்க, புத்திரத் தானாதிபனும் வியாழனும் கூடி 1, 4, 7, 10-ம் இடங்களில் இருந்தாலும் இந் நிலைமையிற் பிறந்த பெண்கள் வெகு புத்திரரை உடையவராக இருப்பர்.

## ரோகம்

### 243. நித்திய நோயாளிகள்.

### (Women who always suffer from diseases.)

| | | | |
|---|---|---|---|
| ல ராகு | 2 | வியாழ | 4 |
| 12 | நித்திய ரோகவதி | | 5 |
| 11 | | | சந்திரன் |
| 10 | சுக்கிரன் | புதன் | சூரி செ சனி கேது |

வினா: சில பெண்கள் நித்தியம் ரோகிகளாகக் காணப்படுகின்றனர். இது எதனால்?

விடை: களத்திரத் தானத்திற் சனியும் ரோகத் தானாதிபனும் கூடியிருக்கப் பிறந்த பெண்கள் சாந்தனையும் வியாதியுள்ளவர்களாகவே காணப்படுவர்.

### 244. ருதுசம்பந்தமான நோயுடையவர்.

### (Women who suffer from menstrul disorders.)

வினா: சில பெண்கள் ருதுசம்பந்தமான ரோகங்களால் (யாசருது கிரமமாக வரவேண்டிய நாட்களுக்குப் பின் காலம் கடந்து வருதல், அந்நாட்களுக்கு முன் வருதல், அதிகமான உதிரப்பெருக்கு, உதிரம் தடைப்படுதல் முதலியவைகளால்) அவஸ்தை அடைவதற்கு நியாயம் யாதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 5 | சுக்கிரன் கேது | சூரியன் செவ்வாய் புதன் | 8 |
| 4 | ருது சம்பந்தமான ரோகம் உடையவர் | | 9 |
| 3 | | | வியாழ சனி |
| 2 | ல | சந்திர ராகு | 11 |

**விடை:** களத்திரத் தானாதிபதி ரோகத் தானத்திலேனும் ஆயுட்டானத்திலேனும் (6-ம் இடத்தில் அல்லது 8-ம் இடத்தில்) இருக்க, களத்திரத்தானத்தில் செலவுத் தானாதிபனும், (12-ம் இடத்ததிபனும்) ரோகத் தானாதிபனும் (6-ம் இடத்ததிபனும்) செவ்வாயும் கேதுவும் கூடி இருந்தாலும், களத்திரத் தானாதிபன் செவ்வாயுடனும் ரோக செலவுத் தானாதிபருடனும் கூடி 6, 8, 12-ல் இருந்தாலும், நவாம்சத்தில் மேற்கூறியவாறு இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்த பெண்கள் எந்நாளும் இரத்தப்பிரவாக ரோகத்தினால் (ரஜஸ் பெருகுதலினால்) வாதைப்படுவர்.

களத்திரத்தானாதிபதி 6, 8-ம் இடங்களில் இருக்க, களத்திரத் தானத்தில் ரோகத்தானாதிபனும் சூரியனும் கூடியிருந்தாலும், களத்திரத் தானாதிபனும் சூரியனும் ரோகத்தானத்தில் இருந்தாலும், நவாம்சத்தில் இவ்வகை இருந்தாலும் இதிற் பிறந்த பெண்கள் உதிரம் தடைப்படுதல் (ரஜஸ் குறைதல்) காரணமாக வாதைப்படுவர்.

களத்திரத்தானாதிபனும் புதனும் கூடிச் சத்துருத் தானத்தில் இருந்தாலும், சத்துருத் தானாதிபன் புதனுடன் கூடிக் களத்திரத் தானத்தில் இருந்தாலும், நவாம்சத்தில் இவ்வகை இருந்தாலும் இதிற் பிறந்த பெண்கள் சூதகவாயு, கெர்ப்பவாயு முதலிய ருது சம்பந்தமான பீடைகளால் வருந்துவர்.

## 245. மர்மத்தானங்களில் ரோகமுடைய பெண்கள்

## (Women who have diseased sexual organs.)

**வினா:** சில பெண்கள் வியாதியினாற் பீடிக்கப்பெற்ற அங்கங்களை உடையவராய் இருத்தற்கு நியாயம் என்ன?

**விடை:** நவாம்சலக்கினமும் அதற்கு 7-ம் இடமும் சூரியன் சனி செவ்வாய் இவர்களின் வீடுகளாக, இவைகளில் இம் மூவரில் இருவர் பரிவர்த்தனமாயிருக்கப் பிறந்த மாதர்கள் தங்கள் மர்மஸ்தானங்களில் ரோகமுடையவராயிருப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயகர்

### 246. புருஷன் நிறம்.

### (The colour of one's husband.)

வினா: சில பெண்களுக்குச் செம்மை வெண்மை நிறமுள்ள புருஷரும், வேறு சில பெண்களுக்குக் கருமை பசுமை நிறம் அமைந்த புருஷரும், ஒழிந்த சில பெண்களுக்குக் கலப்புவர்ணம் (பொதுநிறம்) பொருந்தியுள்ள புருஷரும் கிடைப்பதற்கு நியாயம் என்ன?

விடை: களத்திரத் தானாதிபதி செவ்வாய் குரு சூரியன் இவர்களாக இருந்தால் செம்மை வெண்மை நிறமுள்ள புருஷரும், புதன் சனி இவர்களாக இருந்தால் பசுமை கருமை நிறம் வாய்ந்துள்ள கணவரும், செவ்வாயுடன் சனியாயினும் சூரியனுடன் புதனாயினும் கலந்திருந்தால் கலப்புநிறம் பொருந்தியுள்ள புருஷரும் கிடைக்கப்பெறுவர்.

### 247. நாயகரின் குணம்.

### (The character of one's husband )

வினா: சில பெண்களுக்குக் குணவான்களான மணவாளர் கிடைப்பதற்கும், வேறு சில பெண்களுக்குக் குணமில்லாக் கணவர் கிடைப்பதற்கும் நியாயம் என்ன?

விடை: களத்திரத் தானத்தில் பலவானான சூரியன் இருந்தால் உயர்குடிப் பிறப்பும், இராஜ உத்தியோகமும், சகலகலா வல்லமையும் வாய்ந்த மணாளனும்; சந்திரன் இருந்தால் அழகு, குளிர்ச்சி, மகிழ்ச்சி இவைகள் பொருந்தியுள்ள புருஷனும்; செவ்வாய் இருந்தால் கோபம், கொடியமனம், குரூரபுத்தி, அற்ப குற்றங்களுக்கும் அதிகமான தண்டனைபுரிதல் முதலிய துர்க்குணம் படைத்துள்ள கணவனும்; சுக்கிரன் இருந்தாற் சரசசல்லாபம், சந்தோஷம், போகசக்தி இவைகளிற் சிறந்துள்ள புருஷனும்; சனி இருந்தால் வயோதிகம், மந்தபுத்தி, மாருக்கோபம், வஞ்சகநெஞ்சம் இவை முதலான இயல்பினையுடைய தலைவனும்; இராகு இருந்தால் நீசத்தனமான வியாபாரம், அடிமைத்தொழில் முதலியன அமைந்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுனனும்; கேது இருந்தால் நூதன கைத்தொழில், புத்தித் திறமை, உதாரகுணமுடைய புருஷனும் கிடைக்கப்பெறுவர்.

## 248. உத்தம நாயகரை உடையவர்

## (Women who have ideal husbands.)

**வினு:** சில பெண்களுக்கு அடக்கம், பொறுமை, வித்துவத் தன்மை, ஈஸ்வரபக்தி, ஆத்மஞானம், இரக்கம், ஈகை முதலிய உத்தமகுணம் வாய்ந்த நாயகர் கிடைப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** களத்திரத் தானுதிபதி தசம கேந்திரத்தில் (10-ம் இடத்தில்) பலவானுக இருக்க, களத்திரத் தானத்தில் புதன் வியாழன் பூரண பலவான்களாக இருக்கப் பிறந்த பெண்களுக்கு இவ்வாறான சற்குணம் அமைந்த நாயகரே கிடைப்பர்.

## 249. தேசசஞ்சாரிகளைக் கணவராக உடையவர்.

## (Women who have travelling husbands.)

**வினு:** சில பெண்களுக்குச் சதா பிறதேசசஞ்சாரிகளாகிய புருஷர் கிடைப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** களத்திரத்தானம் சரராசியாக, அதிற் சரக்கிரகம் இருக்கப் பிறந்த பெண்களுக்குத் தூரதேசசஞ்சாரிகளாகிய கணவரே கிடைப்பர்.

## 250. வயோதிக புருஷரை மணக்கும் பெண்கள்.

## (Women who marry old men.)

**வினு:** சில பெண்கள் வயது சென்ற புருஷரை மணஞ்செய்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 6 | சனி<br>ராகு | 8 | 9 |
| 5 | கிழக் கணவனை<br>மணந்த பெண் | | சந்திர |
| 4 | | | 11 |
| 3 | 2 | ல<br>கு புதவி<br>சுக் கே | செவ்வாா |

**விடை:** உதயலக்கினம் குடும்பத்தானம் களத்திரத்தானம் இவைகளிற் சனி இருந்தாலும், களத்திர நவாம்சத்தில் (நவாம்சத்தின் 7-வது வீட்டில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனி இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்த பெண்கள் வயதுசென்ற புருஷரையே மணம்புரிவர்.

## 251. நபுஞ்சக நாயகரை உடையவர்.

## Women who have impotent husbands.)

**வினு:** சில பெண்களுக்கு நபுஞ்சகரான நாயகரே கிடைப்பதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 5 | சந்திர | சூரியன் புதன் சனி | சுக்கிரன் |
| ராகு | நபுஞ்சகனை புருஷனை உடைய ஸ்திரீ | | செவ்வா |
| வியாழ | | | கேது |
| 2 | ல | 12 | 11 |

**விடை:** களத்திரத் தானுதிபதி நிஷ்பலமாக இருக்க, அந்தத் தானத்தில் (7-ம் இடத்தில்) சனி, புதன் பலவீனராக இருக்கப் பிறந்த மாதர்க்கு ஆண்தன்மை இல்லாத நாயகரே அகப்படுவர்.

காதல்

## 252. புருஷராற் கைவிடப்படும் மனைவியர்.

## (Women who are deserted by their hubands.)

**வினு:** சில பெண்கள் புருஷராற் கைவிடப்பட்டவர்களாய்த் தேசசஞ்சாரிகளாகத் திரிவதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | சனி ராகு | 11 | சந்திர |
| சூரியன் புதன் | பர்த்தாவால் பஹிஷ்கரிக்கப்பட்ட பெண் | | ல |
| செவ்வா | | | 2 |
| 6 | 5 | வியாழ கேது | 3 |

**விடை:** பலவானுகிய செவ்வாய் களத்திரத் தானத்திலிருந்து பலவீனனுகிய களத்திரத் தானுதிபனை நோக்கினுல் இந் நிலைமையிற் பிறந்த பெண்கள் தங் கணவராற் கைவிடப்படுவர்.

## 253. புருஷருடன் போர்புரியும் பெண்கள்.

## (Women who always quarrel with their husbands.)

**வினு:** சில பெண்கள் தினமும் தம் புருஷருடன் போர்புரிபவராகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: களத்திரத் தானாதிபதி (7-ம் இடத்தவன்) மறைவுத் தானங்களில் (3, 6, 8-ல்) பலவீனனாக இருக்க, இலக்கினாதிபன் 1, 4, 5, 7, 9, 10, 11-ம் இடங்களில் பலவானாக இருந்தாலும், மாங்கல்யத் தானத்தில் (8ம் இடத்தில்) செவ்வாய் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்துள்ள பெண்கள் எப்பொழுதும் தமது புருஷருடன் போர்புரிந்தே சீவிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 4 | 5 |
| ல ராகு | புருஷனுடன் போரிடுபவள் | | வியாழ |
| 12 | | | கேது |
| 11 | சந்திர | புதன் சனி | சூரியன் செவ்வா சுக்கிரன் |

## காமம்

### 254. மீறிய காமம் உடையவர்.

(Women who have uncontrollable sexual desire.)

வினா: சில பெண்கள் தினமும் சகிக்கமுடியாத காமாக்கினியினாற் பீடிக்கப்பெற்றவர்களாக இருத்தற்குக் காரணம் என்ன?

விடை: மகரம் கும்பம் மேடம் விருச்சிகம் முதலிய இராசிகளின் 8-வது பாகங்கள் ஜன்மலக்கினமாக அமைய, உதயலக்கினத்தையும் களத்திரத் தானத்தையும் சனிசுக்கிரர்கள் நோக்கப் பிறந்த பெண்கள் மீறிய காமநோயுடையவராகக் காணப்படுவர்.

## கற்பு

### 255. நாயகர் அறிய வியபிசரிப்பவர்.

(Women who prostitute with the consent of their husbands)

வினா: சில பெண்கள் தம் நாயகரின் ஏவுதலால் பிறபுருஷர்க்கு இன்பம் உதவுகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

விடை: களத்திரத் தானாதிபதி மறைவுத் தானங்களில் நீசனாக அமர, களத்திரத் தானத்தில் செவ்வாய் தீவிரகெதியிற் நிகழ, இலக்கினாதிபதி, வீரியத் தானாதிபதி (3-ம் இடத்திற்குரியவன்)

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | 12 | ல சனி |
| ராகு | புருஷன் ஏவலாற் பிறரைச் சேர்பவள் | | 2 |
| வியாழ | | | கேது |
| செவ்வா | சூரியன் புதன் சுக்கிரன் | 5 | சந்திர |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரத் தானாதிபதி (5-ம் இடத்துக்குரியவன்) ஆட்சிபெற்ற (பலமுள்ள) சுகஸ்தானாதிபதி இவர்களுடன் கூடியிருக்கப் பிறந்த பெண் தன் புருஷன் ஏவுதலால் பிறபுருஷருக்குப் போகசுகம் உதவுவள்.

## 256. நாயகரைக் கொல்லும் நாரியர். (Women who murder their husbands on behalf of their paramours.)

**வினா:** சில பெண்கள் தம் நாயகரைக் கொன்றுவிட்டுச் சோரநாயகருடன் சுகிக்கின்றனர். இதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | 2 | 3 |
| ராகு | புருஷனைக் கொன்ற பூவை | | வியாழ |
| 10 | | | கேது |
| 9 | சூரியன் சந்திர | செவ்வா புதன் சனி | சுக்கிரன் |

**விடை:** களத்திரத் தானாதிபதி நீச மூட வக்கிர கதிகளை அடைந்து ஏர்கேயாயினும் இருக்க, சத்துருத் தானாதிபதியும் (6-ம் இடத்துக்குரியவன்) செவ்வாயும் சனியும் களத்திரத்தானத்தில் பலவான்களாக இருந்தாலும், மேற்குறித்த ஸ்தானாதிபதியை நோக்கினாலும் இதிற் பிறந்த பெண்கள் தம் சொந்த நாயகரை வதைசெய்துவிட்டுச் சோரநாயகருடன் சுகித்து வாழ்வர்.

## 257. பரத்தையர். (The prostitutes.)

**வினா:** சில பெண்கள் தினசரி அநேகம் ஆடவரைத் தமக்கு நாயகராகக் கொண்டு அவர்கள் மூலம் செல்வவதிகளாகத் திகழ்கின்றனர். இதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் | செவ்வா சுக்கிரன் | வியாழ | 9 |
| சனி | பரஸ்திரீ | | ராகு |
| கேது | | | 11 |
| 3 | 2 | ல சந்திர | 12 |

**விடை:** முயற்சித் தானாதிபதி (10-ம் இடத்துக்குரியவன்) பகைநீசனாகி உதயலக்கினத்திலேனும் களத்திரத் தானத்திலேனும் இருக்க, களத்திரத் தானாதிபதி உதயலக்கினத்திற் பூரண பலவானாக விளங்க, களத்திரத் தானத்தில் செவ்வாய்சுக்கிரர்கள் பலவான்களாக அமர, உதயலக்கினாதிபதி முயற்சித் தானத்தில் இருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிலைமையிற் பிறந்த பெண்கள் அநேகம் ஆடவரை வசீகரிக்கப் பெற்றவராய், தினமும் அன்னவாக்கே தம்மை விலைபேசி விற்கும் இயல்பினராய், அதனால் நிரம்பிய பொருட்செல்விகளாக இருப்பர்.

## மாங்கலியம்

### 258. கணவருக்கு முந்தி மரணமடைபவர்.

### (Women who die before their husbands.)

**வினா:** சில பெண்கள் தம் மணவாளருக்கு முன் மரணம் அடைகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** இலக்கினாதிபதியும் சுக்கிரனும் கூடி 8-ம் இடத்தில் இருக்கப் பிறந்த பெண்கள் தம் புருஷருக்கு முன் (சுமங்கலிகளாகவே) மரணம் அடைவர்.

### 259. விவாகஞ்செய்தவுடன் விதவைகளாபவர்.

### (Women who become widows very soon.)

**வினா:** சிலபெண்கள் விவாகம் செய்த சில நாட்களுள் விதவைகளாய்விடுகின்றனர். இதற்குக் காரணம் என்ன?

**விடை:** இதற்கும் முற்கூறிய அங்காரகதோஷமே காரணம். இதைவிட, களத்திரத் தானாதிபதி நீசாஸ்தமனம் அடைந்து 8-ம் இடத்திலேனும் 12-ம் இடத்திலேனும் இருந்தாலும், களத்திரத் தானாதிபதியும் குடும்பத் தானாதிபதியும் சுக்கிரனும் கூடிக் குரூரக் கிரகங்களின் மத்தியில் இருந்தாலும், களத்திரத் தானத்தில் குரூரக் கிரகங்களும் சுபக் கிரகங்களும் நிரம்பியிருந்தாலும் இந் நிலைமையிற் பிறந்த பெண்களும் மணமுடித்த சில தினங்களுள் வைதவ்வியம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 10 | சந்திர | 12 | ல சனி |
| ராகு | இளமையில் விதவை | | 2 |
| வியாழ | | | கேது |
| 7 | சுக்கிரன் | செவ்வா புதன் | சூரியன் |

| | | | |
|---|---|---|---|
| 12 | ல கேது | 2 | சந்திர |
| 11 | விவாகஞ் செய்த சிலநாளில் விதவை | | 4 |
| 10 | | | சூரி புத வியாழ சனி |
| 9 | செவ்வா | ராகு | சுக்கிரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 260. புருஷப் பொருத்தம் அற்றவர்.

(Women who lose their husbands often.)

வினா: சில பெண்கள் புருஷப் பொருத்தம் இல்லாதவராய் (எத்தனை புருஷரை மணந்தாலும் அத்தனை புருஷரையும் இழந்து விடுபவராய்) எப்பொழுதும் துக்கிகளாக இருக்கின்றனர். இதற்குக் காரணம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| வியாழ சனி | 9 | 10 | கேது |
| 7 | புருஷப் பொருத்தம் இல்லாதவள் | | சூரியன் புதன் சுக்கிரன் |
| 6 | | | ல செவ்வா |
| ராகு | 4 | சந்திர | 2 |

விடை: இடபம், துலாம், கர்க்கடகம், சிங்கம் இவைகள் உதயலக்கினங்களாகி அவைகளிற் செவ்வாயிருந்தாலும், செவ்வாய் 7-ம் 8-ம் இடங்களிற் சனியுடன் கூடியிருந்தாலும் இவ்வாறான வேளைகளிற் பிறந்துள்ள பெண்கள் புருஷப்பொருத்தமற்றவராகவே இருப்பர். அன்றியும், ஞாயிற்றுக்கிழமையும் பரணியும், திங்கட்கிழமையும் சித்திரையும், செவ்வாய்க்கிழமையும் மூலமும், புதன்கிழமையும் அவிட்டமும், வியாழக்கிழமையும் கேட்டையும், வெள்ளிக்கிழமையும் பூராடமும், சனிக்கிழமையும் ரேவதியும் கூடினும் இந் நிலைமையிற் பிறந்தவள் புருஷப்பொருத்தம் இல்லாதவளாகவே (விஷகன்னியாகவே) காணப்படுவள். இன்னும் ஸ்திரீ சாமுத்திரிகாலக்ஷண சாஸ்திரத்தின்படி சுருட்டை மயிருடையவள், கன்னத்தில் ரோமமுடையவள், மஞ்சட்கண் பூனைக்கண் காகக்கண் உள்ளவள், பருத்த பற்களுள்ளவள், நீண்ட கழுத்துள்ளவள், கெண்டைக்கால் பருத்திருப்பவள் இவ்வாறான இலக்ஷணங்கள் அமைந்துள்ள பெண்கள் மேற்கூறியவாறு புருஷப்பொருத்தம் இல்லாதவர்களாக இருத்தல் அனுபவத்தில் கண்ட விஷயமாகும்.

## பாக்கியம்

### 261. செல்வவதிகள்.

(Women who are always rich and prosperous.)

வினா: சில பெண்கள் செல்வவதிகளாக (இராஜயோகங்கள் உள்ளவர்களாக) திகழ்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: உதயலக்கினத்திற் சந்திரனும், புத்தித் தானத்தில் (5-ம் இடத்தில்) வியாழனும், பாக்கியத்தானத்தில் (9-ம் இடத்தில்) சுக்கிரனும் இருந்தாலும்; களத்திரத் தானாதிபதி லாபத்தானத்தில் (11-ம் இடத்தில்) இருக்க, லாபத் தானாதிபன் பாக்கியத்தானத்தில் இருந்தாலும் இவ்வாறான நிலைமையில் உதித்த பெண்கள் குறைவில்லாத செல்வ சௌபாக்கியவதிகளாக விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ்வா | 4 | வியாழ |
| ல சந்திர | செல்வச் சீமாட்டி | | 6 |
| 12 | | | 7 |
| 11 | 10 | சூரியன் புத சுக் சனி | கேது |

## கீர்த்தி

### 262. சமூகசேவையில் ஈடுபடும் பெண்கள்.

(Women who work in the social and political fields.)

**வினா:** சில பெண்கள் பொதுஜனசேவை, அரசியல்ஞானம் முதலிய மேல்நோக்கமான குணங்களை உடையவராய் இருப்பதற்குக் காரணம் என்ன?

விடை: பாக்கியத் தானாதிபதியும் (9-ம் இடத்தலைவனும்) கீர்த்தித் தானாதிபதியும் (10-ம் இடத்தலைவனும்) சுபக்கிரகங்களாய் ஆட்சி உச்சம் பெற்ற பூர்வ பக்கச் சந்திரனுடன் கூடி உதய கேந்திரத்தில் இருக்கப் பிறந்த பெண்கள் மேற்சுட்டிய நிலைமையினை உடையவராயிருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | 9 |
| 5 | சமுகசேவையில் கீர்த்திபெற்ற பெண் | | சனி ராகு |
| கேது | | | 11 |
| 3 | செவ்வா வியாழ | ல சந்திர புத சுக் | சூரியன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்காரக தோஷம்

### உதாரணச் சக்கரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 10 | கேது | 12 | ல செவ் |
| 9 | (1) உதய லக்கினத்தில் செவ்வாய் உடையவர் | | சுக்கிர |
| சந்திரன் வியாழ | | | சூரியன் புதன் |
| சனி | 6 | ராகு | 4 |

| | | | |
|---|---|---|---|
| 8 | 9 | சந்திர | வியாழ |
| சனி | (2) 2-ம் இடத்தில் செவ்வாய் உடையவர் | | இராகு |
| கேது | | | ல |
| 5 | சூரியன் சுக்கிர | புதன் | செவ |

| | | | |
|---|---|---|---|
| 9 | 10 | ராகு | சந்திர |
| சுக்கிர | (3) 4-ம் இடத்தில் செவ்வாய் உடையவர் | | ல |
| சூரியன் | | | வியாழ |
| புதன் சனி | கேது | செவ் | 3 |

| | | | |
|---|---|---|---|
| ராகு | ல | வியாழ | 3 |
| 11 | (4) 7-ம் இடத்தில் செவ்வாய் உடையவர் | | 4 |
| சுக்கிர | | | 5 |
| 9 | சூரியன் | செவ் புதன் | சந்திர சனி கேது |

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் | சுக்கிர | கேது | 12 |
| செவ் | (5) 8-ம் இடத்தில் செவவாய் உடையவர் | | ல |
| 7 | | | 2 |
| சனி | வியாழ ராகு | சந்திர | 3 |

| | | | |
|---|---|---|---|
| 6 | கேது | 8 | 9 |
| 5 | (6) 11-ம் இடத்தில் செவ்வாய் உடையவர் | | 10 |
| வியாழ | | | செவ் |
| சனி | சந்திர | ல சூரிபுத சுக்ராகு | 12 |

| | | | |
|---|---|---|---|
| ல | சூரி புத சனி ராகு | சந்திர சுக்கிர | 4 |
| செவ் | (7) 12-ம் இடத்தில் செவ்வாய் உடையவர் | | 5 |
| 11 | | | 6 |
| 10 | 9 | வியாழ கேது | 7 |

| | | | |
|---|---|---|---|
| ல | 2 | 3 | கேது |
| 12 | (8) சந்திரனுக்கு 7-ல் செவ்வாய் உடையவர் | | செவ் |
| சந்திர | | | 6 |
| ராகு | சூரி புத சுக்கிர சனி | வியாழ | 7 |

| | | | |
|---|---|---|---|
| வியாழ | ராகு | ல | 2 |
| செவ் | (9) சுக்கிரனுக்கு 7-ல் செவ்வாய் உடையவர் | | 3 |
| 9 | | | சுக்கிர |
| சந்திர | 7 | சூரியன் புதன் கேது | சனி |

மேற்சுட்டிய ஸ்தானங்களில் செவ்வாய் இருப்பதனும் அந்த ஸ்தானங்களை நோக்குவதனுலும் தாரதோஷம் (குடும்ப தோஷம், மாங்கல்யதோஷம்) ஏற்படுவதற்குக் காரணம் என்ன என் பதைக் கவனிப்போம்.

மேலே காட்டிய 1-வது கிரகநிலை உடையவருக்கு உதயலக்கி னத்தில் இருந்த செவ்வாய் களத்திரத் தானத்தை (7-ம் இடத்தை) சமநோக்காக நோக்குவதனுலும், மங்கலியஸ்தானத்தை (8-ம் இடத்தை) தீவிரநோக்காக நோக்குவதனுலும் தாரநஷ்டம் ஏற் பட்டது.

2-வது கிரகநிலை உடையவருக்குச் செவ்வாய் குடும்பஸ்தானத் தில் (2-ம் இடத்தில்) இருந்து மங்கல்யத் தானத்தைச் சமதிருஷ்டி யாக நோக்குவதனுல் குடும்பதோஷம் உண்டாயிற்று.

3-வது கிரகநிலை உடையவருக்குச் செவ்வாய் சுகஸ்தானத்தில் (4-ம் இடத்தில்) இருந்து தாரஸ்தானத்தை (7-ம் இடத்தை) தன் பூரணபார்வையாகப் பார்ப்பதனுல் தாரநாசம் ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4-வது கிரகநிலை உடையவருக்குச் செவ்வாய் தாரத்தானத்தில் இருந்து குடும்பத் தானத்தை முழுநோக்காக நோக்குவதனுல் தாரச்சேதம் உண்டாயிற்று.

5-வது கிரகநிலை உடையவருக்குச் செவ்வாய் மங்கல்யஸ்தானத்திலிருந்து குடும்பஸ்தானத்தைச் சமநோக்காக நோக்குவதனுல் குடும்பநாசம் ஏற்பட்டது.

6-வது கிரகநிலை உடையவருக்குச் செவ்வாய் இலாபத்தானத்தில் (11-ம் இடத்தில்) இருந்து குடும்பஸ்தானத்தைத் தீவிரநோக்காக நோக்குவதனுல் குடும்பநஷ்டம் உண்டாயிற்று.

7-வது கிரகநிலை உடையவருக்குச் செவ்வாய் செலவுத்தானத்தில் (12-ம் இடத்தில்) இருந்து, தாரஸ்தானத்தைப் பூரணதிருஷ்டியாக நோக்குவதனுல் தாரவியோகம் உண்டாயிற்று.

8-வது கிரகநிலை உடையவருக்குச் செவ்வாய் (உடல் ஆகிய) சந்திரலக்கினத்துக்கு 7-ம் இடத்தைச் சமநோக்காக நோக்குவதனுல் தாரநஷ்டம் ஏற்பட்டது.

9-வது கிரகநிலை உடையவருக்குச் செவ்வாய் தாரகாரகனுகிய சுக்கிரனைச் சமநோக்காக நோக்குவதனுல் தாரநஷ்டம் உண்டாயிற்று.

[இவற்றைவிட, செவ்வாய் சந்திரலக்கினத்திற்கும் சுக்கிரலக்கினத்திற்கும் 1, 2, 4, 8, 12-ம் இடங்களில் இருந்தாலும் தாரநஷ்டம், குடும்பக்குழப்பம் உண்டாகும் என்று சாஸ்திரங்கள் சாற்றுகின்றன. ஆனுல், அவை ஆராய்ச்சிக்கு எட்டியவரை அனுபவசாத்தியமாகக் காணப்படவில்லை. அறிஞர்களின் அனுபவத்தில் அவ்வாறு கிடைத்துளதாயின் அறியத்தருமாறு அவாவுகின்றேன்.]

---

## எட்டாம் பாவ பலன்

### பால அரிஷ்டம்

### 263. பிறந்த சில நாட்களுள் இறப்பவர்.

(Those who die within a few days from birth.)

**வினா:** சில பிள்ளைகள் பூமியிற் பிறந்தவுடன் இறந்துவிடுகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| வியாழ | 5 | 6 | ராகு |
| 3 | 27-ம் நாளில் இறந்த பிள்ளை | | 8 |
| 2 | | | சூரியன் புதன் |
| ல சந்திர கேது | சனி | 11 | செவ்வா சுக்கிரன் |

**விடை:** உதயலக்கினத்தில் அபரசந்திரனும் கேதுவும் இருக்க ஆயுட்டானாதிபனும் ஆயுட்காரகனும் (சனியும்) மாரகராகி இலக்கினத்தை நோக்கினாலும், செலவுத்தானாதிபன் (12-ம் இடத்தவன்) பலவானாகிப் பலவீனனான ஆயுட்டானாதிபதியுடன் கூடினாலும், ஆயுட்டானாதிபன் ஆயுட்காரகன் இருவரும் பலவீனராக ஆயுட்டானத்தில் சனி செவ்வாய் சூரியன் இருந்தாலும், சந்திரன் சனிராகுக்களுடன் கூடியிருக்க ஆயுட்டானத்தில் செவ்வாய் இருந்தாலும், சனி 12-ம் இடத்திலும் சூரியன் 9-ம் இடத்திலும் சந்திரன் இலக்கினத்திலும் இருந்தாலும், உதயலக்கினத்திற்கு 2-ம் இடத்திலும் 12-ம் இடத்திலும் செவ்வாயும் சனியும் இருக்க இலக்கினாதிபனேனும் சந்திரனேனும் வக்கிராஸ்தமன கதியுடன் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்த பிள்ளைகள் பூமியிற் பிறந்தவுடனே அல்லது 27 நாட்களுள் மரணமடைகின்றனர்.

### 264. ஆறுமாதத்துள் இறப்பவர்.

(Those who die within six months from birth.)

**வினா:** சில பிள்ளைகள் பிறந்து 6 மாதத்துள் மரணமடைகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: உதயலக்கினத்தில் சந்திரன் இராகுகேதுக்களுடன் கூடி இருக்க ஆயுட்டாணுதிபன் சூரியன் 2, 7-ம் இடங்களில் இருந்தாலும், இராகுகேதுக்களுடன் கூடிய சந்திரனைச் சனி செவ்வாய் மாரகராகி நோக்கினாலும் இது போன்ற நிலைமையில் உதித்த பிள்ளைகள் 6 மாதத்துள் மரணமடைகின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| சனி | 6 | சூரியன் புதன் கேது | செவ்வா சுக்கிரன் |
| வியாழ | 6 மாதத்தில் இறந்த பிள்ளை | | 9 |
| 3 | | | 10 |
| 2 | ல சந்திர ராகு | 12 | 11 |

## 265. ஒருவருஷத்துள் இறப்பவர்.

(Those who die within one year from birth.)

வினா: சில பிள்ளைகள் பிறந்து ஒரு வருஷத்துள் மரணமடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: பிரபல மாரகனான (2, 7-க்கு அதிபனான) செவ்வாய் அல்லது சுக்கிரன் உதயலக்கினத்தையும் அதிபனையும் நோக்கினாலும், சந்திரன் மாரகனாகி இராகு கேதுக்களுடன் இருக்க அச் சந்திரனை மாரகனான சூரியன் சனி செவ்வாய் நோக்கினாலும், ஆயுட்டாணுதிபனும் ஆயுட்காரகனும் சத்துருத் தானத்தில் பாபக்கிரகங்களுடன் இருந்தாலும், பேடம் கர்க்கடகம் துலாம் மகரம் முதலிய இராசிகளின் அந்தங்களிலும் அவ்விராசிகட்குரிய நக்ஷத்திராந்தங்களிலும் பிறந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்த பாலர் ஒருவருஷத்துள் உயிர்நீங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் சுக் சனி | செவ்வா | கேது | 9 |
| 5 | ஒருவருஷத்தில் இறந்த பிள்ளை | | 10 |
| வியாழ | | | 11 |
| சந்திர | ராகு | ல | 12 |

## 266. தாயுடன் ஒரேநாளில் இறப்பவர்.

(Those who die with their mothers on the same day.)

வினா: சில பிள்ளைகள் தாயுடன் ஒரே நாளில் மரணமடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வியாழ கேது | சந்திர செவ்வா சுக் சனி | 7 | 8 |
| சூரியன் புதன் | | | 9 |
| 3 | ஒரேநாளில் தாயுடன் இறந்த பிள்ளை | | 10 |
| 2 | ல | 12 | ராகு |

விடை: ஆயுட்டானாதிபனும் ஆயுட்காரகனும் மாரகராகிச் சந்திரனை நோக்கியிருக்க, மாரகரான செவ்வாய் சனி சூரியர்கள் மாதிருத்தானாதிபனையும் (4-ம் இடத்தலைவனையும்) மாதிருகாரகனையும் (சந்திரனையும்) நோக்கினாலும், மாதிருத்தானாதிபனும் மாதிருகாரகனும் 6, 8, 12-ம் இடங்களில் இருந்து குரூரனாகிய இலக்கினாதிபனால் பார்க்கப்பெற்றாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்த பாலர்கள் தம்மைப் பெற்ற தாயாருடன் ஒரே நாளில் மரணம் அடைவர்.

### 267. பிதாவுடன் இறப்பவர்.

(Those who die with their fathers.)

வினா: சில பிள்ளைகள் பிதாவுக்கு அரிஷ்டஞ்செய்து, தாங்களும் உடன் இறக்கின்றனர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| சனி | சுக்கிரன் | சூரியன் புதன் கேது | 6 |
| 2 | | | சந்திர |
| ல வியாழ | பிதாவுடன் இறந்த பிள்ளை | | 8 |
| 12 | ராகு | செவ்வா | 9 |

விடை: உதயலக்கினாதிபன் மாரகனாகி பிதிர்த்தானாதிபனையும் (9-ம் இடத்தலைவனையும்) பிதிர்காரகனையும் (சூரியனையும்) நோக்கினாலும், சந்திரனையும் ஆயுட்டானாதிபனையும் மாரகராகிய சனி செவ்வாய் சூரியன் குரூரதிருஷ்டியாக நோக்கினாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்த சிறுவர்கள் பிதாவுடன் மரணமடைவர்.

## ஆயுள் நிர்ணயம்

### 268. பாலிய வயதில் இறப்பவர்.

(Those who die in their childhood.)

வினா: சிலர் பாலியவயதிலே பரலோகம் செல்கின்றனர். இதற்கு நியாயம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 7 | 8 | கேது | 10 |
| சந்திர | பாலியவயதில் இறந்தவர் | | வியாழ |
| 5 | | | செவ்வா சனி |
| 4 | புதன் ராகு | சூரியன் | ல சுக்கிரன் |

விடை: அட்டமத் தானாதிபதியும் (8-ம் இடத்தவனும்) சனியுங் கூடிச் செலவுத் தானத்தில் (12-ம் இடத்தில்) இருக்கப் பிறந்தவர் மிகச் சிறுபராயத்திலேயே மரணம் அடைவர்.

## 269. அற்பாயுள் உடையவர்.

## (Those who die while young.)

**வினா:** சிலர் அற்பாயுளில் (சிறுவயதில்) இறக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | வியாழ | செவ்வா கேது |
| 11 | இளமைப் பராயத்தில் இறந்தவர் | | சனி |
| 10 | | | சூரியன் புதன் |
| ராகு | 8 | சந்திர | சுக்கிரன் |

**விடை:** ஆயுட்டானாதிபனும் சனியும் 2, 3, 6, 12-ல் இருந்தாலும், இவ்விருவரும் 2, 7-ல் இருக்க 2, 7-க்கு அதிபர் ஆயுட்டானத்தில் இருந்தாலும், ஜன்மலக்கின சந்திரலக்கினங்கள் சராசிகளாகி ஜன்மலக்கின சந்திரலக்கினாதிபர்கள் உபயராசிகளில் இருந்தாலும், ஜன்மலக்கின சந்திரலக்கினங்கள் ஸ்திரராசிகளாகி அவ்விலக்கினாதிபர்கள் ஸ்திரராசிகளில் இருந்தாலும், ஜன்மலக்கின சந்திரலக்கினங்கள் உபயராசிகளாகி அவ்விராசிநாதர்கள் சராசிகளில் இருந்தாலும், ஜன்மலக்கினம் சராசியாகி ஜன்மலக்கினாதிபனும் ஆயுட்டானாதிபனும் உபயராசிகளில் இருந்தாலும், ஜன்மலக்கினம் ஸ்திரராசியாகி ஜன்மலக்கினாதிபனும் ஆயுட்டானாதிபனும் ஸ்திரராசிகளில் இருந்தாலும், ஜன்மலக்கினம் உபயராசியாகி ஜன்மலக்கினாதிபனும் ஆயுட்டானாதிபனும் சராசிகளில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் அற்பாயுளில் (32 வயதுள்) உயிர்நீப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 270. நடுவயதில் இறப்பவர்.

## (Those who die in their youth.)

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | 9 |
| சந்திர | 30 வயதில் இறந்தவர் | | சனி ராகு |
| கேது | | | செவ்வா |
| 3 | 2 | ல சூரி புத வியாழ | சுக்கிரன் |

வினா: சிலர் நடுவயதில் மரணிப்பதற்கு நியாயம் என்ன?

விடை: அட்டமத் தானாதிபதி 1-4-7-10-ல் இருக்க ஆயுட் காரகனாகிய சனி செலவுத் தானத்தில் இருந்தாலும், சனி 1-4-5-7-9-10-ம் இடங்களில் இருக்க அட்டமாதிபதி செலவுத் தானத்தில் பலவீனனாக இருந்தாலும் இதிற் பிறந்தவர் மத்திய வயதில் மரணிப்பர்.

## 271. மத்திம ஆயுள் உடையவர்.

## (Those who die in their middle age.)

வினா: சிலர் மத்திம ஆயுளில் (நடுவயசில்) இறக்கின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| 4 | ராகு | 6 | 7 |
| 3 | 67 வயதில் இறந்தவர் | | 8 |
| 2 | | | 9 |
| ல செவ்வா சனி | சந்திர புதன் | சூரியன் கேது | வியாழ சுக்கிரன் |

விடை: ஆயுட்டானாதிபன் சனி ஆகிய இருவரில் ஒருவர் 1-4-5-7-9-10-11-ம் இடங்களில் பலவானாக இருக்க, மற்றவர் 1-3-6-12-ல் பலமற்றவராக இருந்தாலும், உதயலக்கின சந்திரலக்கினங்கள் சரராசிகளாகி அவ்விலக்கினாதிபர்கள் ஸ்திரராசிகளில் இருந்தாலும், உதயலக்கின சந்திரலக்கினங்கள் ஸ்திரராசிகளாகி அவ்விலக்கினாதிபர்கள் சரராசிகளில் இருந்தாலும், உதயலக்கின சந்திரலக்கினங்கள் உபயராசிகளாகி அவ்விலக்கினாதிபர்கள் உபயராசிகளில் இருந்தாலும், ஜன்மலக்கினம் சரராசியாகி இலக்கினாதிபன் ஆயுட்டானாதிபன் இருவரும் ஸ்திரராசிகளில் இருந்தாலும், ஜன்மலக்கினம் ஸ்திரராசியாகி இலக்கினாதிபன் ஆயுட்டானாதிபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் சரராசிகளில் இருந்தாலும், ஜன்மலக்கினம் உபயராசியாகி இலக்கினதிபன் ஆயுட்டாஸ்திபன் இருவரும் உபயராசிகளிலிருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் தோன்றியவர் மத்திம ஆயுளில் (70 வயதினுள்) மரணமடைவர்.

## 272. வயோதிகராய் இறப்பவர்.

## (The centenarians.)

| | | | |
|---|---|---|---|
| வியாழ | 12 | ல சுக்கிரன் | சூரியன் புதன் |
| சனி | 100 வயதில் இறந்தவர் | | ராகு |
| செவ்வா கேது | | | 4 |
| 8 | 7 | 6 | சந்திர |

வினு: சிலர் நீடித்த வயது உடையவர்களாய் (100 வயதுக்கு மேற்பட்டவர்களாய்) இறப்பதற்குக் காரணம் யாது?

விடை: அட்டமத் தானதிபதி இலாபத்தானத்தில் (11-ம் இடத்தில்) பலவானுக இருக்க, உதயலக்கினதிபதியும் சனியும் 1-4-5-7-9-10-ம் இடங்களில் பலவான்களாக இருக்கப் பிறந்தவர் நூறுவயதிற்குமேல் மரணம் அடைவர்.

## 273. பூரண ஆயுள் உடையவர்.

## (Those who die in their old age.)

வினு: சிலர் பூரணுயுளில் (நிறைந்த வயசில்) இறக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | சூரியன் | ல புதன் வியாழ | 2 |
| 10 | 97 வயதில் இறந்தவர் | | கேது |
| செவ்வா ராகு | | | 4 |
| 8 | 7 | 6 | சந்திர சனி |

விடை: ஆயுட்டாஞதிபன் சனி இவ்விருவரும் 1-4-5-7-9-10-11-ம் இடங்களிற் பலவான்களாக இருந்தாலும், ஆயுட்டானதிபன் விசேஷயோகம் பெற்றுப் பலவானுன இலக்கினதிபனின் நோக்கம் பெற்றாலும், ஆயுட்டானதிபன் தன்னுடைய ஸ்தானத்தில் ஆட்சியாக இருக்கச் சனி கூடியிருந்தாலும், உதயலக்கின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரலக்கினங்கள் சரராசிகளாகி அவ்விலக்கினாதிபர்கள் சரராசிகளில் இருந்தாலும், உதயலக்கின சந்திரலக்கினங்கள் ஸ்திரராசிகளாகி அவ்விலக்கினாதிபர்கள் உபயராசிகளில் இருந்தாலும், உதயலக்கின சந்திரலக்கினங்கள் உபயராசிகளாகி அவ்விராசிபதிபர்கள் ஸ்திரராசிகளில இருந்தாலும், உதயலக்கினம் சரராசியாகி இலக்கினாதிபனும் ஆயுட்டானாதிபனும் சரராசிகளில் இருந்தாலும், உதயலக்கினம் ஸ்திரராசியாகி இலக்கினாதிபனும் ஆயுள்நாதனும் உபயராசிகளில் இருந்தாலும், உதயலக்கினம் உபயராசியாகி இலக்கினாதிபனும் ஆயுட்டலைவனும் ஸ்திரராசிகளில் இருந்தாலும், சந்திரலக்கினாதிபனும் ஆயுட்டானாதிபனும் ஒருவருக்கொருவர் மித்திரராக இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் ஜனித்தவர் பூரணவயதில் (தற்காலம் 70 வயசிற்குமேல்) மரணமடைவர்.

## மரண ஏது

### 274. சுகமரணம் அடைபவர்.
(Those who die cheerfully.)

வினா: சிலர் மரணத்தைத் தமக்கு வசீகாம் செய்பவராய் (சுகமரணமடைபவராகக்) காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் யாது?

விடை: புத்தித் தானாதிபனும் மரணத் தானாதிபனும் கூடி உதயலக்கினத்தில் பலவானான இலக்கினாதிபனுடன் மித்திரர்களாகி இருந்தாலும், மரணத் தானாதிபன் பலவானான புத்தித் தானாதிபனுடன் கூடி அத்தானத்திலேயே இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் தாம் நினைத்தபடி மரணமடைபவராகக் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ்வா | 8 | சந்திர வியாழ |
| 5 | சுகமரணம் அடைந்தவர் | | 10 |
| 4 | | | 11 |
| 3 | சூரியன் | ல புத சுக் சனி | கேது |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 275. அறிவுடன் பேசிக்கொண்டு மரணமடைபவர்.

(Those who die conversing freely.)

வினா: சிலர் தெளிவான அறிவுடன் வார்த்தை பேசிக்கொண்டே மரணமடைகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

விடை: பலவானான வாக்குத் தானாதிபனுடன் புத்தித் தானாதிபனும் மரணத் தானாதிபனும் கூடியிருக்கப் பிறந்தவர் தெளிந்த அறிவுடன் பேசிக்கொண்டே மரணமடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 11 | 12 | ல சந்திர | சனி |
| கேது | அறிவுடன் சம்பாஷித்துக் கொண்டு மரணித்தவர் | | 3 |
| 9 | | | சுக்கிரன் ராகு |
| 8 | 7 | செவ்வா | சூரியன் புதன் வியாழ |

## 276. வாதரோகத்தினால் மரிப்பவர்.

(Those who die by rheumatism.)

வினா: சிலர் வாதரோகத்தினால் மரணமடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: ஆயுட்டானாதிபதி (8-ம் இடத்திற்குரியவன்) சத்துருத் தானத்தில் (6-ம் இடத்தில்) அமர, சத்துருத் தானாதிபதி உதயலக்கினத்திலும் இலக்கினாதிபதி சனியுடன் கூடி ஆயுட்டானத்திலும் இருக்கப் பிறந்தவர் வாதரோகத்தினாலேயே மரணம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ்வா | 4 | வியாழ |
| ல சந்திர | வாதரோகத்தினால் மரணித்தவர் | | புதன் சுக்கிரன் |
| 12 | | | சூரியன் |
| 11 | 10 | 9 | சனி கேது |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 277. சிலேஷ்ம ரோகங்களினால் மரணமடைபவர்.

(Those who die by phlegmatic diseases.)

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | 12 | ல சனி |
| செவ்வா சேது | காசரோகத்தினால் இறந்தவர் | | 2 |
| சூரியன் சந்திர புத சுக் | | | ராகு |
| 7 | 6 | வியாழ | 4 |

வினா: சிலர் இருமல், காசம், தொய்வு, மாரடைப்பு முதலிய சிலேஷ்ம ரோகங்களால் மரணம் அடைகின்றனர். இதற்குக் காரணம் என்ன?

விடை: ஆயுட்டானாதிபதி உதயகேந்திரத்தில் இருக்க, உதயநாதன் ஆயுட்டானத்தில் சந்திர சுக்கிரருடன் கூடியிருக்கப் பிறந்தவர் தவறாது சிலேஷ்மரோகத்தினால் மரணமடைவர்.

## 278. சுரரோகங்களால் மரணமடைபவர்.

(Those who die by fevers.)

வினா: சிலர் தீராத உஷ்ணசுரங்களினால் (பித்தசுரம், அக்கினிச்சுரம், தாபச்சுரம், அத்திச்சுரம் முதலியவைகளால்) மரணம் அடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ்வா | ல | வியாழ |
| 10 | உஷ்ண சுரத்தினால் உயிரிழந்தவர் | | 3 |
| சந்திர | | | 4 |
| 8 | 7 | சூரியன் புதன் சுக் சனி | கேது |

விடை: சூரியன் ரோகத் தானத்தில் (6-ம் இடத்தில்) பகைநீசனாகிச் செவ்வாயின் நோக்கம் பெற்றிருந்தாலும், சூரியன், ரோகத் தானாதிபன் ஆயுட்டானாதிபன் இவர்களுடன் கூடி ரோகத் தானத்தில் இருந்தாலும் இது போன்ற நிலைமையில் உதித்தவர் முற்கூறிய உஷ்ணசுரங்களினால் மரணமடைவர்.

## 279. சீதள ரோகங்களால் மரணமடைபவர்.

(Those who die by catching cold.)

வினா: சிலர் சீதளரோகங்களால் (சிலேஷ்மசுரம், சீதளசுரம், ஜலசுரம், முகரோகங்கள், மகோதரம், பாண்டு, காமாலை, க்ஷயம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீனசம், காசம், ஜலத்தில் வாழும் பிராணிகள், ஜலத்தில் வீழ்தல், ஸ்திரீதெய்வபீடை இவைகள் மூலம்) சாகின்றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | கேது | ல |
| 9 | மகோதர ரோகத்தினால் மரணமானவர் | | 2 |
| 8 | | | 3 |
| 7 | சந் செவ் புதன் சனி ரா | சூரியன் வியாழ | 4 |

**விடை:** சந்திரன் ரோகத்தானத்தில் பலவீனனாக இருக்க, அச்சந்திரனை 6, 8-க்கு அதிபரும் இராகுவும் நோக்கினாலும், இச்சந்திரன் 6, 8-ம் இடங்களில் இம்மூவருடன் கூடி இருந்தாலும், அவ்வாறு இருக்கும் சந்திரனை மாரகக் கிரகங்கள் (2, 7-ம் இடங்கட்கு அதிபர், 2, 7-ல் இருந்தவர்) நோக்கினாலும் இந் நிலைமையிற் பிறந்தவர் மேற்சுட்டிய சீதளரோகங்களால் மடிவர்.

## 280. தலைநோய்களால் மரணமடைபவர்.

## (Those who die by head diseases.)

**வினா:** சிலர் (கபாலரோகம், ஒருத்தலைக் கபாலம், இரத்தக் கபாலம், சூரிய கபாலம், பீனசம் முதலிய) தலைநோயினால் சாகின்றனர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | கேது | 7 |
| 3 | கபாலரோகத்தினால் இறந்தவர் | | சந்திர |
| 2 | | | 9 |
| ல சூரியன் செவ் | புதன் வியாழ சுக் சனி ரா | 11 | 10 |

**விடை:** உதயலக்கினத்தில் சூரியனும் செவ்வாயும் ரோகத்தானாதிபனும் பலவான்களாக இருக்க, உதயலக்கினாதிபனும் ஆயுட்டானாதிபனும் பலவீனராகி 6, 8, 12-ல் இருந்தாலும், உதயலக்கினத்திற் கேதுவும் 7-ல் சூரியனும் 8-ல் செவ்வாயும் உதயலக்கினாதிபனும் ஆயுட்டானாதிபனும் பலங்குன்றி மாரகர் நோக்கம் பெற்றிருந்தாலும் இந் நிலைமையிற் பிறந்தவர் மேல்வினவிய சிரரோகங்களால் மரணமடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 281. தொண்டைநோய்களால் மரணமடைபவர்.

(Those who die by throat diseases.)

வினா: சிலர் கண்டமாலை, கண்டக்கரப்பன் முதலிய ரோகங்களினால் மரணமடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: 3-க்கு அதிபன் மரணத் தானத்தில் இருக்க, மரணத் தானாதிபன் சனி செவ்வாயுடன் கூடி 3-ம் இடத்தில் இருக்க இந் நிலைமையிற் பிறந்தவர் தொண்டைநோயினால் மரணமடைவர்.

## 282. வாயுரோகத்தினால் மடிபவர்.

(Those who die by inflammatory diseases.)

வினா: சிலர் அண்டவாயு, பக்கவாயு, கர்ப்பவாயு, சுவாதவாயு முதலிய வாயுரோகங்களால் இறக்கின்றனர். இதற்குநியாயம் என்ன?

விடை: ஆயுட்டானாதிபதி சத்துருத் தானத்தில் அமர, உதய லக்கினாதிபதி அல்லது சத்துருத் தானாதிபதி ஆயுட்டானத்தில் பலவீனனான புதனுடன் கூடி இருக்கப் பிறந்தவர் வாயுசம்பந்தமான ரோகத்தினால் மடிவர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் | 9 | செவ்வா | 11 |
| சுக்கிரன் சனி | வாயுரோகத்தினால் மரணமடைந்தவர் | | கேது |
| வியாழ ராகு | | | ல |
| சந்திர | 4 | 3 | 2 |

## 283. சுவாச ரோகங்களால் இறப்பவர்.

(Those who die by respiratory diseases.)

வினா: சிலர் வாயுரோகங்களால் (அண்டவாயு, பக்கவாயு, வர்தவாயு, சுவாசவாயு முதலானவைகள்; விக்கல், மூச்சுத் திணறுதல், வண்டி வாகனங்களால் விழுதல், மரம் சுவர் விழுதல், ஆகாயத்தினின்றும் விழுதல் இவை போன்ற அகஸ்மாத்தான ரோகங்களால்) இறக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| புதன் வியாழ சுக்கிரன் | ராகு | சந்திர | 9 |
| சூரியன் | சுவாசவாயுவினால் மரணமடைந்தவர் | | 10 |
| 4 | | | 11 |
| செவ்வா | 2 | ல கேது | சனி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:** புதன் 6, 8-க்கு அதிபருடன் கூடிப் பகைநீசனாகி 6, 8, 12-ல் இருந்தாலும், புதன் மேற்சுட்டிய மூவருடனும் இராகுவுடனும் கூடி மாரகத் தானங்களில் இருந்தாலும், மாரகரின் நோக்கம் பெற்றாலும் இவ்வாறான நிலைமையிற் பிறந்தவர் முற்கூறிய வாறாக ஆயுள்முடிவை அடைவர்.

### 284. வயிற்றுநோயினால் மரணமடைபவர்.

(Those who die by diseases of the stomach and intestines.)

**வினா:** சிலர் மூலம், அதிசாரம், கிரகணி, சூலை, குன்மம் முதலிய வயிற்றுநோயினால் மரணிக்கின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** ஆயுட்டானாதிபதியும் சத்துருத்தானாதிபதியும் உதய லக்கினத்தில் இருக்க, இலக்கினாதிபதி வியாழசூரியருடன் கூடி ஆயுட்டானத்தில் இருக்கப் பிறந்தவர் இவ்வாறான வயிற்றுநோயினால் மரணிப்பர்.

### 285. இரத்தபேதியால் மரிப்பவர்.

(Those who die by dysentery.)

**வினா:** சிலர் இரத்தபேதி, இரத்தக்கழிவு ரோகங்களால் (இரத்தாசயம் நிற்றல், இரத்தக் கொதிப்பு, இரத்தம் வற்றுதல், இரத்தம் தலைக்கேறுதல், பிளவை, சூலை முதலிய இரத்த இரணங்கள், தேகத்தில் அக்கினிபற்றுதல், பைசாசப்பிரயோகம், பைத்தியரோகம், கை கால் முரிதல், அங்கம் வெட்டுப்படுதல் முதலியவைகளால்) மரணமடைகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

**விடை:** செவ்வாய் 6, 8-க்கு அதிபருடனும் இராகுவுடனும் சேர்ந்து, 6, 8-ம் இடங்களில் இருந்தாலும், மேற்கூறிய மூவருடனும் கூடியிருக்கும் செவ்வாயைச் சூரியன் அல்லது மாரகர் நோக்கினாலும் இதுபோன்ற நிலைமையில் ஜனித்தவர் மேற்சுட்டிய ரோகங்களால் மரணமடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | ராகு | 7 |
| வியாழ | இரத்தபேதி யினால் இறந்தவர் | | சூரி சந் செவ்வா சுக்கிரன் |
| 2 | | | புதன் சனி |
| ல | கேது | 11 | 10 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 286. வலிகளால் மரணமடைபவர்.

## (Those who die by convulsions.)

**வினா:** சிலர் வலிகளினால் (காக்கைவலி, குதிரைவலி, குரங்குவலி, குன்மவலி, வலிசன்னி முதலியவைகளால்) மரணமடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 4 | 5 |
| ல | காக்கைவலியினால் மரணித்தவர் | | சூரியன் புதன் சனி ரா |
| கேது | | | சுக்கிரன் |
| 11 | வியாழ | செவ்வா | சந்திர |

**விடை:** மரணத் தானாதிபன், புதன் சனி இராகு ஆகிய மூவருடனும் கூடி ரோகத் தானத்தில் இருந்து சூரியனின் நோக்கம் பெற்றாலும், மரணத் தானாதிபனும் சனியும் ரோகத் தானத்தில் இருக்க ரோகத் தானாதிபன் புதன் இராகுவுடன் கூடி மாரகத் தானத்தில் இருந்து மாரகரின் நோக்கம் பெற்றாலும் இது போன்ற நிலைமையில் ஜனித்தவர் வலிகளின் உபத்திரவத்தினால் மரணமடைவர்.

## 287. மேகவியாதியால் மரணமடைபவர்.

## (Those who die by venereal diseases.)

**வினா:** சிலர் மேகரோகத்தினால் (பெருங்கிரந்தி வியாதியினால்) மரணமடைகின்றனர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 5 | சனி |
| கேது | மேசரோகத்தினால் மரணமடைந்தவர் | | 7 |
| ல | | | சூரியன் புத சுக்ர ராகு |
| சந்திர | 11 | செவ்வா | வியாழ |

**விடை:** இலக்கினத்துக்கு 8-வது நவாம்சத்தில் இராகு இருக்க அந்த 8-வது அம்சத்திற் சூரியவன் சந்திரனுடன் கூடி 6, 8, 12-ல் இருந்தாலும், சுக்கிரன் ரோகத் தானாதிபன் ஆயுட்டானாதிபன் இராகு இம்மூவருடன் கூடி 6, 8-ம் இடங்களில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் பிரமேகம், கிரந்தி, அலாயாப்பு முதலிய மேகரோகங்களால் மரணமடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 288. மர்மஸ்தான ரோகங்களால் மரணமடைபவர்.

(Those who die by diseases of the sexual organs.)

வினா: சிலர் ஆண்குறி பெண்குறிகளில் உண்டான ரோகங்களால் (மிதமிஞ்சிய போகத்தினால் இந்திரியபலமற்று எலும்புருக்கி நோயினாலும், பெருங்கிரந்தி நீரிழிவுகளினாலும், பெண்களினாலும்; வசியமருந்தினாலும், மோகினி யோகினி காளி முதலிய ஸ்திரீ தெய்வங்களின் பிரயோகத்தினாலும்) மரணமடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 4 | 5 |
| ல | மர்மஸ்தான ரோகத்தினால் மரணமடைந்தவர் | | சனி ராகு |
| கேது | | | சூரியன் |
| 11 | செவ்வாய் வியாழ | 9 | சந்திர புதன் சுக்கிரன் |

விடை: சுக்கிரன் 6, 8-ல் பலவீனனாகி 6, 8-க்கு அதிபருடன் கூடிச் சனியின் நோக்கம் பெற்றிருந்தாலும், வீரியத் தானாதிபனும் களத்திரத் தானாதிபனும் (3-க்கும் 7-க்கும் அதிபர்) கூடிச் செலவுத் தானத்தில் (12-ல்) இருக்க, சுக்கிரன் மரணத் தானாதிபனுடன் கூடி 6-ம் இடத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் மேற்சுட்டிய ரோகங்களாலும், சத்துருக்களின் ஔஷத மந்திரப் பிரயோகங்களாலும் மரணமடைவர்.

## 289. மூலரோகங்களால் மரணமடைபவர்.

(Those who die by piles)

வினா: சிலர் மூலம், பகந்தரம், (நரம்பு சம்பந்தமான புரை, புண், எற்புவலி, நரம்புவலி) முதலிய ரோகங்களால் மரணமடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: சிலர் வியாழன் 6, 8-க்கு அதிபருடனும் இராகுவுடனும் கூடி 6, 8, 12-ல் இருந்தாலும் வியாழன் சனிசெவ்வாய் அல்லது மாரகரின் நோக்கம் பெற்று 6, 8, 12-ம் இடங்களில் இருந்தாலும் இவ்வித நிலைமையில் உதித்தவர் மேற்கூறிய ரோகங்களால் இறப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 290. இரண வியாதிகளால் இறப்பவர்.

## (Those who die by tumours and eruptions.)

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | சந்திர சனி கேது | 9 | வியாழ |
| செவ்வா புதன் | இரணங்களால் இறந்தவர் | | 11 |
| சுக்கிரன் | | | 12 |
| 4 | 3 | ராகு | ல |

**வினா:** சிலர் பிளவை, சீரிழிவு, வசூரி, கொப்புளிப்பான், பெருங்கிரந்தி முதலான இரண ரோகங்களால் (புண்களால்) மரணம் அடைகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** உதயலக்கினாதிபதியும் ஆயுட்டானாதிபதியும் கூடிச் சத்துருத் தானத்தில் இருக்க, சத்துருத் தானாதிபதியும் சந்திரனும் சனிராகுக்களுடன் கூடி ஆயுட்டானத்தில் இருக்கப் பிறந்தவர் பலவிதமான இரண ரோகங்கள் மூலம் மரணமடைவர்.

## 291. பிளவை இரணங்களால் மடிபவர்.

## (Those who die by cancer.)

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | கேது | சந்திர |
| 11 | முதுகுப் பிளவையால் இறந்தவர் | | 4 |
| 10 | | | 5 |
| 9 | செவ்வா சனி ராகு | சூரி புத வியாழ சுக்கிரன் | 6 |

**வினா:** சிலர் புரையோடும் பிளவை ரோகத்தினால் மடிகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

**விடை:** மரணத் தானாதிபனும் செவ்வாயும் சனியும் இராகுவும் கூடி ரோகத் தானத்திலேனும் மரணத் தானத்திலேனும் இருக்கப் பிறந்தவர் புரையோடும் இராஜபிளவை ரோகத்தால் மரணம் அடைவர்.

## 292. நரம்புரோகங்களால் மரணமடைபவர்.

## (Those who die by nervous diseases.)

**வினா:** சிலர் வாதசுரசன்னியாலும், பாரிசவாதம், உஷ்ண வாதம், கபவாதம், சர்வாங்கவாதம் முதலான 80 வித வாதரோகங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாலும்; (குன்மம், குஷ்டம், கரப்பன், பெரும்புண்கள் முதலான தீரா வியாதிகளாலும்; கால்கை முறிதல், சல்லெறி, தடியடிகாயம், தீராத மனஸ்தாபம், பிறருடைய வஞ்சனை, அணைப்புதல் இவைகளாலும்) மரணமடைகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

விடை: சனி 6, 8-க்கு அதிபருடன் கூடி 6, 8, 12-ல் இருந்தாலும், அவ்வாறு இருக்கும் சனியுடன் இராகு கூடினாலும், அச் சனியை மாரகர் கூடினாலும் நோக்கினாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் மேற்கூறிய ரோகங்களால் மரணமடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 7 | செவ்வாய் வியாழ சனி | சுக்கிரன் கேது | சூரியன் புதன் |
| 6 | பாரிச வாதத்தினால் மரணமடைந்தவர் | | 11 |
| 5 | | | சந்திர |
| 4 | ராகு | 2 | ல |

## 293. தோற்றுநோய்களால் மரணமடைபவர்.

## (Those who die by infectious diseases.)

வினா: சிலர் வசூரி, கொப்பளிப்பான் முதலிய தொற்றுரோகங்களால் (தற்காலம் காலரா, பிளேக், மின்சாரம் பாய்தல் முதலிய நூதன ரோகங்களாலும்; பில்லி, சூனியம் முதலிய பைசாச பீடைகளாலும்) பரிதாபமரணமடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

விடை: கேது 6, 8-க்கு அதிபருடன் கூடி அல்லது சூரியன் செவ்வாய் சனி இவர்களின் நோக்கம் பெற்று 6, 8, 12-ல் இருந்தாலும், அவ்வாறு இருக்கும் கேதுவை மாரகர் கூடினாலும் நோக்கினாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் மேற்கூறிய வாறு நூதன ரோகங்களால் மரணமடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | 12 | ல புதன் |
| 9 | வசூரியினால் மாண்டவர் | | சூரியன் செவ்வாய் சனி ரா |
| கேது | | | சுக்கிரன் |
| 7 | 6 | வியாழ | சந்திர |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 294. தீராவியாதிகளால் மரணமடைபவர்.
(Those who die by incurable diseases.)

**வினா:** சிலர் இளமைப் பருவத்தில் தீரா வியாதிகளால் பீடிக்கப்பெற்று மரணமடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** சனி சுகத் தானத்தில் (4-ம் இடத்தில்) பலவீனனாக இருக்க, சுகத் தானாதிபதி மரணத் தானத்தில் மாரகருடன் கூடியிருந்தாலும், அல்லது மரணத் தானாதிபருடன் கூடி ரோகத் தானத்தில் இருந்தாலும் இந் நிலைமையிற் பிறந்தவர் இளமையில் தீரா வியாதியால் மரணமடைவர்.

## துர்மரணம்

### 295. நீரில் மூழ்கி இறப்பவர். (Those who die by drowning.)

**வினா:** சிலர் கிணறு, தடாகம், குளம், ஆறு, சமுத்திரம் இவைகளில் விழுந்து (நீரினால்) மரணம் அடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

**விடை:** மகரம், கர்க்கடகம் அட்டமத் தானங்களாக அமைய, அந்தத் தானாதிபதிகள் பலவீனர்களாகிப் பலவான்களான சத்துருத் தானாதிபதிகளுடன் கூடி இருக்கப் பிறந்தவர் நீரினால் மரணமடைவர்.

| | | | |
|---|---|---|---|
| சந்திர சுக்கிரன் | சூரியன் செவ்வா கேது | புதன் | 7 |
| 3 | நீரினால் மரணமடைந்தவர் | | 8 |
| வியாழ | | | 9 |
| ல சனி | 12 | ராகு | 10 |

### 296. அக்கினியால் மரணமடைபவர்.
(Those who die by burning.)

**வினா:** சிலர் நெருப்பினால் வெந்து மரணம் அடைவதற்குக் காரணம் யாது?

**விடை:** சூரியன், செவ்வாய் அட்டமத் தானாதிபதிகளாய் சத்துருத் தானத்தில் இருக்கப் பிறந்தவர் அக்கினியினால் மரணம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| சந்திர கேது | 8 | சனி | 10 |
| சூரியன் செவ்வா | அக்கினியினால் மரணமடைந்தவர் | | 11 |
| புதன் சுக்கிரன் | | | வியாழ |
| 4 | 3 | 2 | ல ராகு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 297. சர்ப்ப விஷத்தினல் மரணமடைபவர்.
(Those who die by snake-bite.)

விஞ: சிலர் சர்ப்பவிஷத்தினுல் மரணமடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

விடை: சந்திரன் கர்க்கடகத்திலும் கடக நவாம்சத்திலும் இருக்க, இந்த இரு இடங்களிற் சந்திரனையும் மகாலக்கினத்தில் இருந்த செவ்வாயும் இராகுவும் நோக்க, அல்லது இவர் சந்திரனுடன் கூடியிருக்க, இவர் வரிசையை உடைய உதயலக்கினம் தனுசாக அமையப் பிறந்தவர் அற்பவயதில் சர்ப்பவிஷத்தினுல் மரணமடைவர்.

## 298. மிருகங்களால் மரணமடைபவர்.
(Those who die by injuries inflicted by animals.)

விஞ: சிலர் எலி, பூனை, சர்ப்பம், நாய் முதலிய விஷப்பிராணிகளாலும்; யானை, எருமை, பன்றி, சிங்கம், புலி முதலிய காட்டுமிருகங்களாலும்; நச்சுமருந்து நஞ்சு உட்கொள்ளுதலாலும்; விஷக்கிராந்தி ரோகங்களாலும் மரணமடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | சுக்கிரன் | சூரியன் செவ்வா புதராகு |
| 4 | மிருகத்தினல் தாக்குண்டு மரணமடைந்தவர் | | சனி |
| 3 | | | 10 |
| வியாழ கேது | ல | 12 | சந்திர |

விடை: இராகுவும் சூரியனும் 6, 8-க்கு அதிபருடன் கூடி மற்றைய குரூரக் கிரகங்களின் நோக்கத்தைப் பெற்று 6, 8-ம் இடங்களில் இருந்தாலும், இவ்விருவரும் 4-ம் இடத்துக்கு அதிபனுடனும் செவ்வாயோடும் கூடி 8-ம் இடத்தில் இருந்து மாரகரின் நோக்கம் பெற்றாலும் இது போன்ற நிலையையில் உதித்தவர் மேல் விளைவிய வகைகளால் மரணமடைவர்.

## 299. மிருகங்கள் வாகனங்களால் மரணமடைபவர்.
(Those who die by animals and vehicles)

விஞ: சிலர் யானை குதிரை முதலிய மிருகங்கள், வண்டி வாகனங்கள் முதலியவைகளால் மரணமடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: வாகனத் தாஞதிபதியும் (4-ம் இடத்தவன்) சத்துருத் தாஞதிபதியும் செவ்வாயும் கூடி அட்டமத் தானத்தில் இருக்க அட்டமத் தாஞதிபதி செலவுத் தானத்தில் இருக்கப் பிறந்தவர் மிருகங்கள், வாகனங்கள் மூலம் மரணமடைவர்.

## 300. வண்டி வாகனங்களால் அபாயமரணமடைபவர்.

## (Those who die in vehicular accidents.)

| | | | |
|---|---|---|---|
| சூரி சந் செவ்வா புதன் | ல கேது | 2 | 3 |
| சுக்கிரன் | வாகன விபத்தில் நேரிட்டு மரணமடைந்தவர் | | 4 |
| வியாழ | | | 5 |
| சனி | 8 | ராகு | 6 |

வினு: சிலர் வண்டி வாகனங்களால் அபாய மரணம் அடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

விடை: வாகனத் தாஞதிபன் சத்துருத் தாஞதிபனுடனும் அட்டமாஞதிபனேடும் கூடிச் சத்துருத் தானத்திலேயே இருந்தாலும், வாகனத் தாஞதிபன் மேற்சுட்டிய இருவருடனும் கூடிச் செலவுத் தானத்தில் (12-ம் இடத்தில்) இருந்தாலும் இந் நிலைமையில் உதித்தவர் வண்டி வாகனங்களால் அபாயமரணமடைவர்.

## 301. சத்துருக்களால் மரணமடைபவர்.

## (Those who are killed by their enemies.)

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | சனி கேது | 9 | வியாழ |
| செவ்வா புதன் | சத்துருவினல் கொல்லப்பட்டவர் | | 11 |
| சுக்கிரன் | | | சந்திர |
| 4 | 3 | ராகு | ல |

வினு: சிலர் சத்துருக்கள் மூலம் (ஆயுதங்களினலோ, துப்பாக்கிக் குண்டினலோ) மரணம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: சத்துருத் தாஞதிபதி (6-ம் இடத்தவன்) அட்டமத் தானத்தில் செவ்வாய் கேது இவர்களுடன் கூடியிருக்க, அட்டமாதிபன் சத்துருத் தானத்தில் பலவீனனுக இருக்கப் பிறந்தவர் சத்துருக்களினல் கொல்லப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 302. யுத்தத்தில் கொல்லப்படுபவர்.

## (Those who die in the battlefield.)

வினா: சிலர் போர்முனையில் மடிகின்றனர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | சூரியன் சந்திர புதன் | 4 | கேது |
| ல | யுத்தத்தில் வீரசொர்க்கம் புகுந்தவர் | | செவ்வா |
| 12 | | | 7 |
| ராகு | சனி | வியாழ | 8 |

விடை: உதய லக்கினாதிபனும் ஆயுட்டானாதிபனும் கீர்த்திஸ்தானாதிபனும் (12-ம் இடத்தவனும்) இராகுவும் கூடி 6-ம் இடத்திலேனும் 8-ம் இடத்திலேனும் இருந்தாலும், வீரியத் தானாதிபன் (3-ம் இடத்தவன்) பலவீனனாகிச் சத்துருத் தானத்தில் இருக்க சத்துருத் தானாதிபன் பலவானாகி ஆயுட்டானாதிபனுடன் கூடி வீரியத் தானத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் யுத்தகளத்தில் உயிர்விடுவர்.

## 303 மின்சார அதிர்ச்சியால் மரணமடைபவர்.

## (Those who die by electric shock.)

வினா: சிலர் இடி மின்னல் முதலியவைகளால் தாக்குண்டும், காந்தம் மின்சாரம் றேடியம் முதலிய நவீன கருவிகளினால் சித்திரவதை செய்யப்பட்டும் மடிகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| ராகு | வியாழ | 4 | 5 |
| ல சுக்கிரன் | மின்சார அதிர்ச்சியினால் மரணமடைந்தவர் | | 6 |
| சூரியன் புதன் | | | 7 |
| 11 | செவ்வா | சனி | சந்திர கேது |

விடை: ஆயுட்டானாதிபதி செலவுத் தானத்திலும் (12-ம் இடத்திலும்) சத்துருத் தானாதிபதியும் கேதுவும் கூடி ஆயுட்டானத்திலும் இருக்கப் பிறந்தவர் மேற்சுட்டிய வகையில் தம் உடம்பு சின்னாபின்னமாகச் சிதறும் வண்ணம் சித்திரவதை அடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த ற் கொ லை

304. தற்கொலை செய்பவர். (Those who commit suicide.)

வினு: சிலர் கழுத்திற் சுருக்கிட்டும், நஞ்சுண்டும் தன் கை ஆயுதங்களினுலும் தற்கொலை செய்துகொள்கின்றனர். இதற்குக் காரணம் யாது?

விடை: உதயலக்கினுதிபதியும் வீரியத் தானுதிபதியும் (3-ம் இடத்தவனும்) புத்தித் தானுதிபதியும் (5-ம் இடத்தவனும்) ஆயுட்டானுதிபதியும் சத்துருத் தானத்தில் அந்தத் தானுதிபனுடன் கூடி இருக்கப் பிறந்தவர் தன் புத்தியே தனக்குச் சத்துருவாகச் செலுத்தப்பட்டுப் புத்திசுவாதீனமற்றுத் தற்கொலைசெய்துகொள்வர்.

| | | | |
|---|---|---|---|
| ல செவ்வா சனி | 2 | ராகு | 4 |
| 12 | தற்கொலை செய்தவர் | | 5 |
| 11 | | | சூரி சந் புதவியா சுக்கிரன் |
| 10 | கேது | 8 | 7 |

### 305. கழுத்திற் சுருக்கிட்டு இறப்பவர்.

### (Those who commit suicide by hanging.)

வினு: சிலர் தீராக்கவலையால், ஏக்கத்தால், பயத்தால், தம் எண்ணம் நிறைவேருமையால் வன்மம் மேற்கொண்டு கழுத்திற் கயிறுமாட்டி மரணமடைகின்றனர். இது எதனுல்?

விடை: உதய லக்கினுதிபனும், வீரியத் தானுதிபனும் (3-ம் இடத்தவனும்) புத்தித் தானுதிபனும் (5-ம் இடத்தவனும்) துக்கத் தானுதிபனும் (6-ம் இடத்தவனும்) புதனும் கூடி ஆயுட்டானத்தில் இருக்க இவர்களை ஆயுட்டானுதிபன் பூரணபலத்துடன் நோக்கினுலும், இந்த ஐவரும் கூடிப் புத்தித் தானத்தில் இருக்கப் புத்தித் தானுதிபன் மரணத் தானத்தில் (8-ம் இடத்தில்) இருந்

| | | | |
|---|---|---|---|
| ல | சனி ராகு | 3 | 4 |
| 12 | கழுத்திற் கயிறுமாட்டித் தூங்கி இறந்தவர் | | 5 |
| 11 | | | 6 |
| 10 | 9 | சூசந்செ புதவியா சுக்கேது | 7 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் மேல் வினவிய வாறு மனவைராக்கியத்தினால் கழுத்தில் சுருக்கிட்டுத் தூங்கித் தம் உயிரை மாய்ப்பர்.

## மரண பயம்

### 306. மரணத்திற்கு அஞ்சாதவர். (Those who defy death.)

வினா: சிலர் மரணத்திற்கு அஞ்சாதவராக (சாகத் துணிந்தவ ராகக்) காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: உதய லக்கினாதிப னும் வீரியஸ்தானாதிபனும் (3-ம் இடத்ததிபனும்) புத்தித் தானாதி பனும் (5-ம் இடத்ததிபனும்) மர ணத் தானாதிபனும் கூடிச் சத்து ருத் தானத்தில் இருந்தாலும், உதய லக்கினாதிபன் புத்தித் தானா திபன் சத்துருத் தானாதிபன் மரணத் தானாதிபன் ஆகிய நால் வரும் கூடி வீரியத் தானத்தில் இருந்தாலும், இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் மரணத்தை ஒரு திரணமாகவும் மதியாதவராய், சாகத் துணிந்தவராய், எந்நேரமும் மரணத்திற்கு ஆயத்தமாக இருப்பவராகக் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| 5 | கேது | 7 | 8 |
| சுக்கிரன் | சாகத் துணிந்தவர் | | 9 |
| செவ்வா புதன் வியாழ | | | 10 |
| சந்திர | ல | ராகு | 11 |

## மரண தேசம்

### 307. தூரதேசத்தில் இறப்பவர். (Those who die in a distant country.)

வினா: சிலர் (தம்முடைய நாட்டை விட்டுத்) தூரதேசத் தில் சாகின்றனர். இதற்கு நியா யம் யாது?

விடை: ஆயுட்டானம் சர ராசியாக, அவ்விராசிநாதன் சர ராசியில் இருக்கப் பிறந்தவர் பிற தேசம் அல்லது பிறவூரில் மர ணமடைவர்.

| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரியன் | 9 | கேது |
| சுக்கிரன் | தூரதேசத்தில் மரணமடைந்த வர் | | செவ்வா |
| 5 | | | சந்திர |
| ராகு | சனி | வியாழ | ல |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 308. வழியில் இறப்பவர்.

(Those who die on the way.)

வினு: சிலர் வழி தெருக்களில் மரணமடைகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

விடை: ஆயுட்டானம் உபயராசியாக அவ்விராசிநாதனும் உபயராசியில் இருக்கப் பிறந்தவர் வழிதெருக்களில் மரணமடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 5 | சந்திர | 7 | ராகு |
| 4 | வழியில் மரணமடைந்தவர் | | சுக்கிரன் |
| 3 | | | சூரியன் செவ்வா சனி |
| வியாழ கேது | ல | 12 | புதன் |

## 309. பிதா தூரதேசத்தில் இருக்கையில் இறப்பவர்.

(Those who die when their fathers are in a distant country.)

வினு: சில பிள்ளைகள் பிதா தூரதேசத்தில் இருக்கும்பொழுது மரணமடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: 9-ம் இடம் சராராசியாகி அவ்விராசிநாதனும் சரராசிகளில் இருக்கப் பிறந்த மைந்தர் பிதா தூரதேசத்தில் இருக்கையில் மரணமடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 8 | 9 | 10 | கேது |
| சந்திர | பிதா தூரதேசத்தில் இருக்கையில் மரணமடைந்த பிள்ளை | | செவ்வா |
| 6 | | | ல |
| ராகு | சூரியன் புதன் சுக் சனி | வியாழ | 2 |

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாம் பாவ பலன்

### பிதா

### 310. நீடித்த ஆயுளுடைய பிதாவை உடையவர்.

(Those who have long-lived fathers.)

வினா: சிலர் நீடித்த வயதுள்ள பிதாவை உடையவராக இருப்பதற்கு நியாயம் யாது?

விடை: பிதிர்த் தானாதிபன் (9-ம் இடத்ததிபன்) தன்னுடைய ஸ்தானத்தில் இருந்தாலும், லாபத்தானத்தில் அல்லது கேந்திரங்களில் உச்சமாக இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் நீடித்த வயது உள்ள பிதாவை உடையவராகக் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| ல | 2 | 3 | சனி |
| கேது<br>சூரியன் செவ்வா சுக்கிரன் | நீடித்த ஆயுளுடைய பிதாவை உடையவர் | | 5<br>ராகு |
| புதன் | 9 | வியாழ | சந்திர |

### 311. பிறக்கு முன்னமே பிதாவை இழப்பவர்.

(Those who lose their fathers before their birth.)

வினா: சிலர் தாம் பிறக்க முன்னரே பிதாவை இழக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: சூரியன் 6, 8, 12-ம் இடங்களில் இருக்க, பிதிர்த் தானாதிபன் நீசனாகி 3, 6, 8-ம் இடங்களில் இருக்க, 6-ம் இடத்திற்கு அதிபன் பிதிர்த்தானத்தில் இருக்கப் பிறந்தவர் தாம் மாதாவின் வயிற்றில் இருக்கும்போதே பிதாவை இழப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 4 | கேது |
| ல சனி<br>12 | பிறக்கு முன் பிதாவை இழந்தவர் | | சூரியன் புதன்<br>7 |
| ராகு | 10 | சந்திர செவ்வா வியாழ | சுக்கிரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 312. தரித்திரவானன பிதாவை உடையவர்.
(Those who have poor fathers.)

| | | | |
|---|---|---|---|
| சந்திர கேது | 11 | 12 | ல |
| 9 | தரித்திரவானன பிதாவை உடையவர் | | 2 |
| புதன் வியாழ சனி | | | 3 |
| சூரியன் சுக்கிரன் | 6 | 5 | செவ்வா ராகு |

**வினா:** சிலர் தரித்திரனான பிதாவை உடையவராயிருக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** பிதிர்த்தானாதிபனுக்கு 2-ம் இடத்தின் அதிபன் (10-ம் இடத்ததிபன்) 8-ம் இடத்தில் இருக்க, பிதிர்த்தானாதிபன் 3, 6, 8-ம் இடங்களில் இருந்தால் இந்நிலைமையிற் பிறந்தவர் பிதாவைத் தரித்திரமுடையவனாகக் காண்பர்.

### 313. பிதாவின் மரணகாலத்தில் உதவாதவர்.
(Those who are absent at their father's funeral.)

| | | | |
|---|---|---|---|
| செவ்வா ராகு | 5 | சந்திர | புதன் வியாழ சுக்கிரன் |
| 3 | பிதாவின் மரணபத்தில் உதவாதவர் | | சூரியன் |
| 2 | | | 9 |
| ல | 12 | 11 | சனி கேது |

**வினா:** சிலர் தம் பிதாவின் மரணகாலத்தில் உதவாதவராகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** 8-ம் இடம் சரராசியாக அமைய, அதிற் பிதிர்த்தானாதிபன் இருக்கப் பிறந்தவர் தம் பிதாவின் மரணகாலத்தில் தூர தேசங்களில் இருப்பர்.

### 314. தாய்தந்தையருக்குச் சுகஞ்செய்பவரும், தாய்தந்தையருக்கு உதவாதவரும்.
(Those who help their parents and those who desert their parents.)

**வினா:** சிலர் பிதாமாதாக்களுக்குப் பொருத்தமுடையவராகவும், வேறுசிலர் பொருத்தமற்றவராயும் இருப்பதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: மாதிருத்தானாதிபனுஞ் சந்திரனும் 1, 2, 4, 7, 10, 12-ம் இடங்களில் இருக்க, பிதிர்த்தானாதிபனும் சூரியனும் 1, 5, 9-ம் இடங்களிற் பலவான்களாக இருந்தால் இவ்வாறான நிலைமையில் உதித்தவர்கள் தம் அன்னை தந்தையர்க்கு அதிக சுகமுடையவராகக் காணப்படுவர். மாதிருத்தானாதிபனும் சந்திரனும் 3, 9, 11-ம் இடங்களில் இருக்க, பிதிர்த்தானாதிபனும் சூரியனும் 2, 4, 8-ம் இடங்களில் இருக்கப் பிறந்தவர் தம் தாய்தந்தையருக்குச் சுகமற்றவராகக் காணப்படுவர்.

## பாக்கியம்

### 315. பாக்கியசாலிகள். (The fortunate.)

வினா: சிலர் யானை, குதிரை, பாற்பசு, தங்கநாணயம், தானியப்பொதி முதலியவைகளால் நிரம்பிய பாக்கியசாலிகளாகக் காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | 2 | 3 |
| ராகு | | | வியாழ |
| சூரியன் புதன் | பாக்கியசாலி | | கேது |
| சந்திர செவ்வா சுக்கிரன் | 8 | சனி | 6 |

விடை: பாக்கியத் தானாதிபதி சுகத்தானத்தில் (4-ம் இடத்தில்) இருக்க, சுகத்தானாதிபதி உதயலக்கினாதிபதியுடன் கூடிப் பாக்கியத்தானத்திற் பரிவர்த்தனமாக இருந்தாலும், உதயலக்கினாதிபதியும் சுகத்தானாதிபதியும் கூடிப் பாக்கியத்தானத்தில் அந்தத் தானாதிபதியுடன் இருந்தாலும் இவ்வாறான நிலைமையிற் பிறந்தவர் சுகபாக்கியவான்களாக (சௌபாக்கியவதிகளாக)க் காணப்படுவர்.

### 316. பலவேறு வகையில் பாக்கியங்களை அடைபவர்.

(Those who obtain fortunes by various means.)

வினா: சிலர் பலவேறு வகையான பாக்கியங்களை அடைந்தவராக இருக்கின்றனர். இதற்கு நியாயம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: திரவியத்தானாதிபதியும் (2-ம் இடத்தவனும்) பாக்கியத்தானாதிபதியும் சூரியனும் கூடிப் பலவான்களாக உதயகேந்திரத்தில் இருக்க, உதயலக்கினாதிபதி பாக்கியத்தானத்தில் இருந்தால் பிதா அரசர் முதலியோர் மூலமான பாக்கியமும், சந்திரன் பாக்கியத்தானாதிபதியுடன் கூடி உதயலக்கினத்திலேனும் பாக்கியத்தானத்திலேனும் இருந்தால் மாதா பொதுஜனங்கள் மூலமான பாக்கியமும், செவ்வாய் பாக்கியத்தானாதிபதியுடன் கூடி மேற்கூறியவாறு இருந்தால் சகோதரர் சத்துருக்கள் மூலமான பாக்கியமும், புதன் பாக்கியத்தானாதிபதியுடன் கூடி மேற்கூறியவண்ணம் இருந்தால் வர்த்தகர் வைசியர் வித்துவான்கள் மூலமான பாக்கியமும், வியாழன் பாக்கியத்தானாதிபதியுடன் கூடி மேற்கூறியவாறு இருந்தால் பிராமணர் அரசர் பிரபுக்கள் மேல்சாதியார் மூலமான பாக்கியமும், சுக்கிரன் பாக்கியநாதனுடன் கூடி முற்கூறியவாறு இருந்தால் மனைவி பெண்கள் மூலமான பாக்கியமும், சனி பாக்கியத்தலைவனுடன் கூடி மேற்கூறியவாறு இருந்தால் அன்னியர் மிலேச்சர் தாழ்ந்தவருணத்தார் மூலமான பாக்கியமும், இராகு பாக்கியத்தானாதிபதியுடன் கூடி மேற்கூறியவாறு இருந்தால் சேவகர் அடிமைகள் மூலமான பாக்கியமும், கேது பாக்கியநாதனுடன் கூடி மேற்கூறியவாறு இருந்தால் கணக்கர் சித்திரக்காரர் மூலமான பாக்கியமும் உடையவராக விளங்குவர்.

## 317. பலவித பாக்கியம் உடையவர்.

(Those who enjoy various kinds of luxuries.)

| | | | |
|---|---|---|---|
| ராகு | சந்திர செவ்வா | 12 | ல வியாழ |
| புதன் சுக்கிரன் | நானாவிதமான பாக்கியம் உடையவர் | | 2 |
| சூரியன் | | | 3 |
| 7 | 6 | சனி | கேது |

வினா: சிலர் நானாவிதமான பாக்கியங்களை உடையவராய் இருப்பதற்குக் காரணம் யாது?

விடை: வியாழனும் கேதுவும் பாக்கியத்தானாதிபனும் (9-ம் இடத்ததிபனும்) கேந்திர திரிகோணங்களில் உச்ச முதலியவற்றால் பலவான்களாக இருக்க சுக்கிரனும் 5-ம் இடத்ததிபனும் பாக்கியத்தா

னத்தில் பூரண பலவான்களாக இருந்தாலும், உதயம் திரவியம் லாபம் (1, 2, 11) இவைகட்கு அதிபர் பாக்கியத்தானத்தில் இருந்தாலும், பாக்கியத்தானாதிபன் உதயகேந்திரத்திலும் உதய லக்கினாதிபன் பாக்கியத்தானத்திலும் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் பலவிதமான பாக்கிய யோகங்களை உடையவராகக் காணப்படுவர்.

## 318. நிர்ப்பாக்கியர். (The unfortunate.)

| | | | |
|---|---|---|---|
| செவ்வா | சூரி புத வியாழ சுக் சனி | ல கேது | சந்திர |
| 10 | நிர்ப்பாக்கியர் | | 3 |
| 9 | | | 4 |
| 8 | ராகு | 6 | 5 |

**வினா:** சிலர் நிர்ப்பாக்கியர்களாக (பாக்கியமில்லாதவர்களாக) இருப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** உதயலக்கினாதிபதியும், திரவியத் தானாதிபதியும், பாக்கியத் தானாதிபதியும், லாபத் தானாதிபதியும் (11-ம் இடத்தவனும்) கூடிச் செலவுத்தானத்தில் (12-ம் இடத்தில்) இருந்தால் இந்நிலைமையிற் பிறந்தவர் ஒருவிதமான பாக்கியமும் இல்லாதவராகத் திரிவர்.

## 319. பிச்சை எடுப்பவர். (The beggars.)

**வினா:** சிலர் பிச்சை எடுப்பவராகக் காணப்படுகின்றனர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| 8 | சூரி புத சுக்கிரன் சனி | வியாழ கேது | 11 |
| 7 | பிச்சை ஏற்றுச் சீவிப்பவர் | | சந்திர செவ்வா |
| 6 | | | ல |
| 5 | ராகு | 3 | 2 |

**விடை:** சுக்கிரனும் சனியும் கூடிப் பலவீனராகிப் பாக்கியத்தானத்தில் இருக்க, பாக்கியத் தானாதிபனும் பலவீனனாகி 3, 6, 8, 12-ம் இடங்களில் இருந்தாலும், 3, 9, 10-ம் இடங்கட்கு அதிபர் நீசராசிகளில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் எந்நாளும் யாசகம் செய்தே சீவிப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 320. இழந்த பாக்கியத்தை மீட்டும் அடைபவர்.

(Those who regain their lost wealth.)

வினு: சிலர் இழந்துபோன பாக்கியத்தை மறுபடியும் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: பாக்கியத் தாஞதிபன் 3, 8-ம் இடங்களில் இருக்க 3-ம் இடத்ததிபன் பாக்கியத் தானத்தில் இருந்தாலும், 3-ம் இடத்ததிபன் லாபத்தானத்தில் இருக்க லாபத்தலைவன் பாக்கியத் தானத்தில் இருந்தாலும் இது போன்ற நிலைமையிற் பிறந்தவர் இழந்துபோன பாக்கியத்தை மறுபடியும் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| புதன் சுக்கிரன் | 4 | 5 | 6 |
| சூரியன் | இழந்துபோன பாக்கியத்தைப் | | கேது |
| ல செவ்வா ராகு | பின்னர் அடைந்தவர் | | 8 |
| 12 | சனி | 10 | சந்திர வியாழ |

## 321. சத்துருக்களின் பாக்கியத்தைப் பெறுபவரும், சத்துருக்கள்வசம் பாக்கியத்தை இழப்பவரும்.

(Those who become entitled to their enemies' wealth, and those who are deprived of their wealth by their enemies.)

வினு: சிலருக்குச் சத்துருக்களுடைய பாக்கியம் தாஞகவே வந்துசேருகின்றது. சிலருடைய பாக்கியம் சத்துருக்களிடம் தாஞகவே போய்ச்சேருகின்றது. இவற்றிற்குக் காரணம் யாது?

விடை: பாக்கியத்தாஞதிபன் சத்துருத்தானத்தில் பலவாஞக இருக்க, சத்துருத்தாஞதிபன் உதயகேந்திரத்தில் இருந்தால் அவருக்குச் சத்துருக்களின் பாக்கியம் பிரயாசமின்றி வந்துசேரும்.

சத்துருத்தாஞதிபன் பாக்கியத்தானத்தில் பலவாஞக இருக்க, உதயலக்கிஞதிபன் சத்துருத்தானத்தில் இருந்தால் அவருடைய பாக்கியங்கள் யாவும் சத்துருக்களிடம் போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருமம்

322. தருமகாரியங்களில் அதிக சிரத்தை உடையவர்.

(Those who always do charitable deeds.)

**வினா:** சிலர் அன்னசாலை, தண்ணீர்ச்சாலை, வித்தியாசாலை, தேவாலயங்கள் முதலிய தருமகாரியங்கள் புரிதலையே தமக்கு இலட்சியமாகக்கொண்டு இருப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** இலக்கினாதிபதியும், புத்திரத் தானாதிபதியும் (5-ம் இடத்தவனும்) தருமத்தானத்தில் இருக்க தருமத்தானாதிபதி முயற்சித்தானத்தில் (10-ம் இடத்தில்) இருந்தாலும், இலக்கினாதிபதி தருமத்தானத்தில் இருக்க தருமத்தானாதிபதி உதயராசியில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் தருமதானங்களில் கொடைவள்ளல்களாக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் சனி | 11 | ராகு | ல |
| சந்திர புதன் சுக்கிரன் | தருமதாதா | | 2 |
| 8 | | | வியாழ |
| செவ்வா | கேது | 5 | 4 |

323. பூஞ்சோலை, தடாகம் முதலியன அமைப்பவர்.

(Those who make flower-gardens and tanks.)

**வினா:** சிலர் நந்தவனம், தடாகம், குளம், கிணறு முதலியன அமைத்தவண்ணமாக இருப்பதற்கு நியாயம் என்ன?

**விடை:** வியாழன், சுக்கிரன் இவர்கள் தருமத்தானாதிபதிகளாக ஆட்சிபுரிய, பூர்வபக்கச் சந்திரன் இவ்விருவருடன் கூடியிருக்கப் பிறந்தவர் பூஞ்சோலை, திருக்குளம் அமைத்தல் முதலான புண்ணிய காரியங்களையே புரிவர்.

324. தேவாலயம் அமைத்தலிற் சித்திபெறுபவர்.

(Those who succeed in building many temples.)

**வினா:** சிலர் தேவஸ்தாபனம் (ஆலயங்கட்டுதல், ஆலயத் திருப்பணி) புரிதலில் பொருத்தமுடையவராய் இருத்தற்குக் காரணம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 9 | சனி ராகு | 11 | 12 |
| 8 | தேவாலயத் திருப்பணி புரிபவர் | | ல |
| சந்திர | | | 2 |
| புதன் | சூரியன் சுக்கிரன் | செவ்வா வியாழ கேது | 3 |

விடை: வியாழன் சனி பாக்கியத்தானத்துக்கு அதிபராக, திரிகோண கேந்திர லாபத் தானங்களில் தருமகருமத்தானதிபர் (9, 10-க்கு அதிபர்) இருவருங் கூடி இருந்தால் இந்நிலைமையிற் பிறந்தவர் தெய்வப்பிரதிஷ்டை, தேவாலயம் அமைத்தல் இவைகளிலே கண்ணோட்டமாய் இருப்பர்.

### 325. தருமாதிகாரிகள்.

(The trustees of charitable institutions.)

| | | | |
|---|---|---|---|
| சந்திர சுக்கிரன் | 10 | ராகு | 12 |
| 8 | தரும அதிகாரி | | ல வியாழ |
| சூரியன் புதன் | | | 2 |
| சனி | கேது | செவ்வா | 3 |

வினா: சிலர் தருமாதிகாரிகளாக இருப்பதற்கு நியாயம் யாது?

விடை: பாக்கியத் தானதிபனும் பாக்கியத்தானத்தில் இருந்தவனும் உச்சம்பெற்றிருந்தாலும், 9, 10-ம் இடங்கட்கு அதிபர் பலவான்களாகி உதயகேந்திரத்தில் இருந்தாலும் இது போன்ற நிலைமையிற் பிறந்தவர் தருமங்களுக்குத் தலைவராக இருப்பர்.

### 326. புகழ்க் கோடையாளர்.

(Those who give charity for fame.)

வினா: சிலர் புகழை விரும்பிப் புண்ணியஞ் செய்பவர்களாய்த் தம்மைப் புகழ்ந்து போற்றுபவர்கட்கே கொடையாளிகளாக இருப்பதற்கு நியாயம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:** உதயலக்கினாதிபதி கீர்த்தித்தானத்தில் இருக்க, கீர்த்தித்தானாதிபதி புண்ணியத்தானத்தில் (9-ம் இடத்தில்) அந்தத் தானாதிபதியுடன் இருக்கப் பிறந்தவர் நற்புகழ்ச்சியின்பொருட்டுத் தானதருமங்கள் செய்வர்.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | 7 | சனி |
| கேது | புகழ்க் கொடையாளர் | | சந்திர புதன் சுக்கிரன் |
| 3 | | | சூரியன் ராகு |
| 2 | ல | செவ்வா | வியாழ |

## 327. லோபிகள். (The misers.)

**வினா:** சிலர் தானதருமஞ் செய்ய மனமில்லாதவராய் லோபிகளாக இருத்தற்கு நியாயம் யாது?

**விடை:** தருமத்தானாதிபதி சத்துருத்தானத்தில் (6-ம் இடத்தில்) இருக்கச் சத்துருத்தானாதிபதி தருமத்தானத்தில் இருக்கப் பிறந்தவர் கயவர்களாகவே இருப்பர்.

## 328. தரும விரோதிகள்.

## (Those who hinder charitable work.)

**வினா:** சிலர் தருமவிரோதிகளாக இருத்தற்கு நியாயம் யாது?

**விடை:** தருமத்தானாதிபன் பலவீனனாகி, தருமத்தானத்தில் 3, 6, 8-ம் இடங்கட்கு அதிபர் இருந்தாலும் நோக்கினாலும் இது போன்ற நிலைமையில் ஜனித்தவர் தருமங்களுக்கு விக்கினஞ்செய்யும் மகாபாபிகளாகக் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| செவ்வா | வியாழ சுக்கிரன் சனி | சூரியன் கேது | புதன் |
| 7 | தரும விரோதி | | 12 |
| 6 | | | ல |
| 5 | ராகு | 3 | சந்திர |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்தி

### 329. தெய்வபக்தி மிகுந்தவர். (The devout)

**வினா:** சிலர் தம் குலதெய்வத்தினிடத்தில் அதிகமான அன்பு கொண்டு விசேஷ ஆராதனை, தோத்திரம், ஜபம், தபம், விரதம் முதலியன புரிந்தும் அடிக்கடி தீர்த்தயாத்திரை செய்தும் வருகின்றனர். இது எதனால்?

**விடை:** புண்ணியத்தானாதிபதி (9-ம் இடத்தவன்) புத்தித் தானத்தில் (5-ம் இடத்தில்) இருக்க, உதயலக்கினாதிபதியும் புத்தித் தானாதிபதியும் கூடிப் பாக்கியத்தானத்தில் இருக்கப் பிறந்தவர் இவ்வாறான தெய்வாராதனைகளில் அனுதினமும் ஈடுபட்டு ஆனந்த பரவசராய்த் துலங்குவர்.

### 330. ஒவ்வோருவரும் வழிபடும் தேய்வங்கள்.

### (The various deities whom each person worships.)

**வினா:** சிலர் பலவிதமான தெய்வங்களிற் பத்தியுடையவராய் இருத்தற்குக் காரணம் யாது?

**விடை:** உதயலக்கினத்திலும் நவாம்சலக்கினத்திலும் 5, 9-ம் இடங்களிலேனும் சூரியன் வியாழன் கேது இருந்தால் சிவபக்தியுடையவராகவும், மேற்கூறிய ஸ்தானங்களில் சந்திரனும் கேதுவும் இருந்தால் தேவிபக்தியுடையவராகவும், சுக்கிரன் இராகு இருந்தால் இலக்குமிபக்தியுடையவராகவும், சனி புதன் இருந்தால் விஷ்ணுபக்தியுடையவராகவும், செவ்வாய் சுக்கிரன் கேது இருந்தாலும் செவ்வாய் 5-ம் இடத்தின் தொடர்புடையவனாக இருந்தாலும் சுப்பிரமணியபக்தியுடையவராகவும், சனி 9-ம் இடத்திற்கு அதிபனாகி 5-ம் இடத்தில் அவ்விராசியதிபனால் நோக்கம் பெற்றிருந்தால் விக்கினேஸ்வரரிடத்தும் ஈஸ்வரரிடத்தும் பக்தியுடையவராகவும், வியாழன் 5-ம் இடத்தில் இருந்தால் சரஸ்வதிபக்தியுடையவராகவும், 5-ம் இடத்தில் சந்திரன் சுக்கிரன் இருந்தால் ஸ்திரீ தேவதாபக்தியுடையவராகவும், 5-ம் இடத்தில் சூரியன் செவ்வாய் வியாழன் இருந்தால் புருஷதேவதாபக்தியுடையவராகவும், 5-ல் இராகு இருந்தால் துஷ்டதெய்வங்களிடத்துப் பக்தியுடையவராகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5-ல் புதன் இருந்தால் எல்லாத் தெய்வங்களினும் பக்தியுடையவராகவும், 5-ம் இடத்ததிபனும் 5-ம் இடத்தில் இருப்பவனும் நீசரானால் ஒரு தெய்வத்திலும் அன்பில்லாதவராகவும் விளங்குவர்.

## ஆசார அனுஷ்டானம்

### 331. ஆசார அநுட்டானங்களிற் சிறந்தவரும், அநாசாரம் உடையவரும்.

(The puritans and the sceptics.)

| | | | |
|---|---|---|---|
| 7 | செவ்வா கேது | புதன் சுக்கிரன் சனி | சூரியன் வியாழ |
| 6 | ஆசார அனுட்டானம் சிறப்பாக அனுசரிப்பவர் | | 11 |
| 5 | | | 12 |
| சந்திர | 3 | ராகு | ல |

**வினா:** சிலர் ஆசார அனுட்டானங்களிற் சிறந்து விளங்குதற்கும், வேறு சிலர் அவைகளை முற்றாகக் கைநழுவ விட்டிருப்பதற்கும் காரணம் யாது?

**விடை:** உதயலக்கினாதிபன் புத்திரத்தானாதிபன் இருவரும் பலவான்களாகிப் பாக்கியத்தானத்தில் (9-ம் இடத்தில்) அதிபனுடன் கூடியிருந்தாலும், 1, 9-ம் இடங்கட்கு அதிபர் 12-ம் இடத்தில் இருந்தாலும், சனி இராகுக்கள் கர்க்கடகராசியில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் ஆசார அனுட்டானம் தீர்த்த யாத்திரை தெய்வாராதனை இவைகளில் தலைசிறந்து விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| செவ்வா | வியாழ சுக்கிரன் சனி | சூரியன் புதன் கேது | 11 |
| 7 | ஆசார அனுட்டானங்களை அடியோடு கைவிட்டவர் | | 12 |
| சந்திர | | | ல |
| 5 | ராகு | 3 | 2 |

உதயம் பாக்கியம் இவைகளுக்கு அதிபர் 3, 6, 8, 11-ம் இடங்களில் பலவீனமாக இருந்தாலும், சந்திரன் சுக்கிரன் இருவருங் கூடி இன்பத்தானத்தில் (7-ம் இடத்தில்) இருந்தாலும், 6, 8-ம் அதிபர் 1, 9-ம் இடங்களில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் ஆசாரம், அனுட்டானம், தெய்வாராதனை இவைகளில் வெறுப்புடையவராய் (காட்டுமனிதர்போல்) விளங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

332. தமது துன்பத்தை மறைத்துப் பிறருக்கு உதவிபுரிபவர்.
(Those who hide all their hardships and help others.)

வினா: சிலர் தம்முடைய துன்பங்களை மறைத்துப் பிறருடைய கருமங்களைப் பார்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | வியாழ சனி | சுக்கிரன் கேது | 5 |
| ல புதன் | தமது துன்பத்தை மறைத்துப் | | 6 |
| செவ்வா | பிறருடைய சருமத்தைப் பார்ப்பவர் | | 7 |
| 11 | ராகு | சந்திர | 8 |

விடை: உதயலக்கினாதிபன் 3, 6, 8, 11-ம் இடங்களில் மறைந்துவிட, தருமகருமக் காரணதிபர் (9, 10-க்கு அதிபர்) 1, 4, 7, 10, 12-ம் இடங்களில் இருந்தாலும், புத்திதானாதிபன் நீசனாகி எங்கேயிருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் தமது துன்பத்தை மறைத்துப் பிறருடைய கருமங்களிலேயே மனஞ்செலுத்துவர்.

333. உலகப்பற்று அற்றவர். (The ascetics.)

வினா: சிலர் உலகப்பற்றற்ற சந்நியாசியோகிகளாய், அல்லது மோட்சசுகத்தில் இலட்சியம் உடையவராய் இருக்கின்றனர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| 10 | செவ்வா | 12 | ல |
| ராகு | ஒரு சந்நியாச | யோகபுருஷர் | சூரி புத வியாழ சுக்கிரன் |
| 8 | | | கேது |
| 7 | 6 | சந்திர சனி | 4 |

விடை: சுக்கிரனும் சனியும் விடுமாறியிருந்தாலும், 5-ம் 9-ம் இடங்களில் பலவானாகி இருக்கும் சனி 1, 7-ம் இடங்கட்கு அதிபரையும் சுக்கிரனையும் முழுநோக்காக நோக்கினாலும், சனி 9-ம் இடத்தில் இருக்க 9-ம் இடத்ததிபன் 5-ம் இடத்தில் 1, 10-ம் இடங்கட்கு அதிபருடன் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உற்பவித்தவர் உலக ஆசையை நீத்த யோகபுருஷராய் அல்லது மோட்சசுகத்தில் இலட்சியமுடையவராய் விளங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முயற்சி

### 334. விடாமுயற்சி உடையவர். (The busy.)

| | | | |
|---|---|---|---|
| சந்திர | 4 | 5 | 6 |
| ராகு | விடாமுயற்சி உடையவர் | | வியாழ |
| ல | | | கேது |
| சூரியன் புதன் | செவ்வா | சுக்கிரன் சனி | 9 |

**வினா:** சிலர் எந்நேரமும் இடைவிடாது முயற்சி பார்த்த வண்ணமாக இருக்கின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** முயற்சித் தானத்தில் (10-ம் இடத்தில்) ஆட்சி பெற்ற தானாதிபனுடன் உதய லக்கினாதிபதியும் பலவானாக இருக்கப் பிறந்தவர் விடாமுயற்சி உடையவராகக் காணப்படுவர்.

### 335. நிலையில்லாத முயற்சி உடையவர். (Those who work now and then.)

**வினா:** சிலர் பாதிநாள் அதிக முயற்சி பார்த்தும் பாதிநாள் வீண்பொழுது போக்கியும் ஆரம்பசூரத்துவமுடையவராகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** பூர்வக்கச் சந்திரன் ஒருவருடைய நோக்கமும் பெறாது முயற்சித்தானத்தில் ஆட்சிபுரியும் நேரம் பிறந்தவர் அவ்வப்போது நிலையில்லாத முயற்சியுடையவராய் வெளித்தோற்றத்தில் கடும் முயற்சியாளர்போற் காணப்படுவர்.

### 336. சோம்பேறிகள். (The idle.)

| | | | |
|---|---|---|---|
| கேது | 12 | ல | 2 |
| சந்திர | சோம்பேறி | | 3 |
| புதன் வியாழ | | | 4 |
| சூரியன் சுக்கிரன் சனி | 7 | 6 | செவ்வா ராகு |

**வினா:** சிலர் ஒரு முயற்சியும் பார்க்க இயலாதவராய் நித்திய சோம்பேறிகளாகத் திரிகின்றனர். இதற்குக் காரணம் என்ன?

**விடை:** உதயலக்கினாதிபதியும் முயற்சித் தானாதிபதியும் கூடி வக்கிராஸ்தமனகதி அடைந்து மறைவுத்தானங்களில் (6-ம் 8-ம் ஸ்தானங்களில்) இருக்கப் பிறந்தவர் ஒருவிதமான முயற்சியும் இல்லாதவராய்த் தெருத்திண்ணை தூங்கிகளாகத் திரிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 337. உத்தியோகப் பொருத்தம். (Choosing of Occupations.)

**வினு:** உலகத்திலே பலர் பலவேறு வகைத்தான முயற்சிகளைத் தமக்குப் பொருத்தமுடையனவாகக் கொண்டு புரிந்து வாழ்கின்றனர். இவை எந்த எந்தக் கிரகத்தினுல் ஏற்படுகின்றன?

**விடை:** (உதயலக்கின சந்திரலக்கினங்களுக்கு) 10-ம் இடத்ததிபன், 10-ம் இடத்தில் இருந்தவன், இவ்விருவருடனும் கூடினவன், இவ்விருவரையும் நோக்கினவன், 10-ம் இடத்தை நோக்கினவன் ஆகிய இவர்களுள் பலவானுன ஒரு கிரகத்தினுலேயே இம் முயற்சிகள் அவ்வவர்க்கு வுந்து பொருந்தும்.

**வினு:** அவ்வாறு 10-ம் பாவ சம்பந்தமான கிரகங்களுள் எந்த எந்தக் கிரகங்கள் எந்த எந்த உத்தியோகங்களுக்கு அதிபதிகள் என்று தெரிவிக்க முடியுமா?

**விடை:** ஆம். பண்டைக்காலத்தில் இல்லாத புதிய புதிய உத்தியோகங்கள் தற்காலத்தில் மக்கள் வாழ்க்கைக்குச் சீவனாடியாகக் காணப்படுகின்றன. அந்த உத்தியோகங்கள் பத்தாம் பாவ சம்பந்தமாய் எந்த எந்தக் கிரகங்களால் பொருந்தியுள்ளன என்பதை அறியும் நோக்கத்துடன் பல வேறு தொழிலாளர்களின் ஜாதகங்களையும் நம் அறிவிற்கு எட்டியவரை நுனித்து நோக்கி ஆராய்ச்சி செய்ததன் பெறுபேருக, சாஸ்திரஞானத்தைத் தழுவி, அனுபவத்திலும் நம் கண்முன்னிலையில் சாட்சியாகத் தெரிவனவற்றை விடையாகத் தருகின்ருேம்.

### 338. சூரியனுல் வரும் உத்தியோகங்கள். (Occupations relating to the Sun.)

**வினு:** சூரியனுல் வரும் உத்தியோகங்கள் எவை?

| | | | |
|---|---|---|---|
| சந்திர | ராகு | சூரியன் | செவ்வாய் புதன் சுக்கிரன் |
| 7 | ஓர் அரசாங்க சபைத் தலைவர் | | 12 |
| சனி | | | ல |
| 5 | 4 | கேது | வியாழ |

**விடை:** சூரியன் இலக்கினுதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தால் தேச பரிபாலனம் (Governor, Government Agent, District Collector), நகர பரிபாலனம், (Municipal Mayor, U. D. C. Chairman), கிராம பரிபாலனம் (Village Committee President), வன பரிபாலனம் (Forest Conser-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vator, Forester), ஜனன மரணப் பதிவுக் காரியாலயங்களின் தலைமை உத்தியோகம் (Registrar of Births and Deaths), உயர்தர நீதிமன்றங்களில் நியாயாதிபதி முயற்சி (Justice of the Supreme Court), அரசாங்க சபைகளில் தலைமை வகிக்கும் முயற்சி (Speaker of the House of Representatives) இவைகளே அதிக பொருத்தமுடையன.

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | சூரியன் செவ்வா | புதன் வியாழ | ராகு |
| 8 | ஓர் உயர்தர நியாயாதிபதி | | ல |
| 7 | | | சந்திர |
| சனி கேது | 5 | 4 | 3 |

சூரியன் 2-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தால் அரசாங்கப் பொக்கிஷங்களைப் பாதுகாக்கும் முயற்சி (Financial Secretary), அரசியல் மன்றங்களிலும் உயர்தர நீதிமன்றங்களிலும் பிரதம பேச்சாளராகவும் நியாயாதிபதியாகவும் இருக்கும் முயற்சி (Leader of the State Council, Puisne Justice), அரசாங்க ஆசிரியர் கல்லூரிகளில் தலைமை உத்தியோகம் (Principal or Superintendent of Government Training College), அரசாங்கப் பொருட்காட்சி நிலையங்களில் தலைமை உத்தியோகம் (Director of Museum) இவைகளே பொருத்தமுடையன.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் | வியாழ ராகு | சந்திர செவ்வா | ல |
| சுக்கிரன் | ஓர் பிரதம பொலிஸ் உத்தியோகஸ்தர் | | 2 |
| 8 | | | 3 |
| 7 | 6 | கேது | சனி |

சூரியன் 3-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தால் இரகசியப் பொலிஸ் பகுதி (Superintendent C.I.D.), இராணுவப்பகுதி (Military Officer), மதுபரிபாலனப் பகுதி (Superintendent of Excise), வனபரிபாலனப் பகுதி (Forester, Forest Ranger) உத்தியோகம் இவைகளே அதிக பொருத்தம் உடையன.

சூரியன் 4-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தால் அரசாங்கத்தில் பூமிப்பகுதி (Land Commissioner,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registrar of Lands), கட்டடப் பகுதி (Engineer P. W. D.), வாகனப்பகுதி (Commissioner of Motor Transport), சுகாதாரப்பகுதி (Director of Medical and Sanitary Services), வியாபாரப்பகுதி (Minister of Commerce), இரேகுப் பகுதி (Principal Collector of Customs) இவைகளில் தலைமை உத்தியோகம் இவைகளே பொருத்தமுடையன.

| | | | |
|---|---|---|---|
| 11 | 12 | ல சந்திரன் | 2 |
| சூரியன் புதன் | ஓர் பிரபல சுகாதாரப் பகுதித் தலைமை உத்தியோகத்தர் | | சனி ராகு |
| சுக்கிரன் கேது | | | 4 |
| 8 | வியாழ | செவ்வா | 5 |

சூரியன் 5-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தால் உயர்தர நியாயாதிபதி உத்தியோகம் (Justice of the Supreme Court), கணக்குப்பரிசோதகர் (Auditor General), கல்விப் பரிசோதகர் (Inspector of Schools), இரசாயனப் பரிசோதகர் (Government Analyst), பொருட்களின் விலை மதித்துத் தீர்வைப்பணம் அறவிடும் பகுதி (Customs Appraiser), மந்திரிசபை உத்தியோகம் (Minister of State) இவைகளே அதிக பொருத்தமுடையன.

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | ராகு | சந்திரன் |
| சுக்கிரன் | ஓர் பிரபல கல்விப் பரிசோதகர் | | 4 |
| சூரியன் | | | வியாழ |
| புதன் சனி | கேது | செவ்வா | 6 |

சூரியன் 6-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தால் அரசாங்கத்தில் இராணுவப்பகுதி (Military and Naval Officers), வைத்தியப் பகுதி (Medical Officer), பொலிஸ் பகுதி, சட்டப் பகுதி (Attorney General), வியாச்சியந் தொடுக்கும் பகுதி (Crown Prosecutioner), நியாயவாதப்

| | | | |
|---|---|---|---|
| ல | 2 | 3 | 4 |
| ராகு | ஓர் வைத்தியத் தலைமை உத்தியோகஸ்தர் | | சந்திர வியாழ |
| புதன் | | | கேது |
| சூரியன் | செவ்வா சுக்கிரன் | சனி | 7 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி (Crown Advocate, Crown Proctor), வரிகள் அறவிடும் பகுதி (Commissioner of Income Tax) இவைகளில் தலைமை உத்தியோகம் இவைகளே அதிக பொருத்தமுடையன.

சூரியன் 7-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தால் கலியாணப்பதிவு நிலையங்களில் பிரதம உத்தியோகம் (Registrar of Marriages), விவாகநீக்க வழக்குகளில் நீதி தீர்க்கும் முயற்சி (Judge of the Divorce Court), கல்யாணஞ் செய்துவைக்கும் ஆசாரிய உத்தியோகம் (Clergyman or Priest Solemnising Marriages), நகர பரிபாலன உத்தியோகம் (Chairman U. D. C.) இவைகளே அதிக பொருத்தமுடையன.

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 4 | செவ்வா |
| ல | ஓர் கலியாணப் பதிவு உத்தியோகத்தர் | | சந்திர கேது |
| ராகு | | | வியாழ |
| சுக்கிரன் | சூரியன் புதன் | சனி | 8 |

சூரியன் 8-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தால் அரசாங்கத்தில் இராணுவப்பகுதி (Military Officer), வைத்தியப்பகுதி (Medical Officer), மதுபரிபாலனப் பகுதி (Excise Officer) மரணதண்டனையை நிறைவேற்றும் முயற்சி (Public Executioner) இவைகளே அதிக பொருத்தமுடையன.

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | ராகு | 6 |
| சந்திர | ஓர் இராணுவ உத்தியோகத்தர் | | 7 |
| ல செவ்வா வியாழ | | | சனி |
| 12 | சுக்கிரன் கேது | சூரியன் | புதன் |

சூரியன் 9-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தால் உயர்தர நீதிபதி உத்தியோகம் (District Judge), தேவாலயப் பகுதிகளில் உத்தியோகம் (Ecclesiastical Officer,) அனேகம் புண்ணியஸ்தாபனங்களுக்கு அதிபதியாக இருக்கும் உத்தியோகம் (Manager or Trustee of Temple Boards) இவைகளே அதிக பொருத்தமுடையன.

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | சந்திர | 7 |
| சனி | ஓர் பிரபல தேவாலய அதிபர் | | கேது |
| வியாழ ராகு | | | புதன் சுக்கிரன் |
| ல | 12 | 11 | சூரியன் செவ்வா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் 10-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்திலேயே இருந்தால் அரசாங்கத் தாபனக் கணக்குகளைப் பரிசோதிக்கும் பகுதி (Auditor-General), ஒவ்வோர் ஸ்தாபனங்களுக்கும் உத்தியோகஸ்தரை மாற்றி அனுப்பும் பகுதி (Chief Secretary), அரசாங்கக் காரியாலயங்களுக்குரிய பொருட்கள் செய்து செய்வித்துக் கொடுக்கும் பகுதிகளில் முயற்சி (Government Storekeeper), பல தொழிலாளருக்கும் அதிபதியாக இருக்கும் முயற்சி (Labour Controller) இவைகளே அதிக பொருத்தம் உடையன.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | 7 | கேது |
| 4 | தொழிலாளரைப் பரிசோதிப்பவர் | | சந்திர |
| 3 | | | சூரியன் புதன் சுக்கிரன் |
| ராகு | ல சனி | வியாழ | செவ்வா |

சூரியன் 11-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தால் அரசாங்கப் பொக்கிஷப்பகுதி (Government Treasurer), ஐக்கியநாணயசங்கப் பகுதி (Registrar, Co-operative Department), இரேகுப் பகுதி (Principal Collector of Customs), வருமான வரிப்பகுதி (Commmissioner of Income Tax) இவைகளில் தலைமை உத்தியோகம் இவைகளே அதிக பொருத்தம் உடையன.

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | ராகு | சுக்கிரன் |
| வியாழ | ஓர் அரசாங்கப் பொக்கிஷ காரிய அதிபர் | | சூரியன் செவ்வா புதன் |
| 4 | | | சனி |
| சந்திர | கேது | ல | 12 |

சூரியன் 12-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தால் அரசாங்கத்தில் வரவு செலவு செய்யும் பகுதி (Financial Secretary), வரிவசூல் செய்யும் பகுதி (Appraiser of Customs Tariff or Assessor of Income Tax), போக்குவரத்துப்பகுதி (General Manager of Railways, Postmaster-General) இவைகளில் தலைமை உத்தியோகம் இவைகளே அதிக பொருத்தம் உடையன.

| | | | |
|---|---|---|---|
| செவ்வா சனி | 8 | சந்திர ராகு | சூரியன் புதன் |
| 6 | ஓர் போக்குவரத்துப் பகுதி உத்தியோகஸ்தர் | | சுக்கிரன் |
| 5 | | | வியாழ |
| 4 | கேது | 2 | ல |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 339. சந்திரனால் வரும் உத்தியோகங்கள்.

(Occupations relating to the Moon.)

**வினா:** சந்திரனால் ஏற்படக்கூடிய விதம்விதமான உத்தியோகங்கள் எவை?

**விடை:** பூரணசந்திரன் 10-ம் இடத்திலேனும் 4-ம் இடத்திலேனும் ஆட்சி உச்சம் பெற்றிருந்தால் பயிர்த்தொழில் வியாபாரம், நாற்றுகள், கன்றுகள், வெற்றிலை, புகையிலை, கீரைவகை, கிழங்குவகை, காய்வகை, (கத்தரி, பாகல், புடோல், வெண்டி, அவரை, தக்காளி, வாழை, பூசினி முதலியன), கனிவகை (மாம்பழம், திராக்ஷைப்பழம், மாதுளம்பழம், தோடம்பழம், எலுமிச்சம்பழம் முதலியன), இரசவகை (பால், மோர், தயிர், சோடா, சர்பத் ஆதியாம் குளிர்ந்த பானங்கள்), நெய்வகை (பசுநெய், தேங்காய்நெய், பன்னைநெய், இருப்பைநெய், வேப்பம்நெய், ஆமணக்குநெய், எள்நெய், கடலைநெய், புல்நெய் முதலியன) இவற்றின் சம்பந்தமான தொழில்கள்.

பூரணசந்திரன் நீசனாகி 10-ம் இடத்தில் இருந்தாலும் 10-ம் இடத்தில் இருக்கும் சந்திரனை நீசக்கிரகங்கள் கூடினாலும் நோக்கினாலும் சமுத்திரசம்பந்தமான பொருட்களின் (உப்பு, மீன், நண்டு, இப்பி, சங்கு, முத்து, நத்தை, அட்டை முதலியன) வியாபாரம்.

சூரியன் செவ்வாய் நீசராகி இச் சந்திரனை நோக்கினால் மேற்கூறிய பொருட்களின் வற்றல்களின் வியாபாரம், (காயவைத்து விற்றல், அல்லது கறியாக்கி விற்றல், அல்லது கருவாடு வியாபாரம்.)

10-ம் இடத்தில் இருக்கும் சந்திரனைச் சூரியன் செவ்வாய் புதன் சனி நோக்கினாலும், சூரியனை ஒழிந்த மற்றையோர் கூடினாலும் நீராவி மரக்கலங்கள் (தற்காலம் மோட்டார்ப்படகு, மின்சாரப்படகு) பாய்த்தோணி செய்தல், செய்வித்தல், கொள்ளல், கொடுத்தல், அவைகளை ஓட்டுதல், அவைகளில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் செய்தல்.

சந்திரன் நீசனாகி 10-ம் இடத்திற்கு அதிபதியாக இருந்தாலும், 10-ம் இடத்தில் இருந்தாலும் கப்பல் தோணிகளில் வேலை செய்தல், கள் சாராய வியாபாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சந்திரனைச் சனி செவ்வாய் கூடினாலும் நோக்கினாலும் உவைன், பிறன்டி, உவிஸ்கி, ஜின் முதலிய அந்நியதேச வெறிநீர்ப் பதார்த்தம், அபின், கஞ்சா இவைகளின் வியாபாரம்.

சந்திரன் பூரணனாகி 10-ம் இடத்திலேனும் 4-ம் இடத்திலேனும் பலவானாக இருந்தால் மலைகளில் உள்ள மூலிகைவகைகளின் வியாபாரம். (தற்காலம் றப்பர்த் தோட்டம், தேயிலை கோப்பிச் செடிவகைத் தோட்டம், றப்பர்ப் பால், தேயிலைக் கொழுந்து, கோப்பிவித்து, மலைநெல் முதலியன செய்தல், செய்வித்தல், கொள்ளல், கொடுத்தல் ஆதிய வியாபாரம்.)

சந்திரனும் வியாழனும் கூடி 4-ம் இடத்தில் இருந்தால் மலைமேல் மாடமாளிகைகள் கட்டி வாசஞ்செய்தல், வாங்கல், விற்றல் வியாபாரம்.

சந்திரன்புதன் 1, 4, 7, 10-ம் இடங்களுக்கு அதிபதிகளாகி இவ்விடங்களில் ஒருங்கு கூடி இருந்தால் அத்தர், பனிநீர், புஷ்பம், மாலை, செண்டு, சந்தனம், வாசனைத் தாம்பூலம் (தற்காலம் ஸெண்ட் வகை, பரிமள சவர்க்காரவகை, சுகந்த தைலவகை) இவைகளின் வியாபாரம்.

மேற்கூறிய குருசந்திரரைச் செவ்வாய் சேர்ந்தாலும் நோக்கினாலும் சுகந்த திரவியங்கள், கஸ்தூரி, புனுகு, கோரோசனை, மணப்புகைவர்த்தி, குங்கிலியம், தசாங்கம், கர்ப்பூரம், குங்குமம் முதலிய வஸ்துக்கள் வியாபாரம்; சீனி, வெல்லம், கற்கண்டு, கற்காரம், தேன், கரும்பு ஆதியாம் தித்திப்புப் பண்டங்களின் வியாபாரம் இவைகளே அதிக பொருத்தமுடையன.

## 340. செவ்வாயினால் வரும் உத்தியோகங்கள்.

(Occupations relating to Mars.)

**வினா:** செவ்வாயினால் வரும் உத்தியோகங்கள் எவை?

**விடை:** செவ்வாய் 4-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தாலும் 10-ம் இடத்திற்கு அதிபதியாகி 4-ம் இடத்தில் இருந்தாலும் பூமி விற்றல், வாங்கல், ஈடு ஒற்றி வாங்கல், காடுகளைத் திருத்திப் பயிர்ச்செய்கைக்கேற்ற பூமியாக்குதல், நிலத்தின்கீழ்ச் சுரங்கவீடு அமைத்தல், இவைகளைக் கொள்ளல், விற்றல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்புரத்தினக்கற்கள், செங்கற்கள், மண்ஓடு, கல் இவற்றின் வியாபாரம், இஞ்சி, உருளை, வற்றாலை, வள்ளி முதலிய கிழங்குவகைகள் வியாபாரம், சிவப்புநிற மனிதருடன் (சோனகருடனும்) பங்கு வியாபாரம், கூட்டுவியாபாரம்.

இந்தச் செவ்வாயுடன் சனி கூடினாலும் நோக்கினாலும் காரீயம், கருங்கல், முருகைக்கல், கருமண் (சிமேந்து), ஆயுதங்கள், எலும்புப் பசளைகள் வியாபாரம்.

இச் செவ்வாயைச் சூரியன் சுக்கிரன் கூடினாலும் நோக்கினாலும் சுண்ணாம்பு, நீறுவகை வியாபாரம்.

இந்தச் செவ்வாய் நீசனாகி இருந்தால் மிளகாய், காரம்பு, கறுவா, இலவங்கம், பெருஞ்சீரகம், இறைச்சி, கொழுப்பு, இரத்த வகை, மிருகங்களின் கொம்புவகை, பிண்ணாக்கு, வைக்கோல், பசளைகள் (உரம்) இவற்றின் வியாபாரம்.

இந்தச் செவ்வாயுடன் சூரியன் கூடினாலும் நோக்கினாலும் கதிரை மேசை நாற்காலிகள் வியாபாரம், தாமிரம் பித்தளை வெண்கலம் தரா முதலிய உலோகவகை வியாபாரம், இந்த உலோகங்களால் ஆகிய பாத்திரவகைகளின் வியாபாரம்.

இச் செவ்வாயுடன் இராகு கேது நோக்கினால் மிருகங்களின் தோல்வகை (தோல்கள் பதனிடும் தொழில்), செருப்புவகை, சப்பாத்துவகை, தோற்பைகள் வியாபாரம்.

செவ்வாய் 3-ம் 6-ம் இடங்களுக்கு அதிபதியாகி 10-ம் 11-ம் இடங்களில் பூரண பலவானாக இருந்தால் தமது பராக்கிரமத்தினால் பகைவருடன் யுத்தஞ்செய்யும் (Military Service) தொழிலால் சீவித்தல் இவைகளே அதிக பொருத்தமுடையன.

## 341. புதனால் வரும் உத்தியோகங்கள்.

## (Occupations relating to Mercury.)

**வினா:** புதனால் வரும் உத்தியோகங்கள் எவை?

**விடை:** புதன் 4-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தாலும் 10-ம் இடத்திற்கு அதிபதியாகி 4-ம் இடத்தில் இருந்தாலும் காகிதம், புஸ்தகம், அளவுக்கருவிகள், எழுதுகருவிகள், அச்சிடுங்கருவிகள் இவற்றின் சம்பந்தமான வியாபாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் புதனுடன் சனி கூடினாலும் நோக்கினாலும் காற்றாடி யந்திரம் (Electric Fan), அச்சுயந்திரம் (Printing Press) கொள்ளல் கொடுத்தல் வியாபாரம்.

புதன் 4-ம் இடத்திற்கு அதிபதியாகிக் கேந்திர திரிகோணங்களில் பலவானாக இருந்தாலும், சனி 2-ம் இடத்ததிபன் இப் புதனை நோக்கினாலும் அச்சியந்திரசாலை புஸ்தகசாலை கல்விச்சாலை வாசகசாலைகளுக்கு அதிபதியாகவிருத்தல், யந்திரவாகனங்களை இயற்றுதல், திருத்துதல், ஓட்டுதல், விற்றல், வாங்கல் ஆகிய வியாபாரம்.

இந்தப் புதனுடன் வியாழன் கூடினாலும் நோக்கினாலும் மேல்மாடிகளில் வாசம், மேல்மாடிகளிலிருந்து உத்தியோகம்புரிதல்.

இந்தக் குருபுதர்களைச் சனி நோக்கினால் ஆகாயவிமானங்களை இயற்றுதல், திருத்துதல், ஓட்டுதல், அவைகளை லாபகரமாக வாங்கல், விற்றல்.

இந்தக் குருபுதர்களைச் சுக்கிரன் கூடினாலும் நோக்கினாலும் வீணை, ஹார்மோனியம், தூரசிரவணயந்திரம் (Radio), யந்திரவாத்தியம் (Gramaphone) இவைகளை விற்றல் வாங்கல் வியாபாரம், இவ்வாத்தியங்களை இயக்குவதனால் சீவித்தல், சங்கீதம் கற்பிப்பதனாலும் சங்கீதவாத்தியம் கோஷிப்பதனாலும் சீவித்தல், பச்சை நிறமான பொருட்களை லாபமாகப் பெறுதல், பயறு உழுந்து முதலியவற்றின் வியாபாரம்.

புதன் 10-ம் இடத்திற்கு அதிபதியாகி (10-ம் இடம் எவருடைய தொடர்பு மில்லாதிருக்க) 1, 3, 5, 7-ம் இடங்களில் இருந்தால் அரசாங்கநிலையங்களில் கணக்குப்பரிசோதகர் (Government Auditor) வேலை, 4-ம் இடத்தில் இருந்தால் வியாபாரநிலையங்களில் அல்லது வண்டிவாகனப் போக்குவரவு நிலையங்களில் எழுத்தாளர் (Clerk) வேலை, 6-ம் இடத்திலிருந்தால் நீதிமன்றங்களில் எழுத்தாளர் (Stenographer) வேலை, 8-ம் இடத்தில் இருந்தால் வைத்தியசாலைகளில் எழுத்தாளர் வேலை, 9-ம் இடத்தில் இருந்தால் தேவாலயங்களில் எழுத்தாளர் வேலை, 11-ம் இடத்தில் இருந்தால் அரசிறைவருமானநிலையம், ஐக்கியநாணயசங்க நிலையங்களில் எழுத்தாளர் வேலை, 12-ம் இடத்திலிருந்தால் தபால் தந்திப் போக்குவரத்து நிலையங்களில் எழுத்தாளர் (Postmaster) வேலை இவைகளே அதிக பொருத்தமுடையன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 342. வியாழனல் வரும் உத்தியோகங்கள்.

## (Occupations relating to Jupiter.)

வின: வியாழனல் ஏற்படும் உத்தியோகங்கள் எவை?

விடை: வியாழன் 4-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தாலும், 10-ம் இடத்திற்கு அதிபதியாகி 4-ம் இடத்தில் பூரணபலவானக இருந்தாலும் பொன்னுபரணம் புஷ்பராக ரத்தினம் செய்வித்தல், விற்றல், வாங்கல், அடைவுபிடித்தல், பல வீடுகள் கட்டுதல், அவைகளை வாடகைக்குக் கொடுத்தல், உடன்படிக்கை ஒப்பந்தம் எழுதிக் கட்டிடம் கட்டிக்கொடுத்தல், பசுமாட்டுப் பண்ணைகளை வைத்து அவற்றிற்கு அதிபதியாக இருத்தல், பாற்பசு கொள்ளல், கொடுத்தல், பால் வியாபாரம், எருது எருமை ஆடு யானை குதிரை ஆதியாம் மிருகங்களின் வியாபாரம், நெல்வயல் வாங்கல், விற்றல், நெல் அரிசி தானியவகைகள் தவிடு வைக்கோல் வியாபாரம், (தற்காலம் அவல் அப்பளம் மாவகைகளின் வியாபாரம்), மாட்டுவண்டி குதிரைவண்டி மனிதர்வண்டி (Rickshaw) தண்டிகை பல்லக்கு சப்பிரமஞ்சம் மணவறை முதலியன செய்தல், செய்வித்தல், விற்றல், வாங்கல், வாடகைக்குக் கொடுத்தல், தேவாலயங்களுக்கு உரிய வாகனங்கள் ஆபரணங்கள் குடை கொடி ஆலவட்டம் ஆதியாய பொருட்கள் செய்தல் செய்வித்தல் விற்றல் வியாபாரம், பட்டு பருத்திப் புடைவைகள் பீதாம்பரங்கள் குடைகள் வியாபாரம்.

இந்த வியாழன் நீசனக இருந்தால் முதலாளிகளுக்குத் தொழிலாளிகளைத் தேடிக்கொடுக்கும் உத்தியோகம் (ஆளடிமை வியாபாரம்.)

இந்த வியாழன் 5-ம் இடத்திற்கு அதிபதியாகி 3, 6-ம் இடங்களில் சனியுடன் கூடினலும் நோக்கம்பெற்ருலும் தம் புத்திரரைப் பிறருக்கு ஏவல்வேலை செய்வித்து அதனல் வரும் கூலியை வாங்கும் முயற்சி. பிறர் தம்மிடம் வைத்துள்ள நம்பிக்கைக்குரிய பொருட்களையும் விக்கிரயஞ்செய்யும் முயற்சி.

வியாழன் 1, 5, 9-ம் இடங்களுக்கு அதிபதியாகி 4-ம் இடத்தில் சூரியனுடன் கூடியேனும் நோக்கம்பெற்றேனும் இருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் மங்கலப்பொருட்களாகிய குத்துவிளக்கு, நிறைநாழி, பணப்பெட்டி, பேழை (அலுமாரி), தெய்வங்களின் பிரதிமைப் படங்கள் முதலியன வியாபாரம் இவைகளே அதிக பொருத்த முடையன.

### 343. சுக்கிரனல் வரும் உத்தியோகங்கள்.

### (Occupations relating to Venus.)

**வினு:** சுக்கிரனல் ஏற்படும் உத்தியோகங்கள் எவை?

**விடை:** சுக்கிரன் 1, 4, 10-ம் இடங்களுக்கு அதிபதியாகி 4-ம் இடத்திலேனும் 10-ம் இடத்திலேனும் இருந்தால் கண்ணுடிப் பொருட்கள், மின்சாரக்கருவிகள், சங்கீதக் கருவிகள், வெள்ளி அலுமினியப் பாத்திரங்கள், கட்டில் மெத்தை தலையணைகள், அங்கிகள் (சட்டைகள்), உத்தரீயங்கள் இவைகளின் வியாபாரம்.

சுக்கிரன் 10-ம் இடத்தில் ஆட்சி உச்சம் ஆதியனவற்ருல் பலவானகி (சூரியனல் அஸ்தமனகதி அடையாமல்) இருந்தால் கல்யாணஞ்செய்துவைக்கும் (புரோக்கர்) முயற்சி, வெவ்வேருக இருக்கும் சதிபதிகளை ஒன்றுகூட்டிக் கூட்டுறவுசெய்துவைக்கும் முயற்சி, சங்கீதம் கற்பிக்கும் முயற்சி.

இந்தச் சுக்கிரன் புதனுடன் கூடியிருந்தால் நாகசுரம், புல்லாங்குழல் முதலிய சுவாசவாத்தியத்தினல் ஜீவித்தல்.

இந்தச் சுக்கிரன் சூரியனுடன் கூடியிருந்தால் வீணை (பிடில், ஹார்மோனியம்) முதலியன ஒலித்தலால் ஜீவனம்.

இந்தச் சுக்கிரன் சூரியன் இராகுகேதுக்களுடன் கூடியிருந்தால் மிருதங்கம் பேரி தபேலா ஒத்து முதலிய தோல்வாத்தியம் துளைவாத்தியங்களைக் கோஷிக்கும் முயற்சி.

இந்தச் சுக்கிரன் சனியுடன் கூடியேனும் நோக்கம்பெற்றேனும் இருந்தால் தூரசிரவணயந்திரம் (ரேடியோ), யந்திரவாத்தியம் (கிராமபோன்) முதலிய கருவிகள் மூலம் பேசும் அல்லது பாடும் முயற்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயலக்கினாதிபன் 2-ம் இடத்தில் நீசனாக இருக்க, 10-ம் இடத்ததிபன் 8, 11-ம் இடங்களிலிருக்க, சுக்கிரன் 10-ம் இடத்தில் நீசனாக இருந்தாலும்; இலக்கினாதிபன் 9-ம் இடத்திலும், 7-ம் இடத்ததிபன் 11-ம் இடத்திலும், 10-ம் இடத்ததிபன் 12-ம் இடத்திலும் நீசர்களாக இருந்தாலும் தாசிகளுக்குப் புருஷர்களைக் கூட்டிவைத்தல், அவர்களுக்குரிய குற்றேவல்கள் புரிதல், மனைவியர் மூலம் பொருள்லாபம் பெறுதல், குடும்பக்குழப்பம் செய்தல், அன்னியப் பெண்களால் பொருட்பேறு அடைதல்.

சுக்கிரன் 2-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருக்க, இலக்கினாதிபதியும் பலவீனனாக இருந்தால் பொய்யை மெய்யாக்கி வாதிக்கும் முயற்சி

சுக்கிரன் 10-ம் இடத்திற்கு அதிபதியாகி 6-ம் இடத்தில் இலக்கினாதிபனோடு கூடியிருந்தால் பெண்களுடன் கலகமிடுதல், வழக்காடுதல்.

சுக்கிரன் 10-ம் இடத்தில் புதன் கேது இருவருடன் கூடியிருந்தால் நூதன சித்திரவேலை புரிதல்.

சுக்கிரன் 10-ம் இடத்தில் சனிஇராகுகேதுக்களுடன் கூடியிருந்தால் இரும்பு கண்ணாடி சம்பந்தமான கடிகாரம் (Clock), திசையறிகருவி (Compass), உஷ்ணமறிகருவி (Thermometer), மழையறிகருவி (Barometer), மின்சாரவிளக்குகள் (Electric Bulbs) முதலிய பொருட்களை வியாபாரம் செய்தல், இவைகளைத் திருத்தும் (Repairing) தொழில் ஆகிய இவைகளே அதிக பொருத்தமுடையன.

## 344. சனியினால் வரும் உத்தியோகங்கள்.

## (Occupations relating to Saturn.)

**வின:** சனியினால் ஏற்படும் உத்தியோகங்கள் எவை?

**விடை:** சனி 4-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்திலிருந்தாலும், 10-ம் இடத்திற்கு அதிபதியாகி 4-ம் இடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் இரும்புயந்திரங்களை இயக்குதல், இரும்புவாகனங்களை (Motor Cars, Lorries, Railway trains) ஓட்டுதல், இரும்பு யந்திரங்களை விற்றல், வாங்கல், திருத்தல், இவைகளுக்கு அதிபர்களாக இருத்தல், காரீயம், நாகம், மோட்டோர்தைலம் (Petrol), மண் தைலம் (Kerosine oil), மினுக்கும் தைலம் (Lubrication oil), அன்னியதேச மருந்துவகை தைலவகை முதலியன வியாபாரம் (Chemists and Druggists), கறுப்புநிறமான தானியம் துணிமணிகள் வியாபாரம்.

சனி பலவீனனாக, இலக்கினபனும் சராசிகளாம் மேட கர்க் கடக துலா மகர இராசிகள் 4, 10-ம் இடங்களாக அவைகளில் இருந்தால் அன்னியதேசங்களில் அன்னியஜாதிப் பிரபுவுக்குக் கீழ் இருந்து உத்தியோகம் செய்தல்.

1, 5, 10-ம் இடங்களுக்கு அதிபர் பலவீனராக, சனி 10-ம் இடத்திற்கு அதிபனாக எங்கே இருந்தாலும் சேவகத்தொழில்.

இந்த விதமாக சனி 3-ம் இடத்தில் இருந்தால் சகோதரரின் கீழ் சேவகவேலை. 4-ம் இடத்திலிருந்தால் வியாபாரநிலையத்தில் சேவகமுயற்சி. 5-ம் இடத்திலிருந்தால் புத்திரரின் கீழ் சேவகமுயற்சி. 6-ம் இடத்திலிருந்தால் நீதிமன்றங்களில் சேவக உத்தியோகம். 7-ம் இடத்திலிருந்தால் மனைவிக்கு அல்லது மனைவி வர்க்கத்தாருக்குக் கீழ் சேவகவேலை. 8-ம் இடத்தில் இருந்தால் வைத்தியசாலைகளில் சேவகத்தொழில். 9-ம் இடத்தில் இருந்தால் தேவாலயங்களில் சேவகவேலை. 10-ம் இடத்திலிருந்தால் ஊரூராகத் திரிந்து சேவகத்தொழில் செய்தல். 11-ம் இடத்திலிருந்தால் அரசிறைவருமானநிலையங்களில் சேவகத்தொழில். 12-ம் இடத்தில் இருந்தால் தந்தி தபால் புகைரதப் போக்குவரத்து நிலையங்களில் சேவக உத்தியோகம்.

4, 10-ம் இடங்களுக்கு அதிபதியான சனி (10-ம் இடத்தில் ஒருவரும் இல்லாதிருக்க) 3, 6, 8, 11-ம் இடங்களில் புதனுடன் இருந்தால் அல்லது புதனின் நோக்கம் பெற்றால் கணக்கு எழுதும் உத்தியோகம் இவைகளே அதிக பொருத்தமுடையன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 345. இராகுவினால் வரும் உத்தியோகங்கள்.

## (Occupations relating to Rahu.)

வினா: இராகுவினால் ஏற்படும் உத்தியோகங்கள் எவை?

விடை: இராகு 4, 10-ம் இடங்களில் இருந்தால் புகையிலை (சுருட்டு, மூக்குத்தூள்) வியாபாரம். அவ்வாறு 4, 10-ம் இடங்கள் மேடம் இடபம் கர்க்கடகம் கன்னி விருச்சிகம் மகரம் மீனம் ஆகிய இராசிகளாக அமைய அவைகளில் இருந்தால் பெரிய புகையிலைத் தொழிற்சாலைகளுக்கு அதிபதியாக இருத்தல், அன்னியதேசப் பொருள்வியாபார நிலையங்களுக்கு அதிபதியாக இருக்கும் உத்தி யோகம்.

இந்த இராகு, 10-ம் இடத்திலிருக்கும் சூரியனுடனே 10-ம் இடத்துக்கு அதிபனாக இருக்கும் சூரியனுடனே சம்பந்தம் பெற்றால் மதுபரிபாலனம், வனபரிபாலனம், வாகனபரிபாலனம் ஆதியாய இடங்களில் வேலை.

இந்த இராகுவுடன் மேற்கூறியவாறாகச் சந்திரன் சம்பந்த மானால் கமத்தொழில்நிலையங்களில், கப்பல்களில், துறைமுகநிலையங்களில் உத்தியோகம்.

இவ்விராகுவுக்கு மேற்கூறியவாறு செவ்வாயின் சம்பந்தமிருந்தால் பூமி அளப்பனவு நிலையம் (Survey Office), பொதுவேலைப் பகுதி (P. W. D.) களில் உத்தியோகம்.

இந்த இராகுவுடன் புதன் மேற்சொல்லியவாறு சம்பந்தமானால் கணிதவேலை, சித்திரவேலைப் பகுதிகளில் வேலை.

இந்த இராகுவுடன் வியாழன் இவ்வாறு சம்பந்தமானால் தேவாலயங்களில் உத்தியோகம்.

இந்த இராகுவுடன் சுக்கிரன் இவ்வாறு சம்பந்தமானால் வியாபார நிலையங்களில் வேலை.

இந்த இராகுவுடன் சனி இவ்வாறு சம்பந்தமானால் இரும்புத் தொழில், புகையிலைத்தொழில், அன்னியதேசப் பொருள் வியாபார நிலையங்களில் கருமம்புரிதல் இவைகளே அதிக பொருத்தமுடையன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 346. கேதுவினல் வரும் உத்தியோகங்கள்.

## (Occupations relating to Kethu.)

**வினு:** கேதுவினல் வரும் உத்தியோகங்கள் எவை?

**விடை:** கேது 4, 10-ம் இடங்களில் இருந்தால் நூதனப் பொருட்கள் வியாபாரம், கணிதமுயற்சி, சித்திரவேலே புரிதல்.

இவ்வாறு கேது சூரியனுடன் கூடியிருந்தால் அரசியற்பகுதிகளில் கணக்குவேலே, சிற்பவேலே.

இக் கேது சந்திரனுடன் கூடினல் கமத்தொழிற்பகுதி, கடல் கப்பல் துறைமுக நிலேயங்களில் எழுத்துமுயற்சி, சித்திரவேலே.

இக் கேதுவுடன் செவ்வாய் சம்பந்தமானல் நீதிநிலேயங்களில் எழுத்து முயற்சி.

இக் கேது புதனுடன் கூடியிருந்தால் வித்தியாசாலேகளில் கணிதம், எழுத்து, சித்திரம் ஆகியவை கற்பிக்கும் முயற்சி.

இக் கேது வியாழனுடன் கூடினல் தேவாலயங்களில் கணக்கு எழுதும் முயற்சி.

இக் கேது வெள்ளியுடன் கூடினல் வியாபாரத்தலங்களில் எழுத்தாளர் பதவி.

இக் கேது சனியுடன் கூடினல் அன்னியதேசப்பொருள் வர்த்தக நிலேயங்களில் எழுத்தாளர்வேலே இவைகளே அதிக பொருத்தமுடையன.

## 347. தம்மை அலங்கரிக்கும் முயற்சியை உடையவர்.

## (Those who merely eat, dress and ride merrily.)

**வினு:** சிலர் மற்றோர் முயற்சியும் பார்க்க மனமில்லாதவராய் பல விசித்திராலங்காரமான ஆடை ஆபரணங்களால் தம்மை அலங்கரித்துக்கொண்டு, அறுசுவை உண்டி அருந்தி, நூதன மோட்டோர் வண்டிகளில் உல்லாசமாகப் பவனிவருகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | செவ்வா |
| 5 | தம்மைச் சிறப்பிப்பவர் | | கேது |
| ராகு | | | வியாழ |
| 3 | 2 | ல சந்திர சுக் சனி | சூரியன் புதன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: உதயலக்கினத்தில் ஆட்சிபுரியும் அதிபனுடன் முயற்சித்தானதிபதியும் சுகத்தானதிபதியும் (4-ம் இடத்தவனும்) கூடியிருக்கப் பிறந்தவர் வேறோர் முயற்சிக்கும் உரிமையில்லாதவராய்த் தம்மைச் சிறப்பிக்கும் முயற்சியையே பார்த்துவருவர்.

## 348. என்றும் பிறரை ஏமாற்றிச் சீவிப்பவர்.

(Those who live by cheating others.)

வினா: சிலர் தினமும் பிறரை நயவஞ்சகத்தினால் ஏமாற்றி, அவருடைய பொருளை அபகரித்து, அவருக்கு நம்பிக்கைத் துரோகஞ் செய்தலையே தம் சொந்த முயற்சியாகப் பார்த்துவருகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | கேது | 8 |
| 4 | பிறரை ஏமாற்றுபவர் | | 9 |
| 3 | | | 10 |
| சுக்கிரன் | ல சூ செ பு வி சனி ரா | சந்திர | 11 |

விடை: உதயலக்கினதிபன் தன்னுடைய ஸ்தானத்தில் பூரண பலவானாக இருக்க, உதயலக்கினத்தில் 3, 5, 6, 10, 11-ம் இடங்களுக்கு அதிபர் இருக்கப் பிறந்தவர் பிறரைத் தினமும் ஏமாற்றி அவர்மூலம் சீவிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| வியாழ | ராகு | 10 | 11 |
| செவ்வா | நம்பிக்கைத் துரோகி | | 12 |
| 6 | | | ல |
| 5 | சூரியன் சந்திர புதன் | கேது | சுக்கிரன் சனி |

வாக்குத்தானத்தில் (2-ம் இடத்தில்) சனியேனும் சுக்கிரனேனும் இருந்தாலும் நோக்கினாலும், அல்லது வாக்குத்தானத்திற்கு இவ்விருவரில் ஒருவர் அதிபதியாக இருந்தாலும், புத்தித்தானதிபதியேனும் முயற்சித்தானதிபதியேனும் பகை நீசமாக வாக்குத்தானத்தில் இருந்தாலும் இதிற் பிறந்தவர் பிறரை வாய்ப்பேச்சினால் ஏமாற்றி அவர்மூலம் பொருளுதவி, சரீர உதவி, மன உதவி முதலியன பெற்றுக்கொண்டு, சீக்கிரத்தில் நன்றிமறப்பவராய் அவருக்குத் தீமையையே புரிபவராய் விளங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 349. மனமுயற்சி உடையவர்.

(The mental workers.)

**வினா:** சிலர் மனமுயற்சியிற் சிறந்தவராய் எல்லோருக்கும் புத்திபோதிக்கும் இயல்பினராய் (நியாயதுரந்தரர்களாக) இருப்பதற்குக் காரணம் என்ன?

**விடை:** வாக்குத்தானாதிபதியும் (2-ம் இடத்தவனும்) புத்தித்தானாதிபதியும் (5-ம் இடத்தவனும்) கூடி முயற்சித்தானத்தில் அமர, முயற்சித்தானாதிபதி வாக்குத்தானத்திலேனும் புத்தித்தானத்திலேனும் பரிவர்த்தனமாக இருந்தால் இங்கிலையிற் பிறந்தவர் மனமுயற்சியிலும் போதனாசக்தியிலும் மிக்கவராக விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| சந்திர சுக்கிரன் | சூரியன் புதன் | 12 | ல |
| செவ்வா ராகு | மனமுயற்சி உடையவர் | | வியாழ |
| 8 | | | கேது |
| 7 | 6 | சனி | 4 |

## 350. ஆசிரியர். (The teachers.)

**வினா:** சிலர் கல்விகற்பித்தல், பிரசங்கஞ்செய்தல், நியாயம் போதித்தல் முதலிய முயற்சிகளில் பிரசித்திபெற்றவராகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** வாக்குத்தானாதிபனும் (2-ம் இடத்தவனும்) முயற்சித்தானாதிபனும் கூடிப் புத குரு சுக்கிர சூரிய நவாம்சங்களில் இருந்தாலும், நவாம்சத்தில் புத்தித்தானாதிபதி (5-ம் இடத்தவன்) முயற்சித்தானத்திலும் முயற்சித்தானாதிபன் வாக்குத்தானத்திலும் இருந்தாலும், கிரகநிலைப்படி வாக்குத்தானாதிபதி கேந்திரதிரிகோணங்களில் (1, 4, 7, 10; 5, 9-ல்) இருக்க முயற்சித்தானாதிபதியும் புத்தித்தானாதிபதியுங் கூடி வாக்குத்தானத்தில் அமர்ந்தாலும், புத்தித்தானாதிபதி முயற்சித்தானத்தில் இருக்க

| | | | |
|---|---|---|---|
| சந்திர | 8 | 9 | செவ்வா |
| 6 | ஓர் பிரபல ஆசிரியர் | | கேது |
| ராகு | | | வியாழ |
| சுக்கிரன் | சூரியன் | புதன் சனி | ல |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சித்தானாதிபன் ஆட்சிபெற்ற வாக்குத்தானாதிபதி புதன் இவருடன் இருந்தாலும் இச்சமயத்திற் பிறந்தவர் கடல்மடை திறந்தாற்போற் பிரசங்கிக்கும் வாக்குச்சாதுரியமும், வாழைக்கனியில் ஊசி நுழைந்தாற்போல் மாணவர்க்குக் கல்வியூட்டும் வல்லபமும் மிக்கவராய் இவ்வித முயற்சியில் மேம்பட்டவராய் வாழ்வர்.

351. அதிகங் கற்றும் தொழிலின்றி அலைபவர்.

(Those who wander without work although they are much learned.)

வினா: சிலர் கல்விப்பகுதியில் உயர்தரக் கல்விகள் கற்று அவற்றிற்குரிய பரீக்ஷைகளில் விசேஷ சித்தியடைந்தும், அக் கல்விக்குத் தகுதிவாய்ந்த உத்தியோகம் ஒன்றும் கிடைக்கப்பெறாதவராய் (அல்லது கீழான உத்தியோகம் புரிபவராய்) வீணே தெருவீதிகளில் தினமும் தேம்பித்திரிகின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் கேது | 10 | சனி | 12 |
| செவ்வா சுக்கிரன் | அதிகம் கல்விகற்றும் ஒரு தொழிலும் இல்லாதவர் | | ல |
| சந்திர | | | வியாழ |
| 6 | 5 | 4 | ராகு |

விடை: கல்வித்தானாதிபதி (2-ம் இடத்துக்குரியவன்) முயற்சித்தானாதிபனுக்குப் பகைவனாகி முயற்சித்தானத்திற்கும் அதிபனுக்கும் தொடர்பில்லாமல் 1, 5, 9 இந்தத் தானங்களில் பலவானாக இருக்க, முயற்சித் தானாதிபன் மறைவுத்தானங்களில் (3, 6, 8-ம் இடங்களில்) பலவீனனாக இருக்கப் பிறந்தவர் உயர்தரக் கல்வி கற்றும் அதற்குரிய உத்தியோகம் கிடைக்கப்பெறாதவராய் (அல்லது தாழ்ந்த உத்தியோகமுடையவராய்) ஒரு முயற்சியும் பார்க்க இயலாதவராய்த் திரிவர்.

352. அற்ப கல்வியுடன் அரிய பதவிகளை வகிப்பவர்.

(Those who occupy high positions although they are illiterate.)

வினா: சிலர் கல்விப்பகுதியில் அதிகம் குறைவுடையவராக இருந்தும், மிகச் சிறந்த பெரிய உத்தியோகங்களை வகிக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: கல்வித்தானாதிபதி 3, 6, 8 இந்த இடங்களில் நீச வக்கிராஸ்தமனகதி முதலியவற்றால் பலங்குன்றியிருக்க, புத்தித்தானாதிபதியும் முயற்சித்தானாதிபதியும் கூடித் திரிகோணகேந்திரங்களில் பூரணபலவான்களாக இருக்கப் பிறந்தவர் அற்பமான கல்வியுடையவராயினும் புத்திசாதுரிய அனுபவத்தில் மேம்பட்டவராய், பெரிதான உத்தியோகங்களில் தலைமைபெற்று விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| ல | 2 | 3 | 4 |
| ராகு | குறைந்த கல்வியுடன் உயர்ந்த உத்தியோகம் புரிபவர் | | சந்திர வியாழ |
| 11 | | | சூரியன் செவ்புத கேது |
| 10 | 9 | சுக்கிரன் சனி | 7 |

## 353. தேநீர் சிற்றுண்டி போசன வியாபாரிகள்.

## (The hotel-keepers.)

வினா: சிலர் சிற்றுண்டி, தேநீர் (காப்பி, இட்டலி, தோசை) முதலிய வியாபாரஞ்செய்தும் செய்வித்தும், சோறு கறிகள் சமைத்து விற்கும் சிற்றுண்டிச்சாலை, போசனசாலை இவற்றின் அதிபராக விளங்குகின்றனர். இது எதனால்?

விடை: போசனத்தானாதிபதி (2-ம் இடத்ததிபன்) 4-ம் இடத்தில் இருக்க, வியாபாரத்தானாதிபதி (4-ம் இடத்ததிபன்) சந்திரனுடன் 10-ம் இடத்தில் இருந்தாலும், 4-ம் இடத்தில் சந்திரன் இருந்து 10-ம் இடத்தில் இருக்கும் சூரியனை நோக்கினாலும், 2, 4-ம் இடத்ததிபர் எவரேனும் நீசராகி 10-ம் இடத்தில் இருந்தாலும், 10-ம் இடத்ததிபன் 3, 6, 8, 11-ம் இடங்களில் இருக்க, 10-ம் இடத்தில் நீசக்கிரகம் இருந்தாலும், நவாம்சத்தில் இவ்வகை இருந்தாலும், இந்நிலைமையில் உதித்தவர்க்குப் போசனவியாபாரமே அதிக பொருத்தமுடையதாகும்.

| | | | |
|---|---|---|---|
| சனி | 3 | 4 | ராகு |
| ல | ஓர் போசன வியாபாரி | | 6 |
| 12 | | | வியாழ |
| கேது | சந்திர | சூரியன் | செவ்வா புதன் சுக்கிரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

354. இரகசியப் பரிசோதகர். (The detectives.)

வினா: சிலர் இரகசியமான விஷயங்களை அறிவதில் (துப்பறிவதில்) அதிக சமர்த்தராக இருப்பதற்கு நியாயம் என்ன?

விடை: உதயலக்கினாதிபதியும் வீரியத்தானாதிபதியும் (3-ம் இடத்தவனும்) கூடி முயற்சித்தானத்தில் அமர, புத்திக்தானாதிபன் (5-ம் இடத்தவன்) அல்லது முயற்சித்தானாதிபன் 3-ம் இடத்தில் இருக்கப் பிறந்தவர் அந்தரங்கமான காரியங்களை அறிவதில் திறமையுடையவராக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| கேது | 7 | சனி | சூரியன் புதன் |
| 5 | அந்தரங்க முயற்சிகளில் அதிக திறமை உடையவர் | | வியாழ சுக்கிரன் |
| 4 | | | செவ்வா |
| சந்திர | 2 | ல | ராகு |

355. வாகனத் தொழிலாளர்.

(Those who keep vehicles for hire.)

வினா: சிலர் மாடு, குதிரை, ஒட்டகம் முதலிய மிருகங்களை வாங்கியும் விற்றும், சிலர் மிருகங்களால் இழுக்கப்படும் வண்டிகளைச் செலுத்தியும் விற்றும் இவ்விதமான வாகனத் தொழிலினால் சீவனஞ் செய்கின்றனர். இதற்குக் காரணம் யாது?

விடை: முயற்சித்தானாதிபதி வாகனத்தானத்தில் (4-ம் இடத்தில்) அத்தானாதிபனுடன் கூடிப் பலவானாக இருந்தாலும், வாகனத்தானத்தில் செவ்வாய் சேராமல் முயற்சிநாதன் பலவானாக இருந்தாலும் இதிற் பிறந்தவர் வாகனங்கள் மூலம் சீவிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| ல | 2 | 3 | புதன் வியாழ |
| ராகு | வாகனத் தொழில் புரிபவர் | | சூரியன் சந்திர |
| 11 | | | செவ்வா சுக்கிரன் கேது |
| 10 | 9 | சனி | 7 |

356. இயந்திரவாகனத்தொழிலாளர்.(The automobile traders.)

வினா: சிலர் இரும்புவாகனங்களை இயற்றியும், வாடகைக்கு விட்டும், திருத்தியும், செலுத்தியும் இவைகள் மூலம் ஜீவிக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: வாகனத் தானாதிபதி சனியாகி முயற்சித்தானத்தில் பலமேறியிருக்க, முயற்சித்தானாதிபதி வாகனத்தானத்தில் இருந்தாலும் நோக்கினாலும் இதிற் பிறந்தவர் இரும்புவாகனங்களை (மோட்டார்வண்டி, றெயில்வண்டி, மோட்டார்சைக்கிள், றிக்ஷோ வண்டி, டிராம்வண்டி முதலிய இரும்பினாலான வாகனங்களை) இயற்றவும், இயற்றுவிக்கவும், செலுத்தவும், திருத்தஞ்செய்யவும், வாடகைக்குவிடவும் வல்லவராய் இவ்வாறான முயற்சிகளையே தினமுஞ் செய்து ஜீவிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | வியாழ | 8 | கேது |
| 5 | இரும்பு வாகனத்தாற் பெருஞ் செல்வரானவர் | | சனி |
| சந்திர | | | 11 |
| செவ்வா ராகு | சூரியன் புதன் | ல சுக்கிரன் | 12 |

### 357. நீர்ப்பாய்ச்சற்பகுதி உத்தியோகத்தர்.
### (Irrigation Engineers.)

வினா: சிலர் அரசாங்கத்தில் நீர்ப்பாய்ச்சற் பகுதியில் தலைமைத் தொழிலாளராக இருந்து சீவிக்கின்றனர். இது எதனால்?

விடை: சந்திரன் சனி இருவருள் எவரேனும் ஒருவர் 1, 4-ம் இடங்களுக்கு அதிபராகி 10-ம் இடத்தில் இருந்து மற்றவரை நோக்கினாலும், சந்திரன் சனி 4-ம் இடத்தில் இருந்து 10-ம் இடத்தில் இருக்கும் சூரியனை நோக்கினாலும், நவாம்சத்தில் இவ்வகை இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் நீர்ப்பாய்ச்சற்பகுதியில் தலைமை உத்தியோகம் புரிவதற்கே தகுதியுடையவராவர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | செவ்வா |
| 5 | நீர்ப்பாய்ச்சற் பகுதி உத்தியோகத்தர் | | சந்திர கேது |
| ராகு | | | வியாழ |
| சுக்கிரன் | சூரியன் புதன் | ல சனி | 12 |

### 358. இராணுவப்பகுதிக் கட்டிடம் அமைப்பவர்.
### (Military and Naval Engineers.)

வினா: சிலர் போர்த்தொழில் செய்வோர்க்குப் பொருத்தமான வீதிகள், வீடுகள், ஆயுதச்சாலைகள், அக்கினிக்குண்டுகள் பொதிந்துவைக்கும் நிலையங்கள், ஆகாயவிமான நிலையங்கள், அகழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், சுரங்கவீடுகள் ஆகிய இவைகளை அமைக்கும் உத்தியோகத்தை உடையவராக விளங்குகின்றனர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| 3 | சந்திர | 5 | 6 |
| ராகு | இராணுவ எஞ்சினியர் | | வியாழ |
| ல | | | கேது |
| 12 | 11 | சூரியன் செவ்வா சனி | புதன் சுக்கிரன் |

விடை: 4-ம் இடத்ததிபன் சனி செவ்வாய் இவர்கள் கூடி 10-ம் இடத்தில் இருந்தாலும், 10-ம் இடத்தில் இருக்கும் செவ்வாயை முற்கூறிய இருவரும் நோக்கினாலும், 10-ம் இடத்தில் இருக்கும் சனிசூரியரை 4-ம் இடத்திற்கு அதிபனும் செவ்வாயும் கூடினாலும் நோக்கினாலும், இவ்வகை நவாம்சத்தில் இருப்பினும் இதிற் பிறந்தோர் யுத்தவீரர்களுக்கு உரிய கட்டிடங்களை அமைக்கும் உத்தியோகத்தராகத் தோன்றுவர்.

359. அரசாங்கத்தில் கட்டிடம் அமைப்பவர். (Civil Engineers.)

வினா: சிலர் அரசாங்கத்தில் நகரங்கள், மாடமாளிகைகள், அடுக்குமேல்மாடி, உப்பரிகை, நிலாமுற்றம், பாலங்கள், அணைக்கட்டுகள், வாய்க்கால்கள், துறைமுகங்கள் முதலான கட்டிடங்களை அமைப்பதையே தொழிலாக உடையர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| ல | கேது | 3 | 4 |
| 12 | அரசாங்க எஞ்சினியர் | | 5 |
| செவ்வா சுக்கிரன் | | | சந்திர |
| சூரி புத வியாழ சனி | 9 | ராகு | 7 |

விடை: 10-ம் இடத்தில் சூரியன் வியாழன் சனி இவர்கள் கூடிப் பலவான்களாக இருந்தாலும், 4-ம் இடத்ததிபதி சனி வியாழன் இவர்கள் 10-ம் இடத்தில் இருக்கும் சூரியனை நோக்கினாலும், 4-ம் இடத்ததிபதி சூரியன் சனி 10-ம் இடத்திற் பலவானாக இருக்கும் வியாழனைப் பார்த்தாலும், 4-ம் இடத்ததிபன் பலவானாக இருந்து 10-ம் இடத்தில் இருக்கும் சூரியனை வியாழனை அல்லது சனியை நோக்கினாலும், நவாம்சத்தில் இவ்வகை இருப்பினும் இந்நிலைமையில் உதித்தவர் மேற்கூறிய உத்தியோகத்திற்கே பொருத்தம் உடையர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 360. தெருவீதி, புகைரதவீதி அமைக்கும் உத்தியோகத்தர்.
## (Railway Engineers.)

**வினு:** சிலர் அரசாங்கத்தில் பகிரங்கத் தெருவீதி, புகைரத வீதிகளைச் சிருட்டிக்கும் தொழிலாற் சீவிக்கின்றனர். இது எதனுல்?

**விடை:** 4-ம் இடத்ததிபனும் சனியும் சூரியனும் கூடி 10-ம் இடத்தில் இருந்தாலும், 10-ம் இடத்தில் இருக்கும் சூரியனை 4-ம் இடத்ததிபன் சனி இவ்விருவருள் எவரேனும் நோக்கினுலும், இந்நிலையிற் பிறந்தவர் தெருவீதிகளை அமைக்கும் தொழிலுக்கே தகுதி உடையவர்.

| | | | |
|---|---|---|---|
| வியாழ கேது | 7 | சந்திர | 9 |
| 5 | புகைரதவீதி உத்தியோகத்தர் | | சூரியன் புதன் |
| சனி | | | சுக்கிரன் |
| 3 | 2 | ல | செவ்வா ராகு |

## 361. எண்ணெய் வியாபாரிகள்.
## (Oilmongers.)

**வினு:** சிலர் எண்ணெய், தேங்காய்நெய், வேப்பம்நெய், இருப்பைநெய், ஆமணக்குநெய், கடலைநெய் முதலான மரவித்துக்களின் நெய், மண்ணெண்ணெய் முதலியவைகளை விற்றுச் சீவனம் செய்வதற்குக் காரணம் யாது?

**விடை:** வியாபாரத்தானத்தில் (4-ம் இடத்தில்) சனி செவ்வாய் பூரணசந்திரன் பலவான்களாக இருந்தாலும், சனியாயினும் செவ்வாயாயினும் 4, 10-ம் இடங்களிற் பலமேறியிருக்க, 10-ம் இடத்திற்குப் பூரணசந்திரனின் சம்பந்தம் இருந்தாலும், பூரணசந்திரன் 4, 10-ம் இடங்களில் இருந்தா 4, 10-ம் இடங்களுக்குச் சனி செவ்வாய் இவர்களின் சம்பந்தம் இருந்தாலும் இந்நிலைமையில் உதித்தவர் எண்ணெய்வகைகளை விற்றுச் சீவனம் செய்வர்.

| | | | |
|---|---|---|---|
| வியாழ | 7 | 8 | 9 |
| சந்திர கேது | ஓர் பிரபல எண்ணெய் வியாபாரி | | 10 |
| சுக்கிரன் சனி | | | ராகு |
| புதன் | சூரியன் | ல | செவ்வா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 362. மந்திரிகள். (The ministers of state.)

**வினு:** சிலர் மந்திரிப் பதவிக்குத் தகுதி வாய்ந்தவராக இருப்பதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| சந்திர | 6 | 7 | 8 |
| செவ்வா சனி ராகு | ஓர் அரசாங்க மந்திரி | | 9 |
| 3 | | | சூரியன் கேது |
| வியாழ | ல | 12 | புதன் சுக்கிரன் |

**விடை:** சூரியன் 10, 12-ம் இடங்களில் ஆட்சி உச்சம் முதலியவைகளால் பலவானுகவும் உதயலக்கினுதிபன் தன்னுடைய ஸ்தானத்திலும் இருக்க, புத்தித்தானுதிபன் வாக்குத்தானத்திலும் வாக்குத்தானுதிபன் புத்தித்தானத்திலுமாக விடுமாறியிருந்தாலும்; சூரியன் முயற்சி கீர்த்தித் தானங்களிலும் வாக்குத்தானுதிபன் தன்னுடைய ஸ்தானத்திலும் இருக்க, இவரை 1, 5, 10-ம் இடங்களுக்கு அதிபர் நோக்கினுலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் அரசாங்க மந்திரியாய்க் கீர்த்தியுடன் வாழ்வர்.

### 363. சோதிடர்கள். (Astrologers and Palmists.)

**வினு:** சிலர் சோதிடசாஸ்திரத்தில் அதி மேதாவிகளாக விளங்குகின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| ல | 2 | 3 | ராகு |
| 12 | ஓர் சோதிட சாஸ்திர நிபுணர் | | சந்திர வியாழ |
| 11 | | | 6 |
| சனி கேது | செவ்வா | 8 | சூரியன் புதன் சுக்கிரன் |

**விடை:** புதன் நீச அஸ்தமன கதி அடையாமல் 1, 2, 4, 5, 7, 9, 10, 11-ம் இடங்களில் பலவானுக இருந்தாலும், உதயலக்கினுதிபதியாயினும் கருமத்தானுதிபன் (10-ம் இடத்தவன்) ஆயினும் புத்தித்தானத்தில் (5-ம் இடத்தில்) பூரணபலவானுக இருந்தாலும், புத்தித்தானுதிபதி தன்னுடைய ஸ்தானத்திலேயே பூரணபலவானுக இருந்து 1, 10-க்கு உரியவர்களால் நோக்கம்பெற்றாலும், நவாம்சத்தில் இவ்வகை இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் சோதிடசாஸ்திரத்தில் வல்லுனராக இருந்து அதன்மூலம் சீவிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 364. மாந்திரீகர். (The spritualists.)

வினா: சிலர் மந்திரசித்தி, மனோவசியம், யோகாப்பியாசம் முதலான முயற்சிகளில் முதன்மைபெற்றிருக்கின்றனர். இதற்கு நியாயம் என்ன?

விடை: வீரியத் தானாதிபதி (3-ம் இடத்தவன்) தனது இராசியில் பலவானாக இருக்க, முயற்சித் தானாதிபதி ஆட்சிபெற்ற புத்தித் தானாதிபனுடன் (5-ம் இடத்ததிபதியுடன்) கூடிப் பூரணபலவானாக இருக்க, இவ்வெல்லையிற் பிறந்தவர் எவரையும் வசீகரஞ்செய்யும் மனோசக்தியும், மந்திரசித்தியும், யோகாப்பியாசத்திறனும் உடையவராயிருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| ல செவ்வா | 2 | புதன் சுக்கிரன் | சூரியன் |
| ராகு | மனோசக்தி யோகசித்தி பெற்றவர் | | சந்திர வியாழ |
| 11 | | | கேது |
| 10 | 9 | சனி | 7 |

## 365. பைசாசப் பிரயோகங்களாற் சீவிப்பவர். (The sorcerers.)

வினா: சிலர் பைசாசப் பிரயோகங்களால் சீவிக்கின்றனர். இதற்கு நியாம் யாது?

விடை: சனி 3-ம் இடத்தில் இருக்க, செவ்வாய் ராகு இருதயத்தானத்தில் இருந்தாலும்; இருதயத்தானத்தில் நீசக்கிரகங்கள் இருக்க, சனி 3, 8-ம் இடங்களிலிருந்து நோக்கினாலும்; 1, 5, 10-ம் இடங்கட்கு அதிபர்கள் எவரேனும் நீசராக, இருதயத்தானத்தில் சனி செவ்வாய் ராகு இருந்தாலும்; நவாம்சத்தில் இவ்வகை இருந்தாலும் இதிற் பிறந்தவர் பில்லி, சூனியம் ஏட்படும் பைசாசப் பிரயோகங்களால் சீவிப்பர்.

## 366. கொடுந்தொழில் புரிபவர். (The robbers and the murderers)

வினா: சிலர் திருட்டுத்தொழில், கொலைத்தொழில் முதலிய கொடுந்தொழில்களிற் சிறந்தவராகத் தெரிபடுகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: இலக்கினாதிபதியும் முயற்சித்தானாதிபதியும் கூடிச் சத்துருத்தானத்தில் (6-ம் இடத்தில்) ஆட்சிபுரியும் தானாதிபதியுடன் கூடியிருக்கப் பிறந்தவர் மேற்கூறிய கொலை கொள்ளைகளில் பட்டயம் பெற்றவராகக் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| செவ்வா ராகு | 9 | 10 | 11 |
| 7 | பாபகர்மி | | சந்திர |
| சூரி புத சுக்கிரன் சனி | | | ல |
| 5 | வியாழ | 3 | கேது |

## 367. வழக்கினாற் சீவிப்பவர்.

## (The brokers of law-suits.)

வினா: சிலர் தம் இனசனத்தாருடன் அடிக்கடி சண்டையிடுதல், பொய்வழக்காடுதல், பிறருடைய வழக்குகளுக்கு நியாயவாதிகளைச் சேர்த்தல் முதலியவைகளில் திறமையுடையவராய் நீதிஸ்தலங்களிலேயே எந்நாளுந் தோற்றப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: சத்துருத் தானாதிபதி (6-ம் இடத்துக்கு அதிபதி) மித்துருத்தானத்திலும் மித்துருத்தானாதிபதி (4-ம் இடத்துக்கு அதிபதி) சத்துருத்தானத்திலும் பரிவர்த்தனமாயிருந்தாலும், சத்துருத்தானத்தில் இலக்கினாதிபதியும் முயற்சித்தானாதிபதியும் கூடிப் பலவான்களாக இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் அனுதினமும் பந்துமித்திராருடன் பகைமைபாராட்டி வியாச்சியந் தொடுத்தும் வழக்கோரஞ்சொல்லியும் நியாயத்தலங்கள்மூலஞ் சீவிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| சந்திர சுக்கிரன் | சூரியன் செவ்வா | புதன் வியாழ | 7 |
| 3 | வழக்கினாற் சீவிப்பவர் | | ராகு |
| கேது | | | 9 |
| ல சனி | 12 | 11 | 10 |

## 368. சிறைச்சாலை உத்தியோகத்தர்.

## (The prison officers.)

வினா: சிலர் சிறைச்சாலைமூலம் சீவனஞ் செய்கின்றர். இதற்கு நியாயம் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ல | ராகு | சந்திர | சுக்கிரன் |
| 12 | சிறைச்சாலை உத்தியோகம் புரிபவர் | | புதன் |
| 11 | | | சூரியன் வியாழ |
| சனி | செவ்வா | கேது | 7 |

**விடை:** இதற்கு நியாயம் 6-ம் பாவத்திற் கூறப்பட்டுள்ளது. ஆயினும், இலக்கினாதிபதியும் முயற்சித்தானாதிபதியும் சூரியனும் கூடிச் சிறைத்தானத்தில் (6-ம் இடத்தில்) அந்தத் தானாதிபதியுடன் கூடிப் பலவான்களாக இருந்தால் இக்கிலையிற் பிறந்தவர் சிறைச்சாலையில் உத்தியோகத்தொழில் செய்வர். (தற்காலம் ஜெயிலதிகாரி, உப அதிகாரி, பரிசோதகர், தலைவர் முதலிய பதவிகளை வகிப்பர்.)

## 369. பகைவரால் முயற்சிக்கேடடைபவர்.

## (Those who lose their occupations by their enemies.)

**வினா:** சிலர் பகைவர் மூலம் அடிக்கடி முயற்சிக்குழப்பம் உடையவராய்த் திரிகின்றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| ல ராகு | 2 | 3 | 4 |
| சுக்கிரன் | பகைவரால் முயற்சியை இழந்தவர் | | 5 |
| சனி | | | 6 |
| சூரியன் புதன் | 9 | செவ்வா வியாழ | சந்திர கேது |

**விடை:** சத்துருத்தானாதிபதி பூரணபலவானாகி முயற்சித்தானத்தில் இருக்க, முயற்சித்தானாதிபதி நீசவக்கிராஸ்தமனகதி அடைந்து 3, 6, 8, 12-ம் இடங்களில் இருக்கப் பிறந்தவர் சத்துருக்கள் மூலம் முயற்சியை இழப்பர்.

## 370. பெண்கள் சம்பந்தமான தொழில் புரிபவர்.

## (Those who do work connected with women.)

**வினா:** சிலர் தினமும் பெண்களுடன் சம்பாஷித்தல், அவர்களுடன் சரசசல்லாபமாய் இன்பம் சுகித்தல், அன்னவர்க்குப் பணிவிடை புரிதல் இவ்வகைளையே தம் சொந்தமுயற்சியாகப் பார்த்துவருகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | செவ்வா | சந்திர கேது |
| 3 | பெண்களிடம் தொழில் புரிபவர் | | 8 |
| 2 | | | சூரியன் புதன் |
| ல ராகு | சனி | 11 | வியாழ சுக்கிரன் |

விடை: இன்பத்தானாதிபதி (7-ம் இடத்தவன்) சுகத்தானத்திலேனும் பாக்கியத்தானத்திலேனும் (4-ம் இடத்தில் அல்லது 9-ம் இடத்தில்) இருக்க, முயற்சித்தானாதிபதி இன்பத்தானத்தில் இருக்க, முயற்சித்தானத்தில் நீசமடைந்த சுக்கிரன் அமர இவ்வாறான வேளைகளிற் பிறந்தவர் தினமும் பெண்கள்பகுதியிலேயே முயற்சி பார்ப்பவராக இருப்பர்.

## 371. நோயினால் முயற்சியை இழப்பவர்.

(Those who lose their occupation by illness.)

**வினா:** சிலர் நோய்காரணமாக அடிக்கடி தம் முயற்சியை இழப்பவராய் பாதிநாள் முயற்சியும் பாதிநாள் நோயுமாகத் திரிவதற்கு நியாயம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| 9 | சனி | வியாழ கேது | செவ்வா |
| சந்திர | நோயினால் முயற்சியை இழந்தவர் | | ல |
| 7 | | | 2 |
| 6 | ராகு | சூரியன் புதன் | சுக்கிரன் |

விடை: மிருத்துத்தானாதிபதி (8-ம் இடத்தவன்) முயற்சித்தானத்தில் பலவானாகவேனும் துர்ப்பலமாகவேனும் இருந்தாலும், உதயலக்கினத்தில் சனி இருந்தாலும், உதயலக்கினாதிபதி மிருத்துத்தானத்தில் இருந்தாலும் இந்நேரத்திற் பிறந்தவர் அடிக்கடி வியாதியாற் பிடிக்கப்பட்டவராய் அதுகாரணமாக முயற்சியை இழப்பவராவர்.

## 372. தேவாலய அதிபர்.

(The managers and trustees of Holy Places.)

**வினா:** சிலர் தேவாலயங்கள் மூலமாகவும், தேவாலயங்களில் தொழில்புரிந்தும் சீவனஞ் செய்கின்றனர். இது எதனால்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:** முயற்சித்தானாதிபதி நவாம்சத்தில் பாக்கியத்தானத்தில் (9-ம் இடத்தில்) சூரியன் புதன் குரு சுக்கிரன் இவர்களில் ஒருவர் அல்லது இருவர் அல்லது மூவருடன் கூடி இருந்தாலும், முயற்சித்தானாதிபதியுடன் பாக்கியநாதன் கூடியிருந்தாலும் பார்த்தாலும் இதிற் பிறந்தவர் தேவாலயங்களுக்கு அதிபராகவேனும் ஆசாரியராகவேனும் இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| கேது | 8 | சந்திர சனி | 10 |
| 6 | தேவாலய ஆசாரியர் | | 11 |
| சூரியன் செவ்வா | | | வியாழ |
| புதன் சுக்கிரன் | 3 | 2 | ல ராகு |

## 373. சக்கிரவர்த்திகள். (The Emperors.)

**வினா:** சிலர் சக்கிரவர்த்திகளாய் வருதற்குக் காரணம் யாது?

**விடை:** பாக்கியத்தானத்தில் வியாழன் ஆட்சி உச்சம் பெற்றிருக்க, அவ்வியாழனே 1, 4, 9, 10, 11-ம் இடங்கட்கு அதிபர் முழு நோக்கஞ் செலுத்தப் பிறந்தவர் சந்தேகமின்றிச் சக்கிரவர்த்திகளாக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | 7 | 8 |
| ராகு | சக்கிரவர்த்தி | | வியாழ |
| சூரியன் சந்திரன் புதன் | | | கேது |
| செவ்வா | ல சுக்கிரன் | சனி | 11 |

## 374. பிரபல உத்தியோகத்தர்.

## (The high government officers.)

**வினா:** உலகில் அரசாங்க உத்தியோகஸ்தர் அநேகர் இருந்தும் அவருட் சிலர் மாத்திரம் விசேஷ சித்தியுடையவராய் விளங்குகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** முயற்சித்தானத்திற்கும் சூரியனுக்கும் விசேஷ தொடர்புடையதான நேரத்தில் (இராசியில்) உதித்தவர்க்கே இராசாங்க உத்தியோகம் விசேஷ சுகத்தைக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சித்தானாதிபதி சூரியனாகிச் சூரிய நவாம்சத்தில் இருந்தாலும், சூரியன் முயற்சித்தானாதிபதியுடனேயும் பாக்கியத்தானாதிபதி அல்லது லாபத்தானாதிபதியுடனேயும் (9, 11-க்கு அதிபரோடும்) கூடிக திரிகோண கேந்திரங்களில் இருந்தாலும் இந்நிலையிற் பிறந்தவர் இராசாங்க உத்தியோகப்பகுதியில் பிரபலம்பெற்று விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | 7 | 8 |
| 4 | ஓர் பிரபல இராசாங்க உத்தியோகத்தர் | | சுக்கிரன் கேது |
| ராகு | | | சூரியன் சந்திரன் வியாழ |
| 2 | ல | சனி | செவ்வா புதன் |

## 375. மருந்து வியாபாரிகள்.

## (The chemists and the druggists.)

வினா: சிலர் மருந்துகள், விறகு, கொம்பு, தேன் முதலிய காட்டுப்பொருட்கள் விற்றல் வாங்கல் முதலிய முயற்சி செய்பவராகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் என்னையோ?

விடை: முயற்சித்தானாதிபதி சூரிய நவாம்சத்தில் இருந்தாலும், முயற்சித்தானத்தில் ராகு இருக்க அவ்விராகுவை வியாபாரத்தானத்தில் (4-ம் இடத்தில்) இருந்த சூரியன் நோக்கினாலும் இவ்வாறான நிலையிற் பிறந்தவர் மேற்கூறிய மருந்துப்பொருட்களை வியாபாரஞ் செய்பவராவர்.

| | | | |
|---|---|---|---|
| 11 | 12 | ல செவ்வா | 2 |
| ராகு | மருந்து வியாபாரி | | வியாழ |
| 9 | | | சூரி புத சுக்கிரன் கேது |
| 8 | 7 | சந்திர சனி | 5 |

## 376. மர வியாபாரிகள்.

## (The timber merchants.)

வினா: சிலர் காட்டிலுள்ள மரங்களைத் தறித்துக்கொணர்ந்து வியாபாரம் செய்து சீவிக்கின்றனர். இது எதனால்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: சூரியன் 4-ம் இடத்திற்கு அதிபதியாகி 10-ம் இடத்தில் இருந்தாலும், 10-ம் இடத்திற்கு அதிபதியாகி 4-ம் இடத்தில் இருந்தாலும், நவாம்சத்தில் இவ்வகை இருந்தாலும் இங்கிலையிற் பிறந்தவர்க்குக் காட்டுமர வியாபாரமே அதிக பொருத்தமுடையதாகும்.

| | | | |
|---|---|---|---|
| புதன் வியாழ சனி | 6 | செவ்வா | கேது |
| சூரியன் | ஓர் மரவியாபாரி | | 9 |
| சுக்கிரன் | | | 10 |
| ராகு | ல | சந்திர | 11 |

## 377. தோட்டமுயற்சியுடையவர்.

## (The gardeners.)

வினு: சிலர் தினமும் பூஞ்சோலைகளை வளர்ப்பவராய்ப் பல வேறுவகைத்தான பயிர்த்தொழில் புரிபவராய் இருப்பதற்கு நியாயம் என்ன?

விடை: முயற்சித்தானதிபதி பூரணசந்திர நவாம்சத்தில் இருந்தாலும், முயற்சிநாதன் ஆட்சிப்பெற்ற பூரணசந்திரனுகி இருந்தாலும், முயற்சித்தலைவன் சந்திரனுகிச் சுக்கிரன்வீட்டில் இருந்தாலும் இதிற் பிறந்தவர் சிங்காரமான பல பூந்தோட்டங்களுக்குத் தலைவர்களாய்ப் பலவிதமான பயிர் வகைகளும் பலிதம் அடைபவராய் விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | 9 |
| ராகு | பூந்தோட்டத் தொழிலாளி | | சந்திர வியாழ |
| சூரியன் புதன் | | | கேது |
| செவ்வா சுக்கிரன் | 2 | ல சனி | 12 |

## 378. பயிர்த்தொழிற்பகுதி உத்தியோகத்தர்.

## (The officers of the Department of Agriculture.)

வினு: சிலர் அரசாங்கத்தில் பயிர்த்தொழிற் பகுதியில் உயர்தர உத்தியோகங்களை வகித்து அதனுற் சீவிக்கின்றனர். இது எதனுல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: 10-ம் இடத்தில் இருக்கும் சூரியனைப் பூரணசந்திரன் நோக்கினலும், சூரியன் 4-ம் இடத்தில் பலவாஞக இருந்து 10-ம் இடத்தில் இருக்கும் பூரணசந்திரனை நோக்கினலும், பூரணசந்திரன் உதயலக்கினத்தில் இருக்க சூரியன் 10-ம் இடத்தில் இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் பயிர்த்தொழிற்பகுதியில் தலைமை உத்தியோகங்களுக்கே தகுதி உடையவர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் | சுக்கிரன் | செவ்வா | ல வியாழ |
| ராகு | பயிர்த்தொழிற் பகுதித் தலைமை உத்தியோகத்தர் | | 2 |
| 8 | | | கேது |
| 7 | 6 | சனி | சந்திர |

## 379. மரக்கல வியாபாரிகள்.

## (The sea-faring traders.)

விஞ: சிலர் பழவகை, இரசவகை வியாபாரத்திஞலும், வேறு சிலர் நீராவிக்கப்பல், மரக்கலம் முதலியவைகளைச் செலுத்தல், செலுத்துவித்தல், அவைகளை இயற்றி வாடகைக்குக் கொடுத்தல், சங்கு மீன் முத்து அப்பிரேகம் முதலிய கடல்படு திரவியங்களை வாங்கல் விற்றல ஆகிய இவ்வகையான வியாபாரத்திஞலும் விசேஷ பலன் அடைகின்றனர். இது எதனுல்?

விடை: சந்திர சுக்கிரர்கள் முயற்சித்தாஞதிபராகிச் சந்திர நவாம்சத்திற் பலவான்களாக இருந்தாலும், முயற்சித்தானத்திற் பூரணசந்திரன், சனி அல்லது சுக்கிரனுடன் கூடிப் பலமேறி இருந்தாலும் இவ்வாருன வேளையிற் பிறந்தவர் கடல் அல்லது நீர் சம்பந்தமான பொருட்களின் வர்த்தகத்தையே எந்நாளும் செய்பவராய் அதனுற் பெரும் பொருட்செல்வராக விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| 8 | கேது | சந்திர சனி | 11 |
| 7 | ஓர் பிரபல மரக்கல வியாபாரி | | செவ்வா வியாழ |
| 6 | | | ல |
| புதன் | சூரியன் சுக்கிரன் | ராகு | 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 380. பூமி வர்த்தகர்.
## (The planters and the landlords.)

**வினு:** சிலர் குறைந்த விலைக்குப் பூமிகளை வாங்கிச் சிறிது நாளில் அதிக விலைக்கு விற்பவராயும், அடிக்கடி காடுகள் மேடுகள் திருத்தி வீடுகள் கட்டுபவராயும், வயல்கள் தோட்டங்கள் அமைப்பவராயும் தங்கள் காலத்தைக் கழிக்கின்றனர். இதற்குக் காரணம் என்னையோ?

**விடை:** முயற்சித்தானதிபன் செவ்வாயின் நவாம்சத்தில் இருந்தாலும், செவ்வாய் பூமித்தானத்திலேனும் (4-ம் இடத்திலேனும்) முயற்சித்தானத்திலேனும் ஆட்சி உச்சமாக அமர்ந்தாலும் இவ்வாறான நிலைமையிற் பிறந்தவர் பூமிவிற்றல், வாங்கல், திருத்துதல் முதலிய பூமிசம்பந்தமான தொழில்களையே புரிவர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | சனி கேது | 8 | வியாழ |
| சூரியன் | பூமி வர்த்தகர் | | 10 |
| செவ்வா புதன் சுக்கிரன் | | | 11 |
| 3 | 2 | ல சந்திர ராகு | 12 |

## 381. மதுபான வியாபாரிகள்.
## (The liquor and wine merchants.)

**வினு:** சிலர் கள், கஞ்சா, அபின், சாராயம், பிராண்டி, உவிஸ்கி முதலான லாகிரிவஸ்துக்களை விற்பதே தங்களுக்குச் சதா முயற்சியாக நடத்திச் செல்வாராகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

**விடை:** முயற்சித்தானதிபதி செவ்வாய் அல்லது சனியின் அம்சத்தில் நீசனாகி இருந்தாலும், முயற்சித்தானதிபதி நீசனாகி எங்கேயாயினும் இருக்க இலக்கினாதிபதியாயினும் திரவிய பாக்கியத்தானதிபதியாயினும் (2, 9-க்கு அதிபர்) முயற்சித்தானத்தில் நீசமாக இருந்தாலும் இவ்வமைப்பில் உதித்தவர் மேற்கூறிய போதைப்பொருட்கள், மாமிசம் இவைகளை விற்றுச் சீவனஞ் செய்வர்.

| | | | |
|---|---|---|---|
| சூரிய சந் புதன் சுக்கிரன் | 11 | 12 | ல ராகு |
| 9 | மதுபான வர்த்தகர் | | 2 |
| வியாழ | | | சனி |
| கேது | செவ்வா | 5 | 4 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 382. பிரபல வியாபாரிகள்.

(The notable traders and the merchants.)

| | | | |
|---|---|---|---|
| ராகு | 4 | செவ்வா | வியாழ |
| சூரியன் புதன் சுக்கிரன் | பிரபல வியாபாரி | | 7 |
| ல | | | 8 |
| சந்திர | 11 | சனி | கேது |

**வினா:** சிலர் வியாபாரத்தொழிலின் விசேஷ சித்தி பெற்றவராகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** முயற்சித்தானதிபதி புதனுடைய நவாம்சத்திலேனும் திரவியத் தானத்திலேனும் (2-ம் இடத்திலேனும்) இருக்க, திரவியத் தானதிபதியும் உதய லக்கினதிபதியும் முயற்சித்தானத்தில் இருக்கப் பிறந்தவர் வியாபாரத் தொழிலில் முதன்மை பெற்றவராக விளங்குவர்.

## 383. சித்திரவேலைகாரர். (The artists and designers.)

**வினா:** சிலர் எழுத்துவேலை, சித்திரவேலை, சிற்பவேலை முதலிய தொழில்களிற் சிறந்து விளங்குகின்றனர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | ராகு | 5 |
| ல சந்திர | ஓர் நூதன சித்திரத் தொழிலாளி | | 6 |
| 12 | | | செவ்வா வியாழ |
| சனி | புதன் சுக்கிரன் கேது | சூரியன் | 8 |

**விடை:** முயற்சித்தானாதிபன் புத குரு சுக்கிர நவாம்சங்களிற் புதன் கேது இருவருடன் கூடி இருந்தாலும், முயற்சித்தானதிபன் கேந்திர திரிகோணங்களில் (1-4-7-10; 5-9) இவைகளிற் பலமேறியிருக்க, புத்தித்தானதிபதியும் (5-ம் இடத்தவனும்) புதனும் கேதுவும் முயற்சித் தானத்தில் அமர்ந்தாலும், புத்தித்தானதிபதியும் புதனும் கேதுவும் கூடி முயற்சித்தானதிபதியுடன் அந்தத்தானத்தில் பலவான்களாக இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் பொன் வெள்ளி செம்பு பித்தளை முதலிய உலோகங்களிலும், மரக் கல் காகிதம் திரைச்சீலை முதலிய பொருட்களிலும் சித்திரவேலை புரிபவராய், அதனாற் கீர்த்திமிக்கவராய்த் திகழ்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 384. இரத்தின நகை வியாபாரிகள்.
### (The jewellers and jem merchants.)

**வினு:** *சிலர் தங்கம், தங்கநாணயம், புஷ்பராகம் முதலான நவரத்தினம் இவற்ருலாகிய ஆபரணங்கள் இவைகளை விக்கிரயஞ் செய்து அதனுற் பெரும் தனவந்தராகின்றனர். இவ்வாறு இவருக்குக் கைகூடுவதற்குக் காரணம் யாதோ?*

| | | | |
|---|---|---|---|
| ல ராகு | செவ்வா | சூரியன் சுக்கிரன் சனி | புதன் |
| 12 | ஓர் இரத்தின வியாபாரி | | 5 |
| 11 | | | சந்திர |
| வியாழ | 9 | 8 | கேது |

**விடை:** *முயற்சித்தானுதிபன் (10-ம் இடத்தவன்) வியாழனுகித் தனது நவாம்சத்திலேனும் சுக்கிர நவாம்சத்திலேனும் இருந்தாலும், முயற்சிநாதன் வியாழனுகி ஆட்சி உச்சம் பெற்றுப் பலவானுக இருந்தாலும், முயற்சித்தானத்தில் இருந்த வியாழனைச் சுகத்தானத்தில் (4-ம் இடத்தில்) இருந்த சுக்கிரனுயினும் புதனுயினும் நோக்கினுலும் இவ்வாருன வேளையில் உதித்தவர் பொன்னுபரணங்கள் விற்றல், வாங்கல், ஈடு அடைவு பிடித்தல் முதலிய முயற்சிகளாற் பொருட்செல்வராவர்.*

### 385. தானியம் முதலிய பலபொருள் வியாபாரிகள்.
### (The grocers and the grain merchants.)

**வினு:** *சிலர் நெல் கோதுமை முதலிய தானியவகைகள், பல சரக்குகள், பிறதேசத்து நூதனப்பொருட்கள் இவைகளை வர்த்தகம் செய்கின்றனர். இதற்கு நியாயம் என்ன?*

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ்வா | 9 | வியாழ |
| 6 | தானிய வியாபாரி | | 11 |
| 5 | | | 12 |
| சூரிய சந் புதன் சுக்கிரன் | 3 | சனி | ல கேது |

**விடை:** *இலக்கினுதிபதியும் முயற்சித்தானுதிபதியும் வியாழன் சுக்கிரன் இவர்களது நவாம்சத்தில் அமர்ந்தாலும், முயற்சித்தானுதிபதி புத குரு சுக்கிரர்களாகிச் சுகத்தானத்தில் இருந்தாலும், முயற்சிநாதன் சுகத்தானத்திலும் சுகத்தானுதிபன் முயற்சித்தானத்திலுமாகவிருந்து, பாக்கிய லாபத்தானுதிபரோடு (9, 11-க்கு அதிப*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோடு) கூடிப் பலவான்களாக இருந்தாலும் இந்த நேரத்திற் பிறந்தவர் தானியப்பொதிகள், சரக்குப்பொதிகள் இவைகளை விற்றுத் திரவியவான்களாகத் திகழ்வர்.

### 386. பட்டு புடைவை வியாபாரிகள்.

### (The cloth and silk merchants.)

வினா: சிலர் பட்டுப்புடைவைகள், பீதாம்பரங்கள் முதலிய வஸ்திரப்பொதிகளை விற்றுச் செல்வராகின்றனர். இவர்க்கு இத்தொழில் அமைதற்கு நியாயம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | 5 | கேது |
| 2 | பட்டுவஸ்திர வியாபாரி | | சந்திர செவ்வா |
| ல | | | 8 |
| ராகு | புதன் சுக்கிரன் சனி | சூரியன் வியாழ | 9 |

விடை: பாக்கியத்தானாதிபதியும் முயற்சித்தானாதிபதியும் புத குரு சுக்கிர நவாமசங்களில் பூரண பலவான்களாக இருந்தாலும், பாக்கியநாதனும் முயற்சிநாதனும் கூடி லாபத்தானத்தில் (11-ம் இடத்தில்) வீற்றிருந்தாலும், கருமத்தானாதிபன் (10-ம் இடத்தவன்) திரவியத்தானாதிபதியுடன் கூடித் தருமத்தானத்தில் (9-ம் இடத்தில்) இருக்க, தருமத்தானாதிபன் கருமத்தானத்தில் (10-ம் இடத்தில்) பலமேறியிருந்தாலும் இவ்வேளையிற் பிறந்தவர் பட்டுப்பீதாம்பர வஸ்திர வியாபாரத்தினாற் பணம் சம்பாதிப்பர்.

### 387. வெள்ளிப் பாத்திரங்கள், அலுமினியக் கருவி, மின்சாரக்கருவி, சங்கீதக் கருவி, கண்ணாடிக் கருவி வியாபாரிகள்.

### (Dealers in silver and aluminium wares, electrical goods, musical instruments and glass wares.)

வினா: சிலர் வெள்ளிப்பாத்திரங்கள் அலுமினியக் கருவி முதலியவற்றை வியாபாரஞ் செய்து சீவிக்கின்றனர். இது எதனால்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சனி | சந்திர | சூரி புத சுக்கிரன் ராகு | 5 |
| ல செவ்வா | மின்சாரக் கருவிகள் விற்பவர் | | 6 |
| 12 | | | வியாழ |
| 11 | கேது | 9 | 8 |

**விடை:** சூரியனும் சுக்கிரனும் கூடி 4-ம் இடத்திலேனும் 10-ம் இடத்திலேனும் இருந்தாலும், சூரிய சுக்கிரர் 4, 10-ம் இடங்களுக்கு அதிபராகித் திரிகோண கேந்திரங்களில் இருந்தாலும், இவ்வகையாக நவாம்சத்தில் இருந்தாலும், இந்நிலைமையில் உதித்தவர் மேற்சுட்டிய பொருட்களின் வியாபாரங்களுக்கே அதிக பொருத்தம் உடையர்.

## 388. நாடகத்தொழிலாற் சீவிப்பவர்.

## (The dramatic and cinema actors.)

**வினா:** சிலர் நாடகங்கள் நடித்துப் பணம் சம்பாதித்துச் சீவிக்கின்றனர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | செவ்வா | 12 | ல ராகு |
| சூரியன் புதன் சனி | ஓர் நாடகத் தொழிலாளி | | வியாழ |
| 8 | | | 3 |
| கேது | 6 | 5 | சந்திர |

**விடை:** வாக்குத்தானாதிபதி (2-ம் இடத்ததிபன்) 4, 7-ம் இடங்களில் இருக்க, கர்மத்தானாதிபதி சுக்கிரனாகிக் கேந்திரங்களில் இருந்தாலும், 10-ம் இடத்தில் சுக்கிரன் பலவானாக இருக்க, வாக்குத்தானாதிபதி அந்தச் சுக்கிரனைச் சேர்ந்தாலும் நோக்கினாலும், 5-ம் இடத்ததிபதியும் கேதுவும் கூடிப் 10-ம் இடத்தில் இருக்க, 10-ம் இடத்ததிபன் சனிசெவ்வாய் சம்பந்தமின்றி 4, 7, 11, 12-ம் இடங்களில் இருந்தாலும் இந்த நிலைமையிற் பிறந்தவர் நாடகம் நடித்துச் சீவித்தலுக்கே தகுதியுடையவராவர்.

## 389. மின்சாரப்பகுதி உத்தியோகத்தர்.

## (The electrical engineers and contractors.)

**வினா:** சிலர் மின்சார உற்பத்தி, மின்சார இயந்திரங்கள் விளக்குகள் விசைக்கருவிகள் செய்தல், இயக்குதல் இவ்வாறான தொழில்களில் திறமை உடையவராக இருக்கின்றனர். இது எதனால்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:** 10-ம் இடத்தில் சூரியன் சுக்கிரன் சனி கேது இருந்தாலும், 10-ம் இடத்தில் இருக்கும் சூரிய சுக்கிரரைச் சனி நோக்கினாலும், 10-ம் இடத்தில் இருக்கும் சனியைச் சூரிய சுக்கிரர் நோக்கினாலும், நவாம்சத்தில் இவ்வகை இருப்பினும் இவ்வாறான நிலைமையிற் பிறந்தவர் மின்சாரப்பகுதியிலேயே வேலைபுரியப் பொருத்தமுடையர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் சுக்கிரன் | வியாழ ராகு | செவ்வா | ல |
| 9 | மின்சாரப்பகுதி வேலைத்தலைவர் | | சந்திர |
| 8 | | | 3 |
| 7 | 6 | கேது | சனி |

## 390. புகையிலை தேயிலை வியாபாரிகள்.

## (The tobacco and tea merchants.)

**வினா.** சிலர் வெற்றிலை, புகையிலை, தேயிலை முதலிய கொடிவகை செடிவகை இலைப்பொருட்களின் மூலம் பெருந் தனவந்தராகின்றனர். இவர்க்கு இத்தொழில் பொருத்தம் உடையதாயிருத்தற்குக் காரணம் யாது?

**விடை:** முயற்சித்தானம் சனி அல்லது புதனின் வீடாகி (மகர கும்ப மிதுன கன்னி இராசிகளாக) அமைய அவ்வீட்டில் இராகு இருந்தாலும், முயற்சித்தானத்தில் சனி புதன் இருந்தாலும், முயற்சித்தானாதிபதி சனி புத நவாம்சத்திற் பலமேறியிருந்தாலும் இதிற் பிறந்தவர் புகையிலை தேயிலை வெற்றிலை முதலான பொருட்களையே விக்கிரயஞ்செய்து தனவந்தராவர்.

| | | | |
|---|---|---|---|
| கேது | 5 | 6 | சந்திர சனி |
| 3 | ஓர் பிரபல புகையிலை வியாபாரி | | 8 |
| 2 | | | செவ்வா |
| ல | சுக்கிரன் | சூரியன் புதன் | வியாழ ராகு |

## 391. இரும்புத் தொழிலாளர்.

## (The mechanics and motor dealers.)

**வினா:** சிலர் இரும்புத்தொழிலிலும், மோட்டார்வண்டி சைக்கிள்வண்டி முதலிய இரும்புவாகனக் கருவிகளை இயற்றல் வாங்கல் விற்றல் திருத்தஞ்செய்தல் முதலிய கருமங்களிலும் உயர்ச்சியும் அத்தொழில்கள் மூலம் செல்வப்பெருக்கமும் உடையவராய் இருப்பதற்குக் காரணம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | 9 |
| 5 | ஓர் பிரபல இரும்புத் தொழிலாளி | | செவ்வா சனி ராகு |
| சந்திர கேது | | | சூரியன் புதன் |
| 3 | 2 | ல வியாழ | சுக்கிரன் |

**விடை:** முயற்சித்தானாதிபதி சனியாகிச் சுகத்தானத்தில் (4-ம் இடத்தில்) இருந்தாலும், முயற்சித்தானத்தில் சனியும் இராகுவும் பலவான்களாக இருந்தாலும், முயற்சிநாதன் சனியுடைய நவாம்சத்தில் 4-ம் இடத்தவனோடும் இராகுவோடும் கூடிப் பலவானாக இருந்தாலும் இந்த வேளையிற் பிறந்தவர் எப்பொழுதும் இரும்புக் கருவிகளின் மூலம் முயற்சி புரிபவராய் அதனால் பெருஞ் செல்வராக விளங்குவர்.

## 392. இயந்திரங்களால் சீவிப்பவர்.

(The machine dealers, factory owners,

motor engineers, repairers, and hirers.)

**வினா:** சிலர் இரும்பு யந்திரங்களைச் செய்தும், இயக்கியும், திருத்தம் செய்தும், அந்த யந்திரசாலைகளுக்கு மானேஜராக இருந்தும் சீவிக்கின்றனர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| 3 | 4 | சந்திர | சூரியன் புதன் வியாழ |
| ராகு | ஓர் யந்திரசாலை மானேஜர் | | செவ்வா சுக்கிரன் |
| ல | | | கேது |
| 12 | 11 | சனி | 9 |

**விடை:** சனி 10-ம் இடத்தில் பூரணபலவானாக இருந்தாலும், 10-ம் இடத்துக்குச் சனி அதிபதியாகி 3, 6, 8, 12-ம் இடம் நீங்கலாக மற்றைய இடங்களில் பலம்பொருந்தி இருந்தாலும், 10-ம் இடத்ததிபனையேனும் 10-ம் இடத்தையேனும் சனி பலமாக நோக்கினாலும், இந்தவகை நவாம்சத்தில் இருந்தாலும் இந்த நிலைமையிற் பிறந்தவர் யந்திரசாலைகளைத் தாபித்து நடாத்தியேனும், இரும்பு யந்திரங்களை இயக்கியேனும், அவைகளைத் திருத்தஞ் செய்தேனும், அவைகளை விற்றல் வாங்கல் செய்தேனும் சீவிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 393. அடிமைத்தொழில் செய்பவர்.

### (The domestic servants.)

வினு: சிலர் பிறருக்கு அடிமைத்தொழில் செய்பவராய் இருப்பதற்கு நியாயம் யாது?

விடை: முயற்சித்தானுதிபதி சனியினுடைய நவாம்சத்தில் இருக்க, சனி நவாம்சலக்கினத்துக்கு 12-ல் இருந்தாலும், முயற்சித்தானுதிபதியும் இலக்கினுதிபதியும் கூடி முயற்சித்தானத்திற்கு 10-ம் இடத்தில் நீசவக்கிராஸ்தமன கதி முதலியவற்ருல் பலங்குன்றியிருக்க, சத்துருத்தானுதிபதி (6-ம் இடத்துக்குரியவன்) திரிகோண கேந்திரங்களில் அதிகார அரசுபுரிந்தாலும் இவ்வாருன வேளையில் உதித்தவர் பிறருக்கு அடிமைத்தொழில் புரிவதிலேயே தமது காலத்தைக் கழிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் செவ்புத கேது | சந்திர | சனி | 10 |
| சுக்கிரன் | அடிமைவேலை | | 11 |
| 5 | செய்பவர் | | வியாழ |
| 4 | 3 | 2 | ல ராகு |

## 394. மாமிச வியாபாரிகள்.

### (The hunters and the butchers.)

வினு: சிலர் மிருகங்களைக் கொலைசெய்தும் அவற்றின் மாமிசங்களை விக்கிரயஞ்செய்தும் சீவிக்கின்றனர். இது எதனுல்?

விடை: 1, 5, 10-ம் இடங்களுக்கு அதிபர் எவரேனும் நீசம் அடைந்திருக்க, 10-ம் இடத்தில் சனி செவ்வாய் இராகு எவர் இருந்தாலும், 10-ம் இடத்தில் நீசக் கிரகம் இருந்தாலும், 1, 5-ம் இடத்ததிபர் நீசராகி 10-ம் இடத்தை நோக்கினுலும், இவ்வகை நவாம்சத்தில் இருந்தாலும் இந்த வேளைகளிற் பிறந்தவர் விலங்கினங்களை வேட்டையாடிச் சித்திரவதை செய்தும் அவற்றின் உடலங்களை விற்றும் சீவிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| சந்திர | சனி ராகு | 5 | 6 |
| 2 | இறைச்சி | | 7 |
| ல | வியாபாரி | | 8 |
| 12 | புதன் | சூரி செவ் வியாழ சுக் கேது | 9 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 395. அரும் பெருங் கருமங்களை நிறைவேற்றுபவர்.

(Those who accomplish great deeds.)

**வினா:** சிலர் உலகத்தில் நிலையான சாதனங்களை (தேவாலயங்கள், கல்லூரிகள், அன்னசத்திரங்கள், பகிரங்கத் தெருவீதிகள் முதலியவைகளை) ஸ்தாபனஞ்செய்தும், லோகோபகாரமாகச் சாஸ்திரங்களை இயற்றி அச்சிடுவித்துப் பரப்பியும் இத்தகைய நிலைபேறான கருமங்களை இயற்றி, இறந்தும் இறவாதவர்போல் விளங்குகின்றனர். இதற்கு நியாயம் என்னையோ?

| | | | |
|---|---|---|---|
| 11 | சூரியன் புதன் | ல | செவ்வா |
| சுக்கிரன் சனி | அன்னசத்திரம் தாபித்தவர் | | கேது |
| சந்திர வியாழ ராகு | | | 4 |
| 8 | 7 | 6 | 5 |

விடை: முயற்சித் தானாதிபதி சனியின் அம்சத்தில் இலக்கினாதிபதியுடன் கூடியிருந்தாலும், புத்தித்தானத்திலேனும் முயற்சித்தானத்திலேனும் சனி பூரண பலவானாக இருந்தாலும் நோக்கினாலும், இலக்கினாதிபதி ஸ்திர இராசிக்கு அதிபதியாகி ஸ்திரராசியான முயற்சித்தானத்தில் சனியுடன் இருந்தாலும் இதிற் பிறந்தவர் உலகில் மற்றவரால் இயற்றமுடியாத அரும்பெருங் கருமங்களைச் செய்து முடிப்பர்.

## 396. பங்காளிகளால் லாபமடைபவர்.

(Those who gain much through their partners in business.)

**வினா:** சிலர் பங்குவியாபாரத்தினால் (ஒருவருடன் சேர்ந்து முயற்சிசெய்தலினால்) விசேஷபொருத்தமும் அதிர்ஷ்டலாபமும் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** தம்முடைய முயற்சிக்குப் பங்காளியாக அல்லது தொழிலாளியாக நியமனம் பெறுபவருடைய உதயலக்கினாதிபனும் தம்முடைய உதயலக்கினாதிபனும் ஒருவராகவேனும் ஒருவர்க்கொருவர் அதிமித்திரராகவேனும் இருந்தாலும், இருவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4, 5, 10-ம் இடங்கட்கு அதிபரில் எவரேனும் மூற்கூறியவாறு இருந்தாலும், இருவருடைய நக்ஷத்திரம், ஜன்மஇராசி இவைகள் ஒன்றாக இருந்தாலும் அன்னவரால் அளவில்லாத அதிர்ஷ்டலாபங் கள் ஐஸ்வரியங்கள் வந்துசேரும்.

| | | | |
|---|---|---|---|
| ல | 2 | 3 | 4 |
| 12 | பங்காளித்து வசீகரமான முதலாளி | | சந்திர கேது |
| ராகு | | | 6 |
| சூரியன் புதன் | செவ்வா சுக்கிரன் சனி | 8 | வியாழ |

| | | | |
|---|---|---|---|
| வியாழ கேது | 5 | 6 | 7 |
| சூரியன் செவ்வா | முதலாளிக்கு வசீகரமான பங்காளி | | 8 |
| சந்திர புதன் சனி | | | 9 |
| ல சுக்கிரன் | 12 | 11 | ராகு |

## 397. பங்காளிகளால் நஷ்டமடைபவர்.

(Those who lose much through their partners in business.)

வினா: சிலருக்குத் தம்முடைய முயற்சிக்குப் பங்காளியாக வேனும் தொழிலாளியாகவேனும் நியமனம் பெற்றிருப்பவரால் காரியக்கெடுதி, திரவியநாசம், அபகீர்த்தி இவைகளே சம்பவிக்கின் றன. இது எதனால்?

விடை: தம்முடைய முயற்சிக்குப் பங்காளியாகவேனும் தொழி லாளியாகவேனும் இருப்பவருடைய 1, 4, 5, 10-ம் இடங்கட்கு அதி பரும் தம்முடைய 1, 4, 5, 10-ம் இடங்கட்கு அதிபரும் ஒருவருக் கொருவர் சத்துருக்களாக இருந்தாலும், நவாம்சத்தில் இவ்வகை இருந்தாலும், தம்முடைய பங்காளி தொழிலாளியின் 12-ம் இடமும் 12-ம் இடத் தலைவனும் பலங்குன்றியிருக்க 12-ம் இடத்திற் சனி பலவானாகவேனும் பலவீனனாகவேனும் இருந்தாலும், சனி 3-ம் இடத்தில் பலவானாக இருந்தாலும், தம்முடைய ஜன்மலக்கினத் துக்கு 6, 8-வது இராசிகள் பங்காளி தொழிலாளரின் இராசிகளாக அமைந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர்களின் கூட்டுறவால் (பங் காளி தொழிலாளிகளால்) அடிக்கடி திரவியநாசம், காரியவிக்கினம், வியாச்சியந் தொடருதல், அபகீர்த்தி முதலிய பலன்களே சித்திக் கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ 12-ம் இடத்திற் சனி இருக்கப்பெற்ற ஜாதகன்ஜாதகிகளைச் சினேகராகவேனும், கணவன்மனைவியாகவேனும், பங்காளி தொழிலாளியாகவேனும் கொள்ளுதலையும், இவருடன் கூடி வழி போதலையும் அவசியம் நீக்குதல்வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 9 | ராகு | வியாழ | 12 |
| 8 | பங்காளிக்குப் பொருந்தாத முதலாளி | | ல சூரிசெவ் புத சுக்ர |
| 7 | | | சந்திர |
| 6 | 5 | கேது | சனி |

| | | | |
|---|---|---|---|
| 2 | வியாழ | 4 | 5 |
| ல கேது | முதலாளிக்குப் பொருந்தாத பங்காளி | | செவ்வா |
| சந்திர சனி | | | சூரி புத சுக்கிரன் ராகு |
| 11 | 10 | 9 | 8 |

398. சிறிய கருமத்தையும் பெரிதாக மயங்கிக் கஷ்டப்படுபவர்.

(Those who toil hard even in trifles.)

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் சுக்கிரன் | ல | 2 | சந்திர ராகு |
| 11 | சிறிய கருமத்தையும் அதிக சிரமப்பட்டுச் செய்பவர் | | 4 |
| வியாழ | | | சனி |
| கேது | செவ்வா | 7 | 6 |

**வினு:** சிலர் சிறிய முயற்சிகளையும் பெரிய முயற்சிகளாக எண்ணி வெகுசிரமப்பட்டுச் செய்கின்றனர். இது எதனுல்?

**விடை:** வீரியத் தானுதிபன் பலவீனனுக முயற்சித்தானுதிபன் புத்தித்தானத்தில் வக்கிரகதியடைந்திருந்தாலும், புத்தித்தானுதிபனும் முயற்சித்தானுதிபனும் கூடி வக்கிராஸ்தமனமாகி இருந்தாலும் இவ்விதநிலைமையில் உதித்தவர் மிகச்சிறிய கருமங்களையும் பெரிய ஆரம்பத்துடன் வெகு கஷ்டப்பட்டுச் செய்வர்.

399. பெரிய கருமங்களையும் சுலபமாக மதித்துச் செய்பவர்.

(Those who accomplish even great deeds quite easily.)

**வினு:** சிலர் பெரிய கருமங்களையும் சிறிதாக மதித்து வெகு சுலபமாகச் செய்துவிடுகின்றனர். இது எதனுல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கேது | 7 | சனி | சூரியன் புதன் |
| 5 | பெரிய கருமத்தையும் சிறிதாக மதித்துச் செய்பவர் | | சந்திர வியாழ சுக்கிரன் |
| 4 | | | செவ்வா |
| 3 | 2 | ல | ராகு |

விடை: உதய லக்கினாதிபனும் விரியத்தானாதிபனும் (3-ம் இடத்ததிபனும்) புயற்சித்தானாதிபனும் கூடித் திரிகோணகேந்திரங்களில் உச்சகதியுடன் இருந்தாலும், 1, 3, 5, 10-ம் இடங்கட்கு அதிபர் உதயகேந்திரத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் எத்தகைய பெரிய கருமங்களையும் (ஓர் விளையாட்டுப் போல) மிக இலகுவாகச் செய்துமுடிப்பர்.

400. எக்கருமத்தையும் தாமதமாக இயற்றுபவர்.

(Those who work sluggishly.)

வினா: சிலர் எக்கருமத்தையும் தாமதமாக இயற்றுபவராய் இருத்தற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| சந்திர கேது | 11 | 12 | ல |
| 9 | எக்கருமத்தையும் தாமதமாக இயற்றுபவர் | | 2 |
| புதன் வியாழ சுக் சனி | | | 3 |
| சூரியன் | 6 | 5 | செவ்வா ராகு |

விடை: புயற்சித் தானாதிபன் வக்கிரகதியடைந்து சனியுடனே கூடி எங்கேயாயினும் இருந்தாலும், சனி புயற்சித்தானத்திற்கு அதிபனாகி அல்லது அதில் இருப்பவனாகி அல்லது அதனை நோக்குபவனாகி இருந்தாலும், நவாம்சத்தில் இவ்விதம் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் எவ்வித அவசிய கருமங்களையும் ஆறுதலாகவே செய்துமுடிப்பர்.

401. தொடங்கிய கருமங்களை இடையில் நழுவவிடுபவர்.

(Those who stop short without completing their work.)

வினா: சிலர் தொடங்கிய கருமங்களை நிறைவேற்ற இயலாதவர்களாய், அவைகளை இடையில் கைசோரவிடுபவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: முயற்சித் தானாதிபன் முயற்சித்தானத்தில் இருப்பவன் இவ்விருவரேனும் இருவரில் ஒருவரேனும் வக்கிராஸ்தமன கதி அடைந்திருந்தாலும், இலக்கினாதிபனும் புத்தித்தானாதிபனும் வக்கிரகதி அடைந்திருந்தாலும் இந்நிலையையில் உதித்தவர் தொடங்கிய கருமங்களைப் பூர்த்திசெய்ய இயலாது இடையில் கைசோர்ந்து விடுவர்.

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 6 | சந்திர |
| ராகு | தொடங்கிய கருமங்களை இடையிற் கைவிடுபவர் | | வியாழ |
| 2 | | | சுக்கிரன் கேது |
| ல | 12 | சனி | சூரியன் செவ்வா புதன் |

402. அடிக்கடி தொழில்களை மாற்றிக்கொள்பவர்.

(Those who change their occupations frequently.)

வினா: சிலர் நடிகர் பற்பல வேஷம்போடுவதுபோல் நிலையில்லாத முயற்சி உடையவராய், அடிக்கடி தம் தொழிலை மாற்றிக்கொண்டு சீவிக்கின்றனர். இது எதனால்?

விடை: 1, 5, 10-ம் இடங்களுக்கு அதிபர்களுள் எவரேனும் தத்தம் ஸ்தானங்களை விட்டு ஒருவருக்கொருவர் சம்பந்தமின்றிச் சரராசிகளில் இருந்தாலும், இம்மூவரில் எவரேனும் நீசாஸ்தமன கதி அடைந்திருந்தாலும், 1, 10-ம் இடத்ததிபர் பலவான்களாக இருக்க, 5-ம் இடத்ததிபதி நீசாஸ்தமனகதிகளால் பலவீனனாக இருந்தாலும் இந்நிலையையில் உதித்தவர் அடிக்கடி தொழில்களை மாற்றிக்கொண்டு சீவிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | 2 | ராகு |
| 11 | அடிக்கடி தொழிலை மாற்றுபவர் | | சனி |
| செவ்வா சுக்கிரன் | | | சந்திர |
| சூரியன் புதன் கேது | வியாழ | 7 | 6 |

403. பிறந்தவூரில் தொழில்புரிபவரும், தூரதேசங்களில் தொழில்புரிபவரும்.

(Those who are employed in their native country and those who get employment in a foreign country.)

வினா: சிலர் தாம் பிறந்த ஊரிலேயே உத்தியோகம் புரிவதற்கும், வேறு சிலர் பிறந்த ஊரில் பாதிநாளும் பிறவூரில் பாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் உத்தியோகம் புரிவதற்கும், ஒழிந்த சிலர் சொந்த ஊரில் ஒரு முயற்சியும் பார்க்க இயலாதவராய்த் தூரதேசங்களிலேயே தொழில் புரிவதற்கும் நியாயம் யாது?

விடை: முயற்சித்தானம் ஸ்திரராசிகளாக (இடப சிங்க விருச்சிக கும்பங்களாக) அந்தத் தானாதிபனும் ஸ்திரராசிகளில் இருக்கப் பிறந்தவர் உள்ளூரில் உத்தியோகம் புரியவும், முயற்சித்தானம் உபயராசிகளாக (மிதுன கன்னி தனு மீனங்களாக) அவ்விராசிநாதன் மேற்சுட்டிய உபயராசிகளில் இருக்க உதித்தவர் பிறந்த ஊரில் பாதிநாளும் பிறவூரில் பாதிநாளும் முயற்சி செய்யவும், முயற்சித்தானம் சரராசிகளாக (மேட கர்க்கடக துலா மகர ராசிகளாக) அவ்விராசித் தலைவன் சரராசிகளில் அமர உதித்தவர் பிறதேசங்களிலேயே உத்தியோகம் உடையவராய் இருக்கவும் காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | ராகு | 8 |
| 4 | பிறந்த ஊரில் | | 9 |
| வியாழ | தொழில்புரிபவர் | | சூரியன் சனி |
| 2 | ல செவ்வா கேது | 12 | சந்திர புதன் சுக்கிரன் |

| | | | |
|---|---|---|---|
| 3 | கேது | 5 | செவ்வா |
| 2 | தூரதேசத்தில் | | சுக்கிரன் |
| ல சந்திர வியாழ | தொழில்புரிபவர் | | புதன் சூரியன் |
| சனி | 11 | ராகு | 9 |

## 404. வேலைக்காரர் வசியமுடையவரும், வேலைக்காரர் பொருந்தாதவரும்.

(Those who have faithful servants and those who cannot have suitable servants.)

வினா: சிலர் தம்மிடத்தில் அத்தியந்த அன்புடையவராயும் மரணபரியந்தம் தம்மை விட்டுப் பிரியாதவராயும் உள்ள வேலைக்காரரை உடையவராக இருக்க, வேறு சிலருக்கு வேலைக்காரரே பொருத்தமில்லாமல் இருத்தற்கு நியாயம் என்ன?

விடை: முயற்சித்தானத்திற்குப் பத்தாம் இடத்தவனும் (7-ம் இடத்தவனும்) இலக்கினாதிபதியும் ஒருவருக்கொருவர் மித்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரர்களாக இருந்தாலும், முதலாளி தொழிலாளி இருவருடைய சந்திரலக்கினமும் ஒரே இராசி ஒரே நக்ஷத்திரமாக இருந்தாலும், ஒன்றற்கொன்று மித்திரராசிகளாக இருந்தாலும் இவ்வித நிலைமையிற் பிறந்தவர் வேலைக்காரர் வசிகரமுடையவராய் அவரை விட்டுப் பிரியாதவராய் உயிரும் உடலும் போல் பரஸ்பர அன்புடையவராய் இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| புதன் சுக்கிரன் | 12 | ல | 2 |
| சூரியன் | வேலைக்காரரை வசீகரிப்பவர் | | கேது |
| செவ்வாய் ராகு | | | 4 |
| 8 | சனி | 6 | சந்திர வியாழ |

7-ம் இடத்ததிபனும் இலக்கினாதிபதியும் ஒருவருக்கொருவர் சத்துருக்களாக இருந்தாலும், முதலாளி தொழிலாளி இருவரும் பகைராசி பகைநக்ஷத்திரம் உடையவராய் இருந்தாலும், இருவரும் சந்திரலக்கினத்தின்படி ஒருவருக்கொருவர் 6-ம் இராசி 8-ம் இராசி உடையவராய் இருந்தாலும் வேலைக்காரர் பொருத்தமின்றியும் வேலைக்காரரே சத்துருவாகவும் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| சனி | 9 | 10 | ராகு |
| 7 | வேலைக்காரர் பொருத்தம் இல்லாதவர் | | சந்திர |
| 6 | | | ல வியாழ சுக்கிரன் |
| கேது | 4 | சூரியன் | செவ்வாய் புதன் |

## 405. முதலாளிகளுக்கு அடங்காத தொழிலாளிகள்.

(The insubordinate servants.)

வினா: சிலர் முதலாளிகளுக்குக் கீழ்ப்படிதலில்லாத தொழிலாளராக இருந்து, அவர்களுக்கு எப்போதும் தீமைகளையே செய்து கொண்டு சீவிக்கின்றனர். இது எதனால்?

விடை: உதயலக்கினாதிபதியாயினும் புத்திஸ்தானாதிபதியாயினும் (5-ம் இடத்தவனாயினும்) கேந்திர திரிகோணங்களில் இருக்க, கர்மஸ்தானாதிபதி (10-ம் இடத்ததிபன்) நீசாஸ்தமனகதி அடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந்து 3, 6, 8, 12-ம் இடங்களில் இருந்தாலும், சூரியன் 4-ம் இடத்தில் இருந்தாலும், செவ்வாய் 5-ம் இடத்தில் இருந்தாலும், அல்லது 5-ம் இடத்தைப் பலமாக நோக்கினாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் முதலாளிகளுக்குக் கீழ்ப்படியாதவர்களாய், அவர்களை எதிர்த்து அதிகாரதோரணை செய்யும் கொள்கை உடையவராகச் சீவிப்பவர்.

| | | | |
|---|---|---|---|
| சூரிய சந் புதன் சுக்கிரன் | 7 | 8 | ராகு |
| 5 | முதலாளித்து அடங்காத தொழிலாளி | | 10 |
| வியாழ | | | சனி |
| கேது | செவ்வா | ல | 12 |

## 406. முதலாளிகளுக்கு லாபமுண்டாக்கும் தொழிலாளிகள்.

(The faithful and benificial servants.)

**வினா:** சிலர் முதலாளிகளுக்கு (மேலதிகாரிகளுக்கு) இலாபம் உண்டாக்குதலிலேயே இலட்சியமுடையவராகக் காணப்படுகின்றனர். இது எதனால்?

**விடை:** முயற்சித் தானாதிபன் (10-ம் இடத்ததிபன்) இலாபத்தானாதிபனுடன் (11-ம் இடத்ததிபனுடன்) சேர்ந்து லாபத்தானத்திலேயே இருந்தாலும், முயற்சித்தானாதிபதி தன்னுடைய ஸ்தானத்திலேனும் 2, 4, 7, 9, 11-ம் இடங்களிலேனும் இருக்க உதயலக்கினாதிபதி நீசாஸ்தமனகதி அடைந்தேனும் 3, 8, 11-ம் இடங்களிலேனும் மறைவாக (பலவீனனாக) இருந்தாலும் இந்நிலைமையில் உதித்தவர் தத்தம் முதலாளிகளுக்கு இலாபம் காட்டுவதிலேயே கண்ணோட்டம் உடையவராக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| சந்திர சனி | 6 | 7 | ராகு |
| 4 | முதலாளிக்கு லாபமுண்டாக்கும் தொழிலாளி | | 9 |
| 3 | | | வியாழ சுக்கிரன் |
| கேது | ல | புதன் | சூரியன் செவ்வா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீர்த்தி

**407. பரோபகாரிகள். (The philanthropists.)**

**வினா:** சிலர் தமது சுகத்தை விரும்பாது, பொதுஜனசேவை பரோபகாரம் பிறருடைய ஆபத்துக்களை நீக்குதல் முதலிய பிறருடைய முயற்சிகளில் தம் ஜீவிய காலத்தைக் கழிப்பவராகக் காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் யாது?

**விடை:** உதயலக்கினாதிபதியும் முயற்சித்தானாதிபதியும் கீர்த்திஸ்தானத்தில் (12-ம் இடத்தில்) பலமேறியிருந்தாலும், கீர்த்தித்தானாதிபதி பூர்வசந்திரனுடன் கூடி முயற்சித்தானத்தில் இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் தமக்கென வாழாதவராய்ப் பிறர்க்கென வாழ்பவராய்த் தம் ஜீவிய காலம் வரை பரோபகார முயற்சிகளையே பார்த்துவருவர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | 3 | 4 | 5 |
| ல | பரோபகார முயற்சி உடையவர் | | 6 |
| செவ்வா சனி | | | 7 |
| 11 | சந்திர | சூரியன் வியாழ சுக்கிரன் | புதன் கேது |

**408. மானத்தைக் காப்பவரும், மானத்தைத் துறந்தவரும்.**
**(Those who have self-respect and those who are shameless.)**

**வினா:** சிலர் மானத்தைப் பாதுகாப்பவராயும், வேறு சிலர் மானத்தைக் கைவிட்டவராகவும் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** உதய லக்கினாதிபனும் முயற்சித்தானாதிபனும் பலவான்களாகத் திரிகோணகேந்திரங்களில் இருந்தாலும், நவாம்சத்தில் இவ்வகை இருந்தாலும் இது போன்ற நிலைமையிற் பிறந்தவர் மானத்தைக் காப்பதில் கண்ணுங் கருத்தும் உடையவராகக் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 6 | சந்திர |
| செவ்வா சனி ராகு | அதிகம் மானமுடையவர் | | 8 |
| 2 | | | கேது |
| ல வியாழ | சுக்கிரன் | சூரியன் | புதன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயராசிநாதனும் முயற்சித் தலைவனும் கூடி வக்கிர நீச அஸ்தமன கதியில் இருந்தாலும், உதய முயற்சித் தானங்களில் நீசக்கிரகம் இருந்தாலும் இதுபோன்ற நிலையில் உதித்தவர் மானமில்லாத பாவிடப்பதாக விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| 9 | சனி | சூரியன் வியாழ கேது | புதன் சுக்கிரன் |
| 8 | மானமில்லாத வர் | | ல செவ்வா |
| 7 | | | 2 |
| 6 | சந்திர ராகு | 4 | 3 |

சுயநலம்

## 409. வயோதிகராகியும் விவாகஞ்செய்பவர்.

## (Those who marry even in their old age.)

**வினா:** சிலர் வயோதிக காலத்திலும் புதிது புதிதான கல்யாணஞ் செய்து தாரசுகம் அனுபவித்தலே தொழிலாக இருக்கின்றனர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| செவ்வா சுக்கிரன் | ல சூரியன் கேது | புதன் சனி | சந்திர வியாழ |
| 11 | **57** வயதில் மணஞ்செய்தவர் | | 4 |
| 10 | | | 5 |
| 9 | 8 | ராகு | 6 |

**விடை:** சனி 2, 7-ம் இடங்களில் இருக்க, உதயலக்கினாதிபதி ஆட்சி உச்சம் பெற்றுள்ள சுக்கிரனுடன் கூடி 1, 2, 3, 4, 7, 9, 10, 11, 12-ம் இடங்களில் இருந்தாலும், 10-ம் இடத்ததிபன் பலவீனனாகி 7-ம் இடத்தில் சனிசெவ்வாயுடன் கூடியிருந்தாலும், 10-ம் இடத்ததிபன் பாபருடன் கூடினாலும், 10-ம் இடத்துக்கு 7-ம் இடத்தில் (4-ம் இடத்தில்) சுக்கிரன் பாபருடன் கூடியிருக்க உதயலக்கினாதிபனும் பாபருடன் கூடியிருந்தாலும் இந்நிலையிற் பிறந்தவர் காமபோகம், வயிறுவளர்த்தல் இவற்றிலேயே இலக்ஷியம் உடையவராய் வயோதிகப் பருவத்திலும் புதுமணம் புரிந்து தாரசுகம் அனுபவிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாபமுடைமை

410. முயற்சியினல் நிலையான லாபம் அடைபவரும், எந்த முயற்சியினுலும் லாபம் அடையாதவரும்.

(Those who make fixed profit in business and those who cannot make profit in any undertaking.)

வினு: சிலர் முயற்சியினல் நிலையான லாபம் அடைவதற்கும், வேறு சிலர் எந்த முயற்சியினுலும் லாபம் பெருதவராய் இருப்பதற்கு நியாயம் என்ன?

விடை: முயற்சித்தாஞதிபதி (10-ம் இடத்தவன்) இலாபத்தானத்திலும் (11-ம் இடத்திலும்) இலாபத்தாஞதிபதி திரவியத்தானத்திலும் (2-ம் இடத்திலும்) பலவான்களாக இருந்தாலும், முயற்சித்தாஞதிபதி இலாபத்தாஞதிபதியுடன் சேர்ந்து திரிகோண கேந்திரங்களில் இருந்தாலும், முயற்சித்தலைவன் இலாபத்தலைவனுடன் சேர்ந்து இலாபத்தானத்திலேயே பலம்பொருந்தி இருந்தாலும் இவ்வாருன நேரத்தில் உதித்தவர் முயற்சியினல் நிலைபேருன இலாபம் பெறுவர்.

இலாபத்தாஞதிபதி பகைநீசனுகி அல்லது அஸ்தமனகதி அடைந்து 6, 8, 12 இத்தானங்களில் இருக்கப் பிறந்தவர் எந்த முயற்சினுயிலும் இலாபமடையார்.

| | | | |
|---|---|---|---|
| 9 | சந்திர கேது | செவ்வா புதன் சுக்கிரன் | சூரியன் |
| 8 | முயற்சியினல் நிலைபேறன லாபமடைந்தவர் | | ல |
| வியாழ | | | 2 |
| சனி | 5 | ராகு | 3 |

| | | | |
|---|---|---|---|
| சந்திர | கேது | 4 | 5 |
| ல சுக்கிரன் | எந்த முயற்சிலும் லாபம் அடையாதவர் | | 6 |
| சூரியன் செவ்புத வியாழ | | | 7 |
| சனி | 10 | ராகு | 8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

411. அற்ப முயற்சியினுல் அதிக லாபம் அடைபவர்.
(Those who make much profit in small jobs.)

வினு: சிலர் அற்ப முயற்சியினுல் அதிக இலாபமடைகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| ல சுக்கிரன் | சூரியன் செவ்புத கேது | 3 | 4 |
| 12 | அற்ப முயற்சியினுல் அதிக லாபம் அடைந்தவர் | | 5 |
| சந்திர வியாழ | | | 6 |
| சனி | 9 | ராகு | 7 |

விடை: முயற்சித்தானுதிபனிலும் பார்க்கப் பலவானுக இலாபத்தானுதிபன் திரிகோண கேந்திரங்களில் இருந்தாலும், முயற்சித்தானுதிபதி இலாபத்தானத்திலும் இலாபத் தானுதிபதி முயற்சித் தானத்திலும் பரிவர்த்தனமாக இருந்தாலும், இலாபத்தானுதிபன் திரவியத்தானுதிபனுடன் சேர்ந்து உதயலக்கினத்தில் இருந்தாலும் இதிற் பிறந்தவர் அற்ப முயற்சி உடையவராக இருந்தாலும் (ஒரு முயற்சியும் இல்லாதவராய் இருந்தாலும்) தினமும் அனேகம் பொருட்களை இலாபமாகப் பெறுவர்.

## லாபத்தின் அளவு

412. வரவும் செலவும் சமமாக உடையவர்.
(Those who have equal income and expenditure.)

வினு: சிலர் வரவுஞ் செலவுஞ் சமத்துவமாக உடையவராய் இருப்பதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரியன் செவ்வா | சுக்கிரன் | ல ராகு |
| 9 | லாபமும் செலவும் சமமாக உடையவர் | | சனி |
| 8 | | | சந்திர |
| வியாழ கேது | 6 | 5 | 4 |

விடை: இலாபத் தானுதிபனும் செலவுத் தானுபதிபனும் (12-ம் இடத்தவனும்) தத்தம் ஸ்தானங்களில் இருந்தாலும், இலாபத் தானுதிபன் செலவுத்தானத்திலும் செலவுத் தானுதிபன் இலாபத் தானத்திலும் பரிவர்த்தனமாக இருந்தாலும் இதில் உதித்தவர் எத்தகைய கஷ்ட நஷ்டங்கள் வந்த காலத்திலும் (கடன் படாது) இலாபமும் செலவும் ஒரே சமனுக உடையவராக வாழ்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 413. வரவுக்கு மேற்பட்ட செலவுடையவர்.

(Those who spend more than what they earn.)

வினா: சிலர் இலாபத்திற்கு மேற்பட்ட செலவுடையவராய் அதனால கடன்காரராக இருப்பதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| 7 | சுக்கிரன் | செவ்வா | 10 |
| சூரியன் சந்திர புதன் | வரவுக்கு மேற்பட்ட செலவுடையவர் | | கேது |
| ராகு | | | வியாழ |
| 4 | சனி | 2 | ல |

விடை: லாபத் தானாதிபன் பகைநீசனாகிச் செலவுத்தானத்தில் இருந்தாலும், லாபத்தானாதிபன் செலவுத் தானாதிபனுடன் கூடிச் சத்துருத்தானத்தில் (6-ம் இடத்தில்) இருந்தாலும், நவாம்சத்தில் இவ்வகை இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் முயற்சியினால் கிடைக்கும் லாபங்களையெல்லாம் வீணே இழப்பவராய் நித்திய கடன்காரராக இருப்பர்.

## பூமிலாபம்

### 414. சொந்த முயற்சியால் பூமிலாபம் அடைபவர்.

(Those who acquire property through their own efforts.)

வினா: சிலர் தமது சொந்த முயற்சியினால் பூமிலாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

விடை: உதயலக்கினாதிபனும் பூமித்தானாதிபனும் (4-ம் இடத்தவனும்) முயற்சித்தானாதிபனும் (10-ம் இடத்தவனும்) கூடி லாபத்தானத்தில் இருந்தாலும், மேற்கூறிய மூவரும் லாபத்தானத்தில் இருக்க லாபத்தானாதிபன் உதயலக்கினத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் தமது சொந்தப் பிரயாசத்தினால் பூமிலாபம் அடைவர்.

### 415. சகோதரர்மூலம் பூமிலாபம் அடைபவர்.

(Those who acquire property from their brothers.)

வினா: சிலர் சகோதரர்மூலம் பூமிலாபம் அடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சூரியன் செவ்சுக் கேது | புதன் | ல சனி | 2 |
| 10 | சகோதரர்மூலம் பூமிலாபம் அடைந்தவர் | | 3 |
| 9 | | | சந்திர வியாழ |
| 8 | 7 | 6 | ராகு |

விடை: சகோதரத் தானாதிபனும் (3-ம் இடத்தவனும்) பூமித் தானாதிபனும் (4-ம் இடத்ததிபனும்) லாபத்தானாதிபனோடு கூடி லாபத்தானத்திலேனும் பாக்கியத் தானத்திலேனும் இருந்தாலும், மேற்சுட்டிய மூவரும் கூடி உதயலக்கினத்தில் இருந்தாலும், லாபத் தானாதிபன் பலவானாகிச் சகோதரத்தானாதிபனோடு கூடிப் பூமித் தானத்தில் இருக்கப் பூமித்தானாதிபன் லாபத்தானத்தில் இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் நிச்சயமாய்ச் சகோதரர்மூலம் அதிக பூமிகளை லாபமாகப் பெறுவர்.

## 416. மாதாமூலம் பூமிலாபம் அடைபவர்.

(Those who acqire property from their mothers )

வினா: சிலர் மாதாவின் மூலம் பூமிலாபம் அடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 9 | 10 | சந்திர வியாழ சுக்கிரன் | 12 |
| சனி கேது | மாதாமூலம் பூமிலாபம் அடைந்தவர் | | ல சூரியன் |
| 7 | | | புதன் ராகு |
| 6 | 5 | செவ்வா | 3 |

விடை: பூமித் தானாதிபனும் சந்திரனும் கூடி லாபத்தானத்தில் இருக்க லாபத்தானாதிபன் உதயலக்கினத்தில் இருந்தாலும், அல்லது தன்னுடைய ஸ்தானத்திலேயே இருந்தாலும் இது போன்ற நிலைமையில் உதித்தவர் மாதாவின் மூலமாய் அதிக பூமிப் பரப்புகளை லாபமாகப் பெறுவர்.

## 417. சினேகிதர்மூலம் பூமிலாபம் அடைபவர்.

(Those who acquire property from their friends.)

வினா: சிலர் சினேகிதர் மூலமாகப் பூமிலாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:** பூமித் தானதிபனும் வியாழனும் கூடி லாபத்தானத்திலேனும், லாபத்தானதிபனுடன் கூடி உதயலக்கினத்திலேனும் இருந்தால் இந்நிலைமையில் உதித்தவர் சிநேகிதர் மூலமாய்ப் பூமிலாபம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 8 | 9 | சுக்கிரன் | சந்திர |
| 7 | சிநேகிதர்மூலம் | பூமிலாபம் | சூரியன் கேது |
| ராகு | அடைந்தவர் | | ல செவ்புத வியாழ |
| 5 | 4 | சனி | 2 |

## 418. சத்துருக்கள்மூலம் பூமிலாபம் அடைபவர்.

(Those who acquire property from their enemies.)

**வினா:** சிலர் சத்துருக்கள்மூலம் பூமிலாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** பூமித் தானதிபனும் சத்துருத் தானதிபனும் கூடி லாபத்தானதிபனுடன் சேர்ந்து லாபத்தானத்திலேயே இருந்தாலும், மேற்கூட்டிய மூவரும் கூடி உதயலக்கினத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் தமது சத்துருக்கள் மூலமாகப் பூமிலாபத்தை அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 10 | சூரியன் செவ்வா புதன் | சுக்கிரன் | ல ராகு |
| 9 | சத்துருமூலம் | பூமிலாபம் | சனி |
| 8 | அடைந்தவர் | | 3 |
| வியாழ கேது | 6 | 5 | சந்திர |

## 419. மனைவிமூலம் பூமிலாபம் அடைபவர்.

(Those who acquire proporty from their wives.)

**வினா:** சிலர் மனைவிமூலம் பூமிலாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: பூமித் தாஞதிபனும் களத்திரத் தாஞதிபனும் (7-ம் இடத்ததிபனும்) கூடி லாபத் தாஞதிபனுடனும் சுக்கிரனுடனுஞ் சேர்ந்து லாபத்தானத்தில் இருந்தாலும், மேற்சுட்டிய மூவரும் கூடி லாபத்தானத்தில் இருக்க லாபத்தாஞதிபன் உதய கேந்திரத்தில் இருந்தாலும் இந் நிலையில் உதித்தவர் தாரமூலமாய்ப் பூமிலாபம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | ராகு | சந்திர |
| ல வியாழ | மனைவி மூலம் பூமிலாபம் அடைந்தவர் | | 6 |
| 12 | | | 7 |
| சூரியன் புதன் சுக்கிரன் | கேது | செவ்வா | சனி |

## 420. பிதாமூலம் பூமிலாபம் அடைபவர்.

(Those who acquire property from their fathers.)

வினு: சிலர் பிதா மூலமாகப் பூமிலாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: பூமித் தாஞதிபனும் பிதிர்த்தாஞதிபனும் (9-ம் இடத்ததிபனும்) சூரியனும் கூடி லாபத்தானத்தில் இருந்தாலும், மேற்கூறிய மூவரும் லாபத்தானத்தில் அமர லாபத்தாஞதிபன் உதயலக்கினத்திலேனும் பாக்கியத்தானத்திலேனும் இருந்தாலும் இந்நிலையிற் பிறந்தவர் பிதா மூலமான பூமிலாபத்திற்கு உரியவராவர்.

| | | | |
|---|---|---|---|
| கேது | சந்திர | 5 | 6 |
| வியாழ | பிதாமூலம் பூமிலாபம் அடைந்தவர் | | 7 |
| ல செவ்வா சனி | | | 8 |
| 12 | சூரியன் புதன் | 10 | சுக்கிரன் ராகு |

# பொருள்லாபம்

## 421. வேலைக்காரர்மூலம் தனலாபம் அடைபவர்.

(Those who make profit through their servants.)

வினு: சிலர் வேலைக்காரர்மூலம் பொருள்லாபம் அடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சூரி புத வியாழ சனி | 12 | ல செவ்வா | கேது |
| சுக்கிரன் | வேலைக்காரர் மூலம் திரவியலாபம் அடைந்தவர் | | சந்திர |
| 9 | | | 4 |
| ராகு | 7 | 6 | 5 |

விடை: சுகத்தானாதிபனும் (4-ம் இடத்தவனும்) லாபத்தானாதிபனும் சனியும் கூடி லாபத்தானத்திலேனும் உதயலக்கினத்திலேனும் பலவான்களாக இருக்கப் பிறந்தவர் வேலைக்காரர் மூலம் திரவியலாபம் அடைவர்.

### 422. பொதுஜனங்களால் தனலாபம் அடைபவர்.

(Those who acpuire mcney frcm the public.)

| | | | |
|---|---|---|---|
| கேது | ல | சந்திர சனி | 3 |
| 11 | பொது ஜனங்களால் தனலாபம் அடைந்தவர் | | 4 |
| 10 | | | வியாழ |
| செவ்வா புதன் | சூரியன் | சுக்கிர | ராகு |

வினா: சிலர் பொதுஜனங்களால் தனலாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: லாபத்தானாதிபன் பூர்வசந்திரனுடன் கூடித் திரவியத்தானத்தில் இருந்தாலும், பூர்வசந்திரன் லாபத்தானாதிபனுடனும் 4-ம் இடத்ததிபனோடும் கூடித் திரிகோண கேந்திரங்களில் இருந்தாலும், 4-ம் இடத்ததிபனும் லாபத்தானாதிபனும கூடி உதயகேந்திரத்தில் பலவான்களாக இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் பொதுஜனங்கள் மூலம் திரவியலாபம் அடைவர்.

### 423. புத்திரர்மூலம் தனலாபம் அடைபவர்.

(Those who acquire money through their scns.)

வினா: சிலர் புத்திரர்மூலம் பொருள்லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

விடை: புத்திரத்தானாதிபனும் (5-ம் இடத்தவனும்) வியாழனும் கூடி லாபத்தானத்தில் இருந்தாலும், புத்திரத்தானாதிபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாபத் தாஞதிபனுடனும் வியாழனுடனும் சேர்ந்து திரவியத்தானத்தில் பலவாஞக இருந்தாலும், புத்திரத் தாஞதிபனுடன் லாபத் தாஞதிபனும் வியாழனும் கூடிக் கொண்டு லாபக்தானத்திலேனும் உதயலக்கினத்திலேனும் பலவான்களாக இருந்தாலும் இங்கிலைமையில் உதித்தவர் தவறுது புத்திரர் மூலம் பொருள்லாபம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | 6 | கேது |
| சந்திர | புத்திரர்மூலம் தனலாபம் அடைந்தவர் | | 8 |
| 2 | | | புதன் |
| ல ராகு | சனி | செவ்வா வியாழ | சூரியன் சுக்கிரன் |

## 424. பெண்கள்மூலம் தனலாபம் அடைபவர்.
## (Those who acquire money by brothel-keeping.)

**வினு:** சிலர் பெண்கள் மூலமாக, பெண்களைப் புருஷர்க்கு வாடகைக்கு விடுவோராய் (வியபிசாரத் தரகராய்) அதிக லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | சுக்கிரன் | 3 |
| சந்திர | பெண்கள்மூலம் தனலாபம் அடைந்தவர் | | சூரியன் புதன் கேது |
| ராகு | | | செவ்வா வியாழ |
| 9 | 8 | சனி | 6 |

**விடை:** உதயலக்கிஞதிபனும் முயற்சித்தாஞதிபனும் (10-ம் இடத்ததிபனும்) லாபத்தாஞதிபனும் இன்பத்தாஞதிபனும் (7-ம் இடத்தவனும்) சுக்கிரனுடன் கூடி லாபத்தானத்தில் இருந்தாலும், முற்கூறிய முயற்சி லாபத் தலைவர்கள் இன்பத் தானத்தில் இருக்க இன்பத்தாஞதிபனும் சுக்கிரனுங் கூடித் திரவியத்தானத்தில் (2-ம் இடத்தில்) இருந்தாலும், முயற்சித்தாஞதிபன் இன்பத்தானத்திலும் இன்பத்தாஞதிபன் திரவியத்தாஞதிபனுடனும் சுக்கிரனுடனும் சேர்ந்து லாபத்தானத்திலும் இருந்தாலும் இங்கிலைமையில் உதித்தவர் பெண்கள் மூலம் (பெண்களை விற்றும், வாடகைக்குக் கொடுத்தும், வியபிசாரத் தரகுத்தொழில்புரிந்தும் அதஞல்) தனலாபம் அடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாப காரணம்

## 425. வாய்ப்பேச்சினுல் லாபம் அடைபவர்.

## (Those who acquire money by speaking.)

வினு: சிலர் வாய்ப்பேச்சினுல் பொருள்லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | சந்திர | செவ்வா |
| 3 | வாக்குவன்மையால் லாபம் அடைந்தவர் | | கேது |
| ராகு | | | வியாழ |
| ல | 12 | சுக்கிரன் சனி | சூரியன் புதன் |

விடை: வாக்குத்தாஞதிபன் (2-ம் இடத்ததிபன்) லாபத்தானத்திலும் லாபத்தாஞதிபன் வாக்குத்தானத்திலும் பலவான்களாக விடுமாறியிருந்தாலும், வாக்குத்தாஞதிபன் பலவாஞன லாபத்தாஞதிபனுடன் கூடி லாபத்தானத்திலேனும் வாக்குத்தானத்திலேனும் உதயலக்கினத்திலேனும் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் நியாயவாதம், தர்க்கு, சம்பாஷணை முதலான வாக்குவல்லபத்தால் லாபமடைவர்.

## 426. ஒப்பந்தங்களினுல் லாபம் அடைபவர்.

## (Those who make profits in contracts.)

வினு: சிலர் குத்தகை, ஒப்பந்தம் இவைகள் மூலம் லாபம் அடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் | செவ்வா | சுக்கிரன் | ல சந்திர ராகு |
| 9 | குத்தகை ஒப்பந்தங்களில் லாபம் அடைந்தவர் | | சனி |
| 8 | | | 3 |
| வியாழ கேது | 6 | 5 | 4 |

விடை: திரவியத்தானத்தில் (2-ம் இடத்தில்) சனியும் லாபத்தானத்தில் செவ்வாயும் இருக்க திரவியத்தாஞதிபன் உதயலக்கினத்தில் இருந்தாலும், வாக்குத்தானத்தில் பூர்ணசந்திரனேனும் சுக்கிரனேனும் சனியேனும் இருக்க திரவியத்தாஞதிபன் லாபத்தானத்தில் ஆட்சியாய் இருக்கும் அதிபனுடன் சேர்ந்திருந்தாலும், லாபத்தாஞதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனும் திரவியத்தானாதிபனும் உதயகேந்திரத்தில் பலவான்களாக இருக்க லாபத்தானம் மேடம் இடபம் கர்க்கடகம் கன்னி மகரம் முதலான இராசிகளாக அமைய அவைகளில் ராகு இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் குத்தகை ஒப்பந்தம் முதலியவைகளால் அதிக லாபம் அடைவர்.

## 427. அதிர்ஷ்டலாபம் அடைபவர்.

## (Those who win big prizes in lottery.)

**வினா:** சிலர் அகஸ்மாத்தாக (தற்காலம் குதிரைப்பந்தயம், லாட்டரி முதலான) அதிர்ஷ்டலாபங்களை அடைகின்றனர். இதற்கு நியாயம் என்ன?

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் சுக்கிரன் | செவ்வா | வியாழ | 12 |
| சனி | திடீரென அதிர்ஷ்ட லாபம் அடைந்தவர் | | ல ராகு |
| கேது | | | 2 |
| 6 | 5 | சந்திர | 3 |

**விடை:** திரவியத்தானாதிபன் லாபத்தானத்திலும் லாபத்தானாதிபன் திரவியத்தானத்திலும் பலவான்களாகப் பரிவர்த்தனயோகம் பெற்றாலும், லாபத்தானாதிபன் முற்கூறியவாறு உதயலக்கினாதிபனோடேனும் பாக்கியத்தானாதிபனோடேனும் விடுமாறி இருந்தாலும், லாபத்தானாதிபன் உதயலக்கினத்திலேனும் திரவியத்தானத்திலேனும் இருக்க லாபத்தானத்தில் பூர்வசந்திரனும் வியாழனும் கூடி இருவரில் ஒருவர் பரமோச்சபாகத்தில் இருந்தாலும் (அப்படியாயின் கன்னி கர்க்கடகம் உதயலக்கினமாக அமையும்) இது போன்ற நிலைமையிற் பிறந்தவர் அநேகவிதமான அதிர்ஷ்டலாபங்களைத் தடையின்றி அடைவர்.

## 428. கல்வியினால் லாபம் அடைபவர்.

## (Those who earn by educational work.)

**வினா:** சிலர் கல்வியினால்—கல்விச்சாலை ஸ்தாபித்தல், கல்வி கற்பித்தல், (தற்காலம் வித்தியாபகுதியில் உத்தியோகம் செய்தல்,) இவைகளால் லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வியாழ | சந்திர | 4 | 5 |
| ல கேது | கல்வியினுல் லாபம் அடைந்தவர் | | 6 |
| சனி | | | ராகு |
| சுக்கிரன் | சூரியன் புதன் | 9 | செவ்வா |

விடை: கல்வித்தானுதிபனும் (2-ம் இடத்ததிபனும்) புதனும் லாபத்தானத்திலேனும் திரிகோணகேந்திரங்களிலேனும் இருக்க லாபத்தானுதிபன் கல்வித்தானத்தில் இருந்தாலும், கல்வித்தானுதிபனையும் புதனையும் நோக்கினுலும், கல்வித்தானுதிபனும் புதனும் லாபத்தானுதிபனுஞ் சேர்ந்து கல்வித்தானத்திலேனும் உதயலக்கினத்திலேனும் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் கல்வியினுல்—கல்விச்சாலை ஸ்தாபித்தல், கல்வியூட்டுதல், வித்தியாபகுதியில் உத்தியோகம் புரிதல் இவைகளால் அதிக லாபம் பெறுவர்.

## 429. நியாயவாதக் கல்வியினுல் லாபம் அடைபவர்.

(Those who earn by legal practice.)

வினு: கல்வியினும் பல பிரிவுகள் உள்ளன. அவைகளுள் நியாயவாதக் கல்வியினுல் (தற்காலம் பிறக்றர், அட்வக்கேற், மாஜிஸ்டிரேட் முதலிய பதவிகளில் இருத்தலினுல்) சிலர் அதிக சம்பாத்தியம் அடைகின்றனர். இது எதனுல்?

| | | | |
|---|---|---|---|
| சந்திர | சுக்கிரன் | சூரியன் புதன் | சனி |
| கேது | சட்டக் கல்வியினுல் லாபம் அடைந்தவர் | | ல |
| 7 | | | செவ்வா ராகு |
| 6 | 5 | 4 | வியாழ |

விடை: வாக்குத் தானுதிபனும் புதனும் லாபத்தானத்தில் இருக்க வாக்குத்தானத்தில் புத்தித்தானுதிபன் (5-ம் இடத்ததிபன்) இருந்தாலும், உதயலக்கினுதிபன் வாக்குத்தானத்திலும் வாக்குத்தானுதிபன் முயற்சித்தானத்திலும் முயற்சித் தானுதிபனும் லாபத் தானுதிபனும் உதயலக்கினத்திலுமாக இருந்தாலும், இந்நால்வரும் கூடி 1, 2, 5, 9, 10, 11 இவ்விடங்களில் பலவான்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும், லாபத்தாஞதிபன் புதனகி 1, 2, 4, 5, 9, 10, 11 இவ்விடங்களில் அவ்வத் தானத்தின் அதிபருடன் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் நியாயவாதக் கல்வியினல் அதிக லாபம் அடைவர்.

### 430. வைத்தியக் கல்வியினல் லாபம் அடைபவர்.

### (Those who earn by medical practice.)

**வின:** சிலர் வைத்தியக்கலை மூலமாக (தற்காலம் ஆயுர்வேத வைத்தியம், ஆங்கிலவைத்தியம், யூனானிவைத்தியம் முதலிய வைத்தியத்தொழில்களினல், இப்பகுதிகளில் உத்தியோகம்புரிவதால்) அதிக லாபம் அடைகின்றனர். இது எதனல்?

**விடை:** சூரியன் செவ்வாய் சனி புத்தித்தானத்துக்கு அதிபராகி வாக்குத்தாஞதிபனுடன் கூடி 1, 3, 5, 10, 11 இவைகளில் இருந்தாலும், முற்கூறிய மூவரில் எவரேனும் புத்தித்தானத்தில் இருக்கப் புத்தித்தாஞதிபன் முயற்சித்தாஞதிபனுடன் கூடி உதயலக்கினத்தில் இருந்தாலும், முயற்சித்தாஞதிபன் ஆயுட்டானத்திலும் ஆயுட்டாஞதிபன் முயற்சித்தானத்திலும் இருக்க லாபத்தாஞதிபன் 1, 2, 9, 11-ல் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் ஜனித்தவர் வைத்தியத்தொழிலினல் (வைத்தியப்பகுதியில் உத்தியோகம்புரிவதனல்) மிகுந்த லாபம் பெறுவர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் செவ் சுக் கேது | புதன் | சனி | 11 |
| 7 | வைத்தியத் தொழிலினல் லாபம் அடைந்தவர் | | 12 |
| சந்திர | | | ல வியாழ |
| 5 | 4 | 3 | ராகு |

### 431. இரசாயனக் கல்வியினல் லாபம் அடைபவர்.

### (Those who earn by practising as chemists and analysts.)

**வின:** சிலர் இரசாயனக் கல்வியினல் (தற்காலம் இரசாயன பரிசோதனை செய்தலால்) லாபம் பெறுகின்றனர். இது எதனல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: புத்திக்காரணாதிபன் வாக்குத்தானாதிபனுடன் கூடிப் பரமோச்ச பாகங்களில் இருந்தாலும், புத்தித்தானாதிபன் லாபத்தானாதிபனுடன் கூடி 1, 5, 10, 11 இவைகளில் இருந்தாலும், புத்தித்தானாதிபனும் முயற்சித்தானாதிபனும் லாபத்தானாதிபனும் கூடி உதயகேந்திரத்தில் இருக்க உதயலக்கினாதிபன் 1, 5, 10, 11 இவைகளில் உச்சனாகி இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் இரசாயனக் கல்வியின் மூலம் (இரசாயனப் பரிசோதககராக இருப்பதனால்) லாபம் பெறுவர்.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | 7 | செவ்வா கேது |
| சந்திர | இரசாயன ஆராய்ச்சியினால் லாபம் அடைந்தவர் | | 9 |
| 3 | | | 10 |
| ராகு | ல சனி | சுக்கிரன் | சூரியன் புதன் வியாழ |

432. பயிர்த்தொழிற் கல்வியினால் லாபம் அடைபவர்.

(Those who earn by serving in the agricultural department.)

வினா: சிலர் தாவரசாஸ்திரத்தினால் (பயிர்த்தொழிற்பகுதியில் உத்தியோகம்புரிதலால்) அதிக லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

விடை: பூரணசந்திரன், கல்வித்தானாதிபன் லாபத்தானாதிபன் இருவருடனுங்கூடி 1, 5, 9, 10, 11 இவைகளில் இருந்தாலும், சந்திரன் தனது உச்ச நவாம்சத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் தாவரசாஸ்திரத்தினால் (பயிர்த்தொழிற்பகுதியில் உத்தியோகம்புரிதலினால்) லாபம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | ல | 2 | 3 |
| சூரியன் புதன் | பயிர்த்தொழிற் பகுதி உத்தியோகத்தினால் லாபம் அடைந்தவர் | | 4 |
| சந்திர சுக்கிரன் சனி | | | 5 |
| 9 | செவ்வா | வியாழ | கேது |

433. சோதிடக் கல்வியினால் லாபம் அடைபவர்.

(Those who earn by practising as astrologers.)

வினா: சிலர் சோதிடசாஸ்திரத்தினால் அதிக லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் ராகு | சூரியன் | புதன் வியாழ | 11 |
| செவ்வா | சோதிடத்தினல் லாபம் அடைந்தவர் | | 12 |
| 6 | | | ல சந்திர |
| 5 | 4 | 3 | சனி கேது |

விடை: புத்தித்தாஞதிபன் லாபத்தானத்திலும் லாபத்தாஞதிபன் வாக்குதானத்திலும் இருக்கப் புத்திதானத்தில் பலவாஞன சனி அல்லது வியாழன் சூரியன் புதன் இவர்களில் எவர் இருந்தாலும், உதயலக்கிஞதிபன் வாக்குத்தானத்திலேனும் திரிகோண கேந்திரங்களிலேனும் இருக்கப் புத்தித்தாஞதிபன் லாபத்தாஞதிபனுடன் கூடியேனும் நோக்கம்பெற்றேனும் கேந்திரங்களில் இருந்தாலும், வாக்குத்தானத்தில் பலவான்களான கிரகங்கள் இருக்க வாக்குத்தாஞதிபன் கேந்திர திரிகோணங்களில் பூரணபலத்துடன் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் சோதிடசாஸ்திரத்தினல் அதிக லாபம் பெறுவர்.

## 434. குறிசோல்வதனல் லாபம் அடைபவர்.
## (Those who earn by soothsaying.)

வினு: சிலர் தெய்வத்திருவருளால் ஆவேசங்கொண்டு பிறர் நினைத்தவைகளைச் சொல்லி அதன் மூலம் (மனுவசிய தத்துவசாஸ்திரங்கள் கற்று அம்முயற்சியினல்) லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| வியாழ | ராகு | 7 | 8 |
| 4 | குறிசொல்வதனல் லாபம் அடைந்தவர் | | சுக்கிரன் |
| செவ்வா | | | 10 |
| சந்திர | ல | கேது | சூரியன் புதன் சனி |

விடை: புத்தித்தானத்தில் உதயலக்கிஞதிபனும் லாபத்தாஞதிபனும் கூடிப் பூரணபலவான்களாக இருந்தாலும், புத்தித்தாஞதிபன் தன்னுடைய தானத்தில் இருந்து பலவாஞன லாபத்தாஞதிபனல் நோக்கம் பெற்றிருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் பிறர்மன ஆராய்ச்சி (Thought reading), மனுவசியம் (Hypnotism), ஆவேசமாடுதல் (Spirit mediumship), குறிசொல்லுதல் (Divination) முதலியவைகளால் மிக்க லாபம் அடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 435. மந்திரக்கல்வியினுல் லாபம் அடைபவர்.

(Those who earn by magical work.)

**வினு:** சிலர் மந்திரசாஸ்திரத்தினுல் லாபம் அடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

**விடை:** புத்திரத்தானத்தில் வாக்குத்தானுதிபன் முயற்சித்தானுதிபனுடன் சேர்ந்து இருக்க லாபத்தானுதிபன் வாக்குத்தானத்தில் இருந்தாலும், லாபத்தானுதிபன் சூரியன் செவ்வாய் சனி இவர்களில் ஒருவனுகிப் புத்திரத்தானத்தில் இராகுகேதுக்களுடன் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் மந்திரக் கல்வியினுல் லாபம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | 9 |
| சூரி சந் சனி ராகு | மந்திரக் கல்வியினுல் லாபம் அடைந்தவர் | | 10 |
| புதன் சுக்கிரன் | | | கேது |
| வியாழ | செவ்வா | ல | 12 |

### 436. சங்கீதக்கல்வியினுல் லாபம் அடைபவர்.

(Those who earn by musical work.)

**வினு:** சிலர் சங்கீதக் கல்வியினுல் அபரிமிதமான லாபம் அடைகின்றனர். இது எதனுல்?

**விடை:** சுகத்தானத்தில் (4-ம் இடத்தில்) சுக்கிரன் பலவானுக இருக்க, புதன் வியாழன் பூரணசந்திரன் இவர்கள் வாக்குத்தானத்தில் அமர, வாக்குத்தானுதிபன் லாபத்தானத்தில் அதிபனுடன் கூடியிருந்தாலும்; இன்பத்தானுதிபனும் (7-ம் இடத்தவனும்) சுக்கிரனும் கூடி வாக்குத்தானத்தில் இருக்க, வாக்குத்தானுதிபன் லாபத்தானுதிபனுடன் கூடினுலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் சங்கீதக் கல்வியினுல் திரவியலாபம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| கேது | 11 | சனி | ல சூரியன் புதன் |
| 9 | சங்கீதக் கல்வியினுல் லாபம் அடைந்தவர் | | வியாழ சுக்கிரன் |
| 8 | | | சந்திர செவ்வா |
| 7 | 6 | 5 | ராகு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 437. கணிதக்கல்வியினுல் லாபம் அடைபவர்.

(Those who earn by mathematical work.)

**வினு:** சிலர் கணிதக்கல்வியினுல் (உயர்தரக் கல்லூரிகளில் கணிதப்பகுதியில் உத்தியோகம் வகிப்பதால்) லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

**விடை:** புத்தித்தானுதிபன் லாபத்தானுதிபனோடு கூடிப் புதன் வீட்டில் பூரணபலவானுக இருந்தாலும், புதன் புத்தித்தானுதிபனுகி லாபத்தானுதிபனுடன் கூடிப் பரமோச்சபாகத்தில் அல்லது உச்சநவாம்சத்தில் இருந்தாலும், புத்தித்தானத்தில் உச்சக்கிரகம் இருக்கப் புத்திநாதன் லாபத்தானுதிபனுடன்கூடிக் கேந்திரதிரிகோணங்களில் இருந்தாலும் இங்கிலையில் உத்தவர் கணிதசாஸ்திரங்களின் மூலம் லாபம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் செவ்வா கேது | சூரியன் சந்திர புதன் | சனி | ல |
| 9 | கணிதக் கல்வியினுல் லாபம் அடைந்தவர் | | 2 |
| 8 | | | வியாழ |
| 7 | 6 | 5 | ராகு |

## 438. சனத்தலைமை வகித்தலால் லாபம் அடைபவர்.

(Those who earn by supervising local administration.)

**வினு:** சிலர் பொதுஜனங்களுக்குத் தலைமைவகித்தலினுலும் (தற்காலம் பொலிஸ்தலைவர், மாகாணத்தலைவர், தேசாதிபதி) தேசபரிபாலனம் அல்லது கிராமபரிபாலனம் செய்தலினுலும் லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** வீரியத்தானுதிபன் (3-ம் இடத்ததிபன்) முயற்சித்தானத்தில் இருக்க முயற்சித்தலைவன் லாபத்தானத்தில் இருந்தாலும், 3-ம் இடத்ததிபனும் லாபத்தானுதிபனும் கூடித் திரிகோணகேந்திர திரவிய லாபத்தானங்களில் உச்சம் முதலியனவைகளாற் பலவான்கவுாக இருந்தாலும், கீர்த்தித்தானத்தில் (12-ம் இடத்தில்) இருந்தாலும்,

| | | | |
|---|---|---|---|
| வியாழ | ராகு | 6 | 7 |
| செவ்வா | சனத்தலைமை வகித்தலால் லாபம் அடைந்தவர் | | சந்திர |
| 2 | | | சுக்கிரன் |
| ல | 12 | சூரியன் புதன் கேது | சனி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயலக்கினாதிபன் விரியத்தானாதிபன் லாபத்தானாதிபன் இம்மூவரும் கேந்திரங்களில் உச்சமாக இருந்தாலும், 3, 11-க்கு அதிபர் உதயத்திற் பூரணபலத்துடன் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் தேசபரிபாலனம், நகரபரிபாலனம், கிராமபரிபாலனம் செய்தலினால் (மேல்வினாவியவாறு பொலிஸ்தலைவர், அல்லது சேனைத்தலைவர், மாகாணத்தலைவர், தேசத்தலைவர் முதலிய பதவிகளால்) லாபம் அடைவர்.

## 439. சகலவித வியாபாரத்திலும் விசேஷலாபம் அடைபவர்.

(Those who make much profit in all kinds of trade.)

**வினா:** சிலர் சகல வியாபாரத்திலும் விசேஷலாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** சுகத்தானாதிபனும் (4-ம் இடத்தவனும்) லாபத்தானாதிபனும் கூடித் திரவியத்தானத்தில் பலவான்களாக இருந்தாலும் திரவியத்தானாதிபனும் சுகத்தானாதிபனும் கூடி லாபத்தானத்திலிருந்தாலும், லாபத்தானாதிபன் சுகத்தானாதிபனுடன் வீடுமாறி இருந்தாலும், லாபத்தானத்தில் எல்லாக் கிரகங்களும் இருந்தாலும் இது போன்ற நிலைமையிற் பிறந்தவர் எந்த வியாபாரம் செய்யினும் விசேஷ லாபம் பெறுவர்.

| | | | |
|---|---|---|---|
| வியாழ சுக்கிரன் | ராகு | 4 | 5 |
| ல சூரியன் புதன் | வியாபாரத்தால் திரவியலாபம் அடைந்தவர் | | 6 |
| 12 | | | 7 |
| சந்திர | செவ்வா | கேது | சனி |

## 440. காடுபடு திரவிய வியாபாரத்தினால் லாபம் அடைபவர்.

(Those who earn by the trade of forest produces.)

**வினா:** சிலர் காட்டுப்பொருள் வியாபாரத்தினால் (மரம், விறகு, கொம்பு, தேன், கஸ்தூரி, புனுகு, மயிற்பீலி முதலிய வஸ்துக்களைச் சேகரித்து விற்பதினால்) அதிக லாபம் உடையவராய்க் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: வியாபாரத்தானதிபன் சூரியனுடன் சேர்ந்து திரிகோண கேந்திரங்களிலேனும் திரவிய லாபத் தானங்களிலேனும் இருக்க, லாபத் தானதிபன் திரவிய பாக்கிய லாபத் தானங்களில் இருக்கப் பிறந்தவர் காடுபடு திரவியங்களின் வியாபாரத்தினல் அதிக லாபம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | ராகு | 8 |
| 4 | காட்டுப்பொருள் விற்பனையால் லாபம் அடைந்தவர் | | 9 |
| வியாழ | | | சூரியன் சனி |
| 2 | ல செவ்வா கேது | 12 | சந்திர புதன் சுக்கிரன் |

441. கடல்படு திரவிய வியாபாரத்தினல் லாபம் அடைபவர்.

(Those who earn by the trade of sea-produces.)

வின: சிலர் கடலில் உள்ள பொருட்களைச் சேகரித்து விற்பதினல் (சங்கு, பவளம், மீன், மீனம்பர், அரக்கம்பர், முத்து, உப்பு முதலிய வஸ்துக்களின் வியாபாரத்தினல்) அதிக லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: வியாபாரத்தானதிபன் சந்திரனுடன் கூடித் திரவிய லாபத்தானங்களில் இருக்க, லாபத் தானதிபன் சனியுடன் கூடித் திரிகோண கேந்திரங்களில் இருந்தாலும், நவாம்சத்திற் சந்திரன் பூரணபலவானகிச் சனியின் வீட்டில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் கடல்படு திரவியங்களின் வியாபாரம் செய்யின் அமோகமான லாபங்களை அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | கேது | 5 |
| ல | முத்து வியாபாரத்தால் திரவியலாபம் அடைந்தவர் | | 6 |
| 12 | | | 7 |
| சந்திர சூரி புத செவ்வா வியாழ சுக்கிரன் சனி ரா | | 9 | 8 |

442. புஸ்தக வியாபாரத்தினல் லாபம் அடைபவர்.

(Those who earn by the book trade.)

வின: சிலர் புஸ்தகவியாபாரத்தினல் அதிக பொருள்லாபம் அடைகின்றனர். இது எதனல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| சந்திர புதன் | வியாழ சுக்கிரன் | 12 | ல |
| சூரியன் கேது | புஸ்தக வியாபாரத் தினால் லாபம் அடைந்தவர் | | 2 |
| சனி | | | ராகு |
| 7 | 6 | செவ்வா | 4 |

விடை: வியாபாரத்தானாதிபன் கல்வித்தானாதிபனுடன் கூடியேனும் புதனுடன் கூடியேனும் இவ்விருவரில் ஒருவருடைய நோக்கம் பெற்றேனும் முயற்சித்தானத்தில் இருக்க, முயற்சினாதன் லாபத்தானத்தில் அமர, லாபத்தலைவன் திரிகோண கேந்திரங்களில் இருந்தாலும்; நவாம்சத்தில் இவ்வகை இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் புத்தகம் கொள்ளல் விற்றல் முதலியவைகளால் அதிக லாபம் அடைவர்.

443. தங்கம் வெள்ளி வியாபாரத்தினால் லாபம் அடைபவர்.

(Those who earn by dealing in gold and silver jewels.)

வினா: சிலர் பொன் வெள்ளி வியாபாரத்தினால் (இரத்தினக் கற்கள் பதித்த நகைகளை வாங்கல் விற்றலினால்) அதிகலாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| வியாழ சுக்கிரன் கேது | சூரியன் செவ்வா புதன் | சந்திர | 12 |
| 8 | நகைவியாபாரத் தினால் லாபம் அடைந்தவர் | | ல |
| சனி | | | 2 |
| 6 | 5 | 4 | ராகு |

விடை: வியாபாரத்தானாதிபனும் (4-ம் இடத்தவனும்) வியாழனும் கூடித் திரிகோண கேந்திரங்களில் அல்லது பரமோச்சபாகங்களில் இருக்க, லாபத்தானாதிபன் உதயலக்கினத்திலேனும் வியாபாரத்தானத்திலேனும் பாக்கியத்தானத்திலேனும் இருந்தாலும், வியாபாரத்தானாதிபனை நோக்கினாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் பொன், (தற்காலம் தங்கநாணயம்) இரத்தினாபரணங்கள் இவைகளைக் கொள்ளல் கொடுத்தல்களினால் அதிக லாபத்தை அடைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 444. உணவுப்பொருள் வியாபாரத்தினுல் லாபம் அடைபவர்.
(Those who earn by dealing in food products.)

**வினு:** சிலர் அரிசி, நெல், பலவிதக் கறிவகைகள், பருப்பு வகைகள், காய் கனி கிழங்கு வர்க்கங்கள் முதலான உணவுப் பதார்த் தங்களை வியாபாரஞ்செய்து அதிகமான பொருள்லாபம் பெறுகின் றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | ராகு | 9 |
| 5 | அரிசி நெல் வியாபாரத்தினுல் அதிக லாபம் அடைந்தவர் | | சந்திர |
| செவ்வா வியாழ | | | சனி |
| 3 | சுக்கிரன் கேது | ல சூரியன் புதன | 12 |

**விடை:** உணவுத்தானுதிபன் (2-ம் இடத்தவன்) 4-ம் இடத்தி லும் 4-ம் இடத்ததிபன் லாபத் தானத்திலும் இருக்க லாபத்தா னத்ததிபன் உதயலக்கினத்தில் இருந்தாலும், பாக்கியத்தானத்தி லேனும் திரவியத் தானத்திலே னும் இருந்தாலும், வியாழனுடன் கூடிக் கேந்திரங்களில் பலமேறியி ருந்தாலும் இங்ஙிலைமையில் உதித் தவர் அரிசி நெல் முதலிய உணவுப்பொருள் வியாபாரத்தினுல் அதிகலாபம் அடைவர்.

## 445. புடைவை வியாபாரத்தினுல் லாபம் அடைபவர்.
(Those who earn by the cloth trade.)

**வினு:** சிலர் புடைவை வியாபாரத்தினுல் லாபம் அடைகின் றனர். இது எதனுல்?

| | | | |
|---|---|---|---|
| 8 | புதன் சுக்கிரன் | சூரியன் ராகு | செவ்வா |
| வியாழ | புடைவை வியாபாரத்தினுல் லாபம் அடைந்தவர் | | 12 |
| 6 | | | ல சனி |
| சந்திர | கேது | 3 | 2 |

**விடை:** பாக்கியத்தானுதிபனும் 4-ம் இடத்ததிபனும் லாபத் தானத்தில் இருக்க, லாபத்தானு திபன் சுக்கிரன் அல்லது வியாழ னுடன் கூடி உதயலக்கினத்தில் அல்லது 9-ம் இடத்தில் இருந்தா லும், 9-வது நவாம்சத்தில் உதய லக்கினுதிபன் முயற்சித்தானுதி பன் லாபத்தானுதிபன் இம்மூவ ரும் கூடியிருக்க 9-வது அம்சாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன் 4-வது அம்சத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் புடைவை வியாபாரத்தினால் அதிக லாபம் அடைவர்.

### 446. அந்நியதேசப்பொருள் வியாபாரத்தினால் லாபம் அடைபவர்.

(Those who earn by the foreign goods trade.)

**வினா:** சிலர் அன்னியதேசப் பொருட்கள் (புகையிலை, சுருட்டு, பீடி, சிகரெற், தேயிலை, கோப்பி, றப்பர், மண்ணெண்ணெய், சிமென்ற் முதலிய தற்கால நவீன வஸ்துக்களை விற்றலினால்) அதிக லாபம் அடைகின்றனர். இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| வியாழ கேது | 11 | 12 | ல சூரியன் புதன் |
| 9 | அன்னியதேசப் பொருள் விற்பனையால் லாபம் அடைந்தவர் | | சுக்கிரன் |
| சனி | | | சந்திர |
| 7 | 6 | 5 | செவ்வா ராகு |

**விடை:** சனி செவ்வாய் லாபத்தானத்திற்கு அதிபராகி இராகுகேதுக்களுடன் கூடி வியாபாரத்தானத்தில் (4-ம் இடத்தில்) இருந்தாலும், அந்த 4-ம் இடத்ததிபனுடன் கூடி உதய பாக்கியத் தானங்களில் இருந்தாலும் இது போன்ற நிலைமையில் உதித்தவர் அன்னியதேசப் பொருட்களை வியாபாரஞ்செய்து அதனால் அதிக லாபம் அடைவர்.

### 447. இரும்பு வியாபாரத்தினால் லாபம் அடைபவர்.

(Those who earn by the iron trade.)

**வினா:** சிலர் இரும்புவியாபாரத்தினால் (இரும்பினால் செய்யப் பெற்ற வாகனங்கள்—இக்காலம் சைக்கிள்வண்டி, மோட்டோர்வண்டி, நெற்குத்தும் யந்திரம், நீராவியந்திரம், நீர் இறைக்கும் யந்திரம் முதலிய யந்திரக்கருவிகள் மூலம்) கோடிலாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடை:** சனி முயற்சித்தானத்திற்கதிபனாகி லாபத்தானாதிபனுடன் கூடிப் பலவானாகி இருந்தாலும், சனி திரவிய வியாபாரத்தானங்களுக்கு அதிபனாகித் திரிகோண கேந்திரங்களில் அல்லது லாபத்தானத்தில் இராகுவுடன் கூடிப் பலவானாக இருந்தாலும், சனிஇராகு லாபத்தானாதிபனுடன் கூடித் திரவிய வியாபார பாக்கியத்தானங்களிற் பூரணபலத்துடன் இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் மேல்வினவியவண்ணம் இரும்பு வியாபாரத்தினாலும், இயந்திரங்கள் இயற்றுதல், விற்பனைசெய்தல், அவற்றைப் பயிற்சிசெய்தல், டிரைவர் அல்லது ஆப்பரேற்றர் தொழில்செய்தல் முதலிய இவைகள் மூலம் அதிர்ஷ்டலாபம் அடைந்து கோடீஸ்வரராக விளங்குவர்.

| | | | |
|---|---|---|---|
| 8 | 9 | கேது | 11 |
| 7 | இரும்பு வியாபாரத்தினால் லாபம் அடைந்தவர் | | 12 |
| 6 | | | ல சந்திர |
| 5 | செவ்பத சனி ராகு | சூரியன் வியாழ சுக்கிரன் | 2 |

## 448. மிருக வியாபாரத்தினால் லாபம் அடைபவர்.

(Those who earn by the animal trade.)

**வினா:** சிலர் மிருக வியாபாரங்களினால் (எருமை, குதிரை, யானை, ஒட்டகம், ஆடு, மாடு முதலிய விலங்கினங்களை விற்பனை செய்தல் முதலியவைகளால்) அளவிறந்த பொருள் சம்பாதிக்கின்றனர். இதற்குக் காரணம் யாதோ?

**விடை:** பாபக்கிரகங்களுடைய தொடர்பின்றி 4-ம் இடத்ததிபன் லாபத்தானாதிபனுடன் கூடி உதய பாக்கியலாபத்தானங்களில் இருக்க 4-ம் இடத்தில் வியாழனுடன் சந்திரன் அல்லது சுக்கிரன் பலவான்களாக இருந்தாலும், 4-ம் இடத்ததிபன் உதய பாக்கியலாபத்தானாதிபருடன்கூடித் திரவியத்தானத்தி

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | 2 | ராகு |
| சந்திர சனி | மிருகவியாபாரத்தினால் லாபம் அடைந்தவர் | | வியாழ சுக்கிரன் |
| 10 | | | சூரியன் புதன் |
| செவ்வா கேது | 8 | 7 | 6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேனும் வியாபாரத்தானத்திலேனும் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் மிருகவியாபாரம் செய்யின் அதனால் அளவிறந்த லாபம் அடைவர்.

## 449. மாமிச வியாபாரத்தினால் லாபம் அடைபவர்.

(Those who earn by dealing in meat.)

**வினா:** சிலர் மாமிசம், தோல், எலும்பு, கொழுப்பு, மீன்வகை முதலியவைகளை விற்றலினால் பெரும் பொருள்லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| 12 | ல சனி | சூரி சந் புத வியா சுக்ர கே | 3 |
| 11 | இறைச்சிக் கடையினால் | | செவ்வா |
| 10 | லாபம் அடைந்தவர் | | 5 |
| 9 | ராகு | 7 | 6 |

**விடை:** உதய லக்கினாதிபனும் முயற்சித் தானாதிபனும் நீசத்துவம் அடைந்து எத்தானத்திலாவது இருக்க, லாபத்தானாதிபதி 2-ம் 4-ம் இடத்திற்கு அதிபருடன் கூடி 2, 4, 9 (திரவியம், வியாபாரம், பாக்கியம்) ஆகிய ஸ்தானங்களில் இருந்தாலும், உதய லக்கினத்திலும் முயற்சித் தானத்திலும் நீசக் கிரகங்கள் இருக்க, 2-ம் 4-ம் இடங்களுக்கு அதிபர் லாபத்தானாதிபனுடன் கூடித் திரிகோண கேந்திரங்களில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் மாமிச வியாபாரத்தினால் (கசாப்புக் கடையினால்) அதிக லாபம் அடைவர்.

## 450. மதுபான வியாபாரத்தினால் லாபம் அடைபவர்.

(Those who earn by the liquor trade.)

**வினா:** சிலர் மதுபான வியாபாரத்தினால் அதிக லாபம் அடைகின்றனர். இது எதனால்?

**விடை:** உதய லக்கினாதிபனும் முயற்சித் தானாதிபனும் நீசாம்சத்தில் இருக்க லாபத்தானாதிபன் உச்சாம்சத்தில் இருந்தாலும், புத்தித்தானாதிபன் (5-ம் இடத்ததிபன்) நீசனாகிப் பாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தானத்தில் இருக்க, சூயற்சித் தானுதிபன் நீசனுகி லாபத்தானத்திலும் லாபத்தானுதிபன் நீசனுகித் திரவியத்தானத்திலும் இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் மதுபானவகைகளை (தற்காலம் சோரக்கஞ்சா, அபின் இவைகள் போன்ற லாகிரிவஸ்துக்களை) வியாபாரஞ்செய்து அதனுல் லக்ஷாதிபதிகளாவர்.

| | | | |
|---|---|---|---|
| ல ராகு | 2 | வியாழ | 4 |
| சந்திர புதன் சுக்கிரன் | மதுபான விற்பனையால் லாபம் அடைந்தவர் | | 5 |
| சூரியன் | | | 6 |
| செவ்வா | 9 | சனி | கேது |

451. தேவாலயங்களால் லாபம் அடைபவர்.

(Those who earn by temple management.)

**வினு:** சிலர் தேவாலயங்கள் மூலம் பொருள்லாபம் அடைகின்றனர். இது எதனுல்?

**விடை:** தருமத்தானுதிபன் (9-ம் இடத்ததிபன்) லாபத்தானத்திலும் லாபத்தானுதிபன் தருமத்தானத்திலுமாகப் பரிவர்த்தனமாக இருந்தாலும், வியாழன் தருமலாபத் தானுதிபருடன் கூடித் திரிகோண கேந்திரங்களில் இருந்தாலும், தருமத்தானுதிபன் லாபத்தானத்தில் இருக்க லாபத்தானுதிபன் உதயகேந்திரத்தில் இருந்தாலும், இவ்வாறு நவாம்சத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் தேவாலயங்கள் மூலம் லாபம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | 4 | சனி |
| ல கேது | தேவாலயத்தின் மூலம் லாபம் அடைந்தவர் | | 6 |
| சந்திர செவ்வா | | | ராகு |
| சூரியன் சுக்கிரன் | புதன் | வியாழ | 8 |

452. நூதன கைத்தொழில்களால் லாபம் அடைபவர்.

(Those who earn by curious handicrafts.)

**வினு:** சிலர் நூதன கைத்தொழில்களால் அதிக லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: 4-ம் இடத்திற்கு அதிபன் கேதுவுடன் கூடித் திரிகோணங்களில் அல்லது திரவிய லாபத் தானங்களில் இருக்க லாபத் தானதிபன் முயற்சித்தானத்தில் இருந்தாலும், முயற்சித்தானத்தில் சுபக்கிரகங்களிருக்க முயற்சிலாபத் தானத்ததிபர் உதயகேந்திரத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் நூதன கைத்தொழில்களால் பெரும் லாபம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | 6 | சந்திர வியாழ | 8 |
| 4 | நூதன கைத் தொழிலினுல் லாபம் அடைந்தவர் | | 9 |
| 3 | | | சூரியன் செவ்வா புதன் |
| 2 | ல | 12 | சுக்கிரன் சனி கேது |

## 453. கைலஞ்சம் வாங்குதலினுல் லாபம் அடைபவர்.

(Those who earn by practising bribery.)

வினு: சிலர் (வியாச்சியங்களின் மூலம்) கைலஞ்சம் வாங்குதலினுல் அதிக லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

விடை: திரவியத்தானத்தில் சனிஇராகுக்கள் இருக்க, திரவியத்தானதிபதி பாக்கிய லாபத் தானங்களில் இருக்க, லாபத்தானதிபன் உதய திரவிய பாக்கியத் தானங்களில் நீசத்துவம் அடைந்திருக்கப் பிறந்தவர் வழக்கோரஞ் சொல்லிக் கைலஞ்சம் வாங்குதலினுல் நிரம்பிய லாபம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 10 | 11 | 12 | ல |
| சந்திர | கைலஞ்சம் வாங்குவதனுல் லாபம் அடைந்தவர் | | செவ்வா சனி ராகு |
| கேது | | | 3 |
| 7 | 6 | புதன் வியாழ | சூரியன் சுக்கிரன் |

## 454. பலதுறைகளிலும் லாபம் அடைபவர்.

(Those who make profits by various means.)

வினு: சிலர் பலவிதமான துறைகளிலும் லாபம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: லாபத்தானதிபன் பாக்கியத்தானத்திலும் பாக்கியத்தானதிபன் திரவியத்தானத்திலும் திரவியத்தானதிபன் உதய லக்கினத்திலுமாக இருந்தாலும், இந்நால்வரும் கூடி உதயலக்கினத்திலேனும் திரவியத்தானத்திலேனும் பாக்கியத்தானத்திலேனும் லாபத்தானத்திலேனும் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் பலதுறைகளிலும் லாபத்தையே அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | 6 | சனி | சூரியன் சுக்கிரன் |
| 4 | பல துறைகளிலும் லாபமடைபவர் | | செவ்வா புதன் |
| 3 | | | 10 |
| சந்திர | ல வியாழ | 12 | கேது |

## லாபத்தின் உபயோகம்

455. லாபத்தைத் தருமங்களுக்குச் செலவிடுபவர்.

(Those who spend their earnings on charity.)

வினா: சிலர் தங்களுக்கு லாபமாக வரும் பொருட்களையெல்லாம் புண்ணிய விஷயங்களுக்கே செலவுசெய்துவருகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: தருமத்தானத்தில் (9-ம் இடத்தில்) ஆட்சி புரியும் ஸ்தானாதிபதியுடனே லாபத்தானதிபனும் செலவுத்தானதிபனும் சேர்ந்திருந்தாலும், லாப செலவுத் தானதிபர்கள் தருமத்தானத்தில் இருக்க தருமத்தானதிபன் லாபத்தானத்திலேனும் செலவுத்தானத்திலேனும் இருந்தாலும், புத்தித்தானதிபதியும் தருமத்தானதிபதியும் செலவுத்தானதிபதியும் கூடி லாபத்தானத்திலிருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் எப்பொழுதும் தங்கள் லாபங்களைத் தரும காரியங்களிலேயே உபயோகிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 8 | சூரியன் புதன் | சுக்கிரன் | சந்திர செவ்வா வியாழ |
| ராகு | லாபத்தைத் தருமங்களுக்கே உபயோகிப்பவர் | | 12 |
| 6 | | | ல கேது |
| 5 | 4 | சனி | 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 456. லாபத்தை மனைவியின்பொருட்டுச் செலவிடுபவர்.

(Those who spend their earnings on their wives.)

**வினா:** சிலர் தங்கள் லாபங்களை மனைவியின்பொருட்டு (அல்லது போகசுகத்துக்காகவே) செலவுசெய்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** இலக்கினாதிபதியும் லாபத்தானாதிபதியும் கூடிக் களத்திரத்தானத்தில் (7-ம் இடத்தில்) இருக்கப் பிறந்தவர் தமது லாபங்களைத் தமக்கு இன்பசுகந்தரும் மனைவியர்க்கே ஈவர்.

### 457. லாபத்தைப் பிறர்க்குப் பறிகொடுப்பவர்.

(Those who are deprived of their earnings by others.)

**வினா:** சிலர் தங்கள் லாபப் பொருட்களைப் பிறருக்குப் பறிகொடுக்கின்றனர். இதற்குக் காரணம் என்ன?

**விடை:** லாபத்தானாதிபதியும் வியாழனும் செலவுத்தானாதிபனுடன் கூடிச் சத்துருத்தானத்தில் (6-ம் இடத்தில்) இருக்கப் பிறந்தவர் தமது லாபத்தைப் பிறர் அபகரிக்க விடுவர்.

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் கேது | 8 | 9 | 10 |
| சூரியன் சந்திர வியாழ | லாபத்தைப் பிறருக்குப் பறிகொடுப்பவர் | | 11 |
| புதன் சனி | | | 12 |
| 4 | 3 | 2 | ல செவ்வா ராகு |

## பன்னிரண்டாம் பாவ பலன்

### செலவு

### 458. அலங்காரத்தின்பொருட்டு அதிக செலவுசெய்பவர்.

(Those who spend much for personal embellishment.)

**வினா:** சிலர் தங்கள் தேகத்தை அலங்கரிக்கும் விஷயங்களிலேயே பொருட்செலவு உடையவராகக் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: செலவுத்தானாதிபதி (12-ம் இடத்துக்கதிபன்) உதயலக்கினாதிபதியுடன் கூடினாலும் நோக்கினாலும் இந்நிலைமையில் உதித்தவர் தங்கள் தேகத்தை அலங்கரிக்கும் விஷயத்திலேயே பொருளைச் செலவுசெய்வர்.

| | | | |
|---|---|---|---|
| 11 | கேது | ல செவ்வா சுக்கிரன் | சூரியன் புதன் |
| 10 | தேகத்தை அலங்கரிப்பதிலேயே செலவு செய்பவர் | | சந்திர |
| வியாழ | | | 4 |
| சனி | 7 | ராகு | 5 |

459. கல்வியின்பொருட்டு அதிக செலவுடையவர்.

(Those who spend much for education.)

வினா: சிலர் கல்வியின்பொருட்டு (கல்விச்சாலை ஸ்தாபித்தல், கல்விகற்பித்தல் முதலிய வித்தியாதான விஷயமாக) அதிக பொருளைச் செலவுசெய்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: உதயலக்கினாதிபனும் செலவுத்தானாதிபனும் புதனும் கூடிக் கல்வித்தானத்தில் (2-ம் இடத்தில்) அமரக் கல்வித்தானாதிபன் முயற்சித்தானத்தில் இருந்தாலும், செலவுத்தானாதிபன் கல்வித்தானாதிபனுடன் கூடித் திரிகோண கேந்திரங்களில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் கல்விவிஷயங்களிலேயே தம் பொருளைச் செலவுசெய்வர்.

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | 8 | கேது |
| சந்திர | வித்தியா தானத்திற்காக வேத பொருள் செலவிட்டவர் | | செவ்வா |
| 4 | | | 11 |
| ராகு | சூரி புத சுக்கிரன் சனி | ல வியாழ | 12 |

460. குடும்பத்தின்பொருட்டு அதிக செலவுடையவர்.

(Those who spend much for their family.)

வினா: சிலர் அதிகமான குடும்பச்செலவை உடையவராய்ச் சீவிக்கின்றனர். இது எதனால்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: செலவுத்தானதிபன் (12-ம் இடத்ததிபன்) குடும்பத்தானத்தில் (2-ம் இடத்தில்) இருக்க, குடும்பத்தானதிபன் செலவுத்தானத்தில் இருக்கப் பிறந்தவர் குடும்பத்தின்பொருட்டு அதிகமான பொருட்செலவை உடையவராவர்.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | சந்திர | செவ்வா கேது |
| சூரியன் புதன் | குடும்பத்தின் பொருட்டு அதிகசெலவு உடையவர் | | 9 |
| 3 | | | 10 |
| சுக்கிரன் ராகு | ல சனி | வியாழ | 11 |

## 461. சகோதரராற் பொருட்சேலவுடையவர்.

(Those who spend much for their brothers and sisters.)

வினு: சிலர் சகோதரர் மூலம் அதிக பொருட்சேதம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: செலவுத்தானதிபன் சத்துருத்தானதிபனுடன் கூடிச் சகோதரத்தானத்தில் பகைநீசமாக இருந்தாலும், சகோதரத்தானதிபன் சத்துருத்தானதிபனுடன் கூடிச் செலவுத்தானத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் சகோதரர் மூலம் பொருட்சேதம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 11 | சந்திர சுக்கிரன் | ல புதன் | சூரியன் |
| 10 | சகோதரராற் பொருட்சேதம் அடைந்தவர் | | செவ்வா கேது |
| ராகு | | | வியாழ |
| 8 | 7 | சனி | 5 |

## 462. பந்துக்களாற் பொருட்சேலவுடையவர்.

(Those who spend much for their relatives.)

வினு: சிலர் பந்துக்கள் மூலம் பொருட்சேதம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | செவ்வா | வியாழ |
| சூரி புத சுக்கிரன் ராகு | பந்துக்களின் பொருட்டு அதிக செலவு செய்தவர் | | 9 |
| சந்திர | | | கேது |
| 2 | ல | சனி | 11 |

விடை: செலவுத்தானாதிபன் இராகுகேதுக்களுடன் கூடிக்கொண்டு பந்துத்தானத்தில் (4-ம் இடத்தில்) இருந்தாலும், 4-ம் இடம் செலவுத்தானாதிபனுடைய நோக்கம்பெற்றாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் பந்துஜனங்களை இரக்ஷிப்பதன் மூலம் அதிக செலவுசெய்வர்.

## 463. சினேகராற் பொருட்செலவுடையவர்.

(Those who spend much for their friends.)

வினா: சிலர் சினேகிதர்பொருட்டுப் பொருட்சேதம் அடைகின்றனர். இது எதனால்?

விடை: நவாம்சத்தில் 4-ம் இடத்தவனுடன் செலவுத்தானாதிபன் கூடியிருக்கப் பிறந்தவர் சினேகிதர்மூலம் பொருட்சேதம் அடைவர்.

## 464. வீடுகள் கட்டுவதனாற் பொருட்செலவுடையவர்.

(Those who spend much in building new houses.)

வினா: சிலர் அடிக்கடி வீடுகட்டும் விஷயத்திலே அதிகமான பொருட்களைச் செலவுசெய்துவருகின்றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 10 | சூரியன் சனி | புதன் வியாழ சுக்ர கே | ல |
| சந்திர | வீடுகள் கட்டுவதனால் பெரும் பொருள் செலவிட்டவர் | | செவ்வா |
| 8 | | | 3 |
| 7 | ராகு | 5 | 4 |

விடை: வியாழன் 10-ம் இடத்திற்கு அதிபதியாகிச் செலவுத்தானாதிபனுடன் கூடி மனைத்தானத்தில் (4-ம் இடத்தில்) இருந்தாலும், வீட்டுத்தானாதிபன் வியாழன் செலவுத்தானாதிபன் இவர்களுடன் கூடிச் செலவுத்தானத்தில் இருந்தாலும், நவாம்சத்தில் 4-ம் இடத்ததிபன் செலவுத்தானாதிபனுடன் கூடி 9-ம் இடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் இது போன்ற நிலைமையில் உதித்தவர் பலவிதமான வீடுகள் கட்டுவதிலேயே அதிக பொருளைச் சிந்துவர்.

### 465. வாகனங்களாற் பொருட்செலவுடையவர்.

### (Those who spend much on vehicles.)

**வினு:** சிலர் வாகனங்களின் பொருட்டு அதிக பொருட்சேதம் அடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | சந்திர வியாழ | 8 | 9 |
| சூரியன் கேது | வாகனங்களால் அதிக பொருட் செலவுடையவர் | | 10 |
| புதன் சனி | | | ராகு |
| 3 | 2 | ல செவ்வா | 12 |

விடை: வாகனத்தானதிபன் (4-ம் இடத்ததிபன்) செலவுத்தானதிபன் சனி இருவருடனும் கூடி எங்கேயிருந்தாலும், வாகனத்தானத்தில் சனி செலவுத்தானதிபனுடன் கூடி இருந்தாலும், வாகனத்தானதிபன் செலவுத்தானதிபனுடைய நோக்கம்பெற்றாலும் இது போன்ற நிலைமையில் உதித்தவர் அடிக்கடி வாகனங்களின் பொருட்டுப் பொருட்சேதம் அடைபவராகக் காணப்படுவர்.

### 466. புத்திரராற் பொருட்செலவுடையவர்.

### (Those who spend much for thier children.)

**வினு:** சிலர் புத்திரர்மூலம் பொருட்சேதம் அடைபவராகக் காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 |
| 7 | புத்திரர் பொருட்டு அதிக செலவு செய்தவர் | | சனி ராகு |
| கேது | | | ல சூரி புத சுக்கிரன் |
| 5 | சந்திர வியாழ | செவ்வா | 2 |

**விடை:** செலவுத்தானதிபன் மைகைநீசத்துவம் படைத்துப் புத்திரத்தானதிபனுடன் (5-ம் இடத்ததிபனுடன்) கூடியிருந்தாலும், செலவுத்தானதிபன் மேற்படி ஸ்தானத்தையும் ஸ்தானதிபனையும் நோக்கினுலும் இந்நிலைமையிற் பிறந்தவர் புத்திரர்பொருட்டுத் தம் பொருளைச் செலவழிப்பவராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 467. நோயினுற் பொருட்செலவுடையவர்.

## (Those who spend much threugh illness.)

வினு: சிலர் நோய் காரணமாகப் பொருட்சேதம் அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: செலவுத்தானுதிபன் ரோகத் தானத்திலேனும் 8-ம் இடத்திலேனும் இருந்தாலும், சனியுடன் கூடி 8-ம் இடத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் வியாதியின் பொருட்டு வெகு பொருட்சேதம் அடைவர்.

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | கேது | சந்திர |
| 11 | வியாதியினுற் பொருட்சேதம் அடைந்தவர் | | 4 |
| 10 | | | 5 |
| சூரியன் செவ்வா சுக்கிரன் | புதன் வியாழ சனி ரா | 7 | 6 |

## 468. புண்ணிய காரியங்களில் அதிக செலவுடையவர்.

## (Those who spend much cn charity.)

வினு: சிலர் புண்ணிய காரியங்களில் அதிகம் பொருளைச் செலவுசெய்கின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

விடை: இலக்கினுதிபதி செலவுத்தானுதிபனுடன் கூடிப் பலம் பொருந்தி 9-ம் இடத்தில் இருந்தாலும், செலவுத்தானுதிபன் உதயலக்கினத்தில் இருக்க உதயலக்கினுதிபன் பாக்கியத்தானுதிபனுடன் கூடிச் செலவுத்தானத்தில் இருந்தாலும், புத்தித்தானுதிபன் (5-ம் இடத்ததிபன்) பாக்கியத்தானுதிபனுடன் கூடிச் செலவுத்தானத்தில் இருக்கச் செலவுத்தானுதிபன் புத்தித்தானத்தில் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் தினமும் புண்ணிய காரியங்களில் தம் பொருளைச் செலவுசெய்வதிலேயே இலட்சியம் உடையவராக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| செவ்வா சுக்கிரன் கேது | சூரியன் சந்திர புதன் | சனி | 11 |
| 7 | புண்ணிய காரியங்களில் அதிக பொருள் செலவு செய்தவர் | | 12 |
| 6 | | | ல வியாழ |
| 5 | 4 | 3 | ராகு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 469. தேவாலயங்கள் அமைத்தலிற் செலவுடையவர்.

(Those who spend much in building temples.)

வினா: சிலர் தேவாலயங்களின் பொருட்டுத் தம் பொருளைச் செலவு செய்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: தருமத்தானாதிபனும் செலவுத்தானாதிபனும் கூடி வியாழனுடன்சேர்ந்து உதயலக்கினத்திலேனும் முயற்சித் தானத்திலேனும் இருந்தாலும், தருமத்தானாதிபன் புத்தித்தானத்தில் இருக்கப் புத்தித்தானாதிபன் லாபத்தானத்தில் அமர இருவருமையுஞ் செலவுத் தானாதிபனும் வியாழனும் சேர்ந்தாலும் நோக்கினாலும், நவாம்சத்தில் இவ்வகை இருந்தாலும் இதிற் பிறந்தவர் தேவாலயத் திருப்பணி, தெய்வப் பிரதிஷ்டை, தேவோற்சவம் முதலிய ஆலய விஷயங்களில் தாம் தேடிய பொருளைச் செலவுசெய்வர்.

| | | | |
|---|---|---|---|
| 7 | கேது | செவ்வா சனி | சூரி புத வியாழ சுக்கிரன் |
| 6 | ஆலயவிஷயங்களில் அதிக பொருள் செலவு செய்தவர் | | 11 |
| 5 | | | சந்திர |
| 4 | 3 | ராகு | ல |

## 470. புதிய முயற்சிகளில் அதிக செலவுடையவர்.

(Those who spend much in new undertakings.)

வினா: சிலர் அடிக்கடி புதிய முயற்சிகளின் பொருட்டே பொருளைச் செலவுசெய்கின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

விடை: செலவுத்தானாதிபன் முயற்சித்தானாதிபனுடன் (10-ம் இடத்ததிபனுடன்) கூடிப் புத்தித் தானத்திலேனும் (5-ம் இடத்திலேனும்) முயற்சித்தானத்திலேனும் தன்னுடைய ஸ்தானத்திலேனும் இருக்கப் பிறந்தவர் தாம் தேடிய பொருளைப் புதிய முயற்சிகளின் பொருட்டே செலவுசெய்வர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் சுக்கிரன் கேது | 6 | 7 | 8 |
| புதன் வியாழ | புதிய முயற்சிகளில் அதிக பொருள் செலவிட்டவர் | | 9 |
| சனி | | | 10 |
| 2 | ல | சந்திர | செவ்வா ராகு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 471. வீண் முயற்சிகளில் பொருட்செலவுடையவர்.

(Those who spend much for useless purposes.)

**வினா:** சிலர் ஒரு பிரயோசனமும் தராத (வீண்) முயற்சிகளுக்காகத் தம் பொருளை அழிக்கின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| சூரியன் சந்திர புதன் | வியாழ ராகு | செவ்வா | 9 |
| சுக்கிரன் | வீண் முயற்சிகளிற் பொருட்சேதம் அடைந்தவர் | | 10 |
| 4 | | | 11 |
| 3 | 2 | ல கேது | சனி |

**விடை:** செலவுத்தானாதிபன் முயற்சித்தானாதிபனுடன் கூடி 6-ம் இடத்திலேனும் 8-ம் இடத்திலேனும் பலவீனனாகி இருந்தாலும், செலவுத்தானாதிபனும் முயற்சித்தானாதிபனும் நீச வக்கிராஸ்தமன கதி அடைந்து எங்கேயாயினும் இருந்தாலும் இந்நிலைமையிற் பிறந்தவர் எக்காலும் வீண் முயற்சிகளையே தொடங்குபவராயும் அதனாற் பொருட்சேதம் அடைபவராயும் காணப்படுவர்.

### 472. என்றும் குறையாத செலவுடையவர்.

(Those who spend excessively at all times.)

**வினா:** சிலர் எவராலும் தடுக்க முடியாத—இவ்வளவென வரையறுக்க இயலாத பொருட்செலவை (எப்போதும் ஒரேமாதிரியான பெருஞ் செலவை) உடையவராய் இருப்பதற்குக் காரணம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | ராகு | 9 |
| வியாழ | இடம்பமாகச் செலவு செய்பவர் | | 10 |
| 4 | | | செவ்வா |
| 3 | சந்திர கேது | ல | சூரி புத சுக்கிரன் சனி |

**விடை:** இலக்கினாதிபன் புத்திரத்தானத்தில் இருக்க புத்திரத்தானாதிபன் செலவுத் தானாதிபனுடன் கூடிச் செலவுத்தானத்திலேயே இருந்தாலும், செலவுத்தானாதிபன் தன்னுடைய ஸ்தானத்தில் ஆட்சியாக இருக்க அவனுடன் இலக்கினாதிபன் புத்தித்தானாதிபன் பாக்கியத்தானாதிபன் லாபத்தானாதிபன் இம் மூவரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் இம்மூவரில் ஒருவரேனும் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் எந்நாளும் ஒரேமாதிரியான பெருஞ்செலவை (மிக இடம்பமான பொருட்செலவை) உடையவராகக் காணப்படுவர்.

### 473. திருடராற் பொருட்சேதம் அடைபவர்.

(Those who lose their possessions by theft.)

**வினா:** சிலர் கள்வர்மூலம் பொருட்சேதம் அடைபவராக (களவு கொடுப்பவராகக்) காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** திரவியத்தானாதிபன் (2-ம் இடத்ததிபன்) சத்துருத் தானத்தில் (6-ம் இடத்தில்) இருக்கத் திரவியத்தானத்தில் செலவுத் தானாதிபன் (12-ம் இடத்ததிபன்) இருந்தாலும், சனி பாக்கியத்தானாதிபன் அல்லது லாபத்தானாதிபனுடன் (9, 12-க்கு அதிபருடன்) கூடிச் செலவுத்தானத்தில் இருந்தாலும், நவாம்சத்தில் இவ்வகை இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் திருடர்மூலம் பெருந்தொகைப் பொருளை இழப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 10 | செவ்வா | 12 | ல சூரி புத கேது |
| 9 | திருடர்களுக்குப் பொருளைப் பறிகொடுத்தவர் | | சுக்கிரன் |
| 8 | | | 3 |
| ராகு | சந்திர சனி | 5 | வியாழ |

### 474. செல்வைக் குறைத்துச் சிக்கனஞ்செய்பவர்.

(Those who are thrifty)

**வினா:** சிலர் பொருளைச் செலவுசெய்ய மனமில்லாதவராய், மிகக் குறைந்த செலவுடன் பொருளைச் சிக்கனஞ்செய்பவராய் (தற்காலம் வட்டிக்குவட்டி கடும்வட்டியாக வாங்கிப் பொருளைச் சேமித்துவைப்பவராய்) தாமும் அனுபவியாது செலவும் செய்யாது பொக்கிஷாதிபதிகளாக இருப்பதற்கு நியாயம் யாது?

**விடை:** செலவுத்தானாதிபனும் லாபத்தானாதிபனும் பலவான்களாகி 3, 6, 8, 11, இவைகளிலிருந்தாலும், மிகப் பெலவானான லாபத்தானாதிபனுடன் செலவுத்தானாதிபன் பலவீனனாகி இருந்தாலும், செலவுத்தானாதிபன் லாபததானாதிபனின் பூரணநோக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றாலும், லாபத்தானுகிபனும் செலவுத்தானுதிபனும் புத்தித்தானத்திற் பலவானுன புத்திராதனுடன் (5-ம் இடத்ததிபனுடன்) கூடி இருந்தாலும், அவனது நோக்கம் பெற்றிருந்தாலும் இந்நிலைமையில் உதித்தவர் மேல் வினுவியவாறு சிக்கனமான செலவுடையவராய் உலோபித்தன்மை வாய்ந்தவராக இருப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 5 | 6 | 7 | 8 |
| 4 | செலவைத் துறைத்து மீதம்பிடித்த போக்கி ஷாதிபதி | | சனி ராகு |
| சந்திர கேது | | | 10 |
| 2 | ல செவ்வா வியா ; | 12 | சூரியன் புதன் சுக்கிரன் |

475. கடன்கொடுத்த பொருளை வாங்கமாட்டாதவர்.

(Those who cannot recover their debts.)

**வினு:** சிலர் தாம் பிறரிடம் கொடுத்த பொருளை (கடனை) வாங்கமாட்டாதவராகக் காணப்படுகின்றனர். இதற்குக் காரணம் யாது?

**விடை:** செலவுத்தானுதிபன் ஆயுட்டானுதிபனுடன் கூடித் திரவியத் தானத்தில் இருந்தாலும், 3-ம் இடத்தில் இருந்தாலும் இது போன்ற நிலைமையிற் பிறந்தவர் பிறரிடம் தாம் கொடுத்த கடன் பொருளை ஒருபோதும் வாங்கமாட்டார்.

| | | | |
|---|---|---|---|
| 4 | 5 | ராகு | 7 |
| 3 | கொடுத்த கடனை வாங்க இயலாதவர் | | 8 |
| சந்திர செவ்வா வியாழ | | | சனி |
| ல சுக்கிரன் | சூரியன் புதன் கேது | 11 | 10 |

கீர்த்தி

476. புண்ணியச் செலவுகளாற் புகழ்பெறுபவர்.

(Those who attain glory by making charitable gifts.)

**வினு:** சிலர் புண்ணிய காரியங்களைச் செய்து புகழ் பெறுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 8 | சூரி புத வியாழ சுக்கிரன் | 10 | 11 |
| 7 | அரிய புண்ணியங் களைச் செய்து அழியாப்புகழ் பெற்றவர் | | செவ்வா ராகு |
| கேது | | | ல சந்திர |
| 5 | சனி | 3 | 2 |

**விடை:** உதய லக்கினாதிபனும் முயற்சித்தானாதிபனும் கீர்த்தித்தானாதிபனும் (12-ம் இடத்ததிபனும்) கூடித் தருமத்தானத்தில் (9-ம் இடத்தில்) இருக்க தருமத்தானாதிபன் கீர்த்தித்தானத்தில் இருந்தாலும், புத்தித்தானாதிபனும் உதயலக்கினாதிபனும் கூடித் தருமத்தானத்தில் இருக்கக் கீர்த்தித் தானாதிபன் உதயலக்கினத்தில் இருந்தாலும், புத்தித்தானாதிபன் தருமத்தானத்திலும் தருமத்தானாதிபன் புத்தித்தானத்திலும் உதயலக்கினாதிபன் செலவுத்தானத்திலும் செலவுத்தானாதிபன் உதயலக்கினத்திலுமாகப் பரிவர்த்தனம் பெற்றிருந்தாலும், நவாம்சத்தில் இவ்வாறு இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் அளவில்லாத புண்ணிய கருமங்களைச் செய்து, எக்காலமும் அழியாப் புகழைப் பெறுவர்.

## 477. புகழினிமித்தம் புண்ணியஞ் செய்பவர்.

(Those who spend much on charity for self-praise.)

**வினா:** சிலர் புகழை விரும்பியே புண்ணியஞ் செய்கின்றனர். அவர் நிலைமை அவ்வாறு இருப்பதற்கு நியாயம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| 2 | ராகு | 4 | 5 |
| ல | புகழினிமித்தம் புண்ணியம் புரிபவர் | | செவ்வா |
| சனி | | | சூரியன் புதன் |
| 11 | சந்திர | கேது | வியாழ சுக்கிரன் |

**விடை:** கருமத்தானாதிபன் 3, 6, 8-ம் இடங்களில் பலவீனனாகி மறைய உதயலக்கினாதிபன் புத்தித்தானாதிபனுடன் கூடியேனும் வாக்குத்தானாதிபனுடன் கூடியேனும் கீர்த்தித்தானத்தில் இருக்க கீர்த்தித்தானாதிபன் வாக்குத்தானத்தில் இருந்தாலும் வாக்குத் தானாதிபனுடன் கூடினாலும் நோக்கம் பெற்றாலும், உதயலக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞதிபன் பலவாஞகிக் கீர்த்தித்தானத்தில் இருக்கக் கீர்த்தித்தாஞதிபனும் தருமத்தாஞதிபனும் பலங்குன்றி இருந்தாலும் இந்நிலைமையிற் உதித்தவர் புகழை விரும்பியே புண்ணியத்தைச் செய்வர்.

### 478. அற்பமுயற்சியாற் பெரும்புகழ் அடைபவர்.

### (Those who attain great glory by trifling actions.)

வினு: சிலர் அற்ப முயற்சிகளினுல் பெரும் புகழ் சம்பாதிக்கின்றனர். இது எதனுல்?

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | 11 | 12 | ல ராகு |
| சூரியன் புதன் | அற்ப முயற்சியினுல் அதிக புகழ் சம்பாதித்தவர் | | 2 |
| வியாழ | | | சனி |
| சேத | செவ்வா | சந்திர | 4 |

விடை: முயற்சித் தாஞதிபன் 3, 6, 8-ல் இருக்க கீர்த்தித் தாஞதிபன் திரிகோணகேந்திரங்களில் இருந்தாலும், லாபத்தானத்தில் இருந்தாலும் இவ்வித நிலைமையிற் பிறந்தவர் அற்பமான முயற்சியினுல் அதிகமான கீர்த்தியை அடைவர்.

### 479. அரிய கருமங்களை நிறைவேற்றியும் அற்ப புகழும் அடையாதவர்.

### (Those who fail to attain any glory even if they had accomplished great deeds.)

வினு: சிலர் மிகப் பெரிய அரிய கருமங்களை நிறைவேற்றியும் அதனுல் ஒரு புகழும் அடையப்பெருதவராய் இருத்தற்கு நியாயம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| 10 | சந்திர | 12 | ல |
| சூரியன் சனி ராகு | அரிய கருமங்களைச் செய்தும் அற்ப புகழும் அடையாதவர் | | 2 |
| புதன் சுக்கிரன் | | | கேது |
| வியாழ | செவ்வா | 5 | 4 |

விடை: முயற்சித்தாஞதிபன் திரிகோண கேந்திரங்களில் இருக்க கீர்த்தித்தாஞதிபன் மறைவுத்தானங்களில் (3, 6, 8, 11-ல்) இருந்தாலும், கீர்த்தித்தாஞதிபன் நீச வக்கிராஸ்தமன கதியுடன் இருந்தாலும் இவ்வித நிலைமையிற் பிறந்தவர் எவ்வித முயற்சிகள் செய்தாலும் "குடத்துள் தீபம்" போலக் கீர்த்தியை அடையமாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 480. தற்புகழ்ச்சி செய்பவர்.

(Those who praise themslves.)

வினா: சிலர் தாம் பிறரால் கீர்த்திபெற இயலாதவராய்த் தம்மைத் தாமே புகழ்ந்துகொள்ளுகின்றனர் (தற்புகழ்ச்சியுடைய வராகக் காணப்படுகின்றனர்). இது எதனால்?

| | | | |
|---|---|---|---|
| புதன் சுக்கிரன் | சூரியன் | சந்திர | 9 |
| 5 | தம்மைத்தாமே புகழ்பவர் | | சனி ராகு |
| கேது | | | 11 |
| 3 | வியாழ | ல | செவ்வா |

விடை: கீர்த்தித்தானாதிபன் 3, 6, 8-ல் பலவீனனாகி மறைந்துபோக உதயலக்கினாதிபனேனும் வாக்குத்தானாதிபனேனும் கீர்த்தித்தானத்தில் இருந்தாலும், 5, 10, 12-ம் இடங்கட்கு அதிபர் மறைந்துபோக அவ்விராசிகள் ஒருவரும் இல்லாமலும் நோக்காமலும் வெறும் வீடுகளாக இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் கீர்த்திச்சுகம் என்பது எட்டுணையுங் கிடைக்கப்பெறாதவராய்த் தம்மைத் தாமே புகழ்ந்துகொண்டு வீணே பசப்பித்திரிவர்.

## 481. அழியாப் புகழ் பெறுபவர்.

(Those who attain everlasting fame.)

வினா: சிலர் நிலைபரமான காரியங்களை நிறைவேற்றி, அதனால் தம் பூதவுடம்பு நீங்கிய காலத்தும் புகழுடம்பு அழியாதவராய் (செத்தும் சாகாதவராய்), புகழ்ச்செல்வராய்க் காணப்படுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

| | | | |
|---|---|---|---|
| செவ்வா சுக்கிரன் | சூரியன் கேது | புதன் சனி | ல வியாழ |
| சந்திர | அழியாப்புகழ் படைத்த ஓர் அறிஞர் | | 2 |
| 8 | | | 3 |
| 7 | 6 | ராகு | 4 |

விடை: 1, 5, 10, 12-ம் இடங்கட்கு அதிபர் தத்தம் ஸ்தானங்களிலேனும் ஒருவரோடொருவர் வீடுமாறியேனும் இருந்தால் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் எக்காலமும் அழியாப் புகழ்ச் செல்வமுடையவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 482. என்றும் அபகீர்த்தி உடையவர்.

### (Those who always get into disgrace.)

**வினு:** சிலர் எந்நாளும் அபகீர்த்தி, சிறைவாசம், பொருட் சேதம் இவைகளையே அடைகின்றனர். இதற்குக் காரணம் யாது?

**விடை:** கீர்த்தித்தானுதிபன் 3, 6, 8-ம் இடங்களில் இருக்க கீர்த்தித்தானத்தில் சனி இருந்தாலும், சனி கீர்த்தித்தானுதிபனுடன் கூடியேனும் அந்தத் தானத்திற்கு அதிபனுகவேனும் பகை நீச வக்கிராஸ்தமன கதியுடன் எங்கே இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் அடிக்கடி சிறைவாசம், அபகீர்த்தி அல்லது பொருட்சேதம் அடைபவராய்க் காணப்படுவர்.

| | | | |
|---|---|---|---|
| 11 | சனி | ல ராகு | சுக்கிரன் |
| 10 | அபகீர்த்தி பெற்றவர் | | சூரியன் செவ்வா புதன் |
| சந்திர | | | 4 |
| 8 | கேது | 6 | வியாழ |

### கீர்த்தியின் காரணம்

### 483. பிரசங்க வலிமையாற் கீர்த்தீ அடைபவர்.

### (Those who attain glory by their sweet speeches.)

**வினு:** சிலர் இனிமையாகப் பேசுவதனுல் (பிரசங்கஞ் செய்தலினுல்) அதிக கீர்த்தி சம்பாதிக்கின்றனர். இதற்கு நியாயம் யாது?

**விடை:** சுக்கிரன் பூர்வபக்கச் சந்திரன் இவர்கள் வாக்குத் தானத்துக்கு அதிபராகிப் பலவானுன கீர்த்தித்தானுதிபனுடனும் கேதுவுடனும் கூடித் திரிகோண கேந்திரங்களில் அல்லது வாக்குத் தானத்தில் இருந்தால் இது போன்ற நிலைமையில் உதித்தவர் கேட்போருக்கு இன்பம் உண்டாகும் விதமாக வார்த்தை பேசி அதனுற் கீர்த்தி பெறுவர்.

| | | | |
|---|---|---|---|
| 12 | ல | சந்திர | ராகு |
| 11 | பேச்சினுல் இன்பம் விளைவித்துக் கீர்த்தி பெற்றவர் | | 4 |
| புதன் | | | சனி |
| சூரியன் வியாழ சுக்ர கே | 8 | செவ்வா | 6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 484. விகடப் பேச்சினுற் கீர்த்தி அடைபவர்.

(Those who attain glory by their comical utterences.)

**வினு:** சிலர் வாக்குச்சாதுரியத்தில் சிறந்தவராய் பலரும் அதிசயிக்கும் வண்ணம் பெருநகைரசம் ததும்ப விகடவார்த்தைகள் பேசி அதனுல் (தற்காலம் நாடகமேடைகளில் நின்று வேடிக்கை விநோதமாகப் பேசி ஜனங்களை மகிழ்விக்கும் பபூன்கள்போல்) கீர்த்தி அடைகின்றனர். இது எதனுல்?

| | | | |
|---|---|---|---|
| 6 | 7 | ராகு | 9 |
| வியாழ | விகடப் பேச்சினுல் கீர்த்தி பெற்றவர் | | 10 |
| 4 | | | 11 |
| 3 | சந் புத சுக்கிரன் கேது | ல சூரியன் | செவ்வா சனி |

**விடை:** உதய லக்கினத்திலேனும் வாக்குத்தானத்திலேனும் கேது பூர்வபக்கச் சந்திரன் சுக்கிரன் புதன் இவரில் எவருடனேயாயினும் கூடியிருக்க கீர்த்தித்தானுதிபன் வாக்குத்தானத்தில் இருந்தாலும் வாக்குத்தானுதிபனுடன் கூடியிருந்தாலும் வாக்குத்தலைவனை நோக்கினுலும், உதயலக்கினுதிபனேனும் முயற்சித்தானுதிபனேனும் கீர்த்தித்தானுதிபனேனும் கேதுவுடன் கூடி வாக்குத்தானத்தில் இருக்க வாக்குத்தானுதிபன் 1, 2, 4, 7, 10, 12-ல் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் மேல் வினுவியவாறு விடாநகைப்பைக் கொடுக்கும் விகடகவிகளாய்க் கீர்த்திபெறுவர்.

## 485. கல்விமூலம் கீர்த்தி பெறுபவர்.

(Those who obtain high distinctions in education.)

**வினு:** சிலர் கல்விப்பகுதியில்—கல்விகற்பிக்கும் திறமையால், போதனை பிரசங்கம் முதலியவற்றுல் (தற்காலம் நூல்கள் இயற்றுதல், வியாசங்கள் வரைதல், சாஸ்திர ஆராய்ச்சி, நியாயவாதம் இவைகளாற்) கீர்த்தி பெறுகின்றனர். இது எதனுல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை: புத்திரத்தானுதிபனேனும் உதய லக்கினுதிபனேனும் முயற்சித்தானுதிபனேனும் (1, 5, 10-க்கு அதிபருள் எவரேனும்) வாக்குத்தானத்தில் இருக்க வாக்குத்தானுதிபன் கீர்த்தித் தானத்தில் இருந்தாலும், இம் மூவருள் ஒருவராயினும் புதனுடன் கூடிக் கீர்த்தித்தானத்தில் பூரண பலவான்களாக இருந்தாலும் இது போன்ற நிலைமையிற் பிறந்தவர் கல்விப்பகுதியில் விசேஷ கீர்த்தி சன்மானங்கள் அடையப்பெறுவர்.

| | | | |
|---|---|---|---|
| செவ்வா சுக்கிரன் | ல கேது | சூரியன் புதன் சனி | வியாழ |
| 11 | கல்விப் பகுதியில் கீர்த்தி பெற்றவர் | | சந்திர |
| 10 | | | 5 |
| 9 | 8 | ராகு | 6 |

## 486. சரீரபலத்தினுற் கீர்த்தி அடைபவர்.

### (Those who attain glory by displaying their physical strength.)

வினு: சிலர் தங்கள் சரீரவல்லபத்தினுல் (பிறரால் செயற்கரிய பராக்கிரமச் செயல்களால்) கீர்த்திபெறுகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: வீரியத்தானுதிபன் சத்துருத்தானத்திலும் சத்துருத்தானுதிபன் வீரியத்தானத்திலும் (3-ம் இடத்ததிபன் 6-ம் இடத்திலும் 6-ம் இடத்துக்கதிபன் 3-ம் இடத்திலும்) பரிவர்த்தனமாக இருக்கக் கீர்த்தித்தானுதிபன் வீரியத்தானத்தையும் அதிபனையும் நோக்கினுலும், வீரியத்தானுதிபன் முயற்சித்தானத்திலும் முயற்சித்தானுதிபன் வீரியத்தானத்திலும் வீடுமாறி இருக்கக் கீர்த்தித்தானுதிபன் வீரியத்தானுதிபனை நோக்கினுலும், வீரியத்தானுதிபனும் கீர்த்தித்தானுதிபனும் வீடுமாறி இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் ஜனித்தவர் தங்கள் வீரபராக்கிரமச் செய்கையின் திறமையினுற் கீர்த்திபெறுவர்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ்வா | ல | வியாழ |
| 10 | வீர பராக்கிரமத் தாற் கீர்த்தி பெறுபவர் | | சுக்கிர |
| 9 | | | சூரியன் புதன |
| 8 | 7 | சந்திர | சனி கேது |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 487. புத்திர மூலம் புகழ்பெறுபவர்.

(Those who attain glory through their children)

வினு: சிலர் புத்திரர் மூலம் மங்காத கீர்த்தி அடைகின்றனர். இதற்கு நியாயம் யாது?

விடை: புத்திரத்தானுதிபனுடன் கீர்த்தித்தானுதிபன் கூடிக் கேந்திர திரிகோணங்களில் இருந்தாலும், புத்திரத்தானுதிபன் உதயலக்கினத்திலும் உதயலக்கினுதிபன் கீர்த்தித்தானத்திலும் கீர்த்தித்தானுதிபன் புத்திரத்தானத்திலுமாகத் தானம் மாறியிருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் புத்திரர் மூலம் புகழ்பெறுவர்.

| | | | |
|---|---|---|---|
| கேது | 9 | 10 | செவ்வா சனி |
| 7 | புத்திரர்மூலம் கீர்த்தி பெற்றவர் | | சூரியன் |
| 6 | | | ல புதவியா சுக்கிரன் |
| சந்திர | 4 | 3 | ராகு |

### 488. சத்துருஜயத்தினுற் புகழ்பெறுபவர்.

(Those who attain glory by defeating their opponents.)

வினு: சிலர் சத்துருக்கள் மூலம் கீர்த்தி பெறுகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

விடை: சத்துருத்தானுதிபன் (6-ம் இடத்ததிபன்) கீர்த்தித்தானத்தில் இருக்கக் கீர்த்தித்தானுதிபன் சத்துருத்தானத்திலேனும் லாபத்தானத்திலேனும் இருந்தாலும், சத்துருத்தானுதிபன் இலக்கினுதிபனுடன் கூடி இருக்கக் கீர்த்தித்தானுதிபன் பலவானுக இருந்தாலும் இதுபோன்ற நிலைமையில் உதித்தவர் சத்துருக்களை வென்று அவர்களாற் கீர்த்திபெறுவர்.

| | | | |
|---|---|---|---|
| சூரியன் புதன் | ல செவ்வா | ராகு | சந்திர |
| வியாழ | சத்துருக்கள் மூலம் கீர்த்தி பெற்றவர் | | 4 |
| சுக்கிரன் | | | சனி |
| 9 | கேது | 7 | 6 |

### 489. யுத்தத்திற் கீர்த்திபெறுபவர்.

(Those who attain glory in the battlefield.)

வினு: சிலர் ஓர் கலகத்தை அல்லது யுத்தத்தை அடக்கவும் தொடக்கவும் வல்ல சேனுதிபதிகளாய்த் (தற்காலம் பொலிஸ்தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர், இராணுவத்தலைவர் முதலிய பதவிகளில் இருப்பதன்மூலம் கீர்த்திபெறுகின்றனர். இதற்கு நியாயம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| சந்திர | 11 | செவ்வா கேது | ல சுக்கிரன் |
| 9 | போரில் சேனைத் தலைமை வகித்து வெற்றிமாலை சூடியவர் | | சூரியன் புதன் |
| 8 | | | 3 |
| சனி | வியாழ ராகு | 5 | 4 |

விடை: கீர்த்தித்தானாதிபன் சத்துருத்தானத்திலும் சத்துருத்தானாதிபன் கீர்த்தித்தானத்திலுமாகப் பரிவர்த்தனமாக இருந்தாலும், சத்துருத்தானாதிபன் கீர்த்தித்தானததிலும் கீர்த்தித்தானாதிபன் உதயலக்கினத்திலுமாக இருந்தாலும், செவ்வாய் கீர்த்தித்தானத்திற் பலவானாக இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் வீரச்செயல்களால் அல்லது யுத்தப்பகுதியில் கீர்த்தி பெறுவர்.

## 490. மனைவிமூலம் கீர்த்திபெறுபவர்.

(Those who attain glory through their wives.)

வினா: சிலர் மனைவிமூலம் கீர்த்திபெறுகின்றனர். இது ஏதனால்?

| | | | |
|---|---|---|---|
| 7 | 8 | 9 | செவ்வா கேது |
| 6 | மனைவிமூலம் கீர்த்தி பெற்றவர் | | 11 |
| 5 | | | புதன் |
| ராகு | சனி | சந்திர சுக்கிரன் | ல சூரியன் வியாழ |

விடை: களத்திரத்தானாதிபன் (7-ம் இடத்ததிபன்) கீர்த்தித்தானத்திலும் கீர்த்தித்தானாதிபன் களத்திரத்தானத்திலுமாக வீடுமாறி இருந்தாலும், கீர்த்தித்தானாதிபனும் களத்திரத்தானாதிபனும் கூடி உதயலக்கினத்தில் பலவானாக இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் மனைவிமூலம் கீர்த்தி பெறுவர்.

## 491. பெண்களாற் பாராட்டப்படுபவர்.

(Those who are extolled by the fair sex)

வினா: சிலர் பெண்மக்களால், போகசுகம் கொடுப்பதில் இவரே தகுந்த புருஷனென்றும், இன்பத்துறையிலும் உலகப்பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயங்களிலும் அரிய பெரிய காரியங்களை இயற்றியுள்ள உத்தம புருஷர் என்றும் புகழப்படுகின்றனர். இதற்குக் காரணம் யாதோ?

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | புதன் சுக்கிரன் | ல | கேது |
| செவ்வா | பெண்களாற் பெரிதும் பாராட்டப் பெற்றவர் | | சந்திர |
| 9 | | | 4 |
| ராகு | சனி | 6 | வியாழ |

விடை: இன்பத்தானதிபன் (7-ம் இடத்ததிபன்) முயற்சித்தானத்திலும் முயற்சித்தானதிபன் இன்பத்தானத்கிலும் பரிவர்த்தனமாக இருக்கக் கீர்த்தித்தானத்தில் சுக்கிரன் இருந்தாலும், உதயலக்கினதிபனும் முயற்சித்தானதிபனும் இன்பத்தானத்தில் இருக்கச் சுக்கிரன் 12-ம் இடத்தில் இருந்தாலும், வீரியத்தானதிபனும் இன்பத்தானதிபனும் கூடி 1, 3, 4, 7, 10-ம் இடங்களில் பலவான்களாக இருக்க கீர்த்தித்தானதிபன் இவ்விருவரில் ஒருவருடனேயாயினும் சுக்கிரனுடனேயாயினும் கூடிக் கேந்திரங்களிலேனும் கீர்த்தித்தானத்திலேனும் இருந்தாலும் இதுபோன்ற நிலைமையிற் பிறந்தவர் எக்காலமும் ஸ்திரீகளால் பெரிதும் புகழப்படுவர்.

## 492. தெய்வபக்தியாற் கீர்த்திபெறுபவர்.

(Those who attain glory by their religious devotion.)

வினா: சிலர் தெய்வபக்தி, சமயபக்தி, ஆத்மஞானம் இவைகளால் கீர்த்திபெறுகின்றனர். இதற்குக் காரணம் யாது?

| | | | |
|---|---|---|---|
| கேது | ல | சந்திர சனி | 3 |
| 11 | | | 4 |
